ஆற்காடு நவாப் சந்தாசாகிப்

செ. திவான்

துஆ செய்ய வேண்டுகிறோம்

அப்துல் முத்தலிப் – ஆமினா பீவி தம்பதியரின்
அருந்தவப் புதல்வராய் கறம்பக்குடியில் பிறந்த

A. முஹம்மது பாரூக்

(6.2.1966–30.10.2018)

அகாலமரணமடைந்தார்கள்.
(இன்னாலில்லாஹி)
அன்புச் சகோதரர் அவரது மறு உலக நல்வாழ்விற்காக
துஆச் செய்யவேண்டுகிறோம்.

– செ. திவான், ரெகான் சுலைமான் பதிப்பகம்

ஆற்காடு நவாப் சந்தாசாகிப்

சந்தாசாகிப் குறித்து தமிழில் வெளிவரும் முதல் நூல்

செ.திவான்

நூலாசிரியரின் 126 வது நூல்

தலைப்பு	:	சந்தாசாகிபு
ஆசிரியர்	:	செ. திவான்
பதிப்பு ஆண்டு	:	2020, ஆகஸ்ட்
உரிமை	:	ஆசிரியருக்கே
பக்கங்கள்	:	176
அச்சிட்டோர்	:	குமரேசன், சிவசக்தி ஆர்ட்ஸ், சிவகாசி. செல்:9443379005
வடிவமைப்பு	:	அப்துல் நசீர், நெல்லை. செல் : 9489115236

ரெகான் சுலைமான் பதிப்பகம்
106F, 4A, திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி– 627002
போன்: 0462–2572665

உள்ளே......

1.	ஆங்கிலேயரை எதிர்த்த ஆற்காடு நவாப் சந்தாசாகிப்	004
2.	சரித்திர நிர்மானத்துக்குரிய கருவிகள்	017
3.	சந்தாசாகிபும் வீரமாமுனிவரும்	064
4.	ஹஸ்ரத் நத்ஹர் வலியும் சந்தாசாகிபும்	079
5.	சந்தா சாகிப் விடுதலை	091
6.	ஆற்காடு	115
6.	சந்தாசாகிப் படுகொலை	134
7.	சந்தாசாகிப் காசுகள்	149
8.	சிறப்புமிக்க சந்தாசாகிப்	161

ஆங்கிலேயரை எதிர்த்த ஆற்காடு நவாப் சந்தாசாகிப்

அகலத்திற்கோர் அருட்கொடையாகவும் அழகிய முன்மாதிரியாகவும் அவதரித்த அண்ணல் முஹம்மது (ஸல்) அறிவித்தது இஸ்லாம் மார்க்கம். அன்னைத் தமிழகமும் அதனை தாய் பிள்ளையை அரவணைப்பதுபோல அரவணைத்துக் கொண்டது.

வேகமாகப் பரவிய இஸ்லாம். வஞ்சக வலைவிரித்து வணிகக் கொடிபிடித்து வெள்ளையர்கள் வந்தார்கள். வேறுபாடுகளை வளர்த்தார்கள். இஸ்லாமிய வேந்தர்கள் ஆட்சியாளர்கள் மீது வீண்பழி சுமத்தினார்கள். வீரமிக்க இஸ்லாமிய ஆட்சியாளர்கள் விமர்சனத்திற்குள்ளானார்கள். அவ்வாறு விமர்சிக்கப்பட்ட ஆற்காடு நாவப் குறித்து ஆகஸ்ட் 2004இல் விடுதலைப்போரில் வீரமிகு முஸ்லிம்கள் எனும் அடியனேது நூலில் ஒரு கட்டுரை எழுதியிருந்தேன் அதோ அந்தக் கட்டுரை...

ஆங்கிலேயர்களை எதிர்த்த ஆற்காடு நவாப் சந்தாசாகிப்

ஷாஜகான்

இளவரசர் குர்நம் என்று அழைக்கப்பட்டு பின்னர் அபுல் முஸஃப்ஃபர் ஷிஹாபுத்தீன் முஹம்மது ஷாஹ்ஜஹான் (ஷாஜகான்) முகலாயப் பேரரசராக தனது முப்பத்தேழாவது வயதில் கி.பி.1627 இல் பட்டத்திற்கு வந்தார்.

அபித்குலிகான்

புக்கராவின் காஜி ( ) அபித்குலிகான் அப்போது இந்தியாவிற்கு வந்தார். பேரரசர் ஷாஜகானின் அவையில் சேர்ந்தார். அரசரிடம் அமைச்சராகப் பணிபுரிந்தார்.

ஔரங்கஜேப்

அபுல்முஃஸஃப்ஃபர் முஹியுத்தீன் முஹம்மது ஔரங்கஜேப் ஆலம்கீர் ஆட்சிக்காலத்தில் கி.பி.1660 இல் அபித்குலிகான் அமைச்சரானார். மூல்தான் (Multan) சுபேதார் (Subahdar) ஆகவும் பணியாற்றினார். மெல்ல மெல்ல வேகமாக வளர்ந்த இவர் ஆண் வாரிசு வமிசத்தில் முதலாவது கலீபா அபூபக்கர்

(ரலி) வழி வந்தவர். பெண் வாரிசு வழியில் அண்ணல் முஹம்மது நபி (ஸல்) வழி வந்தவர் ஆவார்.

முதலமைச்சர்

கி.பி.1681இல் அபித்குலிகான் சக்கரவர்த்தி ஔரங்கஜேப்பின் முதலமைச்சரானார். கி.பி.1687இல் கோல்கண்டா முற்றுகையில் பங்கெடுத்து போரில் காயமுற்று மரணமடைந்தார். அவரது கல்லறை ஆஸப் நகரில் (Asafnagar) உள்ளது.

ஷகாபுதீன் கெய்ஸ் உதீன்கான்

அபித்குலிகானின் மகன் சாகபுதீன் கெய்ஸ் உதீன்கான் பிரோஸ்ஜங்கிற்கு (Shahab - ud- Ghazi-ud- dinkhan Firozjung) உரியமரியாதை அளிக்கப்பட்டு, ஔரங்கஜேப்பின் தளபதிகளிலேயே தலைசிறந்த தளபதியாக பணியாற்றி வந்தார். இவர் 1719இல் மறைந்தார். இவரது கல்லறை டில்லி ஆஜ்மீர் கேட்டில் உள்ளது.

மிர்கமருதீன்

சகாபுதீன் கெய்ஸ் உதீன் கான்பிரோஸ் ஜங்கின் மகனாக 1671இல் பிறந்த மீர்கமருதீன் (Mirkamuddin) தனது பத்தொன்பதாவது வயதில் ஔரங்கஜேப்பால் சின்காலிஸ்கான் (ChinKalichkhan) என்ற பட்டத்தைப் பெற்றார். பல போர்களில் வீரப்போர் புரிந்தார். பாராட்டுக்கள் பல பெற்றார் கி.பி.1707 இல் ஔரங்கஜேப் மண்ணுலகிலிருந்து மறைந்தார். முகலாயப் பேரரசு வீழ்ச்சியுறத் துவங்கியது.

பஹாதுர்ஷாஹ்

முஅஃஸ்ஃஸம் என்னும் ஔரங்கஜேப்பின் குமாரர் ஷாஹ்ஆலம் பஹாதுர்ஷாஹ் எனும் பட்டத்துடன் ஔரங்கஜேப்பிற்குப் பின் அரியணை ஏறினார். அவரது காலத்தில் அயோத்தியின் சுபேதாராகவும், லக்னோவின் பௌஸ்தாராகவும் (Fauzdar) மீர்கமருதீன் என்ற சின்காலிஸ் கான் நியமிக்கப்பட்டார். பின்னர் கருத்து வேற்றுமை காரணமாக அப்பதவியிலிருந்து விலகி, ஓய்வெடுத்து வந்தார். பகதூர்ஷாஹ்வின், மறைவிற்குப்பின்னர் பதவிக்கு வந்த ஜஹான்தார்ஷாஹ்வின் (Jehandarshah) கீழ் தொடர்ந்து பணியாற்றினார். அவரைத் தொடர்ந்து பட்டத்திற்கு வந்த

முகலாய அரசர் பருக்ஷியார் காலத்தில், தக்காணத்தின் சுபேதாராக (கவர்னர்) மீர்கமருதீன் சின்காலிஸ்கான் நியமிக்கப்பட்டார். அவரே (Nizam-Ul-Mulk Bahadur Fatch Jung) என்ற பட்டத்துடன் தக்காணத்தில் நிஜாமாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்.

தக்காணம்

தக்காணம் ஒரு பீடபூமிப் பிரதேசம்; விந்திய சாத்பூரா மலைத் தொடர்கள் தக்காண பீடபீமியை வடநாட்டுப் பகுதிகளிலிருந்து பிரிக்கின்றன. தக்காணப் பீடபூமியில் நர்மதை ஆறுபாய்வதால் அப்பிரதேசம் நிலவளமுற்று செழிப்புத்தன்மையுடன் பொன்வயலாகக் (Eldorddo) கருதப்பட்டது. கிழக்கில் வங்காளவிரிகுடாவும், மேற்கில் அரபிக்கடலும், வடக்கில் நர்மதை ஆறும், தெற்கில் தமிழகமும் தக்காணத்தின் புவியியல் எல்லைகளாகும்.*

ஐதராபாத்

தக்காணம் என்பது '**தக்ஷிணம்**' என்ற சமஸ்கிருதச் சொல்லின் தமிழ் வடிவமாகும். ஆங்கில மொழியில் '**டெக்கான்**' எனப்படும். தக்காணம் நர்மதை, கிருஷ்ணா என்ற கிருஷ்ணவேணி ஆறுகளுக்கு இடைப்பட்ட, உயர்ந்த நிலப்பரப்பை குறிக்கும். அதாவது நர்மதைக்குக் தெற்கிலுள்ள இந்தியத் தீவக்குறை முழுமையும் அதில் அடங்கும். போர்த்துக்கீசியர் 16ஆம் நூற்றாண்டில் முஸ்லிம் அரசரான பிஜப்பூரைச்சுட்டவும், ஆங்கிலேயர் அதன் பிறகு ஐதராபாத்தைக் குறிக்கவும் தக்காணம் என்ற பெயரைப் பயன்படுத்தினர். **

கர்நாடக நவாபு

முகலாயப் பேரரசர் ஆலம்கீர் ஔரங்கஜேப்பின் படைகள் தென்னாட்டைத் தாக்கியது. ஔரங்கஜேப்பின் தளபதி ஜுல்பிகார்கான் கடுமையாகப் போராடி செஞ்சியை 1698 பிப்ரவரி 7இல் வென்றார். போரின் வெற்றிக்குப் பின், தென்னகப் பகுதிகளுக்கு நவாபாக ஜுல்பிகார்கான் நியமிக்கப்பட்டார்.

* டி.வி. சீனிவாசன், பாமினி அரசின் வரலாறு, சென்னை, 1977.பக்.2

** ப. சிவனடி, இந்திய சரித்திரக்களஞ்சியம் தொகுதி மூன்று 1990, சென்னை, பக்கம் 58.

ஹைதராபாத்தில் (தக்காணத்தில்) இராஜபிரமுகர் என்ற பெயரில் ஒரு அதிபரையும் (அவரே நிஜாம் என்று அழைக்கப்பட்டவர்) நிஜாமிற்கு கட்டுப்பட்டவராக கர்நாடக நாவப் இருக்க வேண்டும் என்ற நியதியும் ஏற்படுத்தப்பட்டது.

கர்நாடகம்

கன்னடமொழி வழங்கும் கர்னாடகத்திற்கும் இந்தக் கர்னாடகத்திற்கும் சம்பந்தமில்லை. விஜய நகரப் பேரரசை வீழத்தியபிறகு தக்காண சுல்தான்களான விஜயபுரி என்ற பிஜப்பூர் மன்னரும், கோல்கொண்டா மன்னரும் அப்பேரரசின் எஞ்சிய பகுதிகளைப் பதினேழாம் நூற்றாண்டில் தமக்குள் பகிர்ந்து கொண்டனர். அவை பிஜப்பூர் கர்நாடகம், கோல்கொண்டா கர்நாடகம் என்றும் பெயர் பெற்றன. வடபகுதி பிஜப்பூருக்குரியது. கரையோரச் சமவெளியாவும் கோல்கொண்டாவிற்குரியது. இந்தச் சமவெளிப் பகுதியை பிரிட்டிஷார் கர்நாடகம் என்று சுருக்கி அழைத்தனர்.

நவாபு - பிரதிநிதி

நவாபு என்ற பாரசீக மொழிச் சொல்லுக்குப் பிரதிநிதி என்று பொருள். நவாபு என்றால் முகலாயப் பேரரசர்களின் மேலாண்மைக்கு அடங்கிய பிரதிநிதியாக இருக்க வேண்டும்.

கர்நாடக நவாபு

கர்நாடக நவாபாக சுல்ஃபிகர்கான் முதலில் ஔரங்கஜேப்பால் நியமிக்கப்பட்டார். செஞ்சிக் கோட்டையைப் பிடித்ததும், சுல்பிகார்கான் அதில் தங்கியிருந்து ஆட்சி நிர்வாகத்தை நடத்தினார். அந்த இடம் தனது உடல் நலத்திற்கு உகந்ததாக இல்லை என்று அவர் பின்னர் ஆட்சி பீடத்தை ஆற்காட்டுக்கு மாற்றினார். சுல்பிகர்கானைத் தொடர்ந்து அவரது உதவியாளராயிருந்த தாவூதுகான் (Daudkhan) *(1700–1708) ஆட்சிப் பொறுப்பிலிருந்தார். அதன்பின் அவர் சாதத்துல்லாகான் என்பவரை நவாபாக அமர்த்தினார்.*

ஆற்காடுநவாப்

சதாத்துல்லாகான் என்ற முஹம்மது செய்யது (Saadatullah Khan@Muhamad Saiyid) *காலத்தில் கி.பி.1710இல் செஞ் சியிலிருந்த தலைநகரம் முழுவதுமாக ஆற்காட்டிற்கு*

மாற்றப்பட்டது. கர்நாடக நவாப் என்று அழைக்கப்பட்டு வந்தவர்கள் அதற்குப்பின்னர் ஆற்காடு நவாப் என்று அழைக்கப்படலாயினர்.

நவயத்துக்கள்

ஆற்காட்டின் முதல் நவாபு என்று கருதப்படும் சாதத்துல்லாகான் 'நவயத்துகள்' மரபில் வந்தவர் ஆவார். 1732 இல் சாதத்துல்லாகானின் மருமகன் தோஸ்த் அலி (Ali Dost Khan) ஆற்காடு நவாபானார்.

தெற்குநோக்கி

நிலப்பகுதிகளை இணைக்கும் கொள்கையைப் (Policy of Annexation) பின்பற்றிய தோஸ்த் அலி தனது மருமகன் உசைன் தோஸ்த்கான் என்ற சந்தாசாகிப் மற்றும் தனது மகன் சஃப்தர் அலி ஆகியோர் தலைமையில் தெற்குநோக்கி 12000 வீரர்களைக் கொண்ட பெரும் படையை அனுப்பி வைத்தார்.

செல்வாக்கை நிலை நிறுத்தப்படுதல்

சப்தர் அலி தஞ்சாவூரை நோக்கிச் சென்று, கி.பி.1739இல் மராத்திய மன்னர் சயாஜி (Sayaji) யை வென்றார். சந்தாசாகிப் தனது படைவீரர்களுடன் 1936இல் மதுரை நாட்டை நோக்கி வந்து அதனை வென்றார். நவயத்துவம்சத்தினரான ஆற்காடு நவாபுகள் தஞ்சையிலும் மதுரையிலும் தங்களது செல்வாக்கை நிறுவினர்.

திருச்சியில்

திருச்சியில் சுதந்திர அரசை சந்தாசாகிப் நிறுவினார். அப்போது மதுரை – திருச்சி அரசை இழந்தவர்கள் மராத்தியரிடம் உதவி கேட்டு விண்ணப்பித்தனர்.

தமது அதிகாரத்திற்கு எதிராக ஆற்காடு நவாப் (நவயத்தவர்கள்) காட்டிய அவமதிப்பாலும், தன்னுடைய அனுமதியின்றி நிலப்பகுதிகளை அவர்கள் கைப்பற்றியதால் கோபமுற்ற நிஜாம் ஆஸப்ஷா, ஆற்காடு நவாப்பைக் கண்டிக்கும் வாய்ப்பை மராத்தியரிடம் விட்டுவிட்டார்.

---

* Press list of Ancient Dutch Records, P.26

மராத்தியர் படையெடுப்பு

1740 மே மாதத்தில் மராத்திய படைத்தளபதி ராகுஜிபோன்ஸ்லேயும் (Raguj Bhonsle) *பதேசிங்கும்* (Fatesh Sing) *40000 முதல் 50000 வீரர்கள் அடங்கிய குதிரைப் படையுடன் தமிழகத்திற்கு விரைந்தார்கள்.**

1740 மே 20

சந்திரகிரிக்கு அருகாமையில் உள்ள கணவாயில் அரண் கொண்ட மராத்தியர் 1740 மே 20இல், நவாப்பின் படைகளைத் தாக்கினார்கள். தோஸ்த்அலியும் அவரது மகன் ஹசன் அலியும் (Hasanali) *போரில் கொல்லப்பட்டனர்.*

சப்தர் அலி

சப்தர் அலி தஞ்சாவூரிலிருந்து முன்னேறினார். இவர்கள் செல்வதற்குள் ஆற்காடு வீழ்ந்தது. ஆற்காட்டை காலி செய்திட ஒரு கோடி ரூபாய் மராத்தியருக்கு கொடுத்திட சப்தர் அலி ஒப்புக் கொண்டார். அத்தோடு திருச்சிராப்பள்ளியை சந்தாசாகிபிடமிருந்து கைப்பற்றிக் கொள்ள மராத்தியருக்கு அனுமதியும் அளித்தார். சந்தாசாகிபின் ஆட்சியை ஒடுக்கிட மராத்தியருக்கு நான்கு லட்சம் ரூபாய் பரிசளிப்பதாகவும் வாக்குறுதி அளித்தார் சப்தர் அலி.

By a secret article of the settlement he promised to give a present of Four lakhs of Rupees to the Marathss for the supresssion of the regime of Chanda Sahib ** Heal so granted them permission to take possession of Tiruchirapalli for themselves. ***

சந்தாசாகிபின் வெற்றி

சந்தாசாகிப் தனது மைத்துனர் சப்தர் அலியால் வஞ் சிக்கப்பட்டார். 1741 பிப்ரவரியில் ஹூட்டியின் (Gooty) *மராத்திய தளபதி முராரிராவ்* (MurariRao) *தலைமையில் 10000 குதிரைப்படை வீரர்கள் திருச்சிக்கு வந்தனர்.*

---

* Public Consultations, Madras July 1740, Vol. 65, P.147.

** K.Rajayyan, Selections from History of Tamilnadu, 1978, P.100-101.

*** Defence of Lordpigot, 1777, p.16.

சந்தாசாகிபின் படைகளோடு மேற்கண்ட போரில் தோல்வி கண்டனர். An advanced party of the Marathas Marched to Tiruchirapalli but suffered a reverse in a battle with the forces of Chandasahib.*

புத்தாசாகிப் - சாதக்சாகிப்

வெகுவிரைவில் மராத்தியர் திருச்சி கோட்டைக்கு அருகில் நிலை கொண்டு, கோட்டைக்குரிய தொடர்பைத் துண்டித்தனர். வடக்கு எல்லையைப் பாதுகாக்கும் பொருட்டு நவயத்படையினர் புத்தாசாகிபின் தலைமையில் முன்னேறினர். தனது சகோதரரான சாதக்சாகிப்புடன் (Sadak Sahib) திண்டுக்கல்லை அடைந்த புத்தாசாகிப் அங்கு மராத்தியரை முறியடித்தார். திருச்சி நோக்கி விரையும் வேளையில் ராகுஜி போன்ஸ்லே என்ற மராத்திய தளபதி மணப்பாறையில் அவர்களைத் தடுத்து நிறுத்தினார். தீவிரமான போரில் புத்தாசாகிப்பும், சாதக்சாகிப்பும் கொல்லப்பட்டனர். திருச்சியில் முற்றுகையிற்றிருந்த மராத்தியர் படை கோட்டையின் சுவர்கள் மீதேறி குதித்து, வலிமை இழந்திருந்த சந்தாசாகிப்பின் படைகளைத் தாக்கி கோட்டையைக் கைப்பற்றினர்.

அபித்அலி

1741 மார்ச் 13இல் மராத்தியர்கள் சந்தாசாகிபையும் அவரது மகன் அபித்அலியையும் (Abidali) கைதியாக பிடித்துச் சென்றார்கள். பின்னர் அங்கிருந்து பீராருக்கு (Berar) கொண்டு செல்லப்பட்டு, 1744 டிசம்பரில் சதாராவிற்கு கொண்டு சென்றார்கள். பிரெஞ்சுக்காரர்களின் உதவியுடன், டூப்ளேயின் முயற்சி (Dupleix) யால் 7 இலட்ச ரூபாய் மராத்தியரிடம் வழங்கப்பட்டது. பின்னர் 1748இல் நவம்பரில் எட்டுவருட சிறைவாசத்திற்குப் பின் சந்தாசாகிப் விடுதலையானார். **

முர்தஸா அலி

சந்தாசாகிப் கைதியாக இருந்த காலத்தில், சப்தர்அலியின் மைத்துனரான முர்தஸா அலி 1742இல் சப்தர் அலியை கொலை செய்துதானே ஆற்காடு நவாபானார். ஆனால்

---

* Public Country Correspondence, Vol.I, P.89.

** Ibdi

நவாபின் படைகள் முர்தசா அலியை தலைநகரத்திலிருந்து துரத்தியது.

சையித்முஹமது - இரண்டாம் சதாத் அலிகான்

கொலை செய்யப்பட்ட சப்தர் அலியின் மகனான சையித்முஹமதுவை இரண்டாம் சதாத்அலிகான் என்ற பெயரில் அரியணையில் அமர்த்தினர்.

குவாஜா அப்துல்லாகான்

நிஜாம் ஆஸப்ஷா, குவாஜா அப்துல்கானை, நவாபின் பாதுகாவலாளராக நியமித்தார். ஆற்காடு 'நவயத்' நவாப் இளவரசரின் பாதுகாப்பாளராகவும், திருச்சிராப்பள்ளியில், நவாபாகவும் செயல்பட்ட குவாஜா அப்துல்லாகான் உண்மையான நவாப்பாக அதிகாரத்தைச் செலுத்தினார்.

அன்வாருதீன்

1744 இல் குவாஜா அப்துல்லாகான் இறந்தார். நிஜாம் தனது தளபதியான அன்வாருதீனை இரண்டாம் சாதத்துல்லாகானின் பாதுகாப்பாளராக நியமித்தார். ஜூன் 1744 இல் பத்து வயதான நவயத் இளவரசர் இரண்டாம் சதாத்துல்லாகான் திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்தபோது, முஹம்மது அன்வாருதீன் முர்தஸா அலியின் முன்னிலையில், நவாப்பை படுகொலை செய்தார். அதனைத்தொடர்ந்து முஹம்மது அன்வாருதீன் (Muhamad Anwar-ud-din) ஆற்காடு நாவபின் அதிகாரத்தை மேற்கொண்டார். தனது செல்வாக்கைப் பாதுகாப்பதில் மட்டும் ஆர்வம் கொண்டிருந்த நிஜாம், வாலாஜா வம்சத்தைச் சேர்ந்த அன்வாருதீனை ஆற்காடு நாவாபாக ஏற்றுக்கொண்டார்.

ஆற்காட்டில் சந்தாசாகிப்

1749இல் ஜூனில் 14000 குதிரைகளுடனும் 15000 வீரர்களுடனும் சந்தாசாகிப் ஆற்காட்டின் மீது படையெடுத்தார். 23000 வீரர்களைக் கொண்ட பிரெஞ்சுப் படையும் சேர்ந்து கொண்டது. 1749 ஜூலை 23இல் ஆம்பூரில் நடைபெற்ற போரில் சந்தாசாகிப் அன்வருதீனைக் கொன்றார். பின்னர் ஆற்காட்டைக் கைப்பற்றினார். முஹமதுஅலி அங்கிருந்து தப்பிச்சென்றார்.

முஹமதலி

திருச்சிராப் பள்ளிக்குத் தப்பிச் சென்ற முஹமதலி ஆற்காடு நவாபாக தன்னை அறிவித்துக் கொண்டார். (Nawab Mahomed Ali Khan Bahadur, Styled Wallajah Nawab of the Carnatic, 1749-1795) அதன்பின் 1795 வரை அவரே ஆங்கிலேயர் ஆதரவுடன் ஆற்காடு நவாபாக இருந்தார்.*

ஆங்கிலேயரும் - பிரெஞ்சுக்காரர்களும்

முஹமதலிக்கு ஆதரவாக ஆங்கிலேயர்கள் களத்தில் நின்றனர். பிரெஞ்சுக்காரர்கள் சந்தாசாகிப்பிற்காக களத்தில் நின்றனர். போர் தொடர்ந்து நடைபெற்றது.

1752 ஏப்ரல்

ஆங்கிலப்படைகள், மராத்தியப்படைகள், மைசூர் படைகள், முஹமதலியின் படைகள் அனைவரும் சந்தாசாகிபிற்கு எதிராக களத்தில் நின்போது, சந்தாசாகிப் வீழ்ந்தார். தன்னை மாறுவேடத்தில் பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்தில் உள்ள காரைக்காலில் கொண்டுவிட்டு விடுமாறு மராத்தியரிடம் தூது சொல்லப்பட்டது. இறுதியில் ஆங்கிலேயர்களை எதிர்த்து நின்ற அந்த மாவீரன் துரோகத்தால் படுகொலை செய்யப்பட்டார். பிரிட்டிஷ் கும்பெனியாரை எதிர்த்து களங்கண்ட ஆற்காடு நவாப் சந்தாசாகிபின் இரத்தம் இந்த மண்ணில் சிந்திய வரலாற்றின் பக்கங்கள் இதோ;

எம்லா

பிரெஞ்சுத் தளபதி எம்லா (M.Las) அறிவுரையை ஏற்று சந்தாசாகிப் தனது வக்கீல்களான கோபிநாத் (Gobinath) தாவூத்கான் (Dawud Khan) என்ற ஆப்கானியரையும் தஞ்சாவூர் மராத்திய அரசர் மானாஜிராவிடம் அனுப்பி வைத்தார். வாய்வழியாக செய்தி சொல்லி அனுப்பப்பட்டது. இந்தச் செய்தியைக் கேட்ட மானாஜிராவ், சாந்தாசாகிபிற்கு சாதகமான பதிலைக் கூறினார்.

---

* A Brief History of the Nawabs of Carnaticand the Princes of Arcot. 1690 - 1990, Madras 1990, Page 1

He listened to the oral news apparently with great concern, and gave an affirmative reply. *

மானாஜிராவின் துரோகம்

இதற்குப்பின்னர் சந்தாசாகிப், எம்.லா., அசனுத்தீன்கான் ஆகியோர் மானாஜிராவைச் சந்திக்க வந்தனர். அவர்களை மிகவும் ஆறுதல்படுத்துவதாக மானாஜிராவ் காட்டிக்கொண்டார். இரகசியமாக தளவாய் மண்டபத்தில் சந்தாசாகிபை மானாஜிராவ் தங்க வைத்தார். மறுநாள் புதுச்சேரிக்கு சந்தாசாகிப் தப்பிச் செல்லப் பார்க்கிறார் என்று கூறி சந்தாசாகிபை கைது செய்திருப்பதாக மானாஜிராவ் அறிவித்தார்.

ஆற்காடு நவாப் முஹமதலி அச்செய்திகேட்டு மிகுந்த மகிழ்ச்சியடைந்தார். ஆங்கிலேயக் கும்பெனித் தளபதிகள் அகமகிழ்ந்தனர். மராத்தியர்கள் மனம் மகிழ்ந்தனர். மைசூர்க்காரர்கள் மகிழ்ச்சியிலே திளைத்தனர்.

12.6.1752

11.6.1752 இல் சந்தாசாகிப் மானாஜியால் வஞ்சகமாக கைது செய்யப்பட்டார். *12.6.1752* அன்று ஆங்கிலத் தளபதி மேஜர் லாரன்ஸ் தலைமையில் சந்தாசாகிப் குறித்து முடிவெடுத்திட ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

மேஜர்லாரன்ஸ்

ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கும்பெனியாரின் படைத்தளபதி மேஜர்லாரன்ஸ் (Major Stringer Lawrence) சந்தாசாகிபை ஆங்கிலேயர்கள் கரங்களில் ஒப்படைத்திடுமாறு கேட்டுக்கொண்டார். நவாப் முகமதலியும், மைசூர்க்காரர்களும், மராத்தியர்களும் தங்கள் வசமே ஒப்படைத்திட வேண்டுமென்று வலியுறுத்தினர். இறுதியில் அன்றைய கூட்டத்தில் எந்த முடிவும் எடுக்கப்படாமல் கூட்டம் கலைந்தது.

---

* S. Muhamdhusayan husayan, Nainar, Tazaki Walajahai, Part -II, Madras, 1939, p.122.

மீர்முஜாபர் அலி

மராத்திய ஜெனரல் மானாஜிராவ், மீர்ஜாபர் அலி (Mirmuzaffarali) என்ற தனது சிப்பாய்களில் ஒருவரை அழைத்து சந்தாசாகிபை கொன்றுவிடுமாறு இரகியமாக உத்திரவிட அவரது காதுகளில் முணுமுணுத்தார். "யுத்தகாலத்தில் என்னுடைய மகனையோ அல்லது சகோதரனையோ தலையை வெட்டிவா என்று எனது எஜமானர் உத்திரவிட்டால் அதனை மறுக்க முடியாது என்றாலும், தன்னிடம் தஞ்சம் புகுந்த ஒருவரைக் கொல்லுவது அநியாயமும் கொடூரமும் ஆகும். நான் எனது வாளை அதற்காக உருவிடமாட்டேன்" என்று அவர் பதிலளித்தார்.

அஸீர்பேக்

அதன்பின்னர், மானாஜிராவ் அஸீர்பேக் (Ashurbeg) என்ற பெயருடைய ஒருவரையும், இராஜபுத்திரர் ஒருவரையும் அனுப்பி சந்தாசாகிப்பைக் கொலை செய்ய உத்திரவிட்டார். அவர்கள் தனியாக இருக்கும் சந்தாசாஹிபிடம் வந்தார்கள். அஸீர்பேக் சப்தமிட்டு, "நவாப் சாஹிப், நீங்கள் கலிமா தையூபைச் சொல்லிக் கொள்ளுங்கள் (Nawwab sahib, pronounce and kalima tayyib) நாங்கள் உங்களுடைய தலையைத் தேடி வந்திருக்கிறோம். அல்லாஹ்வின் கருணையால் தயாராகிக் கொள்ளுங்கள்" என்று கூறினார்.

ஈட்டியை உருவிப் பாய்ந்த சந்தாசாகிப்

இக்குரலைக் கேட்டதும் சந்தாசாகிப் தனது ஈட்டியை உருவி அஸிர்பேக் மீது பாய்ந்தார். அஸிர்பேக் சந்தாசாகிப்பை பலமாகப் பிடித்துக்கொண்டிருந்தபோது, இராஜபுத்திரவீரன் சந்தாசாகிப்பை தனது ஈட்டியால் குத்தினான். சந்தாசாகிப் மிகுந்த ஓலமிட்டு தரையில் சாய்ந்தார். அஸீர்பேக் தனது ஈட்டியால் சந்தாசாகிபை மேலும் குத்தி காயப்படுத்தியதோடு நில்லாமல், தனது கூர்மையான கத்தியினால் சந்தாசாகிப்பின் தலையைத் துண்டித்தனர். 12.6.1752 அந்த மாவீரனது உயிர் வஞ்சகமாகப் பிரிக்கப்பட்டது. வெட்டப்பட்ட சந்தாசாகிப்பின் தலை மானாஜிராவிடம் கொண்டு வரப்பட்டபோது அதனை ஒரு ஒட்டக ஓட்டியிடம் கொடுத்து, அதனை நவாப் முஹமதலியிடம் எடுத்துச்செல் என்று மானாஜி உத்திரவிட்டார்.

பக்கீரின் சுதந்திர தாகம்

வெட்டப்பட்டு தனியாக இருக்கும் தலையினை ஒரு துணியினால் சுற்றாமல் வெறுமனே எப்படி அதை எடுத்துச் செல்லமுடியும் என்று ஒட்டக ஓட்டியான பக்கீர் ஒருவர் அப்போது தயங்கி நின்றார்.

இன்னொரு பக்கீர்

இராணுவத்தினரிடடையே தங்கியிருந்த இன்னொரு பக்கீர் தனது நீண்ட துண்டை எடுத்துக் கொடுத்தபோது ஒட்டக ஓட்டி அந்தத் துண்டில் சந்தாசாகிப்பின் தலையை வைத்துக் கட்டி தூக்கிச் சென்றார்.

நிமிர்ந்து நிற்கும் தலை

சந்தாசாகிப்பின் மீது அபிமானங்கொண்ட பக்கீர் ஒருவர் அப்போது, "ஓ! தாராள மனப்பான்மை உடையவனே! உனது தலை உயிருடன் இருந்தாலும், இறந்து விட்டாலும் எப்போதும் உயர்ந்து நிமிர்ந்து நிற்கும்!" என்று உரக்கக் கூறினார்.

கோட்டையில் காட்சிப் பொருளாக

சந்தாசாகிபின் தலை திருச்சிகோட்டைவாயிலில் தொங்கவிடப்பட்டது. பிறகு இமாமிய (Imamiyya) வமிசத்தைச் சேர்ந்த பீர்கள் சந்தாசாகிப்பின் உடலை எடுத்துச் சென்று இஸ்லாமிய முறைப்படி அடக்கஞ் செய்தனர். திருச்சிராப்பள்ளி ஹஜரத் நத்தர் வலியுல்லாஹ் தர்ஹாவின் வடபுறத்தில் சந்தாசாகிப்பின் உடல் அடக்கம் செய்யப்பட்டு, அங்கே கல்வெட்டும் வைக்கப்பட்டுள்ளது. (பின் அட்டையில் அந்தப் படங்கள் உள்ளது)

மேஜர்லாரன்ஸ்

சந்தாசாகிபை வஞ்சகமாக படுகொலை செய்ததில் ஆங்கிலேயக் கும்பெனித் தளபதி மேஜர் லாரன்ஸின் பங்களிப்பும் உள்ளது. வரலாற்றில் மறைந்துள்ள பக்கங்களில் சாட்சியங்கள் அது குறித்து தெளிவாகவே உள்ளன.

சந்தாசாகிபினை மராத்தியர், ஆற்காடு நாவப், மைசூர்க்காரர்களின் சதித்துணையுடன் நிறைவேற்றிய ஆங்கிலேயக் கும்பெனி அதன்பின் தெற்குச்

சீமையில் வேகவேகமாக தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்திக்கொண்டது.

விரிவாக எழுத இருக்கும் வரலாறு

ஆங்கிலேயரைப் போர்களங்கள் பலவற்றில் எதிர்தது நின்று வாகை சூடிய ஆற்காடு நவாப் சந்தாசாகிப் என்னும் வீரவேங்கையின் வரலாறு வெள்ளையரின் துரோகத்தாலும், மராத்தியரின் வஞ்சகத்தாலும், ஆங்கிலேய ஆற்காடு நவாபின் சதியாலும் ·வீழ்த்தப்பட்டது. தமிழகத்தில் சந்தாசாகிப் நடத்திய வீரப்போர்கள், ஆங்கிலேயரை வீழ்த்திய களங்கள், மாற்று மதத்தவரிடம் அவர் காட்டிய சமயப் பொறை, அவரது ஆற்றல், திறமை இவைகள் முழுமையாக விரிவாக தமிழ் உலகம் அறியப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஆற்காடு நவாப் சந்தாசாகிப்பின் சரித்திரம் விரிவாக முழுவதுமாக எளியேனால் எழுதப்பட்டு வருகிறது. எல்லாம் வல்ல இறைவனின் அருளால் அது தனி நூலாக விரைவில் வெளிவருகிறபோது சந்தாசாகிப் குறித்த முழு வரலாற்றுச் செய்திகளையும் இன்னும் விரிவாகத் தெரிந்து கொள்ளலாம் என்று எழுதியிருந்தேன்.

268 ஆண்டுகள் கழித்து இறைவனின் கருணையால்

எல்லாம் வல்ல இறைவனின் கருணையால் *(30.7.2020)* சந்தாசாகிப் படுகொலை செய்யப்பட்ட *268* ஆண்டுகள் கழித்து இப்போது அதற்கான நேரம் வந்தது. இயன்றவரை சந்தாசாகிப் வரலாற்றை தக்க சான்றுகளோடு தருகிறேன்.

எளியேன் வாழ்வதற்காக எழுதவில்லை
எழுதுவதற்காகவே வாழ்கிறேன்



15.8.2020
ரெகான் சுலைமான் இல்லம்,
பாளையங்கோட்டை.

செ.திவான்.

சரித்திர நிர்மானத்துக்குரிய கருவிகள்

உலகில் ஆதாரமற்ற கற்பனைகளைக் கலந்து தனது மனத்திற்கேற்றபடி எழுதினால் நாவல் ஆகும்; சரித்திரம் ஆகாது.

தக்க சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு, மிகைப்படுத்திலின்றி, 'திரிபு', முதலிய குறைகள் இன்றி உள்ளதை உள்ளவாறே உரைத்திடும் உண்மையான சரித்திர நூல்கள் கி.பி. 10ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் இயற்றப்பட்டன.

முஸ்லிம்களும் ஐரோப்பியர்களும் சரித்திர உணர்ச்சி நிரம்பியவர்கள். ஐரோப்பியரின் வழக்கங்களைக் கவனித்துத்தான் புதுச்சேரி துபாஷ் ஆனந்த ரங்கம்பிள்ளை தமது தினசரிக் குறிப்பை (டைரி) எழுதினார்.

ஐரோப்பிய ஆட்சியின் வரலாறு ஆங்கிலேயராலேயே அவர்கள் சார்பான ஆதாரங்கள் கொண்டேதான் எழுதப்பட்டிருக்கிறது. சுமார் கி.பி. 1700 முதல் ஏற்பட்ட கவர்ன்மெண்ட் தஸ்தாவேஜுக்கள் நம்நாட்டில் பல ரிகார்டு ஆபீஸ்களிலும் இலண்டனில் செவ்வனே காப்பாற்றப்பட்டு வருகின்றன. ஆனால் அவைகள் முற்றும் படித்து உண்மையை உணர்ந்து சரித்திரம் எழுதிட வசதிகள் அதிகமாக இல்லை.

சரித்திரத்தை எழுதிய ஆங்கிலேயரும் பிற்காலத்தில் எழுதவில்லை. **"கி.பி.13ஆம் நூற்றாண்டு முதல் தற்காலம் வரை உள்ள சரித்திரம் இதுவரை பொதுவாக நம் நாட்டை வென்று ஆண்டு வந்த அந்நியராலேயே அவர்கள் மனதுக்கு இசைந்தவாறே எழுதப்பட்டு வந்திருக்கிறது.**

இனிமேல் இதையெல்லாம் தக்க ஆதாரங்களைக் கொண்டு சீர்ப்படுத்தி உண்மையில் ஜனசமூகத்திற்கு, அவ்வக்காலங்களில் ஏற்பட்டிருந்த மனப்பான்மைகளும் சுக துக்கங்களும், லாப நஷ்டங்களும் தெளிவாகப்படிப்பவருக்கு விளங்கும் படியாகப் புதிய சரித்திர நூல்கள் எழுதப்படவேண்டும்."

நம் நாட்டு சரித்திரத்தை சரிவர ஆராய்ந்து நிர்மாணம் செய்யக்கருவிகள் ஏராளமான இருக்கின்றன. அவ்வேலையைக்

கொள்ளமட்டும் தகுந்த கல்விமான்கள் அதிகமாகக் காணப்படவில்லை.*

தமிழர் பண்பாடும் வரலாறும்

சரித்திரம் எவ்வாறு எழுதப்பட வேண்டும் என்று அறிவுரைத்த கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி எழுதிய நூல்களில் ஒன்று ஆங்கிலத்தில் எழுதப்பட்ட தமிழர் பாண்பாடும் வரலாறும் எனும் நூல். அது 1965 சூனில் 'சிட்டி'யால் தமிழாக்கம் செய்யப்பட்டு சென்னை 13 வாசகர் வட்டம் சார்பில் 231 பக்கங்களில் வெளிவந்தது. அதில் பக்கம் 66இல் மங்கம்மாளுக்குப் **பின்னர் ஆட்சிக்கு வந்த மீனாட்சி சந்தா சாஹேப்பால் மோசம் செய்யப்பட்டு, சிறை வைக்கப்பட்டார். மீனாட்சி விஷம் உண்டு தற்கொலை செய்துகொண்டார்** என்று குறிப்பிடுகிறார்.

தமிழகத்தில் வெளிவருகின்ற பல நூல்களிலும் சந்தாசாகிப்பற்றி இவ்வாறே எழுதப்பட்டு வருகிறது. இதில் உண்மை என்ன? சந்தாசாகிப் யார்? அவரது வரலாற்றைத் தொடர்வோம்.

சந்தா சாகிப்

பாரம்பரியமிக்க குடும்பத்தில் பிறந்தவருமில்லை. பணக்காராக இருந்ததுமில்லை. பாமரக்குடும்பத்தில் பிறந்தவர் சந்தாசாகிப். இவர் பிறந்த ஆண்டு, தாய் தந்தையர் பற்றிய விவபரம் வரலாற்றில் காணப்படவில்லை; அல்லது கிடைக்கவில்லை.

சந்தாசாகிப் தமிழகத்திற்குள் எப்படி வந்தார்? எவ்வாறு ஆற்காடு நவாபாக ஆனார்? துவக்ககால வரலாற்றிலிருந்து தொடர வேண்டியுள்ளது.

விஜயநகர அரசு

தென்னிந்திய வரலாற்றில் கி.பி.1336ஆம் ஆண்டில் அமைக்கப்பெற்ற விஜயநகரம் அதனைச் சார்ந்த பேரரசு. வடக்கே **மகாநதி** தீரத்திலிருந்து தெற்கில் நெல்லூர் மாவட்டத்திலுள்ள

---

* சரித்திர நிர்மானத்துக்குரிய கருவிகள் கலைமகள், நவம்பர் 1948, தீபாவளி இதழ் விலை ஒரு ரூபாய் எட்டுஅணா பக்கம் 478, 479, 484) என்பர் வரலாற்றறிஞர் கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி (12.8.1892 -16.6.1975)

குண்டல காமம் என்றும் இடம் வரையில் பரவியது. அன்றைய ஆந்திர நாட்டின் கடற்கரைப்பிரதேசத்தில் இருந்த இஸ்லாமிய ஆட்சி மறைந்தது.

சோமதேவன்

சாளுக்கிய மரபைச் சார்ந்தவரும், 'ஆரவீடு' அரச மரபிற்கு அடிகோலியவருமாகிய சோமதேவர் ஆந்திர நாட்டின் மேற்குப்பகுதியில் இஸ்லாமிய ஆட்சியை அழிப்பதற்கு காரணமாக இருந்தார் சோம தேவன்.

மாலிக் முஹம்மது @ மாலிக் நிபி (Malik Naib)

மாலிக் முஹம்மது @ மாலிக் நிபி (Malik Naib) கர்நூல், ஆணைகுந்தி, இராய்ச்சூர், முதுகல் முதலிய இடங்களைத் தன் வசப்படுத்திய சோமதேவன், கம்பிலியில் ஆட்சி செலுத்திய மாலிக் முஹம்மது அல்லது மாலிக் நிபி என்ற இஸ்லாமிய ஆட்சியாளருக்கு எதிராகக் கலகம் செய்தார்.

முஹம்மது பின் துக்ளக்

மாலிக் முஹம்மது பின் துக்ளக்கின் மேலாண்மையை முதலில் ஒப்புக்கொண்டிருந்த ஹொய்சாள மன்னன் **மூன்றாம் வல்லாள தேவன்** கம்பிலி மீது படையெடுத்தார். தீவிரமான எதிர்ப்பு ஒரு புறம், சோமநாதன் மறுபுறம், மூன்றாம் வல்லாள தேவன் கம்பிலியில் பெரும் போர்ச்சூழல். இந்நிலையில் தனக்கு வேறு வழியில்லாத நிலையில் மீண்டும் முஹம்மதுபின் துக்ளக்கின் உதவியை வேண்டினார் மாலிக் முஹம்மது. முஹம்மது பின் துக்ளக் தனது அமைச்சர்களை அழைத்து ஆலோசனை செய்தார்.

கி.பி.1329இல் துவாரசமுத்திரத்து மூன்றாம் வல்லாள தேவனிடம் போரிட்டு துக்ளக் பிடித்த கம்பிலி நாட்டை ஆண்ட கம்பிலி தேவராயருடைய அலுவலர்கள் ஆறுபேர் சிறையில் இருப்பதைக் கூறி அவர்களில் ஒருவரை கம்பிலிக்கு அரசராக்கலாம் என்று அமைச்சர்கள் துக்ளக்கிற்கு ஆலோசனை சொன்னார்கள்.

ஹரிஹரன் - புக்கன்

கம்பிலியிலிருந்து கைதிகளாகக் கொண்டு வரப்பட்ட ஆறு பேரில் ஹரிஹரன், புக்கன் என்ற இரு சகோதரர்கள்

ஹரிஹரன் கம்பிலிராயனுடைய அமைச்சராகவும் புக்கன் கம்பிலிராயனுடைய கருவூல அதிகாரியாகவும் இருந்ததை அறிந்து இவ்இருவரிடம் நாட்டை ஒப்படைக்க துக்ளக் முடிவு செய்தார்.

கைதிகளாக இருந்த கம்பிலிதேவராயரின் அலுவலர்கள் ஆறுபேர்களும் முகம்மதுபின் துக்ளக் உத்திரவால் விடுதலை செய்யப்பட்டார்கள். தக்க பாதுகாப்புடன் டெல்லியிலிருந்து வந்து கம்பிலி நாட்டின் அரசனாக ஹரிஹரனும், கருவூல அதிகாரியாக புக்கனும் நியமிக்கப்பெற்றார்கள். மாலிக் முகம்மது ஆட்சிப் பொறுப்பை விட்டு நீங்கி டெல்லி சென்றார். ஹரிஹரனும் புக்கனும் விஜயநகரப் பேரரசு தோன்றுவதற்கு காரணமாக இருந்தனர்.*

பெர்னாவோ நூனிஸ் (FERNAO NUNIZ)

வரலாற்றாசிரியர் பெர்னாவோ நூனிஸ் தனது நூலில் குறிப்பிடுகிறார்.

At once the six captives were released and set at liberty, and many kindnesses and honours were done them, and the governor was raised to be king and the treasurer to be governor.**

இராபர்ட் சீவெல்

போர்த்துக்கீசிய வணிகர்களுள் ஒருவராக, விஜயநகரத்திற்கு வந்து, மூன்று ஆண்டுகள் குதிரை வியாபாரம் செய்துவிட்டு, பேரரசில் தான் கண்டு கேட்டதையும், சகாக்கள் மூலம் கேட்டறிந்ததையும் வைத்து ஒரு வரலாற்றுக் குறிப்புகள் பதிவு செய்தவர் ஃபெர்னாவோ நூனிஸ். பாரிஸ் தேசிய நூலகத்தில் இருந்து அப்பிரதிகளை போர்த்துகீசிய மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து முதன் முதலாக வெளியிட்டவர்

---

* டாக்டர் அ.கிருஷ்ணசாமி, விஜயநகரப்பேரரசின் வரலாறு, சென்னை 1977, பக்கம் 24, 25,26,27.

** Chronicle of FERNAONUNIZ, Written, Probably AD 1535 - 1537, Chapter III,Robert sewell A Forgotten Empire (Vijayanagar) A contribution to the History of India, London, 1900- page 298

இராபர்ட் சீவெல். அவரது மொழி பெயர்ப்பிலிருந்துதான் மேலே சொன்ன பகுதியைத் தந்துள்ளேன்.

முஸ்லிம் மன்னன் அளித்த அரச பதவி

விஜய நகரப் பேரரசை ஸ்தாபித்த ஹரிஹரனும், புக்கனும் டில்லியில் முஹம்மதுபின் துக்ளக்கால் சிறைவைக்கப்படவில்லை. பின் அவரால் விடுதலை செய்யப்பட்டு, அதிக அளவில் படைவீரர்களுடனும் நாககுந்திக்கு (Nagundy) அனுப்பிவைக்கப்பட்டு, பின்னர் ஹரிஹரனும் *(1336–1355)* புக்கரும் அங்கு வந்து உருவாக்கிய நகரமே விஜயநகரமாகும். இதுவெறும் மறுத்திட இயலாத வரலாற்றுச் சான்றாகும்.

தலைக்கோட்டைப் போர் (கி.பி. 1565 ஜனவரி 23)

பிஜப்பூர் சுல்தான், கோல்கொண்டா சுல்தான் இப்ராஹீம் குத்ப்ஷா, ஆமதுநகரத்துச் சுல்தான் பீடார் நகரத்து சுல்தான் கூட்டணி சேர்ந்தனர். திருமண உறவுகளும் ஏற்பட்டது. விஜயநகர அரசை எதிர்த்துப் பெரும்போர் தலைக்கோட்டையில் கி.பி.1565 ஜனவரி 23இல்; விஜயநகரப்பேரரசு அழிந்தது.

தென்னகத்தில் இஸ்லாமிய அதிகாரம்

‘இந்துக்களுடைய ஆட்சிப் பெருமையிலிருந்து தென்னிந்தியாவில் எப்படி இஸ்லாமிய அதிகாரம் பரவியதென்பதைக் குறிப்பதே தலைக்கோட்டைப்போர் என்பார் ஹுராஸ்பாதிரியார்.

‘The battle of Raksas - Tagdi is the Mileestone that separates the era of Hindu splendur in the south of Indian from the Age of Muhammadan expansion*

நாயக்கர் ஆட்சி

விஜயநகரப் பேரரசர்கள் தென்னகத்தை ஆண்டபோது அமைதிக்காலத்திலும், போர்க்காலங்களிலும் பணிபுரிவதற்கு தயார் நிலையிலுள்ள படைத்தளபதிகளை அவர்களுக்குத்

---

* Rev. HENRYHERAS, St.Xavier’s college Bombay Professor of Indian History, The ARAVIDUDYNASTY OF VIJAYANAGARA B-G, Paul & Co Publisehrs, Madras, 1927 Page 218) Book Totaly 681 pages)

தேவைப்பட்டனர். அத்துடன் அரச குடும்பத்தினரையும் செல்வாக்கு மிக்க தளபதிகளையும் விசுவாசமுள்ள ஊழியர்களையும் ஆட்சிப்பணியில் அமர்த்தினர். இதனால் ஏற்பட்ட விளைவே நாயக்கர் ஆட்சி முறை ஆகும்.

மன்னர் நாட்டை நாயக்கட்டினங்கள் (Nayakattinams) என்றழைக்கப்பட்ட பகுதிகளாகப் பிரித்து அவைகளை நாயக்கர்களிடம் (Nayaks) ஒப்படைத்தனர்.

கிருஷ்ணதேவராயர் (1509-1529)

கிருஷ்ணதேவராயர் ஆட்சியில் தமிழகத்தில் நாயக்கர் ஆட்சிமுறை இருந்தது. கிருஷ்ணதேவராயரின் ஆட்சிக்காலத்தில் பாளையக்காரர்கள் அவருடைய மேலாண்மையை ஏற்றுக்கொள்ளவும், கப்பம் செலுத்தவும் மறுத்ததால் வலிமை வாய்ந்த படைகளை தென்கோடிப்பகுதிக்கு *(1520–1521)* அனுப்பினார்.

வையப்ப நாயக்கர்

நெல்லூர் முதல் கொள்ளிடம் வரை பரந்து செஞ்சிப் பகுதிகளோடு வேலூரும் சேர்ந்திருந்த பகுதிக்கு வையப்ப நாயக்கர் தலைமை தாங்கி படைகளுடன் சென்று நாயக்கர் முறைப்படி நிர்வாகத்தை அமைத்தார்.

விஜயராகவ நாயக்கர்

காவேரி கிடந்த டெல்டா பகுதியை உள்ளடக்கிய தஞ் சாவூருக்கு விஜயராகவ நாயக்கர் பொறுப்பேற்றார்.

வெங்கடப்ப நாயக்கர்

மதுரை கொள்ளிடம் முதல் கன்னியாகுமரி வரை பரந்திருந்தது. இப்பகுதிக்கு வெங்கடப்ப நாயக்கர் தலைமை ஏற்றார். மதுரை, தஞ்சாவூர், செஞ்சி வலிமையோடு திகழ்ந்திருந்தது.

அச்சுதராயர்

அவருக்குப்பின் ஆட்சிக்குவந்த அச்சுதராயர் ஆட்சியின் (AchyutaRaya 1529-1529 - AD) போது சுமார் *200* நாயக்கர்கள் விஜயநகரப் பேரரசில் இருந்தனர்.

பாளையங்கள்

200 நாயக்கர்கள் பாளையங்களை ஏற்படுத்தி அவைகளை பாளையக்காரர்களிடம் ஒப்படைத்தனர்.

The Nayaks in their turn formed Palayams of palamus and assigned them to subordinate Chieftains known as the palayamkkarans of poligars.*

பேராசிரியர் கே.ராஜய்யன்

பாளையக்காரர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு காலத்திலும் மாறியபோதும் நூறு எண்ணிக்கையை எப்போதும் தாண்டியதில்லை என்பார் பேராசிரியர் கே.ராஜப்பன்.

The number of poligars varied from time to time yet it does not appear that their strength exceeded a hundred at any time. **

விசுவநாத நாயக்கர்

விஜயநகர கிருஷ்ணதேவராயர், தன் அதிகாரத்தைத் திரட்டிக்கொள்ளும் வகையாக மதுரையைத் தலைமையகமாகக் கொண்ட நிர்வாகியாக விசுவநாத நாயக்கரை (1529-1564) நியமித்தார். விஜயநகரப் பேரரசர் அச்சுதராயரின் ஒப்புதலோடு பாளையக்கார ஆட்சிமுறையை விசுவநாத நாயக்கர் நடைமுறைப்படுத்தினார்.

வி. இரங்காச்சாரி - எஸ். இராதாகிருஷ்ண அய்யர்

வி.இரங்காச்சாரியின் இந்தியத் தொன்மை (V. Rangacharya in India Antiquary) *எஸ். ராதாகிருஷ்ண அய்யரின் புதுக்கோட்டை அரசியல் பொதுவரலாறு* (S.Radhakrishna Iyer, A General History of the Pudukkottai State 1916) *நூலில் பாளையக்கார ஆட்சிபற்றிய தகவல்கள் உள்ளது.*

---

* A.Krishnaswami, The Tamil Country under vijayanagar, Annamalai nagar,1964-pp 177-179

** Dr. K.Rajayyan, Riseand Fall of the Poligars of Tamilnadu, Chapter I, Rise of the poligars, Journal of the Madras University Volume XL VI No.I January 1974, Published by The University of Madras Editor DR.V.A.DEVASENAPATHI, Editorial Board, Dr.K.K. PILLY, Dr.V.Shanmuga Sundaram, Page 84.

ஆர். சத்தியநாத அய்யர்

ஆர். சத்தியநாத அய்யரின் மதுரை நாயக்க மன்னர்களின் வரலாறு (R.Sathyanatha Aiyar, History of the Nayaks of Madura), Humphery Milford Oxford,1924) *1924இல் அச்சிட்ட நூல் மொத்தப் பக்கங்கள் 403)* நூலில் பாளையக்கார ஆட்சி பற்றிய பல குறிப்புகளைப் படித்தறிந்து கொள்ளலாம்.

செஞ்சி

கிருஷ்ணபுரம் என்பது ஆதிப்பெயர், செஞ்சிக்கு சஞ்சீவி எல்லா நோய்களுக்கும் மருந்து என்ற சொல்லில் இருந்து செஞ் சி எனும் பெயர் தோன்றியிருக்கலாம். சிங்காவரம் வெங்கடபதி (வைணவக்கோயில்) மருவி செஞ்சி என ஆகியிருக்கலாம்.

வெங்கடபதி நாயக்கர் கி.பி. 1464
வையப்ப நாயக்கர் கி.பி. 1430
துபாக்கி கிருஷ்ணப்ப நாயக்கர் கி.பி. 1490 – 1520
அச்சுதவிஜய ராமச்சந்திர நாயக்கர் கி.பி.1520 – கி.பி.1540
முத்தியாலு நாயக்கர் கி.பி.1540–1550
வெங்கடப்ப நாயக்கர் @ கி.பி. 1570–1600
(இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர்)
வரதப்பநாயக்கர் (Varadappanayaka) *கி.பி. 1600 – 1620*
அப்பா நாயக்கர் (Appa Nayaka) *கிபி 1620 – முஸ்லிம்கள் வெற்றிபெறும் வரை*
*செஞ்சியின் ஆட்சியாளர்களாக இருந்தனர்.**

தஞ்சாவூர் நாயக்கர்கள்

தஞ்சை நாயக்கர் ஆட்சியைத் தோற்றுவித்தவர் செவ்வப்ப நாயக்கர் என்ற சின்ன செவ்வா (கி.பி.1535–1590)

வி. விருத்தகிரீசன்

'The Nayaks of Tanjore' *எனும்நூலினை* V.Vridhagirisan.

---

* C.S.Srinivasachari M.A., **வரலாற்றுப் பேராசிரியர் அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழக வரலாற்று வெளியீடு எண் 2** A History of Gingee and its Rulers Annamalai Nagar, 1943, Page 82-83 Book Totally (X+625 +XI = 646 Pages

28 கல்வெட்டுக்கள் 4 செப்பேடுகள் துணையுடன் எழுதியுள்ளார். தற்போது 90 கல்வெட்டுக்கள் அவற்றைப் பற்றிக் கிடைத்துள்ளன.

செவ்வப்ப நாயக்கர்

*அச்சுதராயர் விசுவநாதரை மதுரை மன்னராக நியமித்தபிறகு சோழநாட்டைத் தம் மைத்துனியின் கணவரான செவ்வப்ப நாயக்கர் என்பவரிடம் ஒப்புவித்தார். செவ்வப்பர் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு சோழநாட்டை ஆட்சிபுரியத் தொடங்கினார். 'வல்லம்' சோழ நாட்டுடனும் திருச்சி பாண்டிய நாட்டுடனும் இணைக்கப்பட்டது.**

*அச்சுதப்பநாயக்கர், இரகுநாதநாயக்கர் இணைந்த ஆட்சி (கி.பி.1590–1600) இரகுநாத நாயக்கர் தனித்த ஆட்சி (கி.பி.1600 – 1645) இராமபத்ர நாயக்கர் (கி.பி.1628 – 1630) விஜயராகவநாயக்கர் கி.பி. 1631 – 1675. இறுதி என்று மன்னாரு தேவன் கி.பி.1675. தஞ்சை நாயக்க அரசர்களின் குலமரபு பற்றி குறிப்பிடுவார் குடவாயில் பாலசுப்பிரமணியம்.***

டி.எஸ். சிவராமகிருஷ்ணன்

தஞ்சை நாயக்கர்கள் வரலாற்றுச் சுருக்கம் நூலினை 1949இல் 76 பக்கங்களில் தந்தவர் டி.எஸ்.சிவராமகிருஷ்ணன். இந்த நூலுக்கு கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி 14.12.1949இல் பாராட்டுக் கடிதமும் தந்துள்ளார். அவரது நூலில்

சேவப்ப நாயக்கர் 1532–1560
அச்சுதப்ப நாயக்கர் 1560–1614
இரகுநாத நாயக்கர் 1614–1633
விஜயராகவ நாயக்கர் 1633–1673
அழகிரி நாயக்கர் 1674

இறுதியாக செங்கமலதாஸ் ஆட்சியின்போது அதிகாரம் மராட்டியர் வசம் சென்றது.

---

* **மா.இராசமாணிக்கம் விசுவநாதநாயக்கர், சென்னை, 1947, பக்கம் 55**

** **தஞ்சாவூர் நாயக்க வரலாறு, தஞ்சாவூர் பக்கம் 8, 1999**

விஜயநகர மன்னர்களின் ஆதரவு அளித்த தஞ்சை இராஜதானி, அந்த சாம்ராஜ்ய விசுவாசத்தின் விளைவாகவே மதுரை செஞ்சி நாயக்கர்களுடைய பகைமைக்கு ஆளாகி சாம்ராஜ்யம் சிதைவுற்று அழிந்து சிறிது காலத்துக்கெல்லாம் தானும் மறைந்து ஒழிந்தது (1673), தஞ்சை நாயக்கர்களின் 140 வருஷகால ஆட்சிக்குப்பின் கி.பி. 1675 முதல் தஞ்சை மகராஷ்டிர மன்னர்களின் கீழ் சென்றது. இரண்டாம் சரபோஜி மன்னன் 1799இல் தம் ஆட்சியை ஆங்கிலேயரிடம் ஒப்படைத்துவிட்டு உதவிச் சம்பளம் பெற்று விலகி நிற்கும் வரை தஞ்சையைத் தனி அரசர்களாக ஆண்டனர் என்று மட்டும் இங்கு குறிப்பிடுவதல் போதுமானது.*

தஞ்சை நாயக்கர்

எம்.எஸ். சுப்பிரமணிய ஐயர் தஞ்சை நாயக்கர் எனும் நூலை பி.ஶ்ரீ. பதிப்பாசியராக இருந்து தினமணி வெளியீடு 21 ஆக 1945இல் எட்டணா விலையில் 96 பக்கங்களில் வெளிவந்துள்ளது. அதிலும் சில செய்திகளை அறியலாம்.

மதுரை நாயக்கர்கள்

பதினாறாம் நூற்றாண்டின் இரண்டாம் காலிறுதியில் தொடங்கி பதினெட்டாம் நூற்றாண்டின் இரண்டாம் அறையிறுதி வரையிலான காலத்தைத் தன்னகத்தே கொண்டது மதுரை நாயக்கர்கள் வரலாறு.

விசுவநாத நாயக்கர் (1529–1564)
முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர் (1564–1572)
வீரப்ப நாயக்கர் (1572–1595)
இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் (1595–1601)
முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கர் (1601–1609)
முதலாம் முத்துவீரப்ப நாயக்கர் (1609–1623)
திருமலை நாயக்கர் (1623–1659)
இரண்டாம் முத்துவீரப்ப நாயக்கர் (1659)
சொக்கநாத நாயக்கர் (1659–1682)
மூன்றாம் முத்து வீரப்ப நாயக்கர் (1682–1689)
மங்கம்மாள் (பதிலாள்) ஆட்சி 1689–1706)

* தஞ்சாவூர் நாயக்க வரலாறு, தஞ்சாவூர் பக்கம் 57, 1999

விஜயரங்கசொக்கநாத நாயக்கர் (1706-1732)
மீனாட்சி (1732-1739)

என்றும் மதுரை நாயக்கர்கள் வரலாற்றை பேராசிரியர் ஆர். சத்தியநாத அய்யர் வரையறை செய்வார்.

மராத்தியரின் தஞ்சாவூர் ஆட்சி

மதுரையில் அரசுபுரிந்த சொக்கநாத நாயக்கருக்கும், தஞ்சாவூரில் அவரது ஆளுநரான அழகிரி நாயக்கருக்குமிடையான தகராறே மராத்தியரின் தலையீட்டிற்கு காரணமாக அமைந்தது. தஞ்சாவூர் விஜயராகவனின் தயார் தனது இளைய மகனான செங்கமலதாஸை பாதுகாப்புக்கருதி நாகப்பட்டினத்திற்கு டச்சுக்குடியேற்றப் பகுதிக்கு, செட்டி வணிகர் ஒருவரிடம் அனுப்பி வைத்தார்.

சொக்கநாத நாயக்கரும் அழகிரி நாயக்கரும் மோதிக்கொண்டநிலையில், மறுபடியும் ஆதிக்கம் பெறும் வகையில் வீழ்ச்சியுற்ற நாயக்கர்களின் ஆதரவாளர்கள் பிஜப்பூர் சுல்தான் அடில்ஷாவிடம் ஆதரவு வேண்டினர்.

பிஜப்பூர் சுல்தான் அடில்ஷா

செங்கமலதாசுடன் சேரும் பொருட்டு தனது எஜமானரான அழகிரி நாயக்கருக்குத் துரோகம் இழைத்த (Venkanna Iyer) வெங்கண்ணஐயர் பிஜப்பூர் சுல்தான் அடில்ஷா தலையீடு ஏற்பட பெரிதும் காரணமானார்.

எகோஜி

வீரசிவாஜியின் தந்தை ஷாஜி போன்ஸ்லே (Shaji Bhonsle) தாயார் ஜிஜாபாய் (Jijabai)

ஷாஜிபோன்ஸ்லேயின் மற்றொரு மனைவியான துக்காபாய்க்குப் (Tukka Bai) பிறந்தவர் எகோஜி @ வெங்கோஜி Ekojio @Venkoji

பிஜப்பூர் படையெடுப்பால் அச்சுறுத்தப்பட்ட அழகிரி நாயக்கர் மதுரையின் உதவியை நாடினார். ஆனால் சொக்கநாத நாயக்கர் அதற்கு செவிமடுக்கவில்லை. கி.பி. 1674இல் எகோஜி செங்கமலதாசுக்கு உதவியாகப் படை ஒன்றை நடத்திடச்

சென்றார் என்று தஞ்சாவூர் ஆந்திரராராஜுலு சரிதம் Thanjavur Andra Rajula Charitam தெளிவுபடுத்துகிறது.

இடல்கான்

பிஜப்பூர் இடல்கான் (Idalkhan) ஆணைப்படி எகோஜி படையுடன் சென்றான்.* எகோஜி 1676 இல் தஞ்சாவூரைக் கைப்பற்றினார்.

எகோஜியின் ஆட்சி

தஞ்சை, திருச்சி, தென்ஆற்காடு மாவட்டப் பகுதிகளில் தனது ஆட்சியை எகோஜி உறுதிப்படுத்தினார். அருகிலிருக்கும் நாடுகளின் விரோதப் போக்கு சொக்கநாத நாயக்கரோடு மேற்கொண்ட பல போர்கள் வடக்கிலுள்ள முஸ்லிம் நாடுகளின் படையெடுப்பு இவைகளைச் சமாளித்திட எகோஜி முடிவெடுத்து பெங்களூரை 1687 இல் 3 இலட்சம் ரூபாய்க்கு விற்றார். மராத்தியர்களை அழைத்து வந்து பணிகளில் அமர்த்தினார். கொடுங்கோலாட்சியே நிலவியது.

சிவாஜியின் தென்னகப்படையெடுப்பு

மராத்திய வீரர் சிவாஜி கி.பி. 1677இல் கர்நாடகத்தின் மீது படையெடுத்தார். முதலில் செஞ்சியை கைப்பற்றினார்.

பங்காளிச் சண்டை

பிஜப்பூர் அரசவையில் தக்காணியர்களுக்கும், ஆப்கானியர்களுக்கும் இடையே இருந்து குழுச்சண்டையைச் சிவாஜி தனக்குச் சாதமகாகப் பயன்படுத்திக் கொண்டார் என்பார் சி.எஸ்.சீனிவாச்சாரி.

கோல்கொண்டா சுல்தான் உதவி

சிவாஜியின் படையெடுப்பிற்கு பணஉதவி, அளித்தவர் கோல்கொண்டா சுல்தான்.

'The Opportunity Occurred to Sivaji when the Bijapur court was involved infactions between the two leading factions among the nobility, the decannis and the Afghans: and he marched into the

* C.K. Srinivasan, Maratha Rule in the Carnatic, Annamalai University, 1944 page 134.

Carnatic aided with men and money by the Golconda Sultan with whom he had entered into a valuable offensive and defensivealliance.*

சிவாஜி சுதந்திரமாகச் செல்ல அனுமதி

சிவாஜி கோல்கொண்டா சுல்தானுடன் உடன்படிக்கை செய்துகொண்டார். கர்நாடகாவில் சிவாஜி கைப்பற்றும் இடங்களில் கோல்கொண்டாவிற்கு பங்குதரவேண்டுமென்ற நிபந்தனையின்பேரில் சிவாஜி கோல்கொண்டா எல்லை வழியாக சுதந்திரமாக கர்நாடகாவிற்குச் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

சிவாஜி கோல்கொண்டா சுல்தான் அபுஹுஸைன், அவரது பிராமண அமைச்சர்களான அக்கண்ணா (Akkanna) மாதண்ணா (Madanna) ஆகியோரிடமிருந்தும் பெரும் பணத்தையும் வெகுமதிகளையும் பெற்றார். நாளொன்றுக்கு 300 பகோடாக்கள் சிவாஜிக்கு உதவித்தொகையாக வழங்கவும் ஒப்புக்கொண்டார்.

மைசூர் வரலாறு எழுதிய வில்க்ஸ் மராத்தியர்கள் பத்து இலட்சம் பகோடாக்களை ரொக்கமாகவும், விலைமதிப்பற்ற அணிகலன்களையும் பெற்றுக்கொண்டார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.பெருமளவு பணம்,பெரும்பீரங்கிப்படையுடன் புறப்பட சிவாஜி கடப்பா, கர்னூல் ஆளுநர் ஆனந்தராவ் தேஷ்முக்கை (Anand Rao Deshmukh) கட்டாயப்படுத்தி ஐந்து இலட்சம் பகோடாக்களைப் பெற்றுக்கொண்டார்.

1678 இல் செஞ்சிக்கோட்டையை துரோகச் செயல்களாலும், ரகசிய உடன்படிக்கைகளாலும் சிவாஜி கைப்பற்றினார்.

தஞ்சைப் படையெடுப்பு

கர்நாடகா முதலில் பிஜப்பூர் அரசின் கட்டுப்பாட்டில் இருந்தது. தஞ்சாவூர் மன்னர் பிஜப்பூர் மன்னருக்கு கப்பம் கட்டி வந்தார். சில சமயங்களில் இராணுவ நடவடிக்கைகள் ஏற்பட்டன. சிவாஜியின் தந்தை ஷாஜி தலைமையேற்றுச் சென்றார். வென்றார் அதற்குப்பரிசாக கர்நாடகா கவர்னர் ஆனார். அவரது மறைவிற்குப்பின் அவரது மகன் வெங்கோஜிக்கு அந்தப் பதவி அளிக்கப்பட்டது.

* C.S. Srinivasachari, A History of Gingee and its Rulers, Page 210-211.

சிவாஜி ஒன்றுவிட்ட தம்பி தனது தந்தையின் மறைவிற்குப்பிறகு அவர் விட்டுச்சென்ற சொத்துக்கள் அனைத்தையும் சமமாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும். இதனை தஞ்சாவூரிலிருந்த தனது தம்பி வெங்கோஜி செய்யவில்லை. எனவே தனது கோபத்தைக் காட்டும் வகையில் தனக்குள்ள உரிமையை நிலைநாட்ட சிவாஜி விரும்பினார்.

தஞ்சாவூரிலிருந்து பத்துமைல்

தஞ்சாவூரிலிருந்து பத்துமைல் தூரத்தில் சிவாஜி இருந்தார். அவரது சகோதரர் வெங்கோஜி அச்சமுற்று சமாதானத்திற்கு வந்தார். சிவாஜி அவரைத் தனது முகாமிற்கு அழைத்தார். பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்தபோது ஒரு நாள் வெங்கோஜி முகாமிலிருந்து தப்பிச்சென்றார். எங்கெல்லாமோ அலைந்து, யார் யாரிடமெல்லாமோ ஆதரவு கேட்டார் எதுவும் நடக்கவில்லை. இறுதியில் சிவாஜியிடம் சரண் அடைந்தார். சிவாஜி தஞ்சாவூரையும் அதைச் சுற்றியுள்ள நிலங்களையும் அவனுக்குக் கொடுத்தார். தான் பிடித்த இடங்களில் தனது இராணுவத்தை நிறுத்திவிட்டு சிவாஜி தனது தலைநகருக்குத் திரும்பினார். தஞ்சையில் மராட்டியர் ஆட்சி துவங்கியது. (சிவாஜி 1680 இல் மறைந்தார். அதற்குப்பின் 1685 வரை ஏகோஜி தஞ்சையை ஆட்சி செய்தார்.) தனது தம்பியிடமிருந்து பெருஞ்செல்வத்தைக் கவர்வதற்கும், தனது ஆட்சிப் பகுதியை விரிவாக்கம் செய்வதற்கும் சிவாஜி தஞ்சாவூர் வரை வந்தார்.** ஏகோஜி பிந்தைய ஆண்டுகளில் பெங்களூரை மைசூர் அரசருக்கு கொடுத்துவிட்டார்.****

---

* கிருஷ்ணஸ்வாமி சர்மா, சிவாஜி மஹாராஜா, சென்னை 1923, விலை ரூபாய் ஒன்று பக்கம் 153, நூல் மொத்தம் 170 பக்கங்கள்.

** Father Bertrand, Lamission ou Madure III, P.269. Surendranathsen, Foreign Biographies of Shivaji, Vol.II, Extracts and documents relating to Maratha History,Calcatta, 1927 pp. 303-304.

*** B.Muddachari, The Mysore - Maratha Relations in the 17th Century, Prasaranga University of Mysore 1969, page 89) நூல் மொத்தம் 176 பக்கங்கள்

சாம்பாஜி

சிவாஜியின் மறைவிற்குப்பிறகு அவரது மகன் சாம்பாஜி மராத்திய மன்னரானார். சாம்பாஜியை சிறப்பிக்க நடந்த விருந்தொன்றில் சாம்பாஜியை எதிர்த்துப்பேசிய செஞ்சியின் சுபேதார் ரகுநாத நாராயன் ஹனுமந்தேவ் Raghunath Hanumaate சிறைவைக்கப்பட்டார்.

ஹர்ஜிமகாதிக்

சாம்பாஜி தன் சகோதரி அம்பிகாபாயின் (Ambikabai) கணவர் ஹர்ஜி மகாதிக் (Hari Mahadik) என்பவரைச் செஞ்சியை ஆளவும் சாமிஜி நாயக் புண்டே என்பவரை (Shamsi nayak punde) அவருக்கு ஆலோசகராகவும் நியமித்தார். கி.பி.1681 மார்ச்சில் இவர்கள் படையுடன் வந்து செஞ்சியின் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்கள்.

வீரசிவாஜிக்கு Sai Bai Nimbalkar, Sagunabai Shirke, Soyarabai Shirke, PutlaBai Mohite, Lakshmi Bai Vichare, SakwarBai Gaikwad, Kashi Bai Jadhav, Gunavanta Bai Ingle என்ற எட்டு மனைவிகள் இவர்களின் மூலம் சிவாஜிக்கு ஆறு பெண் மக்கள், இரு மகன்கள் சிவாஜியின் முதல் மனைவி சாய்பாய் நிம்பல்கரின் புதல்வரே சாம்பாஜி. சிவாஜியின் மகன் சாம்பாஜியின் உடன்பிறந்த தங்கையே அம்பிகாபாய் ராஜாராம் மூன்றாவது மனைவிக்கு பிறந்தவர் ஆவார்.*

ரெய்காட்டில் சூழ்ச்சி வலைகள்

கொஞ்ச நாட்களில் சாமிஜிநாயக் சிறையில் அடைக்கப்பட்டார். ஹர்ஜி மகாதிக் ராஜாவின் செல்வாக்கு அதிகரித்தது. சிவாஜியின் மூன்றாவது மனைவி சொரய்யாபாய் (Soyara Bai) தனது மகன் ராஜராமிற்கு அரியணை கிடைக்க வேண்டுமென்று எண்ணினார்.

மராட்டிய அரண்மனைக்குள் ஒவ்வொருவரும் தங்கள் உரிமையை நிலைநாட்ட விரும்பியதால் ரெய்காட் அரசவையில் வஞ்சகச் செயல்களும் சதித்திட்டங்களும் மலிந்திருந்தன.

---

* Govindsakharam Sardesai, New History of the Marathas Volume I, (1600-1707), Bamboy, 1946 Page 257

"Each Party desired to vindicate its own rights and hence plots and conspiracies were rife at the court of Raighad" *

ஹர்ஜி மகாதிக் முழுஅதிகாரத்துடன் சுதந்திரமாகச் செயல்பட்டு ஆட்சிபுரியத் தொடங்கினார். சாம்பாஜியின் ஒழுக்கக்கேடான நடத்தை (Sambhaji's absorption in debanch) கவிகுலேஷ் என்னும் பட்டயப் பெயருடன் விளங்கிய அவரது அமைச்சரின் தீயவழிமுறைகள் சாம்பாஜி புகழைச் சரித்தது. கிழக்கிந்தியக் கம்பெனியார் செஞ்சியில் தங்களது குடியேற்றத்தை நிலைநிறுத்த 1681இல் பெரிதும் முயன்றனர்.

மொகலாயர்கள் பிஜப்பூரைக் கைப்பற்றல்

கி.பி.1686இல் முகலாயர்கள் பிஜப்பூரைக் கைப்பற்றினார்கள். அத்துடன் கோல்கொண்டாவை முற்றுகையிட்டார்கள். முகலாயர்கள் பேரரசு விரிவாகத்திற்கு செஞ்சியும் உள்ளாகக்கூடும் என்று சாம்பாஜி உணர்ந்தார்.

கோர்படே - கேசவபிங்கன்

அக்டோபர் 1686இல் 12000 குதிரை வீரர்களுடன் கர்நாடகாவிலிருந்து சந்தாஜி கோர்படே Santaji Ghorpade கேசவபிங்கள் Kesavapingle ஆகியோரை செஞ்சிக்கு அனுப்பி வைத்தார். செஞ்சி ஆளுநர் ஹர்ஜி மகாதிக்கை அகற்றிவிட்டு செஞ்சியைக் கைப்பற்றவும் இரகசிய உத்திரவு சாம்பாஜியால் தரப்பட்டது.

ஆலம்கீர் ஔரங்கஜேப்

சாம்பாஜி கர்நாடகப் பகுதியான செஞ்சிக்கு படைகளை அனுப்பியதால் அதனை அறிந்த ஔரங்கஜேப், கோல்கொண்டாவை கைப்பற்றிட அனுப்பிய மொகலாயப் படையை மராத்தியர் வசமிருந்த பெங்களூரை முற்றுகையிட அனுப்பிவைத்தார். 26.5.1687இல் ஹர்ஜிமகாதிக் செஞ்சியில் பதவியை இழந்தார்.

கேசவபந்த்

1687இல் கேசவபந்த் (Kesavapant) செஞ்சியின் ஆட்சிப் பொறுப்பிற்கு நியமிக்கப்பட்டார். எல்லா சுபேதார்களும்

* C.S.Srinivasachari முற்கூறிய நூல் பக்கம் 239.

சென்று அவரைச் சந்தித்தார்கள். இதனை அறிந்த ஹர்ஜிமகாதிக் அதனை வெளிக்காட்டிக் கொள்ளாமல், கேசவபந்திற்கு மரியாதை அளித்து பணிந்துபோவதுபோல நடித்தார்.

மைசூர் பாதுகாப்பு

கேசபபந்த் மைசூர் பாதுகாப்பிற்கு செஞ்சியிலிருந்து படைகளை அனுப்பினார். ஆனால் இந்த படைகள் பெங்களூர் செல்வதற்குள் ஔரங்கஜேப்பின் படைகள் பெங்களூரைக் கைப்பற்றியது. செஞ்சிக்குத்திரும்பினார் கேசவபந்த். கின்கெய்டு (Kincaid) பராஸ்நிஸ் (Parasnis) தலைமையில் 18,000 குதிரைப்படை வீரர்களை மைசூர் முற்றுகைக்கு அனுப்பி வைத்தார். அந்த வேளையில் முகலாயப் படைகள் கோல்கொண்டாவையும் கைப்பற்றிவிட்டது.

காசிம்கான் (Kasimkhan)

கர்நாடகப்பகுதியில் காசிம்கான் பௌஜிதாராக (Faujdar) நியமிக்கப்பட்டார். கர்நாடகப் பகுதியில் மராத்தியர்களுக்கு எதிராக படைஎடுத்துச் செல்ல உத்திரவு வழங்கப்பட்டது.

ஆசாத்கான் (Asadkhan)

மராத்தியர்கள் மீது போர் தொடுக்க 10,000 குதிரைப்படை வீரர்களுடன் காசிம்கான் செஞ்சிக்கு வந்தார். (The Madras diary of 1687) மசூலிப்பட்டினத்திலிருந்து பாலாறு வரையுள்ள பகுதிகளை ஆசாத்கான் கைப்பற்றினார்.

முகமது சாதிக் (Muhammad Sadik)

கிபி 1688 இன் தொடக்கத்தில் முகம்மது சாதிக் தலைமையில் 12000 மொகலாய குதிரைப்படை கிழக்கு கடற்கரைப் பகுதியில் நுழைந்தது. பூந்தமல்லி, வந்தவாசி பகுதிகளைக் கைப்பற்றியது.

சாம்பாஜி சிறை

கி.பி. 1689இல் சாம்பாஜி சிறை பிடிக்கப்பட்டார். 1689 செப்டம்பரில் செஞ்சியில் ஹர்ஜிமகாதிக் மறைந்தார்.

ராஜாராம்

மொகலாயர்கள் சாம்பாஜியை சிறைபிடித்ததால் சிவாஜியால் தோற்றுவிக்கப்பட்ட மராட்டிய அரசு ஆட்டங்கண்டது. ராய்காட்டில் நடந்த ஆலோசனைக்கூட்டத்தில் சாம்பாஜியின்

மகன் இளையவராய் இருக்கும் சிவாஜி அரசர் என்றும் சாம்பாஜியின் சகோதரரும் சிவாஜியின் மூன்றாவது மனைவிக்குப் பிறந்த ராஜாராம் ஆளுநராக இருக்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. மொகலாயர் - மராத்தியர் போர் தொடர்ந்தது.

இளவரசர் சிவாஜி - தாயார் யேசுபாய் Yesubai

மெகலாயர்கள் நடத்திய தாக்குதலில் சாம்பாஜியின் மனைவி யேசுபாயும், மகன் இளவரசர் சிவாஜியும் 1689 அக்டோபரில் கைது செய்யப்பட்டனர். ரெய்கார்டு கோட்டை கைப்பற்றப்பட்டது.

ராஜாராம் தப்பி ஓட்டம்

பான்காலாவிலிருந்து (Panhala) ராஜாராமை மொகலாயப் படை சூழ்ந்தது. அவர் விஸ்கால் (Visshalgalgad) காட்டிற்குத் தப்பிச்சென்றார். யேசுபாயும், இளவரசர் சிவாஜியும் ஔரங்கஜேப்பின் முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். அங்கு அன்புடனும், நேசத்துடனும் நடத்தப்பட்டார்கள்.* (* but they were befriended சி.எஸ்.ஸ்ரீனிவாச்சாரி முற்கூறிய நூல் பக்கம் 255).

பான்காலா

மெகாலாயர்களால் பான்காலா கைப்பற்றப்பட்டது. சாம்பாஜி கொல்லப்பட்டார். ராஜராம் மாறுவேடத்தில் மலைப்பகுதியில் பயணம் செய்து செஞ்சியை அடைந்து அதனைப் பலப்படுத்தி முகலாயர்களை எதிர்க்கத் திட்டமிட்டார்.

ஸுல்பிகார்கான் (Zulfikarkhan)

கி.பி.1690இல் செஞ்சிப் பகுதியில் மராத்தியர்களை ஒடுக்க நவாப் ஸுல்பிகார்கானை ஔரங்கஜேப் அனுப்பிவைத்தார். 1690 ஆம் ஆண்டை மெட்ராஸ் நாட்குறிப்பு இது குறித்த தகவலை அளிக்கிறது. கி.பி.1690 செப்டம்பரில் ஸுல்பிகார்கான் செஞ்சிக்கு வந்தார். 1691 பிப்ரவரியில் ராஜாராம் செஞ் சியில் இருந்தார். சுல்பிகார் கான் தனது படைவலிமையைப் பெருக்கினார். 1691 ஏப்ரலில் கோட்டையைத் தாக்கப்போவதாக அறிவித்தார். மாரத்தியர்கள் மிகுந்த முன் எச்சரிக்கையுடன் பல முயற்சிகளைச் செய்தனர்.

ஆசாத்கான் Asad Khan

சுல்பிகார்கானின் தந்தையும் முகலாயர்களின் வாசீர் (தலைமை அமைச்சருமான) ஆசாத்கான் தனது மகனின் உதவிக்காக படைகளுடன் அனுப்பப்பட்டார்.

காம்பக்ஷ்

ஔரங்கஜேப்பின் புதல்வர் இளவரசர் காம்பாக்ஸ் வாஜின்சிராவில் (KamBaksh) போர் முற்றுகையிலிருந்தார். அவரும் படைகளுடன் செஞ்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டார். ஆவித்கானும், இளவரசர் காம்பக்ஷாவும் 1691 டிசம்பரில் செஞ்சியை அடைந்தார்கள்.

சர்ஜாதுநாத் சர்க்கார்

முகலாயர் வரலாற்றை குறிப்பாக ஔரங்கஜேப் வரலாற்றை மட்டும் ஐந்து பாகங்களில் தந்துள்ளார் ஜாதுநாத் சர்க்கார். அதில் ஐந்தாவது பாகத்தில் செஞ்சிக்கோட்டை முகலாயர்களிடம் சரண் அடைந்தது என்று குறிப்பிட்டுவிட்டு தேதி சொல்லாமல் சென்றுவிடுகிறார். ஆனால் தொகுதி 5இல் பக்கம் 84இல் 7.2.1698இல் செஞ்சியை கைப்பற்றப்பட்டதாக தகவல்களையும், 2.1.1698இல் செஞ்சி கைப்பற்றப்படாத தகவலையும் சொல்லியுள்ளார்.*

ஏகோஜி போன்ஸ்லே

1697 இறுதி அல்லது 1698 துவக்கம் செஞ்சியை முகலாயர்கள் கைப்பற்றினர். 1698ஆம் வருடம் முழுவதும் செஞ்சியைச் சுற்றியுள்ள கர்நாடகப் பகுதிகளை ஒழுங்குப்படுத்துவதில் சுல்பிகார்கான் செலவிட்டார்.

தஞ்சாவூர் சென்றார், திருவையாற்றில் முகாமிட்டிருந்த மராத்திய ஏகோஜி போன்ஸ்லேயைப் பணிய வைத்தார். படைச்செலவிற்கு பணமும் பெற்றார். அவர்கள் திறை செலுத்தவும் ஒப்புக்கொண்டார்கள்.

* Sir Jaddunath Sarkar, Honorary Member, Royal Asiatic Society of Great Britain, History of Aurangzib Based of original Sources, Orient Longman Madras, Volume V, 1974, Page 84

திருச்சி, இராமநாதபுரம், சிவகங்கை பாளையங்களிடமும் திறை வசூலிக்கப்பட்டது.

கசாபர்கான் (Gussafarkhan)

செஞ்சியைக் கைப்பற்றிய சுல்பிகார்கான் கசாபர்கானிடம் செஞ்சியின் பொறுப்பை ஒப்படைத்தார் என்று மெக்கன்சி சுவடிகள் அறிவிக்கின்றது.

தாவூத்கான் (1700-1708)

சுல்பிகார்கான் முதன் முதலில் தனக்கு அடுத்த தளபதியாயிருந்த துணிச்சல்மிக்க தாவூத்கானை கர்நாடகாவின் பௌஜிதாராக நியமித்தார். இவர் செஞ்சியில் தெருக்களை அமைத்து கோட்டையைப் புதுப்பித்தார்.

1704இல் வேலூரை மராத்தியரிடமிருந்து தாவூத்கான் கைப்பற்றினார். தஞ்சாவூரும், மதுரையும் கப்பம் செலுத்தும் நாடுகளாக தாவூத்கானால் மாற்றப்பட்டது.

மலேரியா நோயக்கு இலக்காகும் பகுதி

செஞ்சியின் சுற்றுப்பகுதி மலேரியா நோயக்கு இலக்காகும் பகுதி என்றும், சுகாதாரக்கேடான பகுதி என்றும் அறியப்பட்டதால் தாவூத்கானின் ஆளுகைக்குட்பட்டிருந்த நிர்வாகத்தை செஞ்சியிலிருந்து ஆற்காட்டிற்கு மாற்றுவதென தீர்மானிக்கப்பட்டது. பின்னாளில் பிரெஞ்சுக்காரர்கள் செஞ்சியைக் கைப்பற்றிய பத்தாண்டு காலத்தில் 1200 படைவீரர்கள் நோயால் மாண்டு போயினர். 1850இல் செஞ்சியை மரக்காணத்திற்கும் திருவண்ணாமலைக்கும் இடையே அமைந்திருந்ததால் உப்பு பண்டகசாலையாக மாற்றவும் ஆலோசனை செய்யப்பட்டது.

முகமது சையத்கான்

முகம்மது சையத்கான் கர்நாடகாவின் திவானாக நியமிக்கப்பட்டார்.

நஸ்ரத்காடா

செஞ்சிக்கோட்டைக்கு ‘நஸ்ரத் ஹேடா’ (வெற்றியின் நகரம்) என்று சுல்பிகார் கான் பெயரை மாற்றினார்.

பிஜப்பூர் அரசினர் 1660-1677 செஞ்சியை பாதுஷாபாத் என்று அழைத்தனர். ஆங்கிலேயர்களும், பிரெஞ்சுக்காரர்களும் செஞ்சியை 'ஜிஞ்சி' என்று அழைத்தனர். 1701 நவம்பர் துவக்கத்தில் சுல்பிகார்கான் டெல்லி திரும்பினார்.

1716

1761 இல் செஞ்சியிலிருந்து முகலாயர்களின் நிர்வாகம் ஆற்காட்டிற்கு மாற்றப்பட்டது.

சாரூப்சிங்

ஔரங்கஜேப் புண்டேலா படைத்தளபதியான சாரூப்சிங்கை வரவழைத்து, செஞ்சியின் ஆளுநராக நியமித்த ஆணையுடன் 1700இல் அனுப்பிவைத்தார், 1714 வரை இவர் ஆட்சியில் செல்வாக்குப் பெற்றிருந்தார்.

ராஜாதேசிங்கு

ஜனவரி 1714 முதல் அக்டோபர் 1714வரை ராஜதேசிங்கு செஞ்சியில் சிறப்புடன் ஆட்சியில் இருந்தார். சாரூப் சிங்கும், ராஜா தேசிங்கும் இராஜபுத்திர வசம்சத்தைச் சார்ந்தவர்கள். இவர்களது ஆட்சி முடிவடைந்ததும் செஞ்சி கில்லேதாரி நிலைக்கு தாழ்த்தப்பட்டது. அரசியல் முக்கியத்துவத்தை இழந்தது.

சாதத்துல்லாகான் (Sadathullankhan)

ஆற்காடு நவாபாக சாதத்துல்லாகான் (Sadatullah Khan alias Muhammad Saiyid) 1732 வரை அந்த பொறுப்பில் இருந்தார்.

அலி தோஸ்த்கான் (Alidostkhan)

1732இல அலி தோஸ்த்கான் ஆற்காடு நாவாபாக ஆனார்.

சப்தர் அலிகான்

அலிதோஸ்கானின் ஒரே மகன் சப்தர் அலிகான் (Safdaralikhan), சதாத்துல்லாகானின் (Sadatullahkhan) மருமகன் சப்தர் அலிகான்

சாகசச் செயல்வீரர் சந்தாசாகிப்

அலி தோஸ்த்கானுக்கு ஐந்து மகள்கள்; இவரது மூன்றாவது மருமகன் புகழ்மிக்க சாகசச் செயல்வீரர் சந்தாசாகிப்.

Of the latter the third was the famous adventured, cahnda sahib* Chanda Sahib who was an ambitious and scheming adventurer... **

பேராவலுடைய ஆர்வம் நிரம்பிய பெருவிருப்பத்தைக் காட்டுகின்ற ஒன்றைப் பெறும் அவாவுடைய ஏற்பாடு வகுத்தமைக்கிற வழிவகை செய்கிற, துணிச்சல் வீரர், வெற்றி வேட்டையாளர் சந்தாசாகிப் என்று சி.எஸ்.ஸ்ரீனிவாச்சாரியர் குறிப்பிட்டுள்ளார்.

ஹூசைன் தோஸ்த்கான்

சாந்தாசாகிபின் இன்னொரு பெயர் ஹுசைன் தோஸ்த்கான் (Hussain Dostkhan) ஆகும்.

சப்தர் அலி - சந்தாசாகிப்

மைத்துனர் சப்தர் அலியும், மாப்பிள்ளை சந்தாசாகிபும் *1734* இல் தெற்குச்சீமைக்கு வந்தார்கள். தஞ்சாவூரைத் தாக்கி கைப்பற்றினார்கள்.

படேசாகிப் (Badesahib)

சந்தாசாகிப் சகோதரர் படேசாகிபிடம் தஞ்சாவூரின் ஆட்சி ஒப்படைக்கப்பட்டது. இந்தப் படையெடுப்பைப் பற்றிய விவரங்களை கிராண்ட் – டப் (Grant - ouff) மற்றும் வில்க்ஸ் (Wiks) மதுரை மிஷனரிக் கடிதங்கள் அறிவிக்கின்றன. *1734– 1739* தஞ்சாவூர் அரசு பற்றிய குறிப்புகள் இருளாகவே இருக்கிறது.

Madras Univeristy Islamic Series No: I General Editior S.Muhammad Husayn Nainar M.A.,L.L.B. Ph.d, Vol I. Sources of the History of the Nawabs of the Carnatic.

---

* C.S.Srinivasachari முற்கூறிய நூல் பக்கம் 452

** மேலது

TUZAK-I-WALAJHI

BURHAN IBN HASAN Univeristy of Madras, **1934.** Part I From the Early days to the Battle of AMbur (1162 A.H.) With a Foreward by Sir Ghulam Muhammad Alikhan Bahadur Prince of Arcot 147 pages.

அதன் இரண்டாவது பக்கத்தின் முகப்பு பக்கம் இதோ

TŪZAK-I-WĀLĀJĀHĪ

OF

BURHĀN IBN HASAN

TRANSLATED INTO ENGLISH

BY

S. MUḤAMMAD ḤUSAYN NAINAR, M.A., LL.B., Ph.D.

Head of the Department of Arabic, Persian, and Urdu
University of Madras.

PART II

From the Battle of Ambur 1162 A.H. to the Capture of Pondicherry, 1174 A.H. (1749-1761 A.D).

UNIVERSITY OF MADRAS

1939.

மேற்சொன்ன நூலின் இரண்டாவது பகுதி சென்னைப் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய நூற்கள் வரிசையில் நான்காவதாக 1939இல் வெளிவந்தது. 292 பக்கங்கள்.

அதன் தொடர்ச்சியக சென்னைப் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய நூல் வரிசை எண் ஐந்தாவதாக **SAWANIHAT-I -MUMTAZ** Sources of the History of the Nawwabs of the Carnatic தொகுதியின் முதல் பகுதி Muhammad Karim ஆல் எழுதப்பட்டு, **1940** இல் 208 பக்கங்களில் வெளிவந்தது. இது கிபி 1801 வரையிலான வரலாற்றைத் தொடர்கிறது.

மேற்சொன்ன நூலின் இரண்டாவது பகுதி சென்னைப் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய நூல் வரிசை எண் ஏழாவதாக **1944**இல் வெளிவந்துள்ளது. பக்கங்கள் 301.

சென்னை பல்கலைக்கழக இஸ்லாமிய வெளிடு பதினொன்றாவதாக **Bahar-I- A'ZAM-JAHI** Ghulam Abdul Qadir Nazir ஆல் எழுதப்பட்டு 1950இல் 231 பக்கங்களில் வெளிவந்துள்ளது.

I வது தொகுதி 147 பக்கங்கள் IIவது தொகுதி 292 பக்கங்கள்

III வது தொகுதி 208 பக்கங்கள் IVவது தொகுதி 301 பக்கங்கள்

V வது தொகுதி 231 பக்கங்கள் ஆக மொத்தம் 1179 பக்கங்கள்

1179 பக்கங்களில் ஆற்காடு நவாப் சரிதை சென்னைப் பல்கலைக்கழகத்தால் 70 ஆண்டுகளுக்கு முன்னர் வெளியிடப்பட்டது.

T. சந்திரசேகரன்

சென்னை அரசாங்கம் 15 ரூபாய் விலையில் Madras Government Oriental Manuscripts Series No. 46 ஆக T. சந்திரசேகரன் பதிப்பாசிரியராக இருந்து 1958இல் வெளியிடப்பட்ட நூல் RUQA'AT-I WALAJAH மேற்சொன்ன வரலாறுகளின் வரலாற்றை விரிவாக எடுத்துரைக்கின்றன. சந்தாசாகிப் பற்றிய செய்திகள் வெறும் 12 பக்கங்களில் மட்டும்

வருகிறது. **ஏனென்றால் வாலாஜா அல்ல. சந்தாசாகிப் நவையத் மரபைச் சேர்ந்தவர். நவையத் என்றால் என்ன?**

நவையத் (Nevayets)

1707இல் ஆலம்கீர் ஔரங்கஜேப் இப்புவியிலிருந்து மறைந்தார். பெருங்குழப்பம் நேர்ந்தது. பேரரசுகள் சிதைந்தது. மாகாணங்கள் சுயாட்சியை அறிவித்தன. கர்னாடகம் முழுவதையும் இணைத்து ஒரு சுதந்திர அரசாக நவையத் என்ற பெயரைச் சூட்டினார் சதயத்உல்லாக்கான் (1710).

Saddat - Ullahkhan Organised the Carnatic into an independent kingdom under the rule of his house, the nevayets.*

சதாத்உல்லாகானைத் தொடர்ந்து அலிதோஸ்த்கான் (1732) சப்தர் அலிகான் (1734) நவையத் வம்சத்தில் ஆற்காடு நாவாபாக ஆட்சி புரிந்தனர். சப்தர் அலிகானின் மருமகன் சந்தாசாகிப்.

நவயத்

நவயத் (Nawayat) என்ற சொல் பன்மைப்பெயர் வடிவம். (NAIT) நயித் என்ற சொல் ஒருமைச் சொல்லாகும்.

அரேபிய பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்கள் நவயத்துக்கள். The Word Nawayat is the Plural Form of the singular 'nait', a tribe of Arabs.**

வரலாற்றாசிரியர் தபரி

அரேபிய வரலாற்றாசிரியர் அபுஜாபர் முஹம்மது பின் ஜரீர் (Abu Ja'far Muhammad bin Jarir) கி.பி. 839இல் பிறந்தவர். பல வரலாற்று நூல்களை எழுதியவர். (Jamiul -bayan Fit - tafsiril- bayan, Tarikhur - rusul wal muluk, Tarikhur - rijal) கூபா, பாக்தாத் (Kufa) (Baghdad) இவர் நவயத்துக்களை குறைஷியின் குழந்தைகளின் வழித்தோன்றல்கள் என்கிறார்.

---

* Dr.K.Rajayyan, Rise and Fall of the poligars of Tamilnadu, university of Madras 1974 Febravary page 12) (Book Totally 131 pages

** S.Muhammad Husan Nainar, Tuzak-I-Walajahi of Burhan Ibn Hasan Part I Madras 1934, Page 64

According to the investigations of the historian Tabari, they are the descendents of the children of the Quraysh.*

ஏமன் வரலாறு

ஏமன் வரலாறு எனும் நூல் நவயத்துகளை பழங்குடி சார்ந்த கடலோடிகள் எனக்கூறுகிறது. The authour of the History of Yemen' says that they come from tribe of Sailors.**

ஜாமியுல் லுபாப் Jamiul - Lubab

ஜாமியுல் லுபாப் ஆசிரியர் நவயத்துக்கள் கூபாவைச் சேர்ந்த பிரபுக்கள் என்றார் The Writer of Jamiul - Lubab Says that they are the nobles of Kufa.***

எவ்வாறு இருந்தாலும் நவயத்துக்கள் தங்களது பூர்வீக இடத்திலிருந்து ஹஜாஸ்பின் யூசுப் ஆட்சி காலத்தில் புலம் பெயர்ந்து இந்தியக் கடற்கரையோரம் வந்து சேர்ந்தவர்கள் என்கிறார் புர்கான் இபின் ஹசன்.

However that maybe, the emigrated from their native home owing to the tyranny of Hajjaj bin Yusuf, and reached the coast of Hind (India) by sea.****

கொங்கண்

அரேபியாவிலிருந்து கடல் வழியாக புலம் பெயர்ந்து வந்த நவயத்துக்கள் மராத்தியர்களின் ஆட்சிக்குட்பட்ட பகுதியில் குடியமர்ந்தார்கள்.

யாழ்ப்பாண வைபவமாலை

மாதகல் மயில் வாகனப் புலவர் எழுதிய நூல் யாழ்ப்பாண வைபவமாலை. 1953இல் கொழும்பிலிருந்து முதலியார் குல. சபாநாதன் 96 பக்கங்களில் வெளியிட்டுள்ளனர். முதற்பிரதி கி.பி.1884இல் வி.வி.சதாசிவம் பிள்ளையால் வெளியிடப்பட்டது. அந்த நூலில் பக்கம் 91இல் சந்தாசாகிப் காலத்தில் இஸ்லாத்தை

---

* முற்கூறிய நூல் பக்கம் 64-65

** முற்கூறிய நூல் பக்கம் 65

*** முற்கூறிய நூல் பக்கம் 65

**** முற்கூறிய நூல் பக்கம் 65

தழுவிய முஸ்லிம்கள் தென்மிருசு, சாவகச்சேரி, கொடிகாமம், எழுதுமட்டுவாள், முகாமில் ஆகிய பகுதிகளில் வந்து குடியேறினார்கள் என்ற தகவலைத் தந்துள்ளார்.

நான்கு முஸ்லிம் சுல்தான்கள்

தக்காணம் (அகமத் நகர்), பிஜப்பூர், கோல்கொண்டா, பிரார் (Birar) ஆகிய பிரதேசங்களில் நான்கு முஸ்லிம் சுல்தான்களின் ஆட்சி நடந்து கொண்டிருந்தது.

முல்லா அஹமது (Mullah Ahmad)

பிஜப்பூர் அடில்ஷா அரசவையில் முல்லா அகமது என்ற நவயத் அமீராக (தலைவராக) இருந்தார்.

முகம்மது சேட் - குலாம் அலி

நவயத் மரபைச் சேர்ந்த முகமது சேட் (Muhammad Said), குலாம் அலி (Ghulam Ali) கொங்கண் பகுதியில் ஆலம்கீர் ஔரங்கஜேப் படைப்பிரிவில் பணியாற்றினர்.

சதாத நாமா

'சதாத் நாமா' Saadatnama என்ற பாரசீக வரலாற்று நூல் சதாத்துல்லாகான் பற்றி குறிப்பிடுகிறது.

நஸீர் - இ - குஸ்ரூ

Nasir - i - Khusraw நஸீர் - இ - குஸ்ரூ பல நூல்களை எழுதியுள்ளார். அவைகளில் ஒன்று சதாத்நாமா. Safarnama, (Narrative of his Travels) பதிப்பும் மொழிபெயர்ப்பும் (Schefer Paris, 1881) DIWAN OR Collected Poems (1864) The Raw Shana- i-nama (Book of Light) (Published Dr.Ethe Z.D.M.G. (1879-1880) Saadat - nama or Book of Felicity (Publised by Fagnan)

The Rawshana - I - Nama

சதாத் நாமாவிற்கு ராவ்சனா - இ - நாமா என்ற பெயரும் உண்டு. சதாத் நாமாவை ஜெர்மனியில் Dr. Ethe என்பவர் முதலில் பாரசீகத்திலிருந்து மொழி பெயர்த்தார். அதன்பின் வி. பேக்னன் பிரெஞ்சில் மொழி பெயர்த்தார்.

முப்பது அத்தியாயங்கள்

சதாத் நாமா 30 சிறிய அத்தியாயங்களில் 287 கவிதை நடையிலான பகுதிகளாக தொகுக்கப்பட்டுள்ளது.*

I Volume XI + 521 = 532 Pages (1902)

II Volume XIV +568 = 582 Pages (1906)

III Volume VIII +586 - 594 Pages (1920)

IV Volume XVI + 530 = 546 Pages (1924)

மார்க் வில்க்ஸ்

வரலாற்றாசிரியர் மார்க் வில்க்ஸ் தனது மைசூர் வரலாற்று நூலில் முதற்பாகத்தில் (சென்னை 1989) பக்கம் 264, 265, 266இல் நவயத்துக்களை பற்றி விரிவான பல விளக்கம் தந்துள்ளார்.

Grant duff எழுதிய History of the Mahrattas, 1921 Vol. I, Page 435 இல் இருந்து சில செய்திகளை நவயத் குறித்து சொல்வார்,

S.M.எட்வர்ட்ஸின் (Edwards) குறிப்புகளையும் மேற்கோள்காட்டுவார். Navait, Naatx, Naitia என்பது நவயத் ஆயிற்று.

பம்பாய் கெஜட்டியர்

பம்பாய் கெஜட்டியர் Bombay Gazetteer நவயத்துக்களை கப்பல் மனிதர்கள் Shipman கடலோடிகள் என்று குறிப்பிடுவதையும் மார்க் வில்க்ஸ் சுட்டிக்காட்டுவார் அதற்கு B.G. யின் (Gujarat Musalmans PP.14.15) மேற்கோள்காட்டுவார்.

தாழைமதியவன்

கி.பி.1651 முதல் 1732 வரையுள்ள தமிழக வரலாற்றின் பக்கங்களை அறிய சாதத் நாமா நல்லதொரு ஆவணமாக விளங்குகிறது என்பார் அண்ணன் தாழைமதியவன் (சமூகநீதி

---

* Edward G.Browne, Aliterary History of Persia First Published in 1902) Good word Books First Published 2002, Reprinted 2008, New Delhi, Volume II Page 245 (First Published May 16, 1906)

முரசு, நவம்பர் 2017, பக்கம் 20) நவயத்துகள் கொங்கன் கடற்கரைப்பகுதயில் வந்திறங்கிய வரலாற்றை சதாத் நாமா அறிவிக்கிறது.

அரபுமொழியோடு வட்டார மொழியும் கலத்தல்

நவயத்துக்களை அரபு மொழியோடு, கொங்கன் கடற்கரையின் பேசும் வட்டார மொழியையும் கலந்து பேசினர். இதற்கு 'அரபி' எனப்பெயர் வந்தது. ஆற்காடு நாவப்பின் கர்னாடகப் பிரதேசத்தில் வந்தபோது 'உருது' வைக் கற்ற நவயத்துக்கள் தமிழையும் கற்றனர். அரபு வேதமொழி, உருது தாய்மொழியாற்றிறு. இனி சந்தாசாகிப் வரலாற்றைப் தொடர்ந்து பார்ப்போம்.

விஜயரங்க சொக்நாத நாயக்கர் (1706 - 1732)

1706இல் மதுரை நாட்டின் ஆட்சிப்பொறுப்பின் தலைவர் விஜயரங்க சொக்கநாத நாயக்கர். இவரது தளவாய் கஸ்தூரி ரங்கய்யா. பிரதானி வெங்கிடகிருஷ்ணய்யா என்று கல்வெட்டுச் சான்று பகர்கிறது.*

இந்த ஆவணம் தரும் இன்னொரு தகவல் இதோ; மதுரை நாயக்கர்கள் ஆட்சியில் சாமனத்தம், புங்கன்குளம், செங்குளம், சீகாழை ஆகிய நான்கு கிராமங்கள் முழுவரிவிலக்கு பெற்றவை. (சர்வமானியம்) சொக்கநாதர் ஆலயத்தில் சப்பரம் சுமக்கும் (ஸ்ரீபாதம் தாங்கிகள்) 64 பேருக்கு, 1712இல் அரண்மனை அதிகாரிகள் வரிவிதித்தனர். தாங்கிட முடியாத இவர்கள் தற்கொலை முடிவெடுத்தனர். 64 பேரில் ஒருவர் சொக்கநாதர் கோவிலின் கோபுரத்தின் மீது ஏறி கீழே குதித்து உயிர் துறந்தார். நான்கு வாயிலிலும் மக்கள் திரண்டனர். முடிவில் முன்போலவே வரிகளிலிருந்து விலக்கு பெற்றனர்.**

---

* Burgess, Jas and Natesa Sastri Pandit S.M., Tamil and Sanskrit Inscriptions, (Arachaeo Logical Survery of Southern India, IV, 1886, PP. 110-111-No.24

** ஆ. சிவசுப்பிரமணின், கோபுரத் தற்கொலைகள் 1915, பரிசல், சென்னை 2007 பக்கம் 52 Annual Reportson Indian Epigraphy 116

இந்த தற்கொலை விவகாரம் அரசு அதிகாரிகள் செயல்பாடுகளுக்கு எதிராக அமைந்தது. ஆயினும் மிக விரைவிலேயே ஆட்சியின் இறுதிக்காலம் உச்சநிலைக்கு வந்து சேர்ந்தது. 'So Early in the reign Matters reached a climax' *

ஆண் வாரிசு இல்லை

விஜயரங்க சொக்கநாத நாயக்கர் 1732இல் மறைந்தார். அவருக்கு ஆண் வாரிசு எதுவும் இல்லை. அதனால் அவரது மனைவி மீனாட்சி ஆட்சியின் கடிவாளத்தைக் கைகளில் ஏந்தினார். இதர ஏழு மனைவியர்களும் உடன்கட்டை ஏறினார்கள். பங்காரு திருமலா நாயக்க அரச குடும்பத்தின் மற்றொரு கிளையான திருமலைநாயக்கரின் இளைய சகோதரரான குமாரமுத்துவின் (Kumaramuthu) வழியில் வந்தவர் பங்காரு திருமலா

விஜயகுமாரா

பங்காரு திருமலாவின் புதல்வர் விஜயகுமாராவை அரசி மீனாட்சி தத்து எடுத்தார். அரசி மீனாட்சியாரின் சகோதரர் வெங்கட பெருமாள் நாயக்கரும் (Venkata Perumal Nayaka) அவருக்கு ஆதரவளித்தார்.

தனது ஆட்சிக்கு வெகுவாகவும் வேகமாகவும் ஆதரவு தேடி மக்களின் ஒத்துழைப்பை திரட்டினார். வெங்கடப் பெருமாள் நாயக்கரும், பெருமாள் நாயக்கரும் ஊழல் புரிந்து பொதுப்பணத்தைக் கையாடல் செய்த அநேக செல்வாக்குள்ள அதிகாரிகளை சிறையிலிட்டனர். பலர் கைது செய்யப்பட்டனர். அதனால் பெரிய குழப்பம் நாட்டில் ஏற்பட்டது.

நாராணப்ப ஐயர் (Naranappa Iyer)

தவறு புரிந்து சிறைப்படுத்தப்பட்டவர்கள், பதவி நீக்கப்பட்டவர்கள் எரிச்சலுக்குள்ளானார்கள். நாரணப்ப ஐயர் ஆலோசனையின் பேரில் அவர்கள் மறைந்த விஜயரங்க சொக்கநாத நாயக்கரின் மாமனாரான பங்காரு திருமலா, பிற பாளையக்காரர்கள் சேர்ந்துகொண்டு பயங்கரமான

---

* R.Sathyanathaaiyar, History of the Nayaks of Madura, Oxford 1924 Page 223

சதித்திட்டத்தில் ஈடுபட்டனர். மீனாட்சிக்குப் பதிலாக பங்காரு திருமலாவை அரியணையில் அமர்த்திடத் துடித்தனர்.

தளவாய் வெங்கடாச்சார்யா

அரசி மீனாட்சியின் தத்துபுத்திரனின் தந்தை பங்காரு திருமலாவும், தளவாய் வெங்கடாச்சார்யாவும் கூட்டணி அமைத்து மீனாட்சியின் அரச ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். "Soon Bangaru Tirumala, the Father of her adopted son fromed an alliance to bring about the despostion of Minakshi" *

முதல் முயற்சி தோற்றது

மீனாட்சியின் ஆட்சியை அகற்றிட பங்காரு திருமலாவும், தளவாய் வெங்கடாச்சார்யாவும் திருச்சிராப்பள்ளி கோட்டைக்கும் நுழைய முயன்ற முதல் முயற்சி தோற்றது. இரு தரப்புக்கும் இடையே கடும் போரும் போராட்டமும் நிகழ்ந்தது. மீனாட்சி அரசியின் ஆதரவாளர்கள் எதிரிகளின் சதியை முன்னரே அறிந்ததால் அவர்களின் எண்ணம் நிறைவேறவில்லை.

படையை பலப்படுத்துதல்

பங்காரு திருமலா தென்பகுதிக்கு தப்பி ஓடினார். நிர்வாகத்திலிருந்த அனைத்து சந்தேகப் பேர்வழிகளையும் மீனாட்சி பணிநீக்கம் செய்தார். புதிதாக பணியில் இராணுவத்தில் அதிக அளவில் ஆட்களைச் சேர்த்தார். தனது நிலையை வலுப்படுத்திக் கொண்டார்.

ராணியின் அச்சம்

தனது நிலையை வலுப்படுத்திக் கொண்டபோதிலும் ஆற்காடு நவாப் படைகள் பங்காருக்கு உதவி செய்துவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டது அரசி மீனாட்சிக்கு.

சப்தர் அலி - சந்தாசாகிப் வருகை

நவாப் தோஸ்த் அலி தனது மகனான சப்தர் அலிகானையும், மருமகனான சந்தாசாகிப்பையும், தென்னகத்தில் தனது

* முற்கூறிய சத்தியநாத அய்யர் நூல் பக்கம் 232

ஆட்சிப் பகுதிகளை விரிவாக்கிட 12,000 வீரர்கள் அடங்கிய படையுடன் மதுரையை நோக்கி அனுப்பி வைத்தார்.*

தஞ்சை - மதுரை

தஞ்சாவூரும், மதுரையும் சப்தர் அலி, சந்தாசாகிபிடம் பணிந்தது. கப்பம் கட்டிட ஒப்புக்கொண்டது. முஸ்லிம் படையினர் பாண்டிச்சேரியிலும், சென்னையிலும் சில காலம் தங்கியிருந்தனர்.

பாண்டிச்சேரி

பாண்டிச்சேரியில் சந்தாசாகிப் தங்கியிருந்த வேளையில் பிரெஞ்சுக்காரர்களுடன் தொடர்பு ஏற்பட்டது.

Under the pretence of collectiong revenue these two princes visited Madras and pondicherry intheir progress southwards, and at the later progress southwards, and at the later place chandasahib entered in to those intimate relations with the French which were in influence greatly the events which were to follow" **

திருச்சியில் கொடுத்த மூன்று இலட்சம்

ஆற்காட்டு நவாப் தோஸ்த் அலியால் அனுப்பப்பட்ட படைத்தளபதி சப்தர் அலிக்கு (Safdar Ali) மூன்று இலட்சம் ரூபாயை பரிசாக அளித்து தனது பதவியை அங்கீகரிக்கச் செய்தார் மீனாட்சி.

Who had given his consent to her elevation to the throne – for a great sum of money – she still preserves her crown. The Nawab of Acrot is said to have sent his son Sufdar Ali and Chanda Sahib, with against Payment of three laks of Rupees.***

* Letter From Fr.Joseph Vieyra From Calpalayam, Madura Mission, Annual letter, dated First August 1733, Indian Antiquary Vol. XLVI pp217-218.

** Colonel G.B.Malleson, C.S.I. Rulers of India Lord Clive and the Establishment of the English in India, Oxford, London, 1900 Page 24.

*** Rev L. Besse, Father Beschi of the society of jesus his Times and his writings Trichnopoly , St. Joseph's Industrial school press, 1918, page 125.

மதுரையில் போட்டி அரசு

பங்காரு திருமலா மதுரையில் போட்டி அரசை அமைத்தார். தானே அரசர் என்றார். நாரணப்ப ஐயர் தனது அமைச்சர் என்றார். படையைத் திரட்டினர். மைசூர்க்காரர்களின் உதவியோடு திருச்சியைத் தாக்க தயாரானார். இதனை முறியடித்திட மீனாட்சி அரசி தஞ்சாவூரோடு உடன்பாடு செய்துகொண்டார்.

இருபிரிவுகள்

இவ்வாறு இருபிரிவுகள் இரு பகைமுகாம்களை தென்னிந்தியா அரசியல் ஏற்படுத்தியது. இரு பிரிவினரும் சம வலிமை கொண்டிருந்ததால் இவர்களை நடுநிலைப்படுத்திடும் வலிமை ஆற்காடு நாவப்பின் இராணுவத்திடமே இருந்தது.

1733

பங்காருதிருமலாவும், நாரணப்ப ஐயரும் தங்களது படைகளோடு மதுரையிலிருந்து திருச்சிராப்பள்ளிக்கு முன்னேறிச் சென்றனர். முன்கூட்டியே திட்டமிட்டபடி மைசூர் படைகள் மேற்கிலிருந்து திருச்சி நோக்கி படைஎடுத்து வந்தது. ஆனால் மீனாட்சி அரசி இவ்இரு படைகளையும் முறியடித்து சிதறடித்து முதல் கட்ட வெற்றியைப் பெற்றார். சிதறுண்ட படைகளை மீண்டும் ஒன்று திரட்டி நாராணப்ப ஐயர் திண்டுக்கல் நோக்கி படையெடுத்தார். அரசியின் படைகளும் அதனை எதிர்கொண்டது. மைசூரிலிருந்து வந்த படைகள் திருச்சியை சூழ்ந்தபோது மீனாட்சி அரசியின் படைகள் பின்வாங்கியது. இப்போது நாராணப்ப ஐயர் அரசிக்கு கடிதம் எழுதி, தன்னை அரசியின் அமைச்சராக நியமிக்கும்படியும் அரசி தத்து எடுத்த பங்காரு திருமலாவின் மகன் இளவரசர் விஜயகுமாரனை தனது வாரிசாக ஏற்றுக்கொள்ளும்படியும், பங்காரு திருமலாவிற்கு ஒரு மாவட்டத்தை விட்டுக்கொடுக்கும்படியும் வேண்டினார். இந்தக் கோரிக்கைகளை ஒப்புக்கொள்ள சப்தர் அலிக்கும் பெரும் தொகையையும் நாரண அய்யர் வழங்கினார்.

பங்காருவுக்கு ஒரு மாவட்டம் அரசியின் வாரிசாக பங்காரு திருமலாவின் மகன் விஜயகுமார், அரசி தொடர்ந்து பதவியில் எனும் இவ்உடன்படிக்கை செயல்படுத்தப்படவில்லை.

பங்காருவின் எதிர்ப்பு

பங்காரு திருமலா இந்த உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளாமல் நிராகரித்தார். அவரது நோக்கம் அவர் அரசராக வேண்டுமென்று, எனவே ஆற்காடு நாவப்பின் மகன் சப்தர் அலியிடம் சென்றார். 30 இலட்ச ரூபாயை அளித்து அவரது ஆதரவைப் பெற்றார். சப்தர் அலி திருச்சி கோட்டையைக் கைப்பற்றத் தீர்மானித்தார். பங்காரு அரியணைக்கு உரியவர் என்றார். மீனாட்சி அரசி உயரிய முறையில் நடத்தப்பட வேண்டும் என்றும் சப்தர் அலி அறிவித்தார். நியாயமற்ற சப்தர்அலி செய்கையை மீனாட்சி அரசி புறக்கணித்தார்.

1733இல் பங்காருவை மதுரை மன்னராக சப்தர் அலி பிரகடனப்படுத்தினார். படைகளின் தலைமையை தனது மைத்துனராக சந்தாசாகிபிடம் ஒப்படைத்துவிட்டு, சப்தர் அலி ஆற்காடு திரும்பினார். திருச்சியில் மீனாட்சியின் அரசு மதுரையில் பங்காருவின் அரசு என இரு போட்டி அரசுகள் தொடர்ந்து நீடித்தன.

சந்தாசாகிபிடம் உதவி வேண்டுதல்

சப்தர் அலியின் செயலால் சக்திபெற்ற பங்காரு திருச்சி கோட்டையத் தாக்க அச்சுறுத்தியபோது நாவப்பின் படைகளின் தேவையை அரசி மீனாட்சி அறிந்தார். கலக்கமுற்ற மீனாட்சி சந்தாசாகிபிடம் உதவிகேட்டு விண்ணப்பித்தார். பதிலுக்கு ஒரு கோடி ரூபாய் தந்தால் தாம் உதவுவதாக சந்தாசாகிப் சொன்னார்.

கடுமையான போர் நடைபெற்றது. தஞ்சாவூர் அரசரும் சந்தாசாகிபோடு சேர்ந்து போர்களத்தில் உதவினார். பங்காரு தோற்கடிக்கப்பட்டு ஆற்காட்டிற்கு அனுப்பப்பட்டார். மீனாட்சி அரசியிடம் நாரணப்ப ஐயர் ஒப்படைக்கப்பட்டார்; அதன்பின் அவர் கொல்லப்பட்டார்.

Naranappa Iyer who was handed over to the queen and subsequently put to death.*

---

* K.Rajayyan, History of Tamil nadu 1565, 1982, Rajpublishers Madurai, December 1982, Page 83.

தஞ்சாவூர் அரசர் துகோஜிக்கு மதுரை கோயிலாடி (Koilody), இளங்காடு (Elangad) வழங்கப்பட்டது. உள்நாட்டுப்போர் முடிவுற்று அரசி மீனாட்சி தனது அதிகாரத்தை மீண்டும் பெற்றார்.

தெற்கு நோக்கி

திருச்சிராப்பள்ளியில் பெற்ற பெருவெற்றிக்குப் பிறகு சந்தாசாகிப் நாடு முழுமையும் மீனாட்சி அரசியின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர தெற்கு நோக்கிப் படைகளை நகர்த்தினார்.

1734

1734இல் தஞ்சாவூர் சென்றார். மராத்திய அரசர் துகோஜியிடம் பெருந்தொகையை வழங்கும்படி கட்டாயப்படுத்தினார். தஞ்சாவூரில் கிடைத்த திறைப்பொருட்களோடு சந்தாசாகிப் ஆற்காட்டிற்குச் சென்றார்.

திருக்குர்ஆன் மீது சத்தியம்?

சந்தாசாகிப் மீனாட்சி அரசியிடம் கோட்டைப் பாதுகாப்பிற்கு உறுதி அளித்தபோது போலியான சத்தியம் செய்தார் என்றும், திருக்குர்ஆனுக்கு பதிலாக ஒரு செங்கலை, பொதுவாக குர்ஆன் வைக்கப்படுகிற சிறந்த அட்டைப் பெட்டிக்குள் வைத்திருந்தார் என்றும் காலங்காலமாக பலராலும் சொல்லப்பட்டு வருகிறது.*

மார்க்வில்க்ஸ்

சந்தாசாகிப் மீனாட்சியை மோசடி செய்து கள்ளச் சத்தியம் செய்ததாகச் சொல்லும் ஒரே ஆசிரியர் மார்க் வில்க்ஸ் மட்டும்தான். வேறுஎவரும் இதுகுறித்து குறிப்பிடவில்லை.

---

* MARK WILKS Historical sketches of the south India In an Attempt to trace the History of Mysore From the Orgin of the Hindu Government of the state, to the Extinction of the Mohammedan Dynasty in 1799 Founded chiefly on Indian Authorities, Edited with notes Murray Hammick in two Volumes . Volume I First Published 1817 A.D., AES reprint 1989. Page 272 (Volume I Pages 850 Volume II Pages 817 = Totally 1617 Pages.

ஆர். சத்தியநாத அய்யர்

1924 இல் மதுரை நாயக்கர் வரலாற்றை ஆய்வு செய்து 403 பக்கங்களில் ஆங்கிலத்தில் வெளியிட்டவர் பேராசிரியர் ஆர்.சத்தியநாத அய்யர். இவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் 1917-1921 ஆய்வு மாணவர். பின்னர் இணைப் பேராசிரியராக திருச்சி தூய ஜோசப் கல்லூரியில் பணியாற்றியவர்.

எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார்

சென்னைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார். இவர் தொல்பொருய் ஆய்வு இலாகாவின் கௌரமிக்கத் தாளாளரும் ஆவார். இவர் ஆர். சத்தியநாத அய்யரின் நூலுக்கு முன்னுரை தந்துள்ளார். சந்தாசாகிப் ராணி மீனாட்சியிடம் குர்ஆனில் சத்தியம் செய்து அவருக்கு உதவுவதாகக் கூறும் வரலாற்றை எழுதிவிட்டு தொடர்ந்து சொல்கிறார்.

'எந்த வகையிலாவது மீனாட்சியைக் காப்பாற்றிவிடுவதாக குர்ஆன் மீது சத்தியம் செய்ததாகச் சொல்லப்படுகின்றது. இதையடுத்து சந்தாசாகிப் மீனாட்சியின் அரண்மனைக்கு வரவேற்கப்பட்டார்.

வரலாற்றுத் தரவுகளில் காணப்படும் இது தொடர்பான குறிப்புகள் குழப்பானவையாகவும் முன்னுக்குப்பின் முரணானவையாகவும் இருக்கின்றன. The Accounts given by the Chronicles are confusing and contradictory' *

மீனாட்சி பங்காரு சமரசம்

அதே வேளையில் இத்தருணத்தில் மீனாட்சி பங்காரு திருமலாவுடன் சமரசமாகிப் போனதாகவும் கூறப்படுகின்றது. சமரசமான மீனாட்சி பங்காரு திருமலாவுடன் தனது தத்து புத்திரன் விஜயகுமாராவை அனுப்பி சந்தாசாகிபிடமிருந்து மதுரையைக் கைப்பற்ற உத்திரவிட்டார். இரண்டு எதிரிகளும் சமாதானமாகிப் போய்விட்டதை சந்தாசாகிப் உணர்ந்து கொண்டார். மீனாட்சியின் புத்திக்கூர்மையான செயல்பாடுகளால் அதிருப்தி அடைந்த சந்தாசாகிப் ஆற்காட்டிற்குத் திரும்பினார்.

* ஆர். சத்தியநாத அய்யர் ஆங்கில நூல் 1924 பக்கம் 233

1736

1736 இல் மீண்டும் திருச்சிக்கு வந்தார் சந்தாசாகிப். கோட்டைக்குள் புகுந்த அவர் அதனைக் கைப்பற்றும் திட்டத்தை திட்டமாக வைத்திருந்தார்.

மீனாட்சியின் செயலற்றநிலை

இந்தவேளையில் மீனாட்சியின் கைம்மயக்க அல்லது செயலற்றநிலை சந்தாசாகிப்பின் நடவடிக்கைகளை ஒரு பார்வையாளரைப்போல கவனித்துக் கொண்டிருப்பதாக அமைந்தது. செயலற்ற, வலுவற்ற, ஆற்றலற்ற, செயல்வகையற்ற, முதுமையுற்ற, தளர்ந்த, மருட்சியூட்டி அறிவிழக்கச் செய்கிற மயக்குகிற மோகவலையில் உட்படுத்துகின்றமையல், With strange infatuation or impotence she (Minakshi) remained an idle spectator of chandasahib's movements.*

திருச்சி சந்தாசாகிபிடம்

மீனாட்சி அரசியின் ஆட்சிப்பகுதி முழுவதையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த சந்தாசாகிப் குறிப்பாக அரசியின் ஆதரவாளர்களை தன் வயப்படுத்தினார். திருச்சியில் தனது நிலையை வலுப்படுத்திக் கொண்டார்.

கோவிந்தய்யா - ராவணய்யா

மீனாட்சி அரசியின் ஆதரவாளர்களான கோவிந்தையா (Govindaiya) *ராவணய்யா* (Ravanaiya) *ஆகியோரின் தலைமையில் 80,000 குதிரைப்படையினரையும், தெற்கு நோக்கி அனுப்பினார். பங்காரு திருமலாவின் பொறுப்பிலிருக்கும் திண்டுக்கல்லை கைப்பற்ற உத்திரவிட்டார் சந்தாசாகிப்.*

திண்டுக்கல் கைப்பற்றப்படல்

மிகக்குறைந்த அவகாசத்திலேயே திண்டுக்கல் கைப்பற்றப்பட்டது. சந்தாசாகிப்பின் படைகள் அதற்குப்பிறகு மதுரையை நோக்கிச் சென்றது. பங்காரு திருமலா நம்பிக்கை இழந்த நிலையில் அம்மைய நாயக்கனூரில் சிலரது உதவியுடன் சந்தாசாகிப்பின் படைகளை எதிர்த்தார்.

---

* ஆர். சத்தியாத அய்யர் முற்கூறிய நூல் பக்கம் 233

சிவகங்கை வெள்ளிக்குறிச்சியில்

சந்தாசாகிபிடம் தோற்ற பங்காரு திருமலா சிவகங்கையில் தஞ்சம் புகுந்தார். சிவகங்கை அரசர் வெள்ளிக்குறிச்சிக் கோட்டையில் (Vellikurichchi) பங்காரு திருமலாவிற்கு அடைக்கலம் அளித்தார்.

மதுரையைக் கைப்பற்றல்

சந்தாசாகிப்பின் படைகள் மதுரையைக் கைப்பற்றியது. மதுரை ஆட்சியைக் கைப்பற்ற சக்தியற்ற நிலையில் பங்காரு திருமலா இருந்தார். மராத்தியர்களின் உதவியை நாடினார். அதுவும் பலன் அளிக்கவில்லை. அன்வருதீனால் பங்காரு திருமலா கொல்லப்பட்டார். அவரது மகன் விஜயகுமாரா தலைதெறிக்க சிவகங்கைக்கு தப்பி ஓடினார். அவரது சந்ததியினரும் தலைமறைவு வாழ்க்கை நடத்தினர்.*

மீனாட்சி மறைவு

மனங்கலங்கிய மீனாட்சி தனது அரண்மனையிலே சிறை வைக்கப்பட்டார். மனம் வருந்தினார். விஷம் அருந்தி மாண்டார். மதுரை நாயக்கர் ஆட்சி முடிவுக்கு வந்தது என்பார்கள். ஆனால் அண்மைக்கால ஆய்வுகள் சொல்வதென்ன? அடுத்து அது குறித்த தகவலைத் தருகிறேன்.**

ஜேம்ஜ் ஹென்றி நெல்சன்

பாரிஸ்டர் பட்டம் பெற்ற பிரிட்டிஷ்காரர் எம்.ஏ. பட்டமும் பெற்றவர். ஜேம்ஜ் ஹென்றி நெல்சன் பிரிட்டிஷ் இந்தியாவின் அதிகாரி. கடப்பா மாவட்ட நீதிமன்ற நீதிபதி; ஓய்வுக்குப்பின் கேம்பிரிட்ஜில் அரசர் கல்லூரி பணியாற்றியவர். இவர் எழுதிய நூல். The Madura Country A Manual Compiled by order of the Madras Government. இது ஐந்து பாகங்களை உடையது. 30.5.1868 இல் இந்த நூலினை ஜே.ஹெச்.நெல்சன் எழுதி முடித்து வெளியிட்டார். இதன் மறுபதிப்பு 1989இல் வெளிவந்தது. அப்போது விலை 695 ரூபாய். நூல் முன்னுரை, பொருளடக்கம் 20 பக்கங்கள்.

---

* Indian Antiquary 1917 page 213 page 241-247 and 272-275

** Taylor, Oriental Historical Manusripts, ii,p.235

பாகம் I 100 பக்கங்கள், பாகம் II 145 பக்கங்கள்
பாகம் III 300 பக்கங்கள், பாகம் IV 196 பக்கங்கள்
பாகம் V 196 பக்கங்கள்

ஆக மொத்தம் நூல் 957 பக்கங்கள். இதில் மூன்றாவது பாகம் தெற்குச் சீமையின் அரசியல் வரலாற்றை விவரிக்கிறது.

சந்தா சாகிப் சத்தியம்

ஜே.ஹெச். நெல்சனின் மதுரையின் அரசியல் வரலாறான 3ஆம் பாகத்தில் பக்கம் 257இல் சந்தாசாகிப் மீனாட்சிக்கு சத்தியம் செய்தது குறித்து குறிப்பிட்டுள்ளார்.

மதுரையின் அரசியல் வரலாறு 1868

ஜே.ஹெச். நெல்சனின் மதுரையின் அரசியல் வரலாற்றின் 3ஆம் பாகத்தை மட்டும் ஆங்கிலத்திலிருந்து (வழக்கறிஞர் ச.சரவணன் தமிழில் மொழிபெயர்த்து) சந்தியா பதிப்பகம் சென்னை 2019இல் 360 ரூபாய் விலையில் 352 பக்கங்களில் வெளியிட்டது. அதில் பக்கம் 304இல்

திருக்கூரான் (குரான் என்றிருக்க வேண்டும்) நூலுக்குப் பதிலாக அழகான ஒரு உரையில் வைக்கப்பட்ட கல் ஒன்றை திருக்கூரான் (குரான்) நூலாகப் பாவித்துக்கொண்டு சத்தியம் செய்தார். **இந்த நிகழ்ச்சியை உறுதிப்படுத்தக்கூடிய சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை** என்று மொழிபெயர்த்துள்ளார்.

இனி ஜே.எச்.நெல்சன் ஆங்கிலத்தில் எழுதியது இதோ III வது பாகம் பக்கம் 257, 258;

Wilks says that this oath was taken upon a brick covered with a hand some cover and made to look lika Koran; and very Possibly this was so but **I have not come across any evidence going to corroborate the assertion, and no other historian than Wilks appears to know any thing about the matter.**

வில்க்ஸ் தவிர வேறு எவரும் சந்தாசாகிப் பற்றிய தவறான சத்தியம் பற்றி தெரிவிக்கவில்லை என்று ஜே.எச். நெல்சன் தெளிவாகச் சொல்லியுள்ளார். (வழக்கறிஞர் ச.சரவணன் என்ன காரணத்தாலோ இந்தப் பகுதியை தனது மொழிபெயர்ப்பில் விட்டிருக்கிறார். வரும் பதிப்புகளில் இதனை அவசியம் சேர்த்திட வேண்டுகிறேன்)

டி. தேவகுஞ்சரி

Dr.Miss D. தேவகுஞ்சரியின் (D.Devakunjari, M.A.,M.Ed.,P.hd.,) Madurai throught the ages From the earliest times to 1801 A.D. எனும் நூலை சென்னைப் பல்கலைக்கழக பி.எச்.டி. பட்டப்படிப்பிற்கான ஆய்வேட்டை சென்னையிலிருந்து 1979இல் ஆங்கிலத்தில் 336 பக்கங்களில் வெளியிட்டுள்ளனர். அதில் பக்கம் 191இல் சந்தாசாகிப் குறித்தும் ராணி மீனாட்சி குறித்தும் பேசப்படும் இடத்தில் குர்ஆன் மீது போலியாக சத்தியம் செய்த விஷயம் குறித்து எதுவும் எழுதிடவில்லை என்பதைப் பதிவு செய்கிறேன்.

பொ. இராசேந்திரன் - சொ. சாந்தலிங்கம்

பாண்டி நாட்டு வரலாற்று ஆய்வு மையம் மதுரை 2015 இல் பொ.இராசேந்திரன் – சொ. சாந்தலிங்கம் ஆகியோரை ஆசிரியராகக் கொண்டு வெளியிட்ட நூல் மாமதுரை (282 பக்கங்கள் 250 ரூபாய்) **அதில் பக்கம் 89இல் மீனாட்சியிடம் சந்தாசாகிப் தவறான சத்தியம் செய்தார் என்ற பகுதி எதுவும் இல்லை என்பதனைப் பதிவு செய்கிறேன்.**

டாக்டர் பி.எஸ். பாலிகா

மதுரை மாவட்ட கெஜட்டியரை 1960இல் அன்றைய சென்னை மாகாண அரசாங்கத்தினரால் ரூபாய் 15 விலையில் ஆங்கிலத்தில் 477 பக்கங்களில் வெளியிட்டவர் சென்னை ஆவணக் காப்பக அதிகாரி டாக்டர் பி.எஸ். பாலிகா. அந்த நூலில் பக்கம் 61, 62 இல் சந்தாசாகிப் மீனாட்சி விஷயம் வரும் இடத்தில் **குர்ஆன் மீது தவறான சத்தியம் எதுவும் செய்ததாக குறிப்பிடவில்லை என்பதையும் பதிவு செய்கிறேன்.**

இராபர்ட் ஓர்ம்

இராபர்ட் ஓர்ம் 1728 இல் அஞ்சங்கோவிலில் பிறந்தவர். தனது 14வது வயதில் 1742இல் கல்கத்தாவில் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனிப் படையில் சேர்ந்தார். 1751 இல் இராபர்ட் கிளைவோடு உறவு கொண்டார். 1754இல் சென்னை கம்பெனி கவுன்சில் உறுப்பினர். ஏற்றுமதிப் பொருட்களின் கிடங்குப் பொறுப்பாளர், ஆற்காடு நவாபின் கணக்குகளைக் கவனித்திடும் ஆணையாளர், கும்பெனியரின் ரகசிய, மற்றும் முக்கியக் கடிதங்களைப் பல்வேறு வேளைகளில்

HISTORY

OF THE

MILITARY TRANSACTIONS

OF THE

BRITISH NATION

IN

INDOSTAN,

FROM THE YEAR MDCCXLV.

TO WHICH IS PREFIXED A DISSERTATION
ON THE ESTABLISHMENTS MADE BY MAHOMEDAN
CONQUERORS IN INDOSTAN.

By ROBERT ORME, Esq. F. A, S.

VOL. I.

THE FOURTH EDITION,

REVISED BY THE AUTHOR.

LONDON:
PRINTED FOR F. WINGRAVE,
SUCCESSOR TO MR. NOURSE, IN THE STRAND.
M.DCCC.III.

MADRAS:
RE-PRINTED BY PHAROAH AND CO.
ATHENÆUM PRESS,—MOUNT ROAD.
1861.

பயன்படுத்தப்பட காரணமானவர் பின்னால் கும்பெனியின் கவர்னராகவும் ஆனார். கர்நாடக இலக்கியத்தில் ஆற்றல் பெற்றவர். '**இன்டோஸ்தானில் பிரிட்டிஷ் இராணுவ நடவடிக்கைகள்**' என்ற 1803 இல் இலண்டனில் அச்சான நூலைத் தந்தவர். அந்த நூல் மூன்று தொகுதிகளை உடையது. முதல் தொகுதி 96+ 2+ 436 = 534 பக்கங்கள். இரண்டாவது தொகுதி 1803 இல் இலண்டனில் அச்சிடப்பட்டது 1861இல் சென்னையிலிருந்து வெளியானது 739+ 15= 754 பக்கங்கள். மூன்றாவது தொகுதி 1862இல் அச்சிடப்பட்டது. இது முழுக்க முழுக்க வரைபடங்கள் ஆகும்.

இராபர்ட் ஓர்ம் நூலில் முதற்தொகுதி பக்கம் 38

'having first takenan oath on the koran, that he would act in nothing to her detriment, the people of the country say that she fell in love with him; if so, she was ill requited, for he soon after seduced the garrison, seized the city.

சந்தாசாகிப் மீது கொண்ட அன்பினால் அரசி மீனாட்சி சும்மா இருந்தார். அதுவே அவர் ஆட்சியை இழக்கவும் காரணமாயிற்று. சந்தாசாகிப் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டார் என்பதுதான் இராபர்ட் ஓர்ம் தரும் செய்தியாகும்.

மீனாட்சி சிறைவைக்கப்பட்டாரா?

அரசி மீனாட்சி இறந்தது 1739 மே மாதம். இறப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பு 09.02.1739 இல் மீனாட்சி அரசி முஸ்லிம் பக்கிரி இமாம் சாகிப் என்பவருக்கு திருநெல்வேலியிலுள்ள சீவலப்பேரி என்ற முத்து வெங்கடலட்சுமிபட்டி பூபாலசமுத்திரத்திலுள்ள சில நிலங்களைத் தானமாகக் கொடுத்துள்ளார். அந்த தெலுங்கு செப்பேடு திருவனந்தபுரம் ஹானரரி மாஜிஸ்திரேட் எம்.சி. நாராணயபிள்ளை, திருவனந்தபுரத்திலுள்ள ஒரு முஸ்லிம் வீட்டில் இருந்து பெற்று டாக்டர் மு. ராஜேந்திரன் இ.ஆ.ப.யிடம் வழங்கினார். அதனை அவர் தனது சேரர் காலச் செப்பேடுகள் நூலில் 2015, பக்கம் 179, 181இல் தெரிவித்துள்ளார். இறப்பதற்கு மூன்று மாதங்கள் வரை இராணியாகவே இருந்தவர் மீனாட்சி அரசி. இது செப்பேடு தரும் தகவல். இதைவிட வேறு ஆதாரம் தேவையா?

மீனாட்சி சிறைவைக்கப்பட்டாரா? நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

டபிள்யூ. பிரான்சிஸ்

1906 இல் மதுரை மாவட்ட கெஜட்டியரை வெளியிட்டவர் டபிள்யூ. பிரான்சிஸ். 2012இல் அது மறுபதிப்பாகி ஆங்கிலத்தில் 353 பக்கங்களில் வந்துள்ளது. அதில் பக்கம் 57இல்

'Minakshi, was soon little but a pupper *(கூத்தாட்டுப் பொம்மை பிறர் கைப்பாவையாக மாறுதல்)* Orme indeed, suggests that **she had fallen in love with chanda sahib** and so let him have his own way un hindered. *ஓர்ம் கூற்றுப்படி சந்தாசாகிபின் மீது கொண்ட அன்பினால் மீனாட்சி தனது அரசை இழந்தாள் என்பதை வலியுறுத்தியுள்ளார்.*

மராட்டியர்களை அழைத்தல்

சந்தாசாகிபை விட வலிமையுள்ள சத்தாராவைச் சேர்ந்த மராட்டியர்களை பங்காரு திருமலை அழைத்தார். அவர்களும் தெற்கு நோக்கி வந்தார்கள். தௌஸத் அலிகானை தண்டிக்க நிஜாம் உல்–முல்க் மராத்தியர்களின் உதவியை கோரியிருந்தார். சிவாஜியை போலவே மராட்டியப்படை 1739இல் ராகுஜிபோன்ஸ்லே தலைமையில் விரைந்தது. மதுரை கிறிஸ்தவ சமயப் பரப்புக் குழுவின் குறிப்புக்கள் மராத்தியப்படையில் 60,000 குதிரைப்படையினரும், 1,50,000 காலாட் படையினரும் இருந்ததாக தெரிவிக்கிறது. ஒரு லட்சம் குதிரைப்படை இருந்ததாக இராபர்ட் ஓர்ம் குறிப்பிடுகிறார். அறுபதாயிரம் குதிரைப்படைகள் இருந்ததாக அறிவிக்கிறது. வரலாற்றாசிரியர் டப், 50,000 குதிரைப் படை இருந்ததாகச் சொல்கிறார்கள். 40,000 முதல் 50,000 குதிரைப்படை என்கிறது. மராத்தியத்திலிருந்து படையெடுத்து வந்தவர்களின் நடவடிக்கைகள் பற்றி ஆங்கில வரலாற்றாசிரியர்கள் முழுமையான விவரங்கள் தெரிவிக்கவில்லை.*

ராகோஜி போன்ஸ்லே

பாதுகாப்பு அதிகம் தேவைப்படாத முக்கியமற்ற பகுதிகளை பாதுகாக்கும் பொறுப்பு ஒரு இந்து தளபதியிடம்

* Public Consultations, Madras, July 1735 Vol 65 page 147.

வழங்கப்பட்டது. அதைத் தெரிந்துகொண்ட ராகோஜி போன்ஸலே பர்ன்ஸ்லே அவரிடம் சென்று இந்துவான நீ மராத்தியர்களுக்கு உதவிட வேண்டும் என்றும், தென்பகுயில் இருந்து இஸ்லாமியர்களை விரட்டிட வேண்டும் என்றும் தெரிவித்ததோடு, படைத்தளபதிக்கு பெரும் வெகுமதிகளை அளித்து அவரைத் தன்பக்கம் சேர்த்துக்கொண்டார்.

துரோகம்

அந்த இந்துத் தளபதியும் போர்க்களத்திலிருந்து விலகிச் சென்றார். மராத்தியர்கள் கணவாய் போன்றிருந்த பகுதியின் வழியாக எளிதாக நுழைந்தனர்.

தௌசத் அலிகான்

பாண்டிச்சேரிக்கு 12 மைல்கள் தொலைவிலிருந்த (5 மைல் 8 கி.மீ.) இடத்தில் தௌசத் அலிகானை மராத்தியர்கள் எதிர்கொண்டார்கள். 1740 மே மாதம் 20ஆம் நாள் இரு படையினருக்கே கடும்போர் நடைபெற்றது. முஸ்லிம் படை குலைந்து தோற்றது; தளபதிகள் அனைவரும் கொல்லப்பட்டனர். எஞ்சியவர்கள் பாண்டிச்சேரியில் பிரெஞ்சுக்காரர்களிடம் தஞ் சம் புகுந்தனர்.

சப்தர் அலி

400 குதிரை வீரர்களுடன் பாதுகாப்பாக சப்தர் அலி வேலூருக்குத் தப்பிச் சென்றார். மராத்தியர் விரட்டிச் சென்றனர். சப்தர் அலி சமாதான உடன்படிக்கை செய்துகொண்டார்.

திருச்சி முற்றுகை

திருச்சிராப்பள்ளியை சந்தாசாகிப் விட்டுக் கொடுக்க மறுத்தார்.

பாதா சாகிப் Bada Saheb

சந்தாசாகிபின் சகோதரர் பாதாசாகிப் சந்தாசாகிபிற்கு உதவினார். போரில் அவர் மடிந்தார்.

அபித் அலி Abid Ali

சந்தாசாகிபை மராத்தியர்கள் 1741 மார்ச்சில் சிறைப்பிடித்து பீராருக்கு Berar கொண்டு சென்றார்கள். சந்தாசாகிபின் மகன்

அபித் அலியும் கைது செய்யப்பட்டார். பீராரிலிருந்து இருவரும் சதராவுக்கு (Satara) கொண்டு செல்லப்பட்டனர்.

சாதுக்சாகிப் (Saduck Saheb)

மதுரையின் ஆளுனராயிருந்த சந்தாசாகிப்பின் சகோதரர் சாதுக் சாகிப் திண்டுக்கல் கோட்டையில் பாதுகாப்புப் பொறுப்பில் இருந்தார். சந்தாசாகிப்பிற்கு படை உதவிக்கு சென்றபோது அவரும் கொல்லப்பட்டார். இறுதியாக நாடு பல துண்டுகளாகச் சிதறியது. பல சிற்றரசர்கள் ஆட்சி நடந்தது. அவைகள் ஒன்றன்பின் ஒன்றாக வீழ்த்தி 18ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள் நாடு முழுவதும் பிரிட்டிஷ் கரங்களுக்குச் சென்றது என்பார் ஜே.ஹெச் நெல்சன்.*

The Maratha Supremacy R.C.Majumdar, U.G.Dighe தொகுத்த The Maratha Supremacy History and culture of the Indian people Volume III, 2001 Mumbai page 180 தரும் செய்தி இது.

26.3.1741

26.3.1741 இல் திருச்சியை மராத்தியர்கள் கைப்பற்றினார்கள். சந்தாசாகிப் சிறைபிடிக்கப்பட்டார். கர்நாடகாவில் மராத்தியர் ஆட்சி நிலைநிறுத்தப்பட்டது.

Selection from peshwa daftar 45 volumes in Marathi, edited by G.S.Sardesai 1930-1933 இதில் *20*வது தொகுதியில் *21–22* பக்கங்களில் சந்தாசாகிப் கைது செய்யப்பட்ட செய்தியைச் சொல்கிறது. Marathyan chya Itihasachi sadhanen edited by V.K. Rajwade XX தொகுதிகள் அதில் VIவது தொகுதி பக்கம் *149*. சர்தேசி, கேல், குல்கர்னி தொகுதி Aitihasik Patravyawaher பக்கம் *266*இலும் சந்தாசாகிப் கைது *26.3.1741* இல் என்று காணப்படுகிறது.

---

* முற்கூறிய நூல் பக்கம் 262-264

CHANDA SAHIB

வீரமாமுனிவர்

சந்தாசாகிபும் வீரமாமுனிவரும்

கத்தோலிக்க சமயக்குரு அமுதன் அடிகள் **'இத்தாலி நாட்டு வித்தகத்தமிழர்'** என்ற நூலை திருச்சியிலிருந்து முப்பது ரூபாய் விலையில் 1995 சூனில் 195 பக்கங்களில் தந்துள்ளார். மிகுந்த ஆதாரங்களுடன் எழுதப்பட்டது இந்த நூல்.

வட இத்தாலி - வெனிஸ்மாநிலம் - மாந்ததுவா மாவட்டம் (Mantova) காஸ்தில்யோனே தெல்லே ஸ்திவ்யோர (Castigllone delle stiviere) என்ற ஊரில் 8.11.1680இல் பிறந்தவர் வீரமாமுனிவர்.

தந்தை : **கௌதியோஸோ பெஸ்கி**
தாயார் : **எலிசபெத்தா**
பிள்ளை : **கொங்தான்ஸோ ஜொஸேஃப்போ எவுசோபியோ பெஸ்கி** (இதுதான் வீரமாமுனிவரின் இயற்பெயர் ஆகும்)

1709 இல் குருவானார் வீரமாமுனிவர்

1710 இல் இந்தியா வந்தடைந்தார்.

1711 இல் மதுரை மறைப்பணிக்கு வந்து சேர்ந்தார்.

8.5.1711இல் காமநாயக்கன்பட்டியில் பணி ஆரம்பமாயிற்று. தொடர்ந்து பல இடங்களில் மறைப்பணியாற்றினார்.

அமுதன் அடிகள் வீரமாமுனிவர் சந்தாசாகிபுடன் நட்பு எனும் தலைப்பில் எழுதியுள்ள செய்திஇதோ;

1732-ஆம் ஆண்டில் தஞ்சை, திருச்சி, மதுரை, இராமநாதபுரம் பகுதிகளில் போர்கள் மீண்டும் நடைபெறலாயின. புதிதாகத் தஞ்சையில் பொறுப்பேற்ற மன்னரிடம் திறைபெறுவதற்காக முகலாயப்படை தஞ்சைப் பகுதிக்கு வந்தது. இறுதியில் தாங்கள் விரும்பியவாறே மன்னரிடம் திறையைப் பெற்றுக்கொண்டு திரும்பிச் சென்றனர்.

மதுரையை ஆண்டு வந்த விஜயரங்க கிருஷ்ணமுத்து வீர சொக்கநாத நாயக்கர் தம் எட்டு மனைவியருள் ஒருவராகிய அரசி மீனாட்சியிடம் ஆட்சி பொறுப்பை ஒப்படைத்துவிட்டு இறந்தார்.

அவரது ஆட்சியில் மிகுந்த செல்வாக்குடன் விளங்கிய இரு அந்தணர்களை மீனாட்சியின் சகோதரர்கள் சிறையிலடைத்துப் பின் நாடு கடத்த முயன்றனர். அந்தணர்கள் மன்னரின் உறவினராகிய பங்காரு திருமலை நாயக்கரை மீனாட்சிக்குப் பதிலாக அரசுக் கட்டிலேற்ற முயன்றனர்.

இதனால் விளைந்த போரின்போது மீனாட்சி அரசி ஆற்காட்டு நாவாப்பின் உதவியை நாடினார். நவாபு தன் மகன் சுஃப்தர் அலியையும் மருமகன் சந்தாசாகிபையும் மீனாட்சிக்கு உதவி செய்வதற்காகப் படையுடன் அனுப்பி வைத்தார்.

ஆற்காடு நவாபின் உதவியால் மீனாட்சி அரசி தம் பகைவர்களை வென்று ஆட்சிப் பொறுப்பை தக்க வைத்தக்கொண்டார். இதற்காக அவர் நவாபுக்கு மூன்று இலட்ச ரூபாய் கொடுக்க வேண்டியதாயிற்று.

ஜோசப் வியேரா - Father Vieyra

இப்போரைப்பற்றி, விவரங்களை கல்பாளையத்திலிருந்து 1732ஆம் ஆண்டு எழுதிய மடலில் ஜோசப் வியேரா அடிகளார் எழுதியுள்ளார். 1733-ஆம் ஆண்டிலும் திருச்சிராப்பள்ளி தஞ்சைப் பகுதிகளில் கடுமையான போர்கள் தொடர்ந்தன. மதுரை, மைசூர், தஞ்சை, ஆற்காட்டுப் படைகள் அப்பகுதியில் பாசறை அமைத்திருந்தனர். படைவீரர்களும் சரியான கட்டுப்பாடின்றி வாழ்ந்து வந்தனர். நினைத்த போதெல்லாம் ஊர்களுக்குள் புகுந்து மிகுந்த அழிவை விளைவித்தனர்.

பெர்த்தோல்தி அடிகளார்

ஆவூரில் பணியாற்றிவந்த பெர்த்தோல்தி அடிகளார் முகலாய வீரர்களின் செலவுக்குப் பணம் தந்து அவர்களின் பாதுகாப்பைப் பெற்றார். எனினும் மற்றப் படைகளின் வீரர்கள் வந்து துன்பம் விளைவிக்கலாம் என்னும் அச்சம் அப்பகுதியை ஆட்கொண்டிருந்தது. ஏலாக்குறிச்சிப் பகுதியில் பணியாற்றிவந்த வீரமாமுனிவர் தம் நாட்டவராகிய பெர்த்தோல்தி அடிகளாரைச் சந்திக்கவும் உதவி புரியவும் ஆவூருக்கு அடிக்கடி செல்வதுண்டு. போர்வீரர்கள் ஆவூர்ப் பகுதிக்குள் நுழையும்போது வீரமாமுனிவர் அங்கிருந்தால் அவ்வீரர்களை எதிர்கொண்டு சென்று நன்னயமாகப்பேசி அவர்களை அனுப்பிவிடுவார்.

ஆவூர்

ஆவூரை அடுத்துள்ள பகுதியில் ஆண்டு வந்த தொண்டைமான் என்னும் குறுநில மன்னரின் வீரர்கள் அடிக்கடி ஆற்காட்டுப் படைவீரர்களின் பாசறைகளைக் கொள்ளயடிப்பதுண்டு. ஒருமுறை அவ்வாறே கொள்ளை நிகழ்ந்தபோது அக்கொள்ளைக்கு காரணமான ஆவூர் மக்களே என்று தவறாக எண்ணிய ஆற்காட்டு வீரர்கள், அவர்களை அழித்துவிடக் கருதிப் பெருந்திரளாக ஆவூரை நோக்கி வந்தனர்.

அவ்வமயம் ஆவூருக்கு வந்திருந்த வீரமாமுனிவர் அவ்வீரர்களை அமைதிப்படுத்தச் சென்றார். ஆனால் வீரர்களோ ஆவூர் மக்கள் தங்களிடமிருந்து திருடியவற்றைத் திருப்பிக் கொடுக்க வேண்டும், அல்லது வீரமாமுனிவர் கைதியாகத் தங்களுடன் வரவேண்டும் என்று கடுஞ் சினத்துடன் கூறினர். ஆகவே, வீரமாமுனிவர் அவர்களுடன் சென்றார். தங்கள் வசைமொழிகளைப் பொருட்படுத்தாமல் வீரமாமுனிவர் துணிவுடன் இருந்ததைக் கண்ட வீரர்கள் சீற்றம் கொண்டு முனிவரைக் கொடிய வெயிலில் நிற்க வைத்துக் கொடுமைப்படுத்தினர்.

வீரமாமுனிவரை வரவேற்ற சந்தாசாகிபு

நீண்ட நேரத்துக்குப் பின் முனிவரின் வழக்கை விசாரித்த படைத்தளபதி முனிவர் மீது எக்குற்றமும் இல்லை என்று தீர்ப்பளித்தார். நியாயமான தீர்ப்பு வழங்கிய படைத்தலைவரை வீரமாமுனிவர் சந்திக்க விரும்பவே; படைத்தலைவரும் வீரமாமுனிவரை மிகுந்த மரியாதையுடன் வரவேற்றார். வீரமாமுனிவரைக் கட்டித் தழுவி வரவேற்ற படைத்தலைவர் தமக்குச் சரியாசனத்தில் வீரமாமுனிவரை அமரச் செய்தார் என்று ஜோசப் வியேரா அடிகளார் 1733ஆம் ஆண்டு மடலில் வரைகின்றார்.

1732-ஆம் ஆண்டில் வீரமாமுனிவர் சந்தித்த இப்படைத் தலைவரே சந்தா சாகிபு. இவர் ஆற்காட்டில் இருந்தபோது அப்பகுதியில் பணியாற்றிய இயேசு சபைக் குருக்களுடன் நட்புறவு பாராட்டி வந்தார். சந்தா சாகிபை முன்பொரு முறை வீரமா முனிவர் சந்திக்க விரும்பியும் எக்காரணத்தாலோ

இயலாமற் போயிற்று. இப்போது முனிவருடன் சாகிபு நெருங்கிய நட்புறவு பூண்டார். அவருக்குப் பல அன்பளிப்புகளை வழங்கி அடிக்கடி தம்மைச் சந்திக்க வருமாறு வீரமா முனிவரைக் கேட்டுக்கொண்டார். சந்தாசாகிபு வீரமா முனிவருக்கு வழங்கிய மதிப்பையும் மரியாதையையும் கண்ட படைவீரர்களும் அவருக்கு மிகுந்த மதிப்பளித்துப் போற்றலாயினர்.

சந்தா சாகிபு திருச்சிராப்பள்ளிப் பகுதியில் கோலோச்சிக் கொண்டிருந்த வரையில் ஆவூரிலும் பிற ஊர்களிலும் இருந்த கத்தோலிக்கக் கோயில்களுக்கு எத்தகைய இடையூறும் ஏற்படவில்லை.

கிறிஸ்தவ தேவாலயத்திற்குப் பாதுகாப்பு

1735ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளிக்கு வடக்கிலுள்ள கல்பாளையும் என்னும் ஊரிலிருந்த கோயில் முஸ்லிம் வீரர்களால் அழிக்கப்படக்கூடிய அபாயம் எழுந்தபோது வீரமாமுனிவர் சந்தா சாகிபைக் கண்டு பேசினர். தமது மெய்க்காவலர்களையே திருச்சிராப்பள்ளிப் பகுதியிலுள்ள கத்தோலிககத் தேவாலயங்களுக்கு காவலர்களாகச் சந்தா சாகிபு அவ்வமயம் ஏற்படுத்தினார்.

சந்தா சாகிபின் சமயப்பொறை

போர்கள் நடைபெற்ற காலங்களில் சந்தா சாகிபு பாசறை அமைத்துத் தங்கியிருந்த பகுதிகளில் கிறித்துவக் கோயில்களுக்கும் மக்களுக்கும் எத்தகைய தீங்கும் இழைக்கப்படவில்லை. எனவே, வன்முறை தலைவிரித்தாடிய பகுதிகளிலிருந்து கிறித்தவரும் கிறித்தவரல்லாதவரும் இப்பகுதிக்குப் புகலிடம் தேடி ஓடிவந்தனர்.

பிற படைகளால் கிறித்துவக் கோயில்களுக்கு இடுக்கண் நேரவிருந்தால் அப்பகுதியிலுள்ள குருக்கள் சந்தாசாகிபின் உதவியை நாடுவர். அவரும் தம் வீரர்களை அனுப்பிக் கோயில்களுக்கு அழிவு நேரிடாமல் பாதுகாப்பார்.

உண்மையில் நாட்டை ஆண்டுவந்தவர் சந்தாசாகிபு தான். எனவே, திருச்சிராப்பள்ளியை அடுத்திருந்த பகுதிகளில் இயேசு சபைக் குருக்களும், கிறித்தவ மக்களும் எத்தகைய துன்பமுமின்றிப் பாதுகாப்புடன் வாழ்ந்து வந்தனர்.

ரோஸ் அடிகளாரின் பாராட்டு

“**ஒரு கிறித்துவ மன்னர் கூடச் சந்தாசாகிபைப் போலக் கிறித்துவக் குருக்களுக்கு அன்பும் ஆதரவும் காட்டியிருக்க இயலாது**” எனச் சின்ன சவேரியார் என்று அழைக்கப்பட்ட ரோஸ் அடிகளார் 1743-ஆம் ஆண்டு மடலில் குறிக்கின்றார்.*

இவ்வாறு சந்தாசாகிபு கிறிஸ்தவர்களுக்கு உதவியதற்கு அவர் வீரமா முனிவருடன் கொண்டிருந்த ஆழ்ந்த நட்புறவே காரணம். வீரமா முனிவரை முன்னிட்டு அப்பகுதியில் பணியாற்றி வந்த பிற இயேசு சபை குருக்களையும் சந்தாசாகிபு மதித்துப் போற்றி வந்தார். தாம் முற்றுகையிடும் பகுதிகளில் கிறித்துவக் கோயில்கள் இருந்ததால் முன்னதாகவே தம் வீரர்களை அங்கு அனுப்பிப் பாதுகாப்புக் கொடுக்கவும் சந்தாசாகிபு ஏற்பாடு செய்து வந்தார்.

இஸ்மத்தி சந்நியாசி

சந்தா சாகிபு முனிவரைத் தம் திவானாக ஏற்படுத்தினார் முனிவருக்கு **இஸ்மத்தி சந்நியாசி** என்னும் பட்டம் வழங்கினார்.** அவருக்கு இறையிலி நிலங்களாக **உக்களூர், மாலவாய், அரசூர், நல்லூர்** என்னும் ஊர்களை வழங்கியதாக அ.முத்துசாமிப் பிள்ளை தம் நூலில் எழுதியுள்ளார்.

லூயிஸ் தெ வாஸ்கொன்செல்லோஸ் அடிகள்

1737-40 ஆம் ஆண்டுகளில் மராட்டியத்தில் நிகழ்ந்த போர்களின் விளைவாக, கோவாவில் மலபார் மறைமா நிலத்துக்கு உரிமையாக விருந்த நிலங்களிலிருந்து கிடைக்க வேண்டிய வருமானம் வரவில்லை. இதனால் மறைமாநில தலைவர் பொருளதார வசதிக் குறைவினால் துன்புற்றார். அதுபோல பலநல்லவர்கள் அவருக்கு உதவி செய்தனர். இத்துன்ப நிலையை அறிந்த சந்தா சாகிபு முன்னூற்றைம்பது

---

* It was doubtful whether a christian ruler could have been more benevolent towards our missionaries than this Mahomedan ruler Father Russi, S.J. Missionary at sarakanei worte, in 1743.

** D.Ferroli S.J. The Jesuits in Malabar Vol.II. Bangalore 1951, Page 306 (Book Totaly 622 pages)

பொற்காசுகளை அனுப்பியுதவினார் என அன்றைய மறைமாநிலத் தலைவர் **லூயிஸ் தெ வாஸ்கொன்செல்லோஸ்** அடிகள் ஒரு மடலில் தெரிவிக்கின்றார்.

அதே 1740-ஆம் ஆண்டில் சந்தாசாகிபின் அரசியல் அதிகாரம் குறையத் தொடங்கியது. மராட்டியப் படையினர் அவ்வாண்டில் ஆற்காட்டின் மீது போர் தொடுத்துச் சந்தா சாகிபின் மாமனாராகிய தௌஸ்த் அலிகானைக் கொன்றனர். அதன்பின் மராட்டியப் படைகள் தெற்கு நோக்கிச் சென்று சந்தா சாகிபுடன் போர் தொடுத்தன. பல தோல்விகளுக்குப் பின், சந்தா சாகிபு மராட்டியப் படை தலைவராகிய ராக்கோஜி போன்ஸ்லேயிடம் சரணடைந்தார். அரசியல் சூழ்நிலைகள் காரணமாகவோ, என்னவோ முனிவர் 1742ஆம் ஆண்டில் தூத்துக்குடிக்கு மாற்றப்பட்டார்.

கயத்தான் பர்ரெத்தோ அடிகளார்

சந்தா சாகிபு சிறைப்பட்டபின், அவரது நெருங்கிய நண்பரான முனிவர் திருச்சிராப்பள்ளிப் பகுதியில் பணியாற்றுவது இயலாது என்பதை உணர்ந்த மலபார் மறைமாநில தலைவர் கயத்தான் பர்ரெத்தோ அடிகளார் அவரைத் தூத்துக்குடிப் பகுதிக்கு மாற்றியனுப்பினார் என்று கொள்வதே பொருத்தமாகும்.

புத்தாரி அடிகளார்

சத்தாராவில் சிறையிலிருந்த சந்தா சாகிபு சில ஆண்டுகளுக்குப் பின் விடுதலை செய்யப்பட்டார். அவர் மீண்டும் திருச்சிப் பகுதிக்கு பொறுப்பேற்றார் என்றும் மீண்டும் முன்பு போலவே அவர் கிறித்துவர்களுக்கு ஆதரவளித்து வந்தார் என்றும் புத்தாரி அடிகளார் எழுதிய (1749 - 1751) மடல்களிலிருந்து அறிகின்றோம்.

Thus Father John Baptist Buttari, Writing from Aur in September October 29th 1749, and from Aur in September 1751, relates several instances of his kindness*

* L.Besse, chanda sahib and Beschi, St. Josephs Industrial school press, Trichiroploly, 1917, Page 12.

ஆற்காட்டில் முனிவர்

சந்தா சாகிபுடன் கொண்டிருந்த நட்பின் தொடர்பாக வீரமாமுனிவர் ஒரு முறை ஆற்காட்டுக்கு சென்றிருந்தார். சந்தாசாகிபின் ஆதரவு காரணமாக திருச்சிராப்பள்ளி, தஞ்சைப் பகுதியில் கிறித்துவர்கள் துன்பமின்றி வாழ்ந்து வந்தனர். சந்தா சாகிபு ஆற்காட்டு நவாபின் படைத்தலைவர், எனவே, தம் மக்களுக்குச் சந்தா சாகிபு மூலம் பாதுகாப்பு வழங்கி வருவதற்காக வீரமா முனிவர் நவாபுக்கு நன்றி செலுத்தவே ஆற்காடு சென்றார்.

அதுமட்டுமல்ல, சந்தா சாகிபும் வீரமா முனிவரின் அருமை பெருமைகளையும் கல்விச் சிறப்பையும் தம் வாழ்வையும் பற்றி அறிந்திருந்ததால் அவரும் முனிவருக்குப் பல மரியாதைகளையும் சலுகைகளையும் வழங்கி வந்தார். இதற்காகவும் வீரமாமுனிவர் நவாபின் தலைமையகத்துக்கு நேரில் சென்று நன்றி தெரிவித்தார்.

29.10.1739

வீரமா முனிவர் உரோமையிலுள்ள இயேசு சபைத் தலைவருக்கு எழுதி, தம் கைப்பட ஒரு நன்றி மடலும், ஐரோப்பாவிலிருந்து சந்தா சாகிபுக்குச் சில அன்பளிப்புகளும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டார். சந்தா சாகிபுன் ஆட்சியில் கிறித்துவ மக்கள் நலமுற வாழ்ந்து வந்ததை அறிந்த சபைத் தலைவரும் வீரமா முனிவர் கேட்டுக் கொண்டவாறே செய்தார்.

நாவபு கிறித்துவர்களுக்கு செய்துவரும் நன்மைகளுக்காகவும், தங்கள் சமயத்தைப் பிற மக்களுக்கு எடுத்துரைக்க வழங்கியிருக்கும் உரிமைக்காகவும், கோயில்களையும் குருக்கள் இல்லங்களையும் அழிவுறாமல் பாதுகாக்க உறுதுணை புரிவதற்காகவும், தஞ்சைப் பகுதியில் கிறித்துவ மக்கள் அனுபவித்து வந்த துயரங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தமைக்காகவும் அம்மடலில் சபைத் தலைவர் சந்தாசாகிபுக்கு நன்றி தெரிவித்து எழுதினார். வீரமா முனிவரோடு சந்தா சாகிபு கொண்டிருந்த ஆழ்ந்த நட்புறவு பற்றியும் அம்மடலில் சபைத் தலைவர் குறிப்பிட்டு, அதற்காகவும் நவாபுக்கு நன்றி தெரிவித்திருந்தார்.

இக்கடிதம் *29.10.1739* அன்று எழுதப்பட்டது ஆகும்.

இக்கடிதத்தையும் சபைத் தலைவர் அனுப்பியிருந்த அன்பளிப்புகளையும் எடுத்துக் கொண்டு வீரமா முனிவர் ஆற்காட்டுக்குச் சென்றார். நவாபுடன் தாம் கொண்டிருந்த நட்பை உறுதிசெய்து கொள்ள வீரமா முனிவருக்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்தது. இவ்வாறு அமுதன் அடிகள் தனது நூலில் 80வது பக்கம் முதல் 90 வது பக்கம் வரை சந்தா சாகிப் – வீரமா முனிவர் நட்பைப் புகழ்ந்துரைத்துள்ளார்.

வித்துவான் ஈ.பண்டாரம் நம்பியார் (30.8.1913 – 5.7.1986)

'தமிழ் வளர்த்த தைரியநாதர்' என்னும் வீரமாமுனிவர் வாழ்க்கை வரலாற்று நூலினை வித்துவான் ஈ. பண்டாரம் நம்பியார் 1955 இல் வெளியிட்டார். 1968–1970 என்று தொடர்ந்து மறுபதிப்பு கண்டது. அதன் திருத்திய பதிப்பு 2014 மார்ச்சில் 168 பக்கங்களில் ரூபாய் 80 விலையில் வெளிவந்தது அதில் பக்கம் 43 முதல் 53 வரை சமயப்பணியும் சந்தா சாகிபின் நட்பும் என்ற தனி அத்தியாயமே எழுதியுள்ளார்.

சமயப்பணியும் சந்தாசாகிப்பின் நட்பும்

ஈ. பண்டாரம் நம்பியார் பக்கம் 51 முதல் 53 வரை வந்தள்ள செய்தி இதோ;

சந்தாசாகிபுவின் நட்பு

அக்காலத்தில் தென்னாட்டில் சந்தாசாகிபு என்னும் முகமதிய (முஸ்லிம்) மன்னர் ஆணை செலுத்தி வந்தான். **அவன் காட்சிக்கு எளியவனாகவும், கடுஞ்சொல் இல்லாதவனாகவும், நீதி வழங்கும் நேர்மை உடையவனாகவும் இருந்தான். அவனுடைய நல்லியல்புகளை நன்கறிந்திருந்த வீரமாமுனிவர், அவனது ஆதரவைப் பெற்றால்,** தமிழகத்தில் தம் பணியை இடையூறின்றி இனிது நடத்தலாம் என்று உறுதியாக நம்பினார்; ஆகையால், அவனைக் கண்டு பேசுவதற்கான வாய்ப்பைத்தேடித்தருமாறு படைத்தலைவனிடம் பணிவாக வேண்டினார். படைத்தலைவன் அதற்கு இசைந்து, முனிவர் அம்மன்னனைக் கண்டு பேசுவதற்கான வகையில் உதவினான். வீரமா முனிவர், படைத்தலைவன் குறித்தவாறு அவன் ஏவல் வழிச் சென்று சந்தாசாகிபுவைக் கண்டார். அம்மன்னன், முன்பே வீரமா முனிவரின் அறிவாற்றலையும் அன்புள்ளத்தையும் அறிந்து, அவரிடம் அளவளாவும் வாய்ப்பை ஆவலோடு எதிர்பார்த்திருந்தமையால், அவரை

அன்புடன் வரவேற்று, ஆதரவோடு பேசினான். முனிவரும் அவனிடம் உள்ளம் நிறைந்த அன்போடு உரையாடினார். அடிகளாரிடம் அமைந்திருந்த சாந்தமும் எளிமையுமாகிய பண்புகள் சந்தாசாகிபுவின் மனத்தைப் பெரிதும் கவர்ந்தன. முனிவர் ஆழ்ந்த அறிவும் தேர்ந்த கல்வியும் உடையவராய் இருந்ததும், அலை அடங்கிய ஆழியைப்போல அமைதியாக இருப்பதைக் கண்டு இனிமை ததும்பப் பேசுவதைக் கேட்டும் அம்மன்னன் அகமகிழ்ந்தான்; முனிவரது நட்பை விரும்பி ஏற்றான். அவர்களது நட்பு அன்பின் வழி வந்தகேண்மையாய் அமைந்தது.*

வீரமா முனிவர் வேண்டுகோள்

வீரமாமுனிவர் அடிக்கடி சந்தாசாகிபுவைக் கண்டு உரையாடி மகிழ்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்; அம்மன்னனோடு மனங்கலங்கி உரையாடி மகிழ்வதற்கென்று, இந்துஸ்தானியையும் பாரசீக மொழியையும் மூன்றே திங்களில் கற்று, அம்மொழிகளில் பேசும் புலமை பெற்றார் வீரமா முனிவர், தம் மொழியில் உரையாடியது அவன் சிந்தைக்கும் செவிக்கும் இனித்தது. அவர் உரையாடலைக் கேட்ட அம்மன்னன், எல்லையற்ற இன்பம் எய்தினான். அவன் முனிவர்பால் முன்னையினும் பேரன்பு கொண்டான். அவனது அன்பைப் பெற்ற வீரமா முனிவர், முகமதிய வீரர்கள் தம் சமயப் பணிக்கு இடையூறு இயற்றாதிருக்க அருளுமாறு அவனை வேண்டினார். முனிவர் உள்ளக் கனிவோடு விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கிய அம்மன்னன், அவ்வாறே ஆணை செய்தான். அன்று முதல் முனிவரது சமயப்பணி எவ்வித இடையூறுமின்றி இனிது நடந்து வந்தது. கிறித்துவ மதமும் தென்னாட்டில் தழைக்கத் தொடங்கியது.

பட்டமும் பதவியும்

சந்தாசாகிபு, முனிவரின் ஆழ்ந்த படிப்பையும், அறிவின் பரப்பையும், தூய வாழ்வையும் துருவி ஆராய்ந்தான். முனிவரது கம்பீரமான தோற்றமும், கள்ளமற்ற உள்ளமும், அறிவின் ஆழமும், அருள் மொழியும் அவன் உள்ளத்தைக்

* John Correia - Afonso S.J. Jesuit Letters and Indian History Bombay, 1955, Page 69 (Book Totaly 193 pages)

கவர்ந்தன. முனிவரின் பெருமையை உள்ளவாறு உணர்ந்த அக்காவலன்; முனிவருக்கு 'இஸ்மாஸ்தி சந்நியாசி' என்னும் பட்டத்தைக் கொடுத்து பாராட்டினான். 'இஸ்மாஸ்தி சந்நியாசி' என்பது பாரசீக மொழிச் சொற்றொடர். அதற்குத் 'தூய துறவி' என்பது பொருள். மேலும், செம்மனம் படைத்த அம்மன்னன், வீரமாமுனிவரைத் தனக்குத் திவானாக அமர்த்திக் கொண்டான்.

பல்லக்கும் பன்னீராயிரம் பணமும்

முனிவரும் அப்பதவி தம் சமயப் பணி சிறப்பதற்கு உறுதுணைபுரியும் என்னும் எண்ணத்தால் அதை ஏற்று மகிழ்ந்தார். அவர் அப்பதவியில் அமர்ந்திருந்தபோது, அரசியல் அலுவல்களை ஆற்றப் பல ஊர்களுக்குச் செல்ல நேர்ந்தது. அப்போதெல்லாம் முனிவர், அரசர்க்குரிய வரிசைகளோடு பரிமீது அமர்ந்து பரிவாரங்கள் சூழச் செல்வார். மெய்க்காப்பாளரான குதிரை வீரர்கள் அவரைத் தொடர்ந்து செல்வார்கள். இவ்வாறு முனிவர் திவான் பதவிக்குச் சிறப்பளித்து வந்தபோது, அவர் புகழ் திசை எட்டும் முழங்கியது. அக்காலத்திலும் முனிவர் தம் சமயக் கடமையை ஆற்ற ஒரு நாளும் தவறியதில்லை; தமிழ்ப் பணியையும் மறந்ததில்லை. முனிவரது உழைப்பின் திறத்தைக் கண்டு உவப்படைந்த சந்தா சாகிபு தன் பாட்டனார் பயன்படுத்திய பல்லக்கு ஒன்றை முனிவருக்குப் பரிசளித்ததோடு, ஆண்டு ஒன்றுக்குப் பன்னீராயிரம் ரூபாய் வருமானமுள்ள பூக்குளம், மால்வை, அரசூர், நல்லூர் என்னும் நான்கு ஊர்களையும் உவந்தளித்தான். அம்மன்னன் தென்னாட்டில் நல்லாட்சி நடத்திய காலம் வரையில் வீரமாமுனிவர் அமைச்சர் பதவியில் அமர்ந்திருந்ததோடு, தம் சமயப்பணியையும் தமிழ்ப்பணியையும் இனிது நடத்தி வந்தார்.

1740ஆம் ஆண்டில் நாதர் சிங்கு தலைமையில் மராத்தியர் படையெடுத்து வந்து, திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட்டனர். சந்தாசாகிபு சீற்றமுற்றுப் பெரும் படையோடு சென்று அவர்களை எதிர்த்துப் போரிட்டான். **இறுதியில் சந்தாசாகிபு தோல்வியடைந்து கைதியாக்கப்பட்டான். அக்காவலனுக்கு நேர்ந்த கதியை அறிந்த வீரமாமுனிவர், 'கன்றை இழந்த பசுவைப்போல'க்**

கவலையில் கண்ணீர் வடித்தார். சிறிது காலம் அவர் கரந்துறையவும் நேர்ந்தது.

சென்னைக் கல்விச் சங்கம்

1812இல் இந்திய மொழிகளை ஆங்கில அதிகாரிகளுக்குச் சொல்லிக் கொடுப்பதற்காக புனித ஜார்ஜ்கோட்டையில் 'சென்னைக் கல்விச்சங்கம்' அமைக்கப்பட்டது.

எப்.ட.பிள்யூ.எல்லிஸ்

Francis Whyte Ellis (17771819) இக்கல்விச் சங்கத்தில் தமிழ்கற்றார். இக்கல்விச் சங்கத்தின் காவலராகவும் இருந்தார். ரிச்சார்ட் கிளாக், ஜெனரல் மல்க்கன் பெஞ்சமின் பா பிங்டன் இதன் உறுப்பினர்கள்.

ஏ. முத்துச்சாமி பிள்ளை - தேம்பாவணி கிடைத்தது

இக்கல்விச்சங்கத்தின் மேலாளர் தலைமைத் தமிழ் ஆசிரியர் ஏ. முத்துச்சாமி பிள்ளை. இவர் எல்லீசர் ஆணைப்படி தமிழகத்தில் சுவடிகளைத் சேகரித்தார். ஆவூரில் அவ்வாறு கிடைத்ததே வீரமாமுனிவர் எழுதிய தேம்பாவணி பிரதிகள் ஆகும்.

வீரமாமுனிவர் வாழ்க்கையை விளக்கமாக ஆங்கிலத்திலும், தமிழிலும் ஏ. முத்துசாமி பிள்ளையைக் கொண்டு எழுதவைத்தார். திருவள்ளுவருக்கு காசுகள் வெளியிட்ட எல்லீசரே.*

1822

1822 இல் வீரமாமுனிவர் வாழ்க்கை வரலாற்றை முத்துசாமிபிள்ளை தமிழில் எழுதினார். அந்நூல் 1840 இல் ஆங்கிலத்திலும், 1843இல் தமிழிலும் அச்சானது.அதில் திருச்சிராப்பள்ளிக்கு நவாப்பாய் இருந்த சந்தாசாகிபைத் தாம் சந்தித்துப்பேச வேண்டுமென்று பார்சும் (பார்சி) இந்துஸ்தானியும் மூன்று மாதத்திற்குள்ளாக வீரமாமுனிவர் படித்தார் என்று குறிப்பிட்டுள்ளார்.**

---

* ரம்போலா பாஸ்கரேன்ஸ், கிறிஸ்தவத் தமிழ்த் தொண்டர்கள், திருச்சிராப்பள்ளி - 1972 (விலை ரூ.3 மொத்த பக்கங்கள் 303) பக்கம் 166

** முனிவர் எம்.ஏ.சவேரியார் மேலை நாட்டறிஞர்களின் தமிழ்தொண்டு, சென்னை, 2014, பக்கம் 116 நூல் 380 பக்கங்கள் விலை ரூ. 175

பேராசிரியர் கா. மீனாட்சி சுந்தரம்

*முஸ்லிம் மன்னனின் ஆதரவைப் பெற்று வீரமாமுனிவர் பல அழகிய கோயில்களைப் பாதுகாக்க முடிந்தது. சந்தா சாகிப் பெஸ்கியைத் தன் நண்பராக்கிக் கொண்டார். சமயப் பணியாளர்களின் பாதுகாப்புக்கு உத்திரவாதம் கொடுத்தார். சந்தா சாகிப் பல விலை உயர்ந்த அன்பளிப்புக்கள் கூட கொடுத்தார் என்பார் பேராசிரியர் கா. மீனாட்சி சுந்தரம்.**

" He was able to protect and save the beautiful churches by enlisting **support of the Muslim ruler**.

Chanda Sahib befriended Fr.Beschi and he gave the missionary letters of safe conduct for the Missionaries. Chanda sahib, also gave him valuable presents Dr. K.Meenakshisundaram . The contribution of European Scholars to Tamil, University of Madras 1974, page 32 (Book Totally 370 pages Price Rs.15)

ஜே.ஜி. சுந்தரம்

தேம்பாவணி ஆராய்ச்சியாளர் ஜே.ஜி. சுந்தரம் தமிழத் தொண்டர் வீரமாமுனிவர் எனும் நூலை 1948இல் தூத்துக்குடியிலிருந்து, டாக்டர் அ.சிதம்பரநாதச் செட்டியார் முகவுரையோடு 96 பக்கங்களில் வெளியிட்டுள்ளார். அதில் பக்கம் 37இல் **சந்தாசாகிபும் வீரமாமுனிவரும் பலமுறை கண்டு பழகியது காரணமாக இருவருக்கும் இடையிட்ட நட்பு பிறைச்சந்திரனைப்போல இன்பமுடன் பெருகுவதாயிற்று என்கிறார்.** *பக்கம் 38இல் கூறுகிறார்.*

சந்தா சாகிப் தமிழ்நாட்டில் சேனாதிபதியாக இருந்த காலமெல்லாம் தைரியநாதர் மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்தார். வீரமாமுனிவர் ஆற்றிவந்த திருத்தொண்டுகள் யாவும் இடையூறுகளின்றி நடைபெறலாயின. சந்தாசாகிபு திருச்சிராப்பள்ளியில் சேனாதிபதியாய் இருக்கும்வரை அவன் வீரமாமுனிவருக்கு பேருதவிபுரியும் கேண்மை பூண்டிருந்தான் என்பது மட்டும் உண்மையேயாகும் என்பார் ஜே.ஜி.சுந்தரம்.

---

* ஐரோப்பியர் தமிழ்ப்பணி, சென்னைப் பல்கலைக்கழகம் விலை ரூ 190, 2003 பக்கம் 60, நூல் 503 பக்கங்கள்.

எம். ரம்போலா மாஸ்கரேனஸ்

ஆர்ச் சூசையப்பர் கல்லூரி திருச்சிராப்பள்ளியில் தமிழ்த்துறைத்தலைவராக இருந்தவர் எம். ரம்போலா மாஸ்கரேனஸ். இவர் 1955இல் வீரமாமுனிவர் (1680–1747) எனும் 77 பக்கங்கள் கொண்ட நூலினை எழுதியுள்ளார். அதில் பக்கம் 59இல் வீரமாமுனிவருக்கு இஸ்மத் சந்நியாசி பட்டம் வழங்கியதையும், பக்கம் 60இல் திருச்சிப்பகுதியில் மக்களூர், மால்வாய், அரசூர், நல்லூர் ஆகிய நான்கு கிராமங்களின் வருவாயை வழங்கியதையும் தன் பாட்டன் பயன்படுத்திய தந்தப் பல்லக்கை வழங்கியதையும் குறித்துவிட்டு அ.முத்துசாமி பிள்ளை நூலில் இருந்து கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"இப்படி வீரமாமுனிவர் திவானாக இருக்கையில் வெளியே சாரி புறப்பட்டால் இத்தேசத்துப்பிரதான குருக்களுக்கு நடந்து வருகிற சிறப்பபைப் போல கிறிஸ்தவர்களுடைய குருவாகிய வீரமாமுனிவருக்கு இந்நாட்டு வழக்கம் பற்றி மேற்சொன்ன எப்போதுமுள்ள சிறப்புக்களோடு கூட, **பீதாம்பரத்தால் செய்த பன்னிரண்டு குமர வானக் கொடியும், நாலு வெள்ளிக்கடிகாரமும்" முப்பது குதிரை மேற்சேவகரும் குதிரை மேல் டங்காவும், நாகசுரமும் இவர் ஏறுகின்ற ஒரு வெள்ளைக் குதிரையும், ஒரு கருப்புக் குதிரையும் சேண முதலிய சிங்காரிப்போடு முன்னே நடக்க அர்க்கார்ட் லாயித்துக்கள் முன்னேட, பின்னாலே ஓர் ஒட்டகத்தின் மேல் நகராவும் (பறை) ஓர் ஒட்டகத்தின்மேல் கைத்தாளமும் முழங்கிக் கொண்டு மற்றோர் ஒட்டகத்தின் மேல் பூசை பண்ணுகிறதற்கு வேண்டிய வஸ்திர பாத்திர முதலாகிய வஸ்துக்களும், மூன்று ஒட்டகங்களின் மேல் கூடாரங்களும், மற்ற சாமான்களும் வரும்படி போவார். வீரமாமுனிவர் இறங்குகிற இடங்களிலும் சந்தாசாகிப் கச்சேரியிலும் புலித்தோல் ஆசனத்தின் மேல் உட்கார்ந்திருப்பார்.**

வெளியில் செல்லும்போது நீலநிற அங்கி, அரைக்கச்சை, தலையில் நீலநிறத் துணியால் மூடப்பெற்ற வெண்ணிறத்தலைப்பாகை. விரலில் பொன்மோதிரம் காதுகளில் முத்துக் கெம்பும் பதித்த கடுக்கண்கள் அணிகலன்களாக இருந்தது.

வீரமாமுனிவர் ஏறிச்சென்ற வாகனம் பல்லக்கு. இரு புறங்களிலும் ஒவ்வோர் ஆள் அவருக்கு விசிறிக் கொண்டிருப்பான். மற்றொரு ஆள் உச்சியில் பொன் கலசம் வைக்கப்பெற்ற அவருடைய நீலநிறப்பட்டுக்குடையைச் சுமந்து செல்வான் இன்னும் இருவர் வீரமாமுனிவருக்கு முன் மயில் தோகைச் சாமரங்களைத் தூக்கி நடப்பார்.

இது அ.முத்துசாமி பிள்ளை 1820இல் எழுதியது. இதில் கொஞ்சம் மிகைப்படுத்தல் இருக்கலாம். ஆனால் உண்மை இல்லாமல் இருக்க முடியாது.

12,000 ரூபாய் வருமானம்

சந்தா சாகிபால் வழங்கப்பட்ட நான்கு கிராமங்களிலிருந்து ஆண்டுக்கு 12,000 ரூபாய் வருமானம் வந்தது.

Whilst in that office he retained the habit of a religious devotee, and on his circuits, assumed all the pomp and pageantry with which Hindu gurus usually travel, along with the civil muhammadan honours, such as chobadars, horseman, durm, fifes, Caparisoned state horses, hus carrahs, delayets, Nowbuts, tents etc.*

பேராசிரியர் பால். வளன் அரசு

எனக்கு இளங்கலை வகுப்பில் தமிழ் கற்பித்த பேராசிரியர் பால். வளனரசு அவர்களின் முனைவர் பட்ட ஆய்வேடு தேம்பாவணித்திறன் எனும் நூலாக, ஐம்பது ரூபாய் விலையில், 1988இல் நவம்பரில் 399 பக்கங்களில் வெளிவந்துள்ளது. அந்த நூலில் பக்கம் 11, 12,இல் சந்தாசாகிபின் நட்பு குறித்து விளக்கியுள்ளார்.

350 தங்கக்காசுகள்

ஆவூர் மக்களைக் காக்கவும், கல்பாளையம் திருக்கோயில் இடிபடாது நிலைபெறவும் ஆண்டு தோறும் மதுரைத் திருமண்டிலத்திற்குச் சாந்தோம் செராபீம் என்னும் தங்கக்காசு 350 கிடைக்கவும் வீரமாமுனிவர் சந்தா சாகிப் சந்திப்பு

---

* L.Besse, Father Beschi S.J.Histimes and Hiswritings, St. Joseph's Industrial School Press, Trichiropoly, 1918, Page 159,160

பயனளித்தது என்று லூயிதே வாசுகெபின் செல்வாசு Luis de Vasconcelles குறித்துள்ளார் என்பார் பால் வளன் அரசு.*

Chanda Sahib, who has become master of the Madura kingdom and has given the Madura mission 350 santhome (A Santhome was a golden coin worth 8s,4d.**

சந்தாசாகிப் சிறை சென்ற வருத்தம்

சந்தா சாகிப் மராத்தியர்களால் சிறைப்பிடிக்கப்பட்டபின், தினமும் வீரமாமுனிவர் சந்தா சாகிப் குறித்து கவலை கொண்டிருந்தார். **தனது முஸ்லிம் நண்பரான சந்தாசாகிபு நிலை என்ன** என்பதைத் தக்காரிடம் விசாரித்துக் கொண்டே இருந்தார். மனக்கவலை கொண்ட வீரமாமுனிவர் மணப்பாட்டிற்கு வந்தார்.***

சந்தாசாகிப் வீரமாமுனிவருக்கு மாதந்தோறும் உதவித்தொகையும் வழங்கி உத்திரவிட்டார். இது 1741இல் சந்தாசாகிப் மராத்தியர்களால் சிறைப்பிடிக்கப்படும் வரை இரண்டாண்டு காலம் வழங்கப்பட்டது. அத்துடன் கிறிஸ்தவ தவ மிஷினரிகளின் நல்ல நண்பராக சந்தாசாகிப் திகழ்ந்தார் என்பார் டி.ராசு.

He granted himpension also. But the Pension was paid only for two years becasue in 1741 chanda sahib was arrested by the marathas and taken to satara. Dr.D.Raj, Chanda sahib and Christianity in the carnatic, Editor, Dr.J.Alasiar.**** Acommemoration Volume in Honous of Rev.Fr.J.Lucas Trituapuram.2006, page 104,105.

---

* தேம்பாவணித்திறன் நூல் பக்கம் 12, கிறிஸ்தவத் தமிழ்ச் சான்றோர் என்ற தனது நூலில் பேராசிரியர் பால் வளன் அரசு பக்கம் 16இல் இதனை உறுதிப்படுத்துவார்.

** முற்கூறிய Rev.L. Besse Book, 1918 Page 158

*** புலவர் என்.வி. கலைமணி, தமிழ் அகராதிகளின் தந்தை வீரமாமுனிவர் சென்னை, 2009, பக்கம் 14, நூல் 87 பக்கங்கள், விலை ரூ. 30

**** டாக்டர் ஜே. அலெசியர் அடியேனுக்கு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் எம்.பில். வகுப்பில் பாடம் சொல்லித்தந்த பேராசிரியர்.

ஹஸ்ரத் நத்ஹர்வலியும் சந்தாசாகிபும்

இறைநேசர்கள் என்றும் வலிமார்கள் தம் எண்ணத்தால், செயலால், வார்த்தைகளால் வாழ்க்கை முறைகளால் இஸ்லாமியப் பிரச்சாரம் செய்தவர்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் திருப்பெயரால் ஹூஸைன் (ரலி) அவர்களின் வழிவந்தவர் **இக்தியார்** (ரஹ்) இக்தியார் இஸ்தம்பூலை அடைந்தபோது உதுமானிய பேரரசரால் கௌரவிக்கப்பட்டார். **பஹஸா** நகர் அவர்களுக்கு மானியமாக வழங்கப்பட்டது. அங்கு அவர்கள் அரசபாரம் ஏற்றுச் செங்கோல் செலுத்தி வருங்கால் **அஹ்மத்கபீர்** என்ற ஆண் மகவு பிறந்தது. தந்தைக்குப்பின் தனயன் பொறுப்பிற்கு வந்தார். 45 வயது ஆகிவிட்டது. பிள்ளைப் பாக்கியம் இல்லை. மருந்துகள் பல உண்டார் தன் மனக்குறையை நீக்கிட அண்ணல் (ஸல்) அடக்கவிடத்திற்கு மதீனாவிற்குச் சென்றுமுறையிட்டார்கள் வேண்டினார்கள். அண்ணலார் (ஸல்) அவர்களது கனவில் தோன்றி "மாதுளம் பழம் ஒன்றைத் தந்தார்கள். பின் இறையருளால் உமக்கு ஆண் மகவு பிறக்கும்." குத்பு பதவியைப் பெற்று வாழும் (குத்பு = முதன்மை) மாதுளம் பழத்தில் எத்துணைச் சுளைகள் இருக்கின்றனவோ அத்தனை சீடர்களைப் பெறுவார்கள் அவர்களும் விலாயத் (சிறப்பாற்றல்) உடையவர்களாக விளங்குவார்கள் என்றார்கள். அஹ்மத்கபீர் (ரஹ்) அவர்களின் ஆருயிர்த்துணைவி ஃபத்ஹுன்னிஸா அம்மையார் கருவுற்றார். புலி அலி (ரலி) அவர்கள் கனவில் தோன்றி நன்மாராயங் கூறினார்கள்.

ஹிஜ்ரி 347 - 14.2.952

ஃபத்ஹுன்னிஸா அம்மையார் 14.2.952 இல் ஆண் மகவை ஈன்றெடுத்தார்கள்.

முதஹ்ஹருத்தீன்

பிறந்திட்ட பிள்ளைச் செல்வத்திற்கு **முதஹ்ஹருத்தீன்** என்று பெயர் சூட்டினார்கள். ஏழு வயதில் தந்தை மறைந்தார். அவர்களுக்கு உதவியாக **ஸையித் அலி** உடன் இருந்தார். பத்தாண்டுகளில் அவர்களும் மறைந்தார்கள். ஸையித் அலியின் புதல்வர்கள் **ஷம்சுத்தீன்** என்ற ஷம்ஸ்கோயாறும்

ஷம்சுல்லாஹ் என்ற ஷம்ஸ்பர்ரானும், ஷம்சுல்லாஹ் என்ற இரு அமைச்சர்களாயிருந்தனர்.

ரூம் நாடு

ஃபதாரீகுல் ஔலியா என்ற நூலில் முதஹ்ருத்தீன் அவர்கள் ரூம் நாட்டிற்கே அரசராயிருந்தர்கள் என்று காணப்படுகிறது. 'இவ்வுலகமும் பொருள்களும் இன்பங்களும் அழியும் என்று ஆத்ம ஞானம் பெற்றார்கள்.' அவரது இளவலுக்குப் பட்டம் சூட்டினார்கள். 15 ஆண்டுகால ஆட்சிக்குப்பின் மாரியாதைக்குரிய மாமன்னன் பக்கீர் (ஏழை) வேடம் பூண்டு பஞ்சைப்பராரி போன்று காடேகினார்கள். கண்ணீர் வடித்தனர் மக்கள் அவர்களை தொடர்ந்து 900 பேர் உடன் வந்தனர்.

ஷைகுஅலீ (ரஹ்)

கொதிக்கும் நீர் துளிபட்டால் உடல் கொப்பளித்துவிடும், அதில் குளித்து எழுந்து தூய்மைபெற்ற முதஹ்ருத்தீன் (ரஹ்) அவர்களுக்கு குருவான ஷைகுஅலீ (ரஹ்) தீட்சை தந்தார். அப்போது முதஹ்ஹருத்தீனுக்கு நத்ஹர் என்ற திருப்பெயரைச் சூட்டினார்கள். அவர்களிடம் ஞான இரகசியங்களைக் கற்றார்கள். பின் தன் சீடர்களுடன் புனித மக்கா சென்றார்கள். ஓராண்டு தங்கி வணக்க வழிபாட்டில் ஈடுபட்டார்கள். அண்ணலார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆசியைப் பெற்றார்கள்.

வலிமார்கள்

நத்ஹர் (ரஹ்) சிறப்பு உயர்ந்தது.
அஸீஸுல்லாஹ் (ரஹ்)
ஜைனுத்தீன் மிஸ்கி (ரஹ்)
அப்துல் மஜீத் (ரஹ்)
யூனுஸ் (ரஹ்)

மஹ்முத்கர்க்கி (ரஹ்) சிரியா நாட்டைச் சேர்ந்த மற்றொரு வலி இருந்தார்கள். அவர்கள் அனைவரும் நத்ஹர் (ரஹ்) வலியைச் சோதிக்க எண்ணினார்கள். உடனே நத்ஹர் தங்களின் கம்பளிப் போர்வையைத் தம்மீதும் அவர்கள் மீதும் போத்தினார்கள்.

ஆலாம நா சூத் - ஆலமெமலஹுத்

ஆலமெ ஜபரூத் - ஆலமெலாஹுத்

ஜைனுத்தீன் மிஸ்ரி (ரஹ்) மஹ்மூத்கரீக்கி இவரும் **ஆலமெநாசூத்** வரை வந்தனர். அஸீஸுல்லாஹ், யூனுஸ் இருவரும் **ஆலமெமலக்கூத்தை** அடைந்தனர். நத்ஹர் (ரஹ்) மாணவர் ஜஹுருத்தீன் கலந்தர் **ஆலெமஜபரூத்தை** அடைந்தார்கள்.

நத்ஹர் (ரஹ்) மட்டுமே மிக மிகத் தொலைவிலுள்ள **ஆலமெலாஹுத்தை** அடைந்தார்கள். எல்லா வலிமார்களும் நத்ஹர் (ரஹ்) அவர்களை ஏற்றுக்கொண்டனர்.

அண்ணல் நபி (ஸல்) ஆணை

ஒரு நாள் நத்ஹர் (ரஹ்) கனவில் அண்ணலார் சையித் நத்ஹரே நீர் உம்முடன் இருக்கும் சீடர்களுடன் சென்று இஸ்லாமியப் பிரச்சாரம் செய்யும். உம்மால் பல பேர் நேர்வழி பெறுவர் என்று அருள் வாய் மலர்ந்தார்கள்.

அதன்படியே நாற்பது நாள் கடலில் பயணம் செய்து கரையை அடைந்து தரைமார்க்கமாகப் பயணித்தார். பல இடங்களில் பயணித்து காவிரிக் கரையை அடைந்தார்கள் நத்ஹர் (ரஹ்).

காவிரியில் கடும் வெள்ளம்

காவேரியில் கடும் வெள்ளம், மக்கள் கலக்கம் அவலம். தமது கையிலிருந்த கழியால் மலை மீது ஓங்கி அடித்தார்கள். நகர் முழுவதும் அந்தப் பேரொலி எதிரொலி செய்தது. காவேரி வெள்ளம் அஞ்சியது. மக்கள் காப்பாற்றப்பட்டனர்.

தப்லெ ஆலம் - அகில உலகப்பறை

தப்லெ ஆலம் எப்போதும் அவர்களுடன் வரும் கிள்ரு (அலை) நத்ஹர் அவர்களுக்கு (அகில உலகப்பறை) என்ற புகழ்ப்பெயர் சூட்டினார்கள்.

ஐந்து ஆண்டுகள்

திருச்சியில் நத்ஹர் (ரஹ்) வாசம் செய்தார்கள். எத்தனையோ அற்புதங்களை நிகழத்திக் காட்டினார்கள். 28.10.1029 இல் மறைந்தார்கள்.

எம்.ஆர்.எம். அப்துற்றஹீம்

வலிமார்கள் வரலாறு என்றும் ஐந்து தொகுதிகளான நூலினை எனது பிரியத்திற்குரிய அண்ணன் எம்.ஆர்.எம். அப்துற்றஹீம் வெளியிட்டுள்ளார்கள். அதில் இரண்டாவது பாகத்தில் பக்கம் 381 முதல் 401 வரை அவர்களது விரிவான வரலாற்றைக் காணலாம்.

சர்வர் உசேன் ஷரீபு சாஹிபு

அல்கன்ஜுல் அக்பர் பீமனாகிபி பாபாயே நத்ஹர் இதுவாகிறது திருச்சினாப்பள்ளி நத்ஹர் வலியுல்லாவென பெயர் துலங்கிய ஹஸரத்துதப்லெஆலம் பாத்ஷாஹ அவர்களின் காரணசரித்திரமாயிருக்கும் இதை திருச்சிபாலக்கரை மத்ரஸயே முஹம்மதியாவின் உஸ்தாது (ஆசிரியர்)களாகிய மதுரை **சர்வர் உசேன் ஷரீபு** *சாஹிபுல் காதிரியி அவர்களாலும்*

பிரிஞ்சி அஹமதிப்னு முஹம்மது சாகிப்

மலையாளம் மம்பாடென்னும் ஊருடைய திருவுண்டிக்கல் பிரிஞ்சி அஹமதிப்னு முஹம்மது சாகிப் அவர்களாலும் அரபி ஹிந்தி முதலிய கிதாபுகளில் (நூல்களில்) நின்றும் எடுத்தெழுதப்பட்டது.

திருச்சி ஸ்ரீமட்டுவார் குழலாம்பாள் பிரஸ்

1920இல் (ஹிஜிரி 1338 ரமலான் மாதம்) திருச்சி ஸ்ரீ மட்டுவள் குழலாம்பாள் பிரஸில் பதிப்பிக்கப்பட்ட நத்ஹர் வலி (ரஹ்) வரலாற்று நூல் 10 அணா விலையில் 96 பக்கங்களில் வெளிவந்துள்ளது.

அடக்கஸ்தலங்கள்

சோழராஜாவின் மகள் மாமாஜிக்னி உடல் நத்ஹர் (ரஹ்) கால்மாட்டில் அதுபோலவே கலீபா அப்துர் ரஹ்மான் சித்தீக் (ரஹ்) அவர்களும் கால்மாட்டில் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். நத்ஹர் (ரஹ்) அமைச்சர் ஷம்சுகோயா அவர்களின் பக்கத்தில் கீழ்புறம் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். மற்றொரு அமைச்சர் ஷம்சு பீராள் இப்போது ஷம்சுபீராள் தெரு என்று அழைக்கப்படும் தெருவில் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

நத்ஹர் (ரஹ்) அவர்களின் கலீபாவும் மருமகருமான அப்துர் ரஹ்மான் சித்தீக் (ரஹ்) அவர்களின் வழித்தோன்றல்களே ஆயிரத்தி இருபத்தி இரண்டு ஆண்டுகளாக தர்கா (இறைநேசரின் அடக்க இடம்) நிர்வாகிகளாகவும் ஊழியர்களாகவும் இருந்து பணியாற்றி வருகின்றனர்.

என்னப்பா ஆற்காடு சந்தா சாகிப் பற்றி எழுதிக்கொண்டு வரும் வேளையில் இடைச் செருகலாக நத்ஹர் (ரஹ்) வரலாற்றை எழுதியிருக்கிறாயே என்று நீங்கள் கேட்பது எளியேன் காதில் விழுகிறது காரணம் இல்லாமல் எழுதுவேனா?

ஷம்சுத்தீன் ரஹ்மஹுல்லா

ஹிஜ்ரி 410இல் ஷம்சுத்தீன் ரஹ்மஹுல்லா அவர்களால் நத்ஹர் (ரஹ்) சரித்திரம் அரபியில் எழுதப்பட்டது.

கஷ்புத்தசர்ருப்

அரபியில் எழுதப்பட்ட நத்ஹர் (ரஹ்) சரித்திரம் **‘கஷ்புத்தசர்ருப்’** ஆகும்.

நத்ஹர் வலி (ரஹ்) வரலாற்றை எழுதச் சொல்லல் ஆற்காடு நவாப் சந்தாசாகிப் **பார்சி** மொழியில் நத்ஹர் (ரஹ்) வரலாற்றை எழுதிடப்பணித்தார்கள்.

மௌலவி அப்துல் ஸமத்

சந்தாசாகிபின் வேண்டுகோளின்படி மௌலவி அப்துல் ஸமது பார்சி மொழியில் நத்ஹர் (ரஹ்) வரலாற்றை எழுதினார்கள்.

கன்சுல் கராமத்

பார்சியில் நத்ஹர் (ரஹ்) வரலாற்று நூல் மொழிபெயர்க்கப்பட்டது. கன்சுல் கராமத் (அற்புதங்கள்).

மௌலானா சையத் குலாம் ரசூல் - ஷாஹ் பாபாசை புல்லாஹ்

பார்சி மொழியில் இருந்து நத்ஹர் (ரஹ்) வரலாற்றை சையத் குலாம் ரசூல் சாகிபு அவர்களின் தர்கா கலீபா **ஷாஹ்பாபாசைபுல்லாஹ் ஹுஸைனி சுஹ்ரவர்தி** அவர்களால் உருது பாஷையில் கவியாகப் பாடினார்கள்.

தசர்ருபாதேநத்ஹரி

உருது பாஷையில் பாடப்பட்ட அந்த சரித்திரம் தசர்ருபாதே நத்ஹரி ஆகும். இது ஹிஜிரி 1332 இல் அச்சிடப்பட்டது. (இந்த தகவல் முற்கூறிய 1920 ஆம் ஆண்டில் வெளியான நூல் பக்கம் 89, 90)

பிரிஞ்சி அஹ்மத் சாயபு நத்ஹர் ஒலி மாலை

பிரிஞ்சி அஹ்மத் சாயபு அவர்களால் 'நத்ஹர் ஒலிமாலை' பாடப்பட்டுள்ளது.

கே. சையத் ரம்ஜான்

ஹஸ்ரத் நத்ஹர் வலி அவர்களின் வரலாற்றுச் சுருக்கம் கே. சையத் ரம்ஜானால் எழுதப்பட்டு, திருச்சி நத்ஹரியா வெளியீட்டினை 70 பக்கங்களில் வந்துள்ளது. (ஆண்டு விவரம் இல்லை)

ஜே.எம்.சாலி

அண்ணன் ஜே.எம். சாலி தமிழகத்து தர்காக்கள் எனும் நூலை சென்னையிலிருந்து 1981இல் 15 ரூபாய் விலையில் 324 பக்கங்களில் வெளியிட்டார்கள். இதில் பக்கம் 151 முதல் 168 வரை திருச்சி தப்லே ஆலம் பாதுஷா பற்றிய வரலாற்றைத் தந்துள்ளார்கள்.

அதில் பக்கம் 166இல் ஹஸ்ரத் நத்ஹர் வலி கருவறை நுழைவுவாசலுக்கு இடது பக்கம் ஆற்காடு நவாப் முகம்மது அலி வாலாஜாவின் சமாதி உள்ளது. நவாப் முகம்மது அலியின் புதல்வர் மஸ்ஹா திலாவர் ஜங்கின் சமாதி தர்கா வெளிமுற்றத்திலும், ஷாபாபாசையிது காயசுத்தீன் சுஹரவர்த்தியின் சமாதி தர்கா ஷரீப் முற்றத்தில் நான்கு சுவர்களுக்குள்ளும் இடம் பெற்றிருக்கின்றன என்ற தகவலைத் தருகிறார்.

T.W. ARNOLD டி. டபுள்யூ ஆர்னல்டு

The Preaching of Islam A History of the Propagation of the Muslim Faith என்ற நூலை டி. டபுள்யூ. ஆர்னால்டு அலிகாரிலிருந்து 1896இல் வெளியிட்டார். அதில் 1913இல் இரண்டாவது பதிப்பு வெளியானது. மறுபதிப்பு 1961இல் லாகூரில் வெளியானது. ஆங்கில நூல் 508 பக்கங்கள்.

அதில் 9வது அத்தியாயம் இந்தியாவில் இஸ்லாம் பரவியது பற்றிய வரலாற்றுச் செய்திகள் பக்கம் 257 முதல் 296 வரை இடம் பெற்றுள்ளது. செய்யது நத்தர்ஷா (ரஹ்) (கி.பி. 969 – 1039) வரலாற்றை பக்கம் 270, 271இல் விவரித்துள்ளார்.

ஸையித் இப்ராஹிம்

திருச்சி ஜமால் முகம்மது கல்லூரி 'இஸ்லாம் எப்படி பரவியது' என்று டி.டபிள்யூ. அர்னால்டு நூலினை ஸையித் இப்ராஹிம் அவர்களைக் கொண்டு ஏறத்தாழ மொழிபெயர்த்து 544 பக்கங்களில் 1979இல் வெளியிட்டது. அதிலும் நத்ஹர் அலி வரலாற்றை விளக்கியுள்ளார். (பக்கம் 307 – 321) பார்சி மொழியில் நத்ஹர் வலி (ரஹ்) வரலாற்றை எழுதச் சொன்னவர் ஆற்காடு நவாப் சந்தா சாகிப் அது மட்டுமா.

மன்னர்கள் வந்த மகத்தான இடம்

ஆற்காடு நவாபுகளான சந்தாசாகிபும், அவருடன் அதிகாரப் போட்டியில் மாறுபட்ட நவாப் முகமதலியும் நத்ஹர் (ரஹ்) அருள்பெற இங்கு வந்துள்ளார்கள். இங்கேய்யே இறக்க வேண்டும்மென்றும் இங்கேயே நல்லடக்கம் செய்யவும் விரும்பியுள்ளார்கள்.

கும்பஸ் - டூம்

நத்ஹர் வலி (ரஹ்) தர்க்காவில் ஆற்காடு நவாப் சந்தாசாகிப் (dome) *கும்பஸ் – டூம் (கவிகை மாடம் – வான் மேடு) – ஒன்றும் கட்டினார். ராணி மங்கம்மாளும், ராணி மீனாட்சியும் இந்தத் தர்ஹாவிற்கு மானியங்கள் தந்து, வரம் வேண்டியுள்ளனர் என்பது வரலாறு தரும் செய்தியாகும்.**

மூன்றாம் முத்து வீரப்ப நாயக்கர்

ரங்க கிருஷ்ண மூன்றாம் முத்து வீரப்ப நாயக்கர் (1682 – 1689) மறைவிற்குப்பின் கருவுற்றிருந்த அவரது மனைவி முத்தம்மாள் சிதையில் மாய்த்துக் கொள்ள முனைந்தார்.

---

* பெரும் புலவர் தமிழ்ச் செம்மல் முனைவர் சி. நயினார் முஹம்மத் சமய நல்லிணக்கத் திருவிழா கட்டுரை - ஹஜ்ரத் தப்லே ஆலம் பாதுஷா நத்ஹர் வலி (ரலி) 1000ஆவது ஆண்டு உரூஸ் சிறப்பு மலர் ஹிஜ்ரி 1418 கி.பி. 1998 - திருச்சி பக்கம் 118 (நூல் 248 பக்கங்கள்.)

சொக்கநாத நாயக்கரின் மனைவி

கருசுமப்பதைக் காரணங்காட்டி சொக்கநாத நாயக்கரின் மனைவியும் மாமியாருமான மங்கம்மாள் தடுத்தார். ஆண் குழந்தை பிறந்தது. மாமியார் மங்கம்மாள் பல்வேறு வகைகளில் பலமாகத் தடுத்தும், **முத்தம்மாள் தற்கொலை செய்துகொண்டார்.** மூன்று வயது பாலகன் விஜயரங்க சொக்கநாதனுக்கு பதிலாள் மங்கம்மாள் (1689 – 1706) 15 ஆண்டு காலம் ஆட்சி புரிந்தார்.

எஸ். ராமநாதன் - சீரஞ்சீவி

ராணி மங்கம்மாள் எனும் நூலை பிரேமாபிரசுரம் 1959இல் சென்னையில் ஒரு ரூபாய் ஐம்பது அணா விலையில், வெளியூரில் ஒரு ரூபாய் அறுபது பைசா விலையில் 308 பக்கங்களில் வெளியிட்டது.

வித்துவான் சு. இராசேந்திரன், ராணிமங்கம்மா கதை என்ற நூலினை 1964இல் ஒரு ரூபாய் விலையில் 62 பக்கங்களில் வெளியிட்டார். மங்கம்மாள் சிறையில் அடைக்கப்பட்டு, வாடிக்கிடந்து உயிர் துறந்ததை எழுதியுள்ளார்.

புலவர் நாக சண்முகம்

'ராணி மங்கம்மா' எனும் நூலை புலவர் நாக சண்முகம் 1970இல் ஒன்றறை ரூபாய் விலையில் 80 பக்கங்களில் வெளியிட்டார். விஜயரங்க சொக்கநாதன் பாட்டி மங்கம்மாளை சிறை வைத்து, பட்டினி கிடந்து பரிதாபமாக உயிர் துறந்தது பற்றி எழுதியுள்ளார்.

நா. பார்த்தசாரதி

தீபம் நா. பார்த்தசாரதி 'ராணி மங்கம்மாள்' எனும் சரித்திர நாவலை 1981 இல் வெளியிட்டார். 1983இல் மறுபதிப்பான அந்த நாவல் 11 ரூபாய் விலை பக்கங்கள் 232. அதில் 29வது அத்தியாயம் மங்கம்மாள் சிறைப்பட்டாள் (பக்கம் 212) 30 பிரக்ஞை ஒழுவியது, 31 இருள் சூழ்ந்தது. ராணி மங்கம்மாளை சொந்தப் பேரன் சிறை வைத்தது. 219 சிறையில் மங்கம்மாள் உயிர்வாடி, பட்டினி கிடந்து மடிந்தார் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜெகதா

இதுபோலத்தான் ராணி மீனாட்சி பற்றியும் எழுதியுள்ளார். வரலாற்றுத் தடத்தில் மதுரை நாயக்கர் மன்னர்கள் நூலினை 2016 இல் தந்த ஜெகதா (நூல்) 128 பக்கங்கள் விலை ரூ. 80. நாற்பது நாட்கள் ஆகாரமின்றி சிறையில் அடைபட்டு ராணி மங்கம்மாள் உயிர் பிரிந்தாள் என்று எழுதுகிறார்.

மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் அஞ்சல் வழி தொடர் கல்வித்துறை எம்.ஏ., இரண்டாம் ஆண்டு தமிழ்நாட்டு வரலாறு கி.பி. 1585 முதல் கி.பி. 1956 வரை பாடம் 3இல் ராணி மங்கம்மாள் சிறையில் அடைக்கப்பட்டதற்கு ஆதாரம் இல்லை என்று பக்கம் 82இல் தெரிவிக்கிறது.

எஸ்.கே. பிள்ளை

மங்கம்மாள் அல்லது மதுரைக்கரசி எஸ்.கே. பிள்ளை எழுதி மதுரை புத்தகவிலை ஜோதிட சாஸ்திரி எஸ்.கூடலிங்கம் பிள்ளை பிரசுரித்த நூல் தஞ்சை ஸ்ரீ வித்தியா விரோதினி பிரஸில் அச்சிடப்பட்டு ஒரு ரூபாய் விலையில் 1912இல் 166 பக்கங்களில் வெளிவந்துள்ளது. இதில் ராணி மங்கம்மாள் சிறை வைக்கப்பட்டதாக எந்தக் குறிப்பும் இல்லை.

பு.சி. புன்னைவனநாதன்

மகாராணி மங்கம்மாள் எனும் நூல் 1927இல் பாளையங்கோட்டை தூய யோவான் கல்லூரி தமிழ்த்துறை விரிவுரையாளர் பு.சி. புன்னைவனநாதனால் எழுதப்பட்டது. 40 பக்கங்களைக் கொண்ட அந்த நூலில் ராணி மங்கம்மாள் சிறைவைக்கப்பட்ட செய்தி ஏதும் இல்லை.

நெ.ரா சுப்பிரமணிய சர்மா

திருமலை நாயக்கர் இராணி மங்கம்மாள் சரித்திரம் பசுமலை உயர்நிலைப்பள்ளி ஆசிரியரான என்.ஆர்.எஸ். சர்மா 1938இல் எழுதியது. விலை மூன்று அணா பக்கங்கள் 50, அதில் மங்கம்மாளை பேரன் சிறைவைத்ததாக சொல்லப்பட்டதை மறுத்துரைப்பார்.

ஐ. மாயாண்டி பாரதி

பாளையங்கோட்டை தூய யேவான் கல்லூரியில் எனக்கு இளங்கலை வகுப்பில் தமிழ்ப் பேராசிரியராக இருந்து ஐ. மாயாண்டி பாரதி 1955இல் இரண்டு ரூபாய் நாலணா விலையில் வெளியிட்ட 147 பக்கங்களைக் கொண்ட நூல் நாயக்கமாதேவி அதில் மங்கம்மாள் சிறை வைக்கப்பட்டதாகக் குறிப்பிடவில்லை.

பண்டித வித்துவான் எஸ். நாராயணன்

மேலூர் (மதுரை) தமிழிசிரியர் எழுதிய நூல் திருமலை நாயக்கரும் மங்கம்மாளும் ஒரு ரூபாய் ஐம்பது பைசா விலையில் 1962இல் வெளிவந்த 104 பக்கங்களைக் கொண்ட இந்த நூலில் மங்கம்மாள் சிறை வைக்கப்பட்டதாக எந்தக் குறிப்பும் இல்லை. ஆக மங்கம்மாளை சிறையில் அடைத்து பேரன் சித்திரவதை செய்தார்கள் என்று சிலரும் இல்லை என்று சிலரும் மறுத்திருக்கிறார்கள்.

கும். ஜெகன்னாதன்

நாட்டைக் காத்த நாயக்கர்கள் என்ற முனைவர் ஜெகன்னாதன் நூல் விலை 15 ரூபாய் விலையில் 1990இல் 96 பக்கங்களில் வெளிவந்துள்ளது. அவர் மங்கம்மாளின் இறுதிக்காலம் துயரமானதாக இருந்ததாக கூறப்படுகின்றது என்கிறார். இதுபோலத்தான் மீனாட்சி பற்றியும் எழுதுகிறார்கள்.

டெய்லர் (Taylor)

Oriental Historical Manuscripts OHMSS Vol ii Page 266 இல் *டெய்லர் இக்கதை வாய்மொழிக் கதையாகச் சொல்லப்படுகிறது என்கிறார்.* (This is oral tradition)

நெல்சன்

சொல்லப்படும் கதைகள்யாவும் பொருந்தக்கூடிய முகாந்தரம் கொண்டாக இல்லை. கிடைக்கும் ஆதாரங்களை வைத்து எதையும் உறுதிப்படுத்திவிட முடியாது என்பார் ஜே.செ. நெல்சன்.*

---

* முற்கூறிய மதுரை வரலாறு நூல் பக்கம் 226

மங்கம்மாளின் வயது 55

ராணி மங்கம்மாளும் அமைச்சர் அச்சய்யாவும் Achchaiya முறையற்ற உறவுகொண்டதாக பழி சுமத்திச் சொல்கிறார்கள். அமைச்சரது சிலையும் அவருடன் ராணி மங்கம்மாளின் மரபுக்கு பொருந்தாத உடைகளுடன் நகைகள் அணிந்த பதுமையான இருக்கும் முழுஅளவிலான சித்திரத்தை இணைத்துச் சொல்கிறார்கள். இதனை ஏற்றுக் கொள்ள முடியாது. அப்போது ராணி மங்கம்மாளுக்கு வயது 55. மங்கம்மாள் துயரம் நிறைந்த சூழலில் இறக்கவில்லை என்பது உண்மை.

அ.கி. பரந்தாமனார்

மதுரை நாயக்கர் வரலாறு A History of the Nayaks of Madurai நூலைத் தமிழில் தந்தவர் அ.கி. பரந்தாமனார் அதனை 1960இல் வெளியிட்டார். மார்ச் 1966இல் இரண்டாம் பதிப்பு எட்டு ரூபாய் விலையில் 492 பக்கங்களில் வெளிவந்தது. அவரும் ராணி மங்கம்மாள் மீது சுமத்தப்படும் பழியை மறுத்துவிடுவார். சிறையில் பசியால் வாடி மங்கம்மாள் மாண்டார் என்பதை உண்மையல்ல என்று தெளிவாகக் கூறுவார். (பக்கம் 348)

மீனாட்சி

கடைசி நாயக்க மரபு அரசியான மீனாட்சி (1732– 1736) குறித்து குறிப்பிடும் கதைகளும் வாய்மொழிக் கதைகளே; **வில்க்ஸ் தவிர வேறு எந்த வரலாற்றாசிரியரும் மீனாட்சி – சந்தாசாகிப் திருகுர்ஆனுக்குப் பதில் பட்டுத் துணிக்குள் செங்கலை வைத்து சத்தியம் செய்தார் என்று கூறவில்லை. இந்த செய்திகள் என்பது வாய்மொழிக் கதைகள் தான் அதில் வரலாற்று உண்மை இல்லை.**

தனது ஆட்சி முடிவுக்கு வருவதை எண்ணி மீனாட்சி அரசி மறைந்தார் என்பதே உண்மை. அவருக்கு சந்தா சாகிப் எந்தவிதத் தீங்கும் செய்யவில்லை என்பதும் உண்மை. பிற்காலத்திய பிரிட்டிஷ் எழுத்தாளர்கள் எழுதிச் சேர்த்த கதை தான் சந்தாசாகிபின் மீது வீண்பழி சுமத்தியது ஆகும்.

மீனாட்சியுடன் சந்தாசாகிப் காதல் கொண்டார் என்பதும் கற்பனையே. சந்தாசாகிபிற்கு மனைவி மக்கள் உண்டு. சந்தாசாகிப் மீனாட்சி அரசி மீது அளவற்ற அன்பு

கொண்டவராக இருந்திருக்கலாம். இவைகளே உண்மைகளாக இருக்க முடியும்.

வீரமா முனிவர் - நத்ஹர்வலி தர்ஹா

கிறித்தவ சமயத்தைச் சேர்ந்த வீரமா முனிவருக்கு சந்தா சாகிப் செய்த சிறப்புகள் மூலம் மாற்று மதத்தவரை மதித்த மாண்புகளை அறிய முடிகிறது.

திருச்சியில் உறைந்துள்ள இறைநேசர் நத்ஹர் வலி (ரஹ்) தர்ஹாவிற்கு மேல்முகடு (டூம்) அமைத்திடும் நல்லபண்பு உள்ள சந்தாசாகிப்.* மீனாட்சி அரசி விஷயத்தில் தவறாக நடந்திருக்க எந்த வாய்ப்பும் இல்லை என்று உறுதிபடக்கூறலாம்.

மீனாட்சி அரசி இறப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்புகூட முஸ்லிம் பக்கிரிக்கு நன்கொடை அளித்த தெலுங்குச் செப்பேடு அண்மையில் கிடைத்தது வரலாற்றில் வெளிச்சத்தைத் தருகிறது என்பதனை முன்னரே பார்த்துள்ளோம்.

ராணி மங்கம்மாள் மீது பழி சுமத்திய நாடு இது. அதுபோல மீனாட்சி மீதும் பழிசுமத்தியதையும் மறப்போம்; மறுப்போம். சந்தாசாகிப் மீது சுமத்தப்பட்ட சந்தேகத்தை சரித்திரத்தில் இட்டுக்கட்டப்பட்ட செய்தி என்று மறுப்போம். சந்தா சாகிபின் சிறப்பான சிறப்பான குணங்களைப் போற்றுவோம்.

சந்தா சாகிப் விடுதலை

சத்தாராவில் சிறைவைக்கப்பட்ட சந்தாசாகிபு விடுதலையானது குறித்து வரலாற்றுச் செய்திகள் இதோ;

நாட்குறிப்புகள்

வரலாற்றின் பக்கங்களைத் தெரிந்துகொள்ள முக்கிய பதவியில் இருந்தவர்களின் நாட்குறிப்புகள் உதகின்றன.

சீனாவில் - எதுவார்சாவனே

சீனாவை 'சங்' வசமிச மன்னர்கள் ஆட்சியில் நாட்குறிப்பு ஆவணங்கள் தோன்றின. 1897இல் **எதுவார் சாவனே** *உலகுக்கு அவைகளை அறிமுகப்படுத்தினார். கி.பி.1125, 1142, 1169, 1170, 1172, 1212 ஆகிய ஆண்டுகளுக்கான நாட்குறிப்புகள் கிடைத்திட* **பால்பெலியோ கே.கே.பிளங்** *தொடர்ந்து அப்பணியில் ஈடுபட்டனர்.*

போர்த்துக்கீசியர்கள்

கி.பி.1498இல் வாஸ்கோடகாமா இந்தியா வந்தார். அவருடன் வந்த **ஆல்ஹரோவெல்ஓ** *எழுதிய நாட்குறிப்பு போர்த்தோ நகரில் முனிசிபல் நூலகத்தில் வரிசை எண் 804 ஆக கையெழுத்துப் பிரதியாக இன்றும் பாதுகாப்பாக உள்ளது.* **போதுரோ ஆல் வாரஸ்கபரால் எழுதிய நாட்குறிப்பும்** *(ஜீவான்தேவசா என்பவரால் எழுதப்பட்டது) பிரான்சிஸ்டு தே அல்மேடா 1505இல் எழுதிய நாட்குறிப்பு,* **தோமேலோபஸ் தேஅல்மேடா 1505இல் எழுதிய நாட்குறிப்பும்** *போர்த்துக்கீசியர்களது வரலாற்றுச் செய்திகளை அறிய முடிகிறது. கி.பி.1504, 1507, 1508 ஆம் ஆண்டுகளில் இத்தாலி மொழியில் இவை புத்தக வடிவில் பிரசுரிக்கப்பட்டது.*

இத்தாலி

வெனிஸ் நகரத்து மரீனுஸ் சனுத்தோ 1499 இல் 1533 வரை எழுதிய தினசரி நாட்குறிப்புகள் (தியோரியோ) 58 தொகுதிகள் வெனிஸ் நகரத்து ஜிரோலாமோபிரியுலி நறுமணப் பொருட்கள் வியாபாரம் குறித்து 1512இல் எழுதிய நாட்குறிப்புகள்.

ஜெர்மனி

ஜெர்மனிய மொழியில் நாட்குறிப்பு (தாகேபுக்) 1503 முதல் 1508 வரை வெல்சர் குடும்பத்து லூரக்காஸ்ரெம் எழுதியது.

டச்சுக்காரர்கள்

தென்னிந்தியாவில் டச்சுக்காரர்கள் பழவேற்காடு, மசூலிப்பட்டினம், நாகப்பட்டினம், சதுரங்கப்பட்டினம், தூத்துக்குடி துறைமுகங்களில் தங்கி வணிகம் புரிந்தனர். அன்றாட வியாபார விவரங்கள் நாட்குறிப்புகளாக எழுதி வைத்துள்ளனர். டாக் ரிஜிஸ்தர் அல்லது தினசரி பதிவேடுகள் இவைகள் 1628 முதல் 1682 வரையில் நமக்குக் கிடைக்கிறது. நிக்கோலாவ் – பான் – கோவன்ஸ் தனிப்பட்ட முறையில் எழுதிய டச்சு நாட்குறிப்பும் முக்கியமானது.

ஆங்கிலேயர்கள்

*ஆங்கிலேயர்கள் சென்னைப்பட்டினத்தில் கி.பி.1639 முதல் வணிகம் ஆரம்பித்தனர். ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியின் அன்றாட வியாபார விவாதங்கள் உரையாடல்கள் கலந்துரையாடல்களை எழுதினார்கள். கி.பி.1672 முதல் 1746 ஆம் ஆண்டு வரையும் 1749 முதல் 1756ஆம் ஆண்டு முடியும் வரையும் அவை கிடைக்கின்றன.**

பிரஞ்சுக்காரர்கள்

புதுச்சேரியில் வாணிபம் ஆரம்பித்த பிரெஞ்சுக்காரர்கள் (மெமுவார்) அன்றாடக் குறிப்புகளை தினசரி நினைவுக் குறிப்புகளாக எழுதினர். பிரான்சுவாமர்த்தேன் கி.பி.1664 முதல் 1703 வரை எழுதிய குறிப்புகள் புதுச்சேரி பற்றிய விவரங்களை அறிவிக்கின்றன.

டென்மார்க்

டென்மார்க் மன்னரின் ஆணைப்படி (17.11.1705) தரங்கம்பாடியில் மறைபரப்புப் பணியிலிருந்த சீகன்பால்குவின் நாட்குறிப்புகள் 'மிஷசன்ஸ் தியாரியம்' என்று அழைக்கப்படுகிறது.

---

* Records of Fort St.Geroge, Diary and consultation Books, 1672-1681, 1686-1694, 1696-1746, 1749-1756 Madras

பாரசீக மொழியில் பாபர் - ஜஹாங்கீர்

முகலாய மன்னர்களான பாபரும், ஜஹாங்கீரும் அன்றாட விவரங்களை நினைவுக் குறிப்புகளாக எழுதியுள்ளனர். இவை பாரசீக மொழியில் உள்ளன.

தமிழில்

தமிழில் 18ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நாட்குறிப்புகள் 19ஆம் நூற்றாண்டில் கிடைத்தன.

ஆர்மோன்கலுவாமொபார்

பிரெஞ்சுநாட்டு **ஆர்மோன்கலுவாமொபார்** *தமிழில் நாட்குறிப்புகள் இருந்த விவரத்தை கி.பி.1846இல் தெரிவித்தார். (ஆனந்தரங்கப் பிள்ளையின் நாட்குறிப்பைப் பற்றி 1849இல் 16 பக்கங்கள் கொண்ட கட்டுரை தந்தார்)*

எதுவார் ஆரியேல்

1848 அரசு ஆவணக் காப்பக ஊழியர் எதுவார் ஆரியேல் ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்பில் ஆர்வங்கொண்டார். 1849–1850இல் நகல் எடுக்கப்பட்டது. 1852இல் பிரான்சுக்கு அனுப்பப்பட்டது.

குருவப்பிள்ளை - திருவேங்கடம் பிள்ளை

குருவப்பிள்ளை, திருவேங்கடம் பிள்ளை நாட்குறிப்புகள் கிடைக்கப்பெறவில்லை என்பார் எஸ். ஜெயசீல ஸ்டீபன். (தமிழில் நாட்குறிப்புகள் பதினெட்டாம் நூற்றாண்டு செய்தி இதழ்களின் முன்னோடிகள், புதுச்சேரி 1999, பக்கம் 32–34, நூல் 1330 பக்கங்கள்)

ஆனந்தரங்கன் கோவை

டி.சந்திரசேகரனைப் பதிப்பாசிரியராகக் கொண்டு ஆனந்தரங்கன் கோவை, 1955இல் ரூபாய் 15 விலையில் 151 பக்கங்களில் வெளிவந்துள்ளது. இந்தக்கோவை நூலை என். பலராம ஐயர் (1876–1943) தொகுத்தார். இடையில் மறைந்தார். என்.சுப்பிரமணியம் அதன்பின் அதனை முழுமை செய்தார். பின்னர் வரலாற்றுப் புகழ்பெற்ற துபாஷ் (இருமொழிவல்லவர்) ரங்கப்பிள்ளை மீது இயற்றப்பெற்ற நூல் வரலாற்றுச் சிறப்புடையது.

ஆனந்தரங்கப்பிள்ளை

30.3.1709 இல் திருவேங்கடம் லட்சுமி புதல்வராகப் பிறந்தவர் ஆனந்தரங்கப் பிள்ளை. தெலுங்கில், பிரெஞ்சில், தமிழில் தனது நாட்குறிப்புகளை ஆனந்தரங்கம்பிள்ளை எழுதியுள்ளார். 1736 செப்டம்பர் 6இல் நாட்குறிப்பை எழுத ஆரம்பிக்கிறார். 20.9.1749 இல் துபாஷியாக பொறுப்பேற்கிறார். 1756இல் துபாசி பதவியை இழக்கிறார். 1761 ஜனவரி 12 வரை நாட்குறிப்பை எழுதியுள்ளார்.

ரா. தேசிகபிள்ளை பி.ஏ.; பி.எல்.,

1941இல் முதல் பதிப்பாகவும் 1943இல் இரண்டாம் பதிப்பாகவும் ரா. தேசிகபிள்ளை எழுதிய நூல் ஆனந்தரங்கப்பிள்ளை (144 பக்கங்கள்)

யோகி ஸ்ரீ சுந்தாரந்த பாரதியார்

பாரத சக்தி நிலையம் புதுவையிலிருந்து எட்டணா விலையில் யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் 1946இல் வெளியிட்ட 36 பக்க நூல் ஆனந்தரங்கப்பிள்ளை.

ஸ்ரீ வேணுகோபாலன்

6.2.1970 தினமணி கதிர் இலவச வெளியீடு. ஆனந்தரங்கப்பிள்ளை டயரி ஸ்ரீ வேணுகோபாலனால் 32 பக்கங்களில் வெளிவந்துள்ளது.

என். ரங்கநாதன்

ஆனந்தரங்கப் பிள்ளையின் வாழ்கையும் நாட்குறிப்பும் ஓர் அறிமுகம் என்ற 109 பக்கங்களைக் கொண்ட நூல் என். ரங்கநாதனால் எழுதப்பட்டு 1989இல் வெளிவந்துள்ளது.

புலவரேறு அரிமதி தென்னகன்

வரலாற்று மாமணி நாட்குறிப்பு நாயகர் ஆனந்தரங்கப் பிள்ளை எனும் நூலினை 1991இல் புலவரேறு அரிமதி தென்னகன் 128 பக்கங்களில் தந்துள்ளார்.

பெத்ரோ கனகராய முதலியார் இந்திய ஓரியண்டல் கம்பெனியின் மூன்றாம் துபாஷ் 1695–1746 கொழந்தேதைரியநாதன் புதுவை விலை ரூ.30 பக்கங்கள் 92.

ரங்கப்ப திருவேங்கடம் பிள்ளை நாட்குறிப்பு முதல் தொகுதி 211 பக்கங்கள் 1760–1762, இரண்டாம் தொகுதி 1762 – 1766 309 பக்கங்கள்.

அரங்கப்பதி திருவேங்கடம்பிள்ளை நாட்குறிப்பு 13.6.1767 – 29.12.1769 பேராசிரியர் எஸ்.ஜெயசீல ஸ்டீபன் 106 பக்கங்கள்.

எனது பிரியத்திற்குரிய நண்பர் ஓர்.சே.மா.கோபால கிருஷ்ணன் தொகுத்த இரண்டாம் வீரநாய்க்கர் நாட்குறிப்பு 1778–1792, 310 பக்கங்கள் இப்படி பல நாட்குறிப்புகள்.

பிரபஞ்சன்

சாகித்ய அகாதெமி விருதுபெற்ற நாவலாசிரியர் எளியேனது பிரியத்திற்குரிய பிரபஞ்சன் சகுந்தலா ஹோட்டலில் நடந்த நூல்வெளியீட்டு விழா துவங்கி, பாளையங்கோட்டையில் பாரதி புத்தகாலயம் நடத்திய புத்தகத் திருவிழா வரை பல நிகழ்வுகள்; பலமுறை சந்தித்துப் பேசியுள்ளேன். அன்போடு பழகுவார்கள். அவரது துணைவியார் மறைந்தபோது அவரிடம் தொலைபேசியில் ஆறுதல் கூறினேன். அவரும் மறைந்துவிட்டார்.

மானுடம் வெல்லும்

இலக்கியச் சிந்தனை பரிசு பெற்றதும், பாரதியபாஷா பரிஷத் விருதுகள் பெற்ற நாவலான மானுடம் வெல்லும் டிசம்பர் 1990 இல் வெளிவந்தது. 1995, 1997 தொடர்ந்து 2000இல் நான்காம் பதிப்பு 475 பக்கங்களை கொண்ட அந்த நாவல் விலை ரூபாய் 120. 1735ஆம் ஆண்டு புதுச்சேரியை ஆள்வதற்கு பிரான்சில் இருந்து தூய்மா வந்தார். அதிலிருந்து ஏழாண்டுகள் புதுச்சேரியில் வரலாறே (1742) வரை இந்தப் புதின நூல்.

வானம் வசப்படும்

1993 ஏப்ரலில் ரூபாய் 100 விலையில் 706 பக்கங்களில் வெளிவந்த புதினம் வானம் வசப்படும். இதில் 1740–1750 வரையிலான காலத்தை பிரபஞ்சன் பேசுவார். பக்கம் 4இல், ஆனந்தரங்கப்பிள்ளையின் இறுதிக்கால நிகழ்ச்சியை இனித்தான் நான் எழுதவேண்டும். அதைத் தொடர்ந்து எங்கள் புதுச்சேரி மாநிலம் சுதந்திரத்துக்கு என்று எடுத்த போராட்டங்களை, அந்த யுத்த களத்திலே நின்று சமர் செய்த வீரப் பெருமக்கள்

மற்றும் துரோகிகளை நான் நாட்டுக்கு இனம் காட்ட வேண்டியிருக்கிறது செய்வேன் என்று சொல்வார்.

தொலைபேசியில்

பிரபஞ்சன் வாழ்ந்த காலத்தில் ஒரு நாள் தொலைபேசியில் என்னை அழைத்தார், திவான், நவயத்துக்கள், வாலாஜாக்கள் என்ன வரலாறு சொல்லுங்கள் என்றார். அய்யா அதனை அடியேன் கூறுவேன் தாங்கள் அதுகுறித்து ஆதாரபூர்வாக இருக்க வேண்டும். எழுதுகிறபோது இரண்டு மணி நேரத்தில் தொலைபேசியில் நானே தாங்களிடம் பேசுகிறேன் என்றேன். அவ்வாறே செய்தேன். மூன்றாவதாக 1750க் கு பிறகுள்ள விஷயங்களை நாவலாக எழுதுவதற்கு தேவைப்பட்டிருக்கக்கூடும். ஒருவேளை இதுகுறித்த புதினம் எழுதிக் கொண்டிருந்தநிலையில் முற்றுப்பெறாத நிலையில் அவரது வாழ்வு நிறைவு பெற்றிருக்கக்கூடும்.

ஆனந்த ரங்கப்பிள்ளையின் நாட்குறிப்புகள்

ஆனந்தரங்கப் பிள்ளையின் நாட்குறிப்பில் இடைவெளிகள் இருக்கின்றன.

6.9.1736 முதல் நாட்குறிப்பு ஆரம்பமாகிறது.
25.11.1748 முதல் 25.7.1948
30.10.1750 முதல் 15.4.1751
9.9.1753 முதல் 2.9.1754
22.9.1758 முதல் 22.1.1759 வரை

*நான்கு பெரிய இடைவெளிகள் உள்ள காலங்களுக்கு விவரங்கள் கிடைக்கப்பெறவில்லை.**

எஸ்.ஜெயசீல ஸ்டீபன்

*காணாமல் போன அசல் நாட்குறிப்புகள் எங்கு உள்ளன என்பது இன்றுவரை புதுமையாகவே இருக்கிறது. ***

---

* J.Frederick price & K.Rangachari, The Private Diary df Ananda Rangapillai, Vol. I, Madras 1904 P.P.XV-XVI மூலப்பிரதிகள் சில மாயமாய் மறைந்துபோனது பற்றி தகவல்களும் உள்ளன. (C.S.Srinivaschari, Ananda Ranga Pillail; The pepy's of French India, Madras,1940, See the Introduction

** எஸ்.ஜெயசீல ஸ்டீபன், முற்கூறிய தமிழில் நாட்குறிப்புகள் 1999, பக்கம் 28

ஓர்.சே.மா. கோபாலகிருஷ்ணன்

எனது பிரியத்திற்குரிய ஓர்.சே.மா. கோபாலகிருஷ்ணன் நிகரற்ற பெருவீரன் மருதநாயகம் கான்சாகிப் என்னும் நூலை முதலில் 1998ஆம் ஆண்டில் அடியேன் வெளியிட்டேன். பாரிஸ் நூலகத்தில் அதனைக் கண்ணுற்ற ஓர்.சே.மா.கோபாலகிருஷ்ணன் எனக்கு கடிதம் எழுதினார். தங்களது நூலில் உள்ள பிரெஞ்சுப் பெயர்கள் தமிழில் இப்படி இருக்க வேண்டும் என்று பட்டியல் தந்தார்.

இலக்கியச் சோலை

மருதநாயகம் கான்சாகிப் இரண்டாம் பதிப்பை சென்னை இலக்கியச் சோலை நிறுவனம் வெளியிட்டது. அப்போது அதில் பின் இணைப்பாக ஓர்.சே.மா.கோபாலகிருஷ்ணன் கூறியபடி பெயர்ப்பட்டியலைத் தந்தேன்.

விகடன் பிரசுரம்

டிசம்பர் 2012 இல் விகடன் பிரசுரம் அந்த நூலை மருதநாயகம் கான்சாகிப் என்று வெளியிட்டது. ஏறத்தாழ ஐந்து பதிப்புகளை விகடன் பிரசுரம் வெளியிட்டதாக ஞாபகம். (2014 ஜூலை 4ஆம் பதிப்பு) இப்படி பழக்கமான பாசமிகு ஓர்.சே.மா.கோபாலகிருஷ்ணனிடம் பேசும்போது சொன்னார். 1992இல் நான் பதிப்பித்த இரண்டாம் வீரநாய்க்கர் நாட்குறிப்பு 1778–1792 படித்திருக்கிறீர்களா? என்றார் ஆமாம் என்றேன்.

மெய்யப்பன் பதிப்பகம்

ஆனந்தரங்கப்பிள்ளை (வி)ரிந்த நாட்குறிப்பு

பிறசொற்பத்தி ஆண்டு 1751–1752 429 பக்கங்களில் ரூபாய் 420 விலையில் மெய்யப்பன் பதிப்பகம் வாயிலாக டிசம்பர் 2004இல் வெளியிட்டுள்ளேன், அதனைப் படியுங்கள் என்றார். ஓர்.சே.மா. கோபாலகிருஷ்ணன்.

ஆங்கிலப் பதிப்பு

ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்பு 12 பாகங்கள் (1736–1760) முதல் மூன்று தொகுதிகள், ஜே. பிரடெரிக் பிரைஸ் தொகுத்தது எஞ்சிய ஒன்பது தொகுதிகள் ஹெச்.டாட்வெல் (H.Dodwell) தொகுத்தது. ஓர்.சே.மா.கோபாலகிருஷ்ணன் சொல்வார்.

ஆங்கில நாட்குறிப்பு இருக்கும் பெருவாரியான தேதிகளின் கீழே பல பகுதிகள் இம்மொழிபெயர்ப்பில் எந்த காரணத்தினாலோ விடுபட்டிருக்கின்றன. இப்படி விடுபட்டிருக்கும் மொத்த பகுதிகள் முழுநாட்குறிப்பில் ஏறக்குறைய 30 விழுக்காடு இருக்கும் என்பது நம்முடைய கணிப்பு.

அவை அப்போது ஆங்கிலேயர்களுக்கு வரலாற்று முக்கியம் வாய்ந்தவைகளாகத் தோன்றாமல் இருந்திருக்கலாம். ஆனால் தமிழ் வரலாற்று நோக்கிலும், தமிழ்ச் சமுதாய நோக்கிலும் பார்க்கும்போது அவை பல விபரங்களை கொண்டுள்ளன என்பதை எடுத்துக் கூற வேண்டியுள்ளது *என்பார்.*

நற்றமிழ் பதிப்பகம்

ஆனந்தரங்கப்பிள்ளை வி(ரிந்த) நாட்குறிப்பு ஆங்கிரசு ஆண்டு 1752–1753 ஓர்.சே.மா. கோபால கிருஷ்ணன் பதிப்பு நற்றமிழ்பதிப்பகம் வாயிலாக 2005இல் 230 ரூபாய் விலையில் 600 பக்கங்களில் வெளிவந்தது.

பழனியப்பா பிரதர்ஸ்

ஆனந்தரங்கப்பிள்ளை வி(ரிந்த) நாட்குறிப்பு சிரீமுக ஆண்டு (1752–1754) ஓர்.சே.மா. கோபாலகிருஷ்ணன் பதிப்பு பழனியப்பா பிரதர்ஸ் டிசம்பர் 2008இல் ரூபாய் 200 விலையில் 370 பக்கங்களில் வெளிவந்துள்ளது.

புதுவை அரசு

புதுச்சேரி அரசாங்கம் புதுவை சந்தானம் பிரிண்டிங் ஒர்க்ஸில் அச்சிட்டு 1948இல் பிரத்தியோகமான ஆனந்தரங்கப்பிள்ளையவர்களின் சொஸ்த லிகித தினப்படி சேதி குறிப்பு முதற்புத்தகத்தை ரூபாய் 3 விலையில் 319 பக்கங்களில் வெளியிட்டது.

சந்தானம் பிரிண்டிங் புக் ஒர்க்ஸ்

தொகுதி 2 – 1949 ஞானுதியாகு பதிப்பு 262 பக்கங்கள்

தொகுதி 3 – 1950 விலை ரூபாய் மூன்று. 336 பக்கங்கள்

தொகுதி 4– 1951 விலை ரூபாய் மூன்று. பக்கங்கள் 482

அரசாங்கப் புத்தகசாலையில்

தொகுதி 5 – 1954 விலை ரூபாய் மூன்று. பக்கங்கள் 445
தொகுதி 6 – 1956 விலை ரூபாய் 3. பக்கங்கள் 376
தொகுதி 7 – 1963 விலை ரூபாய் 3. பக்கங்கள் 378
இவை அரசாங்க அச்சகம் புதுவையில் அச்சிடப்பட்டது

ரோமன் ரோலண்டு நூலகம்

புதுவை ரோமன் ரோலண்டு நூலகம் எட்டாம் புத்தகம் பாகம் I விலை ரூபாய் 1 பைசா எழுபது பக்கங்கள் 132
பாகம் II விலை ரூபாய் 2 பைசா பதினைந்து பக்கங்கள் 166. இதை ரோமன் ரோலண்டு நூலகம் அச்சிட்டது.

நாட்குறிப்பு	பக்கங்களும்	விலையும்
I	319	விலை 3.00
II	262	விலை இல்லை
III	336	விலை 3.00
IV	482	விலை 3.00
V	445	விலை 3.00
VI	376	விலை 3.00
VII	378	விலை 2.00 அல்லது 3.00
VIII(I)	132	விலை 1.70
VIII(II) 1	66	விலை 2.15
	2896	20.85

இரண்டாம் பதிப்பிற்கு 3 ரூபாய் விலை போட்டாலும் ஏழாவது பதிப்பிற்கு 3 ரூபாய் விலை போட்டாலும் 2896 பக்கங்களைக் கொண்ட ஆனந்தரங்கப் பிள்ளை நாட்குறிப்பு வெறும் 25 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

புதுவை அரசு கலை பண்பாட்டுத்துறை

1948 முதல் 1963 வரை (எட்டாம் தொகுதி பாகம் 1,2 ஆண்டு விவரம் இல்லை) வெளிவந்த அந்த நாட்குறிப்பை புதுவை அரசு கலை பண்பாட்டு துறையில் 1998இல் அப்படியே பிழைகள் எதுவும் திருத்தப்படாமல் ரூபாய் 1000 விலையில் திரும்பவும் 8 தொகுதிகள் வெளிவந்தது.

புதுவை மொழியில் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்

ஆனந்தரங்கப் பிள்ளை நாட்குறிப்பு தொகுதி 9, 10, 11, 12 புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் (விலை குறிப்பிடப்படவில்லை) சூன் 2005இல் வெளிவந்தது.

இர. ஆலாலசுந்தரம்

தொகுதி 9, 10 பதிப்பாசிரியர் முனைவர் இர. ஆலாலசுந்தரம். 9வது தொகுதி 356 பக்கங்கள் பத்தாவது தொகுதி 323 பக்கங்கள். 11வது தொகுதி பதிப்பாசிரியர் பெயர் இல்லை, பக்கங்கள் 363. பன்னிரண்டாவது தொகுதி பதிப்பாசிரியர் பெயர் இல்லை பக்கங்கள் 309.

இந்த நான்கு தொகுதிகள் 1351 பக்கங்கள்.

முதலில் உள்ள எட்டுத் தொகுதிகளை 2896 பக்கங்கள் ஆக ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்பு வெளிவந்தவை 4245 பக்கங்கள். ஓர்.சே.மா. கோபாலகிருஷ்ணன் கூற்றுப்படி 30 விழுக்காடு வரவில்லை என்றால் வெளிவராத பக்கங்கள் ஆயிரத்திற்கும் மேல் என்பதை மட்டும் நினைவில் கொள்வோம்.

அகநி

தற்போது சகோதரி வெண்ணிலா தனது அகநி பதிப்பகம் மூலம் ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்பு 12 தொகுதிகளையும் 5190 பக்கங்களில் விரிவாக நல்ல தமிழ் நடையில் ரூபாய் 8,400 விலையில் வந்தவாசியிலிருந்து வெளியிட்டுள்ளார்கள்.

புதுச்சேரியில் பிரெஞ்சுக்காரர்கள்

கீழத்திசை நாடுகளில் வணிகம் மேற்கொள்ளும் நோக்கத்துடன் ஐரோப்பிய நாடுகளில் இருந்து கப்பல்கள் புறப்பட்டு வந்தன.

1601இல் செயின்டமாலோ நிறுவனம் இரு கப்பல்களில் **பிரான் சுவாபீயார் தெலவால், பிரான்சுவாமர்த்தேன்** ஆகியோர் பிரான்சிலிருந்து வந்தனர்.

1604 ஜூனில் மன்னர் நான்காம் ஹென்றி அனுமதியுடன் பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி கப்பல் புறப்பட்டது. நிதிப்பற்றாக்குறை, கம்பெனி வளரவில்லை.

1611 மார்ச் 2 தொடங்கப்பட்ட இன்னொரு நிறுவனமும் இயங்காமல் போனது. 1615 இல் மொலுக்காஸ் நிறுவனத்தின் (The Company the moluccas) *இரு கப்பல்கள்இந்தியா வந்தன.*

ரிச்செலு - மடகாஸ்கர்

1642இல் மற்றொரு கிழக்கிந்திய நிறுவனம் மடகாஸ்கரில் ரிச்சலு (Richeliu) *தலைமையில் பிரெஞ்சுக் குடியேற்றத்தை அமைத்தது.*

பிரெஞ்சு அரசின் நேரடி நிர்வாகம்

பிற ஐரோப்பிய நிறுவனங்கள் தனிப்பட்டவர்களால் தொடங்கப்பட்டவை. பிரெஞ்சுக் கிழக்கிந்திய நிறுவனம் பிரெஞ்சு அரசின் நேரடி நிர்வாகத்திற்குட்பட்டது.

கொல்பேர்

பிரான்சு நாட்டின் நிதி அமைச்சர் கொல்பேர் 1664இல் கிழக்கிந்திய நிறுவனத்தை (La Compagnie des India Orientals) *மன்னர் 14ஆம் லூயி ஆதரவில் ஏற்படுத்தினார். 21 பேர்கள் கொண்ட இயக்குநர் குழு இதில் இருந்தது.*

லெஸ்பினே

1673 பிப்ரவரி 4இல் நாசிர் முகம்மது கானின் உதவியாளர் ஷெர்கான்லோடியை பெல்லாள் ழே தெ லெஸ்பினே (Bellenger de Lespinay) *சந்தித்து புதுச்சேரியில் பிரெஞ்சு வணிக நிறுவனம் அமைத்து வாணிபம் மேற்கொள்ளும் உரிமையைப் பெற்றார்.*

பிரான்சுவா மர்த்தேன் (Francois Martin)

பிரான்சுவாமர்த்தேன் 1674 ஜனவரி 15இல் புதுச்சேரி வந்தார். லெஸ்பினேக்கு அடுத்து பொறுப்பை ஏற்றார். 1688 அக்டோபர் 17, செஞ்சி ஹரிராஜாவிடம் புதுச்சேரியில் கோட்டை கட்டிக் கொள்ள அனுமதி பெற்றார். ரூபாய் 11,760 அதற்காக இலஞ்சமும் தந்தார்.

மராட்டிய ராஜாராம்- சிவாஜி படையெடுப்பு - சாம்பாஜி மரணம்

ராஜாராம் மராட்டியத்தில் நிலைபெற முடியாதநிலை. எனவே புதுச்சேரியில் செலுத்தவேண்டிய கடன் பாக்கிக்காக சுங்கவரி

வசூலிக்கும் உரிமையை பிரெஞ்சியருக்கு வழங்கினார். பிரெஞ்சியரின் பாதுகாப்புக் கோட்டை ஒன்றை கட்டவும் அனுமதி அளித்தார். தனக்கேற்பட்ட பண நெருக்கடியால் புதுச்சேரியை விற்கவும் ராஜராம் முன்வந்தார். பிரெஞ்சுக்காரர்களிடம் வசதி இல்லாததால் அதனை அப்போது வாங்கவில்லை.

டச்சுக்காரர்கள்

டச்சுக்காரர்கள் புதுச்சேரியை வாங்கினர். 1693 ஆகஸ்ட் 30இல் புதுச்சேரி முற்றுகை. பிரெஞ்சியர் வெளியேற்றம். கி.பி.1697 டச்சுக்காரர் – பிரெஞ்சுக்காரர் ரிஸ்விக் (Riswick) *ஒப்பந்தப்படி 1699 அக்டோபரில் புதுச்சேரியைப் பிரெஞ்சியர் பெற்றனர். 1700இல் நாணயக்கூடம் நிறுவி நாணங்கள் அச்சிட்டனர்.*

செயின்ட் லூயிகோட்டை

மர்த்தேன் 1706 ஆகஸ்டில் செயின்ட் லூயி கோட்டை கட்டி முடிக்கப்பட்டு, ஆகஸ்ட் 25இல் திறப்பு விழாவும் நடைபெற்றது. புதுச்சேரியை உருவாக்கிய பிரம்மாமர்த்தேன் 1706 டிசம்பர் 31இல் மறைந்தார்.

தொடர்ந்தவர்கள்

தொடர்ந்து புதுச்சேரியை **துய்லிவியே, ஹெபர், ஜெனரால் ஹெபர், தெலா பெர் வஸ்திலோ, எலனுவார் பொவிலியே தெ குர்ஷான் துய்மா** *ஆளுநர்களாயினர்.**

எம். பெனோவத் துய்மா (1735–1741)

பிரெஞ்சிந்தியாவின் ஆளுநராக எம். பெனோவத் துய்மா (Benoit Dumas) *19.9.1735இல் பொறுப்புக்கு வந்தார்.*

தோஸ்த்அலிகான்

மராட்டிய மன்னர் சாகு தனது தளபதி இராகுபோன்சுலே, பத்தேங் தலைமையில் பெரும்படையை தென்னாட்டிற்கு அனுப்பி வைத்தார்.

---

* டாக்டர் பாஞ் இராமலிங்கம், பிரெஞ்சியர் ஆட்சியில் புதுச்சேரி, புதுச்சேரி 1998 பக்கம் 58-64, நூல் 398 பக்கங்கள் விலை ரூ.150.

கருநாடக நவாப் தோஸ்த் அலிகான் பெண்ணையாற்றின் வடகரையில் நடைபெற்றபோரில் 20.5.1740இல் மராத்தியர்களால் கொல்லப்பட்டார். ஆற்காடு அரச குடும்பத்தினர் புதுச்சேரியில் அடைக்கலம் புகுந்தனர். மராத்தியர்களின் அச்சுறுத்தல்களுக்கு அஞ்சாது துய்மா வரவேற்றுக் காப்பாற்றினார்.

அத்தா சுல்தானா பேகம்

சந்தா சாகிபின் மனைவி அத்தா சுல்தானா பேகத்தை துய்மா வரவேற்றதை மானுடம் வெல்லும் புதினத்தில் பிரபஞ் சன் 35வது அத்தியாயத்தில் விவரித்து எழுதியிருப்பார்.

மராத்தியர் பேரம்

மராத்தியர் சந்தாசாகிபை விட்டுவிட ஒரு கோடி ரூபாய் கேட்டார்கள். பத்து இலட்சம் வரை தருவதாக சந்தா சாகிப் சொன்னார். இது ஒரு தகவல்.

சப்தர் அலிகான்

ஆற்காடு நவாபு தோஸ்து அலிகானை கொன்றவர்கள் மராத்தியர்கள். சந்தாசாகிபின் மைத்துனரும், மனைவியின் சகோதரருமான சப்தர் அலிகான் மராத்தியர்களுக்கு பின்னிருந்து உதவிக் கொண்டிருந்தார். கர்நாடகத்திற்கு மராத்திய படையெடுப்பே சப்தர் அலிகானால் தான் வந்தது.

22 இலட்சம்

சப்தர் அலி 5 இலட்சம், சப்தர் அலிகான் தயார் 5 இலட்சம், சந்தா சாகிபு மனைவி அத்தா சுலதானா பேகம் 5 இலட்சம், படே சாயபு மனைவி 5 இலட்சம், போறார் முகமதலி ஒரு லட்சம், அல்லினக்கிப் சாயபு ஒரு லட்சம் ஆக 22 இலட்ச ரூபாயை மராத்தியர்களுக்கு கொடுக்க யோசனை நடந்தது என்று ஆனந்தரங்கப்பிள்ளை 1741 மார்ச் 15 நாட்குறிப்பில் தெரிவிப்பார்.

ரூபாய் 60,00,000

அறுபது இலட்ச ரூபாயை உடனடியாகத் தரவேண்டும் என்று மராத்தியர்கள் உறுதியாக இருந்தனர். சந்தாசாகிபின் நகைகள், குதிரைகள், யானைகள் இவைகளை ஒப்படைக்க

*வேண்டினர். ஆனால் பிரெஞ்சுக் கவர்னர் துய்மா அதனை ஏற்கவில்லை.**

21.3.1741

திருச்சியில் சந்தாசாகிப் மிகுந்த நெருக்கடியில் இருந்தார். (பெத்ரோ கனகராய முதலியார் முற்கூறிய நூல் பக்கம் 54) மனைவிமார்களும் மற்றவர்களும் பணம் தரவில்லை என்று ஆனந்தரங்கப் பிள்ளை 1741 மார்ச் 21 நாட்குறிப்பில் தெரிவிக்கிறார். தொகுதி I பக்கம் 119.

1741 மார்ச் 30

ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்பு 1741 மார்ச்ச 30இல் (பங்குனி 21 வியாழக்கிழமை) பங்குனி மாதம் 16ஆம் நாள் **அதாவது 25.3.1741இல் சந்தாசாகிப் மராத்தியரால் கைது செய்யப்பட்ட செய்தி தெரியவருகிறது.**

1741 மார்ச் 31, 1741 ஏப்ரல் 1, 1742 ஏப்ரல் 2 ஆனந்தரங்கப் பிள்ளை நாட்குறிப்பு சந்தாசாகிப்பின் கைது விவரம் பற்றி குறிப்பு இல்லை.

1741 ஏப்ரல் 3 – 3 வரி வேறு செய்தி மட்டும்
1741 ஏப்ரல் 4,5,6,7,8,9 குறிப்பு ஏதும் இல்லை
1741 ஏப்ரல் – 13– 4வரி வேறு செய்தி மட்டும்.

ஆக சந்தாசாகிப் கைதானபின், அல்லது கைது விவரம் பற்றிய முழுவிவரம் ஆனந்தரங்கம் பிள்ளை நாட்குறிப்பில் இல்லை.

ஜெ.டால்பாய்ஸ் வீலர்

Chunda Sahib was kept a prisoner for several years by the mahrattas, but was ultimately released, and lived to playa prominent part in history. (J.TALBOYSWHEELER, Early Records of British India. A History of the English settlements in India. As Told in the Government Records The Works of old Travelers, and other

---

* Colonel G.B. Malleson C.S.I. History of the French in India. From the Founding of Pondichery in 1674 to the capture of that place in 1761,Ebinburgh, Johngrant 1909 page 91 (Totally Book 614 pages)

contemporary Document From the Earliest Period Down to The Rise of British Power in India, London 1878 Page 136, 137 (Book Totally, 391 pages)

பிரிட்டிஷ் இந்தியாவின் ஆரம்ப கால ஆவணங்கள்

ஜெ. டால்பாய்ஸ் வீலர் எழுதிய ஆங்கில நூலில் மேற்சொன்ன செய்தி உள்ளது. அதனை தமிழில் க.ஜெயராமன் மொழி பெயர்த்து சென்னை சந்தியா பதிப்பகம் 416 பக்கங்களில் ரூபாய் 325 விலையில் 2014 இல் வெளியிட்டுள்ளது.

மராத்தியர்கள் சந்தாசாகிபை கைது செய்து அழைத்துச் சென்றனர். மராட்டியர்கள் சந்தாசாகிபை பல ஆண்டுகள் கைதியாக வைத்திருந்தனர். (பூனாவிலிருந்த மராத்தியர்கள் தொடர்ந்து சதாராவைத் தலைநகராகக் கொண்டிருந்தார்கள். சில ஆண்டுகள் வரை மராத்தியர்கள் பூனா திரும்பவில்லை)

சதாராவில் கைதியாக இருந்த சந்தாசாகிப் விடுவிக்கப்பட்டார். **பின்னர் சரித்திரத்தில் ஒரு முக்கியப் பங்கை ஆற்றும் பொருட்டு வாழ்ந்தார்.** *(தமிழ் நூல் பக்கம் 158) அவரது விஞ்சிய, முதன்மை வாய்ந்த சிறப்பு மிக்க வரலாற்றுப் பங்களிப்பைத் தொடர்வோம்.*

சந்தாசாகிப் விடுதலையான விவரம்

மராத்திய ராகுஜிபோன்ஸ்லே, பிரெஞ்சுக்கவர்னரிடம் சந்தாசாகிபிற்கான பணயத் தொகையைக் கேட்டுக்கொண்டே இருந்தார்.

Nantes Cordials

அவருக்கு மணமும் இனிமையும் ஊட்டப்பட்ட சாராயமான Nantes Cordials *(கோர்ட்யால்ஸ்) பத்துபாட்டில்களை அனுப்பி வைத்தார் துய்மா. அதன்பின் மேலும் 30 பாட்டில்கள் மராத்திய ராகுஜிபோன்ஸ்லேயால் விரும்பி துய்மாவிடம் கேட்டு வாங்கப்பட்டது.*

பகாஸ்கர் ராம் (Bhaskar Ram)

பீராரில் மராத்தியப் படைத்தளபதி பகாஸ்கர் ராமரின் நேரடிப் பாதுகாப்பில் சந்தாசாகிப் இருந்தார். ஆனால் 'சந்தாசாகிப்' இரகசியமாக அங்கிருந்து தனது மனைவியிடமும் பாண்டிச்சேரி

கவர்னர் துய்மாவிடம் தொடர்பு கொண்டிருந்தார். சந்தா சாகிப் எந்த நேரத்திலும் தான் விடுதலை செய்யப்படுவோம் என்ற உறுதியுடன் இருந்தார்.

பாண்டிச்சேரி - ஆற்காடு

சந்தாசாகிப் தனக்கு உதவி ஆற்காட்டிலிருந்தும், பாண்டிச்சேரியிலிருந்தும் வரும் என்று நம்பிக்கையுடன் இருந்தார்.

7,50,000

ராகுஜிபோன்ஸ்லே (Rajhuji (Bhonsle) ஏழு இலட்சத்தி ஐம்பதினாயிரம் ரூபாயை பணயத் தொகையாக கேட்டுக்கொண்டிருந்தார். மராட்டியப் படைத்தளபதி பகாஸ்கர்ராம் சந்தாசாகிப்பையும் அவரது மகன் அபித்சாகிபையும் (Abin Sahib) 7,50,000 ரூபாய்க்கு சித்பவன் சீமான்களிடம் சதாராவிடம் விற்றுவிட்டார்.*

சித்பவன் சீமான்கள்

சித்பவன் சீமான்கள் 1744 டிசம்பரில் சந்தாசாகிப்பை பீராரிலிருந்து சதாராவிற்குக் கொண்டு சென்றார்கள். அங்கு கெடுபிடி ஏதுவுமில்லை. சிறைவைக்கப்பட்டிருந்தார் என்று கிராண்ட்டப் கூறுகிறார்.**

மராத்தியர் உதவியை முஜாபர்ஜங்கும் வேண்டுதல்

தன்னை நிஜமாக்கிட முஜாபர்ஜங் மராத்தியரிடம் உதவவேண்டினார். அவர் சதாரா சென்றார். சந்தாசாகிபைச் சந்தித்தார். சந்தாசாகிபும் முஜாபர்ஜங்கும் தங்களுக்குள் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். இது நடந்ததும் சந்தாசாகிப் தூப்பளேயிடம் தொடர்பு கொண்டார்.

ஆங்கிலேயரை எதிர்ப்பதற்கு சந்தாசாகிப் சரியான ஆள் என்பதால் அவரை விடுவித்திட ராஜாபண்டிதர் மூலம் பேச்சுக்கள் நடைபெற்றன.

---

* Military Country correspondence Vol.X. P.155, Tamilnadu Archives

** Grand Duff History of the Mahrattas, Vol.ii, P5 (1912 Edition)

துய்ப்பளே பணம் தர சம்மதித்தல்

சந்தாசாகிப்பிற்காக பணயத் தொகையைத் தருவதற்குத் தாம் பொறுப்பேற்பதாக துய்ப்ளே சொன்னார்.

7,00,000

*ஏழு இலட்ச ரூபாய் பணயத் தொகைக்கு துய்ப்ளே ஒப்புக்கொண்டார். 1748 நவம்பரில் சந்தாசாகிப் எட்டு ஆண்டு சிறைவாசத்திற்குபின் விடுதலையானார்.**

ஹென்றி டாட்வெல்

ஹென்றிடாட்வெல் Clive and Dupleix The Begining of Empire *என்ற நூலை 1920 இல் எழுதியுள்ளார். 1989இல்* AES *அதனை ரூபாய் 165 விலையில் 277 பக்கங்களுடன் மறுபதிப்புச் செய்தது. அதில் பக்கம் 33இல் சந்தாசாகிப் சதாராவில் சகிப்புத்தன்மையுடன் நடத்தப்பட்ட செய்தியைச் சொல்லியுள்ளார்.*

ஜோசப் பிரான்சுவா துய்ப்ளே

ஜோசப் பிரான்சுவா துய்ப்ளே (Joseph Francois Dupleix) *1742 ஜனவரி 14இல் புதுச்சேரியில் பிரெஞ்சு ஆளுநராக பொறுப்பேற்றார். 1745இல் சந்தா சாகிப் தனது விடுதலைக்கான ஏற்பாடுகள் குறித்து துய்ப்ளேவிற்கு கடிதம் எழுதினார்.* (P. Cultru, Dupleix, Sesidees, Sapolitique et sachuate, Paris 8vo, pp.228-229)

தென்னக அரசியல் நிலை

சந்தாசாகிப் சிறையில் இருந்த காலத்தில் தென்னாட்டில் மராத்தியர் செல்வாக்குடன் இருந்தனர். திருச்சிராப்பள்ளி மராத்தியர் வசமிருந்தது. ராகுஜிபோன்ஸ்லே, முராரிராவை (Murari Rao) *திருச்சி கவர்னராக நியமித்திருந்தார். மதுரையின் கவர்னராக மராத்திய* **அப்பாஜிராவ்** (Appaji Rao) *இருந்தார். தெற்குப்பாளையங்கள் தங்களது சுதந்திரத்தை இழந்தநிலையில் இருந்தன.*

---

* Dispatches From charles Floyer to the Company, Public Despatches to England, Fort St. David, Vol.17, 2 November 1749 pp 61-97

முஹம்மது அன்வருத்தீன்

நவயத்து வம்சத்திற்கும் வாலாஜா வம்சத்திற்கும் நவாப் பதவிக்கான போட்டி தொடர்ந்து கொண்டே இருந்தது. 1706 – 1740 வரை நவயத்துக்களின் செல்வாக்கு ஓங்கியிருந்தது. 1744இல் முஹம்மது அன்வருத்தீன் Mahammad Anwar-ud-din நாவாபாக நியமிக்கப்பட்டார். இவர் நியமிக்கப்பட்டதை ஆற்காடு முஸ்லிம்கள் வரவேற்கவில்லை. (ஆனந்தரங்கம்பிள்ளை நாட்குறிப்பு ஆங்கிலத் தொகுதி 5, பக்கம் 176–177)

சந்தாசாகிபபை மக்கள் விரும்புதல்

They wanted to remain under chanda sahib.

ஆற்காடு நாவாபாக சந்தாசாகிபே மீண்டும் வருவதையே ஆற்காடு முஸ்லிம் மக்கள் விரும்பினார்கள். ஆற்காடு நவாபான முஹம்மது அன்வருத்தீன், தனக்கு ஆபத்து ஏதும் சந்தாசாகிபினால் நேர்ந்திடாது என்று நம்பினார்.

இதனை நன்கு உணர்ந்த பிரெஞ்சுக் கவர்னர் துய்பளே சந்தாசாகிபை மராத்தியரின் பிடியிலிருந்து விடுவித்திட தனது முயற்சிகளைத் தொடர்ந்தார்.

ராஜாபண்டிதர்

ராஜாபண்டிதரையும், சந்தசாகிபின் கணக்கரையும் மராத்தியரிடம் துய்ப்ளே அனுப்பி வைத்தார்.

ஜெயராம் பண்டிதர்

ராஜா பண்டிதரின் உறவினரான ஜெயராம்பண்டிதர் மராத்திய ராகுஜிபோன்ஸ்லேயை பூனாவில் சந்தித்தார். சந்தாசாகிப்பின் விடுதலை குறித்துப் பேசினார். மராத்தியர்களோ சந்தாசாகிபை விடுதலை செய்வதில் வேறு எந்தப் பிரச்சினையும் இல்லை என்றனர்.

பணயத்தொகை

எங்களுக்குத்தர வேண்டிய பணயத் தொகை (ransom) தான் முக்கியப் பிரச்சினை. எனவே சந்தாசாகிப் பணம், அவரது மனைவியிடம் உள்ள நகைகள் இவைகளைக் கொடுக்க ஏற்பாடு செய்தால் சந்தாசாகிபின் விடுதலைப் பிரச்சினை ஏதுமிருக்காது என்றார் ராகுஜிபோன்ஸ்லே. நீண்டகாலமாக

பணயத்தொகைப் பெறுவதிலே தான் பிரச்சினை என்பதை மராத்தியர்கள் வலிறுத்தினார்கள்.

சந்தாசாகிப் - முஜாபர்ஜங்

நிஜாம் 1748இல் இறந்தார். அதன்பின் வாரிசுப் போர் எழுந்தது. நிஜாமின் மூத்த மகள் நசீர் ஜங் பதவிக்காகப் பேராடினார். முஜாபர் ஜங் என்ற நிஜாமின் பேரன் தனது மாமா நசீர் ஜங்கிற்கு எதிராக ஆயுதம் தாங்கினார். துய்ப்ளே இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டார்.

ஹைதராபாத் அரியாசனத்தில் ஒரு பிரெஞ்சு நிஜாமையும் (முஜாபர்ஜங்) ஆற்காடு சிம்மாசனத்தில் ஒரு பிரெஞ்சு நாவபையும் (சந்தாசாகிப்) நியமிக்க டியூப்ளே முடிவெடுத்தார். நவாப் அன்வருத்தீனுக்கு எதிராக சந்தாசாகிபை ஆதரித்ததுபோல நசீர் ஜங்சிற்கு எதிராக முஜாபர் ஜங்கிற்கு ஆதரவைத் தந்தார்.

சந்தாசாகிப் விடுதலை குறித்த சர்ச்சைகள்

சந்தாசாகிப் மராத்தியரின் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டது குறித்து மூன்றுவிதமான கருத்துக்கள் உள்ளது.

18.7.1747

ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்பு 1747 ஜூலை 18 பிரபர வருடம் ஆடிமாதம் 6ஆம் நாள் எழுதுகிறார். "இன்றைய நாள் காலத்தாலே சந்தராவிலேயிருந்து சந்தாசாயபு காகிதம் என்பேருக் கொன்றும் துரையவர்கள் (துய்ப்ளே) பேருக்கொன்றுமாக வந்தது. ரசோ பண்டிதருங்கூட வந்தார். அந்தக் காகிதச் செய்தி துரையவர்களுக்குச் சொன்ன வயணம்."

..... சாந்தாரா (Satara) விட்டுப் புறப்பட்டவுடனே (சந்தாசாகிபு) லஷ்ச ரூபாயும், கடப்பையைச் சேர்ந்தாப்போல லஷம் ரூபாயும், ஆற்காடு தாக்கீலானப்போல லஷ்ச ரூபாயும், என்னைக் கொண்டு வந்து சேர்த்தால் பதினாயிரம் ரூபாயும் கொடுக்கிறேமென்று சொன்னது....*

---

* ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்பு தொகுதி 4, மறுபதிப்பு புதுவை பக்கம் 126)

மெக்கன்சி

மர்டாக் மெக்கன்சி - பார்பாராமெக்கன்சியின் புதல்வராக ஸ்காட்லாந்து - ஸ்டோர்னோ நகரில் 1754இல் பிறந்தார் கர்னல் மெக்கன்சி. 1783இல் தமிழகத்திற்கு வந்தார். அப்போது செயின்ட் ஜார்ஜ் கோட்டை பேட்ரிக்ரோசு தலைமையில் புதுப்பிக்கப்பட்டுக்கொண்டிருந்த பணியில் அமர்ந்தார். தொடர்ந்து கிழக்கிந்தியக் கம்பெனி போர்களில் பங்கேற்றார்.

தீரன் திப்புசுல்தான்

தீரன் திப்புசுல்தானைப் போர்க்களத்தில் எதிர்த்த பெருமையும் மெக்கன்சிக்கு உண்டு. திப்புசுல்தான் 1799 மே 4இல் வீழ்த்தப்பட்டதற்குப்பின் மெக்கன்சி இந்தியாவின் முதல் தலைமை ஆய்வாளரானார். 8.5.1821இல் இறந்தார்.

இந்தியாவின் வரலாறு

1818இல் இந்தியாவின் வரலாறு நூலை எழுதிட குறிப்புகளைத் திரட்டி வந்தார். தனது ஆவணத் தொகுப்புகளுக்காக 15000 பவுன்களைச் செலவளித்தார்.

வெங்கடலச்சுமய்யா - பாபுராவ்

மெக்கன்சிக்கு உதவியாக பயணமும், விவரங்களையும் சேகரித்தவர்களில் வெங்கடலச்சுமைய்யாவும் - பாபுராவும் முக்கியமானவர்கள்.

மெக்கன்சி தொகுப்பு (Mackansile Manuscripts)

38 ஆண்டுகள் மெக்கன்சி தொகுத்தவை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை.

டாக்டர் ஹெச்.ஹெச்.வில்சன்

ஆகஸ்ட்போர்டில் வடமொழிப் பேராசிரியர் (1832) கிழக்கிந்தியக் கம்பெனியின் நூலகர் (1836) இராயல் ஆசியாடிக் சொசைட்டி இயக்குநர் (1837) ஆகிய பொறுப்பில் பணியாற்றியவர். டாக்டர் ஹெச்.ஹெச். வில்சன். இவர் மெக்கன்சி கொடுத்து வைத்திருந்ததை அட்டவணையாக 1828இல் வெளியிட்டார். பின் 1882 இல் அதன் விரிந்த பதிப்பு வந்தது. வில்லியம் டெய்லர், டாக்டர் லெய்டனும் பிரௌன் ஆகியோர் தொடர்ந்து அந்தப் பணியினைச் செய்தனர்.

டி.வி. மகாலிங்கம்

சென்னைப் பல்கலைக்கழக வெளியீடாக மெக்கனிசியின் தொகுப்புகள் டி.வி.மகாலிங்கம் பதிப்பாசிரியராக இருந்து வெளிவந்தது. 1976இல் இரண்டாவது தொகுதியும் வந்தது. (விலை ரூபாய் 40, 515 பக்கங்கள்)

ம. இராஜேந்திரன் - கா. சத்தியபாமா

காலின் மெக்கன்சி வரலாறும் சுவடிகளும் சென்னை 2020 பக்கங்கள் 100 விலை ரூ. 45. மெக்கன்சி சுவடிகளில் தமிழகப் பழங்குடி மக்கள். சென்னை 2003, 160 பக்கங்கள் விலை ரூ.60. இரு நூல்களும் மா.இராசேந்திரன் எழுதியது. மெக்கன்சியின் தமிழ்ச் சுவடிகள் காட்டும் வாழ்வியல் கா. சத்தியபாமா தந்தது. சென்னை 2019 பக்கங்கள் 344. விலை 350.

சுவடிகள்

தமிழில் அகலங்கஸ்தோத்திரம் டி.எஸ். 3027 முதல் ஸ்ரீரங்கம் பிராமணர்கள் பிரத்யுத்தம் டி.எஸ். 3186 வரை 153 சுவடிகள் வெளிவந்துள்ளன.

தஞ்சை மராட்டிய மன்னர் வரலாறு டி.எண். 3180

தஞ்சை மராட்டிய ராஜாக்கள் வரலாறு டி.எண்.3119,

தஞ்சை சரபோஜி மன்னன் வரலாறு டி.எண்.3762,

தஞ்சாவூர் மகராஷ்டிரா வம்ச வரலாறு டி.எண். 3926

தஞ்சை மராட்டியர் மன்னர் வரலாறு டி.எண்.3180

மெக்கன்சியின் சுவடிகள் உள்ளன.

டி.எண்.3180 - கே.எம்.வேங்கடராமையா

அரியகையெழுத்துச் சுவடித்துறை சிறப்பு நிலைப் பேராசிரியர் கே.எம்.வேங்கடராமையா தஞ்சை மராட்டிய மன்னர் வரலாறு மெக்கன்சி சுவடி 3180 ஒப்பீட்டாய்வு வரலாற்றாராய்ச்சிக் குறிப்புகளுடன் எனும் நூலினை தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழகம் வாயிலாகத் தந்துள்ளார். 1987 விலை ரூபாய் 145 பக்கங்கள் 407. அதில் பக்கம் 113இல் சந்தாசாகிப் விடுதலை குறித்து தரும் செய்திகள் இதோ;

பணம் எதுவும் தராமல் விடுதலை

"முன்னாலே றாகோஜி போசலேயும் பத்தேசிங்கும் திருசச்சிராப்பள்ளி மேலே சண்டைக்கு வந்திருந்தார்கள். அப்போ சந்தாசாகிபுவை பிடித்துக்கொண்டு கெடியின் பேரிலே போட்டுவைத்து வயணம் எழுதியிருக்குதே அந்த சாந்தாசாகிபுவை அழைப்புவித்து உன்னைவிட்டு விடுகிறோம் நீ யெங்கே வோணுமோ அங்கே போய்விடு. ஆனால் தஞ்சாவூர் றாட்சியம் நம்முதானபடியினாலே அந்த வழக்கு நீ போகத் தேவையில்லை என்று அவன்கிட்டே யெழுதி வாங்கிக்கொண்டு பிறமாணமும் வாங்கிக்கொண்டு அந்தச் சந்தாசாகிபுவை விட்டுவிட்டார்கள்."*

பணம் எதுவும் கொடுக்கப்படாமல் சந்தாசாகிப் விடுதலையானதை தஞ்மை மராட்டிய மன்னர் வரலாறு மக்கன்சி சுவடி 3180 தெரிவிக்கிறது.

சி.கே. சீனிவாசன்

Maratha Rule in the Carnatic *என்னும் ஆங்கில நூல் சி.கே. ஸ்ரீனிவாசனால் எழுதப்பட்டது. டாக்டர் சுரேந்திரநாத் சென் முன்னுரை: சி.கே.ஸ்ரீனிவாச்சாரி பதிப்பித்தது. அண்ணாமலைப் பல்கலைக்கழக வரலாற்று நூல் வரிசை வெளியீட்டு எண் 5, பக்கங்கள் 414. அந்த நூல் பக்கம் 255இல் சந்தாசாகிப் 1748இல் விடுதலையானதை குறிப்பிடுவார்.* Chandasahib was released in 1748.

சி.எஸ். ஸ்ரீனிவாச்சாரி

சி.எஸ். ஸ்ரீனிவாச்சாரி எழுதிய Ananda Ranga Pillai - The Pepys of French India Madras 1940 *எழுதியது. அதில்* 108 - 110 *வது பக்கங்களில் இதனை வலியுறுத்துகிறார்.*

7 இலட்சம் ரூபாய்

அடுத்த வரியில் சி.கே.ஸ்ரீனிவாசன் 'On a Payment of Seven Laksh of Rupes' *ஏழு இலட்ச ரூபாய் கொடுத்து சந்தாசாகிப் விடுதலை செய்யப்பட்டார் என்ற தகவலைத் தருகிறார். இதற்கு சி.கே.ஸ்ரீனிவாசன் தரும் ஆதாரமாக ராபர்ட் ஓர்ம் நூலைக் குறிப்பிடுகிறார்.*

* கே.எம். வேங்கடராமையா, தஞ்சை மராட்டிய மன்னர் வரலாறு, 1987, பக்கம் 113)

இராபர்ட் ஓர்ம்

பிரிட்டிஷாரும் இந்தோஸ்தானியரும் (இந்தியரும்) இராணுவ நடவடிக்கைகளை பற்றி இராபர்ட் ஓர்ம் எழுதிய நூலில் தொகுதி 1இல் பக்கம் 120, 121இ கூறுகிறார்.

The Measure necessary to be first carried in to execution, was the release of chanda-saheb; and Mr.Dupleix guaranteeing the engagement, the morattoes were at last satisfied with 7,00,000 rupees and consented to furnish him with 3000 of their own troops.

மராத்தியரிடம் 7 இலட்சம் ரூபாய் கொடுத்து துய்ப்ளே சந்தாசாகிபை விடுதலை செய்ததைக் குறிப்பிடுகிறார் இராப்ட் ஓர்ம். இந்த நூல் 1803 இல் இலண்டனில் எழுதப்பட்ட நூல் ஆகும்.

இரண்டு இலட்சத்து பதினாயிரம்

"இதல்லாமல் அந்தரங்கமான சமாசாரம் மிறித்துசல்லிகான் வேலூரிலிருந்து மிரீசதி தண்டைக்கு சேத்துப்பட்டுக்குப் பேசுகிற நிமித்தியம் மகாராச்சியமாய் இரண்டாம்பேர் அறியாமல் வந்து இருக்கிறதாகச் சந்தாசாயுபு வீட்டுக்குச் சேதி வந்ததால் ராசோபண்டிதன் மெத்த **அந்தரங்கமாய்ச் சென்றான்.**

அதெல்லாம் இன்று **நாற்பதாம் நாள்** சந்தாசாயபு சாவு ராசா பெண் சாதி மார்பத்தில் ராகோஜிபுசேலா மொத்தமாக **இரண்டு லஷத்துப் பதினாயிரம் ரூபாய்** தீர்த்துக் கொண்டு, அதற்கு முன் இங்கேயிருந்துபோன ரத்தின நகைகளை விலைகட்டிக் கொடுத்து பாரிக்கத்து வாங்கிக்கொண்டு திருச்சிராப்பள்ளிக்கு அச்சாலாக உடம்படிக்கைப் பண்ணி தீர்த்துக்கொண்டு ஒண்ணரைகாத வழி வழிக்கு அப்புறம் சிறிது தளத்துடனே இவ்விடத்திற்கு வருகிறதற்கு அனுப்பிவித்துக் கொண்டு வந்து இறங்கி சமானமாதம் வந்து சேருகிறோம்.*

---

* ஆனந்த ரங்கப்பிள்ளை புதுச்சேரி நாட்குறிப்பு தொகுதி 5 1998, பக்கம் 89

3000 வீரர்களுடன்

*1748ஆம் ஆண்டு ஜூன் 13 அல்லது ஜூன் 17ஆம் தேதி மராத்தியரிடமிருந்து விடுதலையாகி வந்த சந்தாசாகிப் 3000 வீரர்களுடன் தெற்குச்சீமைக்குள் நுழைந்தார்.**

கிருஷ்ணா ஆற்றைக் கடத்தல்

சதாரவிலிருந்து கிளம்பிய சந்தாசாகிப் கிருஷ்ணாநதியைக் கடந்தார்.

சித்தல்துர்க் (Chittledroog)

சித்தல் துர்க் பாளையக்காரரின் வக்கீல் சந்தாசாகிபை கிருஷ்ணாநதிக்கரையில் சந்தித்தார்.

பெத்தனூர்

பெத்தனூர் (Bednore) *ராணி சந்தா சாகிபைச் சந்தித்தார். இருவரும் சந்தாசாகிபிடம் உதவி நாடினர்.*

பெட்னூர்போர்

பெட்னூரில் நடைபெற்ற போரில் சந்தாசாகிப் அதன் தளபதி முகைதீன் என்பரைக் கொன்றார். போரில் தனது மகன் அபித்சாகிபை (Abid Sahib) *சந்தாசாகிப் இழந்தார்.***

ஆற்காடு பயணம்

அங்கிருந்து இரண்டு ஜமேதார்களுடன் 5500 வீரர்களுடன் சந்தாசாகிப் ஆற்காட்டை அடைந்தார்.

செர்சுதீன் - நபியத்கான்

சந்தாசாகிபுடன் வந்த இரண்டு ஜமேதார்கள் செர்சுதீன் (Sheresudeen) *நபியத்கான்* (Nabbeyet Khan) *ஆவார்கள்.****

* Letter from Muhamed Ali Khan, the Government of polore and brother of chandasahib, to the Honourable Floyer, Records of Fort St.George, Country corres pondence, public Department, 1748, 7th August 1748, No.155)

** K.Rajayyan History of Tamil nadu 1565-1982 Madurai 1982-page 107

*** Letter from Koniah, vakil to the company records of Port St. George country correspondence, 1749, 1-3, 1749. No. 25

ஆர்க்காடு

வெளிநாட்டுப்பயணி தாலமி 'ஆர்க்காட்டை' 'அர்கோடாஸ்' என்று குறிப்பிடுகிறார்.

இபன்பத்தூதா என்ற இஸ்லாமியப் பயணி ஹார்க்காடு என்று ஆர்காட்டை குறிப்பிடுகிறார். பெருந்தொகையின் 988வது பாடல் ஆர்க்காடு அரசன் அழிசி என்றும் அவரது மகள் சேந்தன் என்னும் சேந்தன் சோழர் தலைநகர் உறையூருடன் தொடர்பு கொண்டவர் என்று குறிப்பிடுகிறது.

வேதவியாசரின் பிரமாண்டபுராணம்

ஷட் ஆரண்யம் ஆறு + காடு 'ஷடாரண்யம்' என்று இவ்வூரை அழைக்கிறது. இராஜநாராயண சம்புவராய மன்னர் காலத்தில் இராஜநாராயணபுரமான ஆர்க்காடு என்று அழைக்கப்பட்டதாக கல்வெட்டு கூறுகிறது.

ஆற்காடு

இந்துப் புராணப்படி பார்வதியை மணம் முடிக்க கைலாயமலையை விட்டு விலகிக் காஞ்சி நகருக்கு சிவன் வந்தார். இறைவனின் மணவிழாக் காண முனிவர்கள் கூட்டம் காஞ்சி நகர் நோக்கி வந்தது. காஞ்சிபுரம் ஆரவாரத்தில் மிகுந்தது. எனவே முனிவர்கள் காஞ்சிபுரத்தைச் சுற்றியுள்ள காடுகளிள் தங்கினார்கள்.

வால்மீகி - வசிட்டர்

வால்மீகி முனிவர் **சூதவனம்** (மேல் விஷாரம்) வசிட்டர் **சமீவனத்தில்** (வேப்பூர்) தங்கினார்கள்.

பாரதி துவாசர் - அகத்தியர்

பாரத்துவாசர் காரை வனத்திலும் (புதுப்பாடி) அகத்தியர் விசவனத்திலும் (வன்னிவேடு) தங்கினார்கள்.

கௌதமர் - துர்வாசர்

கௌதமர் குடமல்லிகா வனத்திலும் (கரை) துர்வாசர் நிம்பாரண்யத்திலும் (பூங்கோடு) தங்கி யாகங்களைச் செய்தனர். இன்று இவ்விடங்களில் சிவன் கோயில்கள் உள்ளன. ஆறு

காடுகளின் மையப்பகுதியாக இருந்ததால் ஆறு+காடு = ஆற்காடு என்று ஆயிற்று.*

சங்க இலக்கியத்தில் ஆர்காடு

எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான நற்றிணையில் (பாடியவர் பெயரில்லை) 190 வது பாடலில் **"அரியல் அம் கழனி ஆர்க்காடு அன்ன''** என்று வருகிறது.

நற்றிணை

நற்றிணையில் 227வது பாடல் தேவனார் பாடியது **"கொடி நுடங்கு மறுகின் ஆர்க்காடு''** என்று வருகிறது.

குறுந்தொகை

குறுந்தொகை 258 வது பாடலில் பாணர், **அழிசி ஆர்க்காடு** என்று குறிப்பிடுகிறார்.

ஆர்க்காடு கிழார்

ஆர்க்காடு கிழார் மகனார் வெள்ளைக் கண்ணத்தனார் என்பவர் சங்ககாலப் புலவரில் ஒருவர் ஆவார்.

பெரிப்புளூஸ்

பெரிப்புளூஸ் நூலில் ஆர்க்காடு என்ற உள்நாட்டு ஊர் பற்றிய செய்தி உள்ளது.

திருவழுத்தூர்

11 ஆம் நூற்றாண்டில் இராசேந்திரசோழன் காலத்தில் **'திருவழுத்தூர்'** என இவ்வூர் பெயர்பெற்றிருந்தது.

விஜயநகரப் பேரரசு

விஜயநகர மன்னன் வீரசதாசிவ மகாராயர் கல்வெட்டு (1528) **'இராஜநாராயணபுரமான ஆற்காடு'** என்று குறிக்கிறது.

முகமது பூர் - தர் - அல்னூர்

நவாபுகள் ஆற்காட்டில் இருந்தபோது முகமதுபூர் என்றும், தர்--அல்னூர் என்றும் ஆற்காட்டை அழைத்தனர்.

---

* கலைவாணன் ஆற்காட்டில் தொல்லியல் சின்னங்கள், தொல்லியல் கருத்தரங்கு தொகுதி 2, சென்னை, 1983 பாகம் 3

எல்லை

வடக்கே ஆந்திரத்தில் பல நாடுகள்; தெற்கே கன்னியாகுமரி மேற்கே மேற்குத் தொடர்ச்சி மலை, கிழக்கே கடல் இதுதான் ஆற்காடு நவாபின் எல்லை ஆகும். 1698 முதல் 1855 வரை 150 ஆண்டுகாலம் ஆற்காடு நவாபுகள் ஆட்சி செய்தனர்.

365 தர்க்காக்கள் - மசூதிகள்

ஐதராபாத் சுபேதார்களின் பிரதிநிதிகளாக கர்நாடக நவாபுகள் என்ற பெயருடன் ஆர்க்காட்டைத் தலைநகராகக் கொண்டு ஆற்காடு நவாபுகள் ஆட்சி செய்தனர். இவ்வூரில் திரும்பிய திசை எல்லாம் தர்காக்கள், மசூதிகள் 365 உள்ளன. ஒவ்வொரு நாளும் ஒரு பள்ளிவாசலுக்குச் சென்று தொழுகை நடத்திட இந்த ஏற்பாடு. இன்று இவ்வழக்கம் இஸ்லாமியரிடம் இல்லை.*

நாட்டுப் பிரிவுகள்

பேரரசு சுபா (மாநிலம்). சுபாவில் பல ஜில்லாக்கள் (ஜில்லா – மாவட்டம்) ஜில்லா பல ஜாகிர்கள் (வட்டம்), ஜாகீர்கள் பல பர்கானா (துணை வட்டம்) பர்கானா பல கிராமங்களாகப் பிரிக்கப்பட்டது. சுபாவின் தலைவர் சுபேதார் அல்லது நவாப்.

திவான்

கில்லாவின் தலைவர் கில்லேதார், ஜாகிரின் தலைவர் ஜாகிர்தார், பர்கானாவின் தலைவர் அமல்தார் என அழைக்கப்பட்டனர். நவாபுக்குத் துணையாக திவான் செயல்பட்டார்.

பஞ்சத்தால் இறக்கக்கூடாது

நவாபுகள் ஆட்சிக்கு உட்பட்ட பகுதியைச் சேர்நந்த எந்த ஒரு குடிமகனும் பஞ்சத்தால் இறக்கக்கூடாது என்னும் உயர்ந்த கோட்பாடு கண்டிப்புடன் பின்பற்றப்பட்டது.

சமயச் சார்பற்ற கொள்கை

ஆற்காடு நவாபுகள் சமயச்சார்பற்ற கொள்கையை பின்பற்றினார்கள். இந்துமத கோஸ் ஸ்வாமிகள், மகான்கள்

* முற்கூறிய நூல் பக்கம் 4

மற்றும் புரோகிதர்களுக்கம், இஸ்லாமிய மறை ஞானிகள் மற்றும் பக்கிரி (ஏழை) களுக்கும் நாட்படி வழங்கப்பட்டது. பிற மதத்தவர்கள் தங்கள் மதச் சடங்குகளை விரிவாகச் செய்யவும், விழாக்களை சிறப்பாகக் கொண்டாடவும் கோயில்களுக்கும், புண்ணிய ஸ்தலங்களுக்கும் செல்லும் பக்தர்களுக்கு சிறப்பு ஏற்பாடுகளும் பாதுகாப்பும் வழங்கப்பட்டன.*

சுல்பிகர்கான	1690	–	1703
தாவூத்கான்	1703	–	1710
சாதத்துல்லாகான்	1710	–	1732
தோஸ்த் அலி கான்	1732	–	1740
சப்தர் அலி	1740	–	1742
அன்வருதீன்கான்	1744	–	1749
முகமதலி	1749	–	1795

முகமதலி காலத்தில்தான் ஆற்காடு நவாபாக பிரெஞ்சுக்காரர்கள் சந்தாசாகிபை அறிவித்தனர். அவர் தமது ஆட்சியை நிலைநிறுத்த பலபோர்களை மேற்கொண்டு பிரெஞ்சுக்காரர்கள் உதவியுடன் துவக்கத்தில் பெரும் வெற்றிகளைக் குவித்தார்.

ஆற்காடு நவாபாக

இதன்பேரில் முஜாபர்ஜங் ஆற்காடு நவாபாக சந்தாசாகிபை அறிவித்தார். ஆற்காடு, செஞ்சி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை ஆகிய பகுதிகள் சந்தாசாகிப் ஆட்சிப் பகுதிகளாக வழங்கப்பட்டது.

அகமதுஷா - இதாயத் மொகிதீன் (எ) முசபர்ஜங்

டெல்லியிலிருந்து அகமதுஷா பாதுஷா இதயாத் மொகைதீன் என்ற முசபர் ஜங்கிற்கு, சாதத்துல்லாகான் முசாபர் ஜங் என்ற பட்டமும் தக்காணத்தின் ஆறு சுபாக்களையும் அளித்திடும் அரசாணை அனுப்பினார்.

---

* ஆற்காடு நவாபு கால சமுதாய நிலை து. துளசி ராமன், தொல்பொருள் ஆய்வுத்துறை, ஆற்காடு, 21வது கருத்தரங்கு, ஆய்வுக் கோவை தொகுதி 3. அண்ணாமலை நகர் 1989. பக்கம் 472 - 477.

உசேன் தோய்த் அலிககான்

சந்தா சாகிப்பிற்கு உசேன் தோஸ்தலிகான் என்ற பட்டத்தையும் அளித்து ஒரு சன்னைத்தையும் கொடுத்தார்.*

நாஜிர் ஜங்

காலஞ்சென்ற நிஜாமின் மகன் நாஜிர்ஜங், ஆங்கிலேயர்களால் நவாபாக ஒப்புக்கொள்ளப்பட்ட முகமதலி, தஞ்சையின் பிரதாப்சிங் இவர்கள் ஒரு அணி. இதை ஆங்கிலேயர் ஆதரித்தனர். நிஜாம் முஸபர் ஜங் – தஞ்சையின் சாயாஜி – புதுக்கோட்டையின் துய்ப்ளே, ஆற்காடு சந்தா சாகிப் ஓர் அணி. இதனை பிரெஞ்சுக்காரர்கள் ஆதரித்தனர்.

3.8.1749 ஆம்பூர் போர்

வயதான கருநாடக நவாப் அன்வருதீன் (முகமதலியின் தந்தை) தமிழகத்தின் தென்பகுதியில் இருந்தார். சந்தாசாகிப் தனது படையினருடன் சென்று தாக்குதல் நடத்தினார். போர்க்களத்தில் அன்வருதீன 3.8.1749 இல் கொல்லப்பட்டார்.** மஃபூப்கான ஹைதராபாத்தில் தஞ்சம் அடைந்தார். புகழ்பெற்ற ஆம்பூர் போர் பற்றிய அரிய தகவல்களை அறிய ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்புகள் பதிவு செய்துள்ளன என்றாலும் 21.11.1748 முதல் 26.6.1749 வரையிலான நாட்குறிப்புகளை ஏழு மாதங்களில் நிகழந்த ஆம்பூர் போர்த் திட்டமிடல் குறித்த முழுச்செய்திகளையும் அறிய முடியவில்லை.

திருவாதிப்போர்

கெடில ஆற்றின் கரையிலுள்ள நகரம் திருவாதி. அங்கு 19.7.1750 இல் போர் நடந்தது. பிரிட்டிஷ் படைகள் முகமதலியைத் தனியே போராட விட்டுத் திரும்பின.

---

* **ஆனந்த ரங்கப்பிள்ளை நாட்குறிப்பு, தொகுதி 6 (1749 சூலை 10 ஆம் நாள், பக்கம் 107, அன்றைய ஆனந்தரங்கப்பிள்ளையின் குறிப்பு 6 முழுப்பக்கங்கள் என்பது குறிப்பிடத்தக்கது)**

** P.N.Chopra, T.K. Ravindran, N.Subramanian, History of South India, Ancient (200 Pages), Media val (196 Pages) Modern (271 Pages) New Delhi 2003. Modern Page 88. Rajmohan Gandhi, Modern South India, A History from the 17th Century to our times. New Delhi 2018. Page 44, Price 799, Book totally 507 Pages)

20.8.1750 (திருவதிகை)

20.8.1750 இல் நடைபெற்ற இரண்டாம் திருவாதி போரிலும் முகமதலி தோல்வியைக் கண்டார். கூடாரங்கள் எரிந்தன. முகமதலி தப்பிப் பிழைப்பதே பெரும்பாடாகப் போய்விட்டது.

11.9.1750

11.9.1750 க்குள் செஞ்சி முற்றிலுமாக பிரெஞ்சுக்காரர்கள் வசமாயிற்று. சந்தாசாகிபால் வில்லியனூர், திருவீதியும் கைப்பற்றப்பட்டது.*

யுத்தனேந்தல்

1750 இல் யுத்தனேந்தல் என்ற இடத்தில் நடைபெற்ற போரிலும் பிரெஞ்சுப் படைகள் சந்தாசாகிபின் படைகள் முகமதலி மற்றும் ஆங்கிலேயர் மற்றும் நசீர் ஜங் படைகளை ஒருங்கே தாக்கி வெற்றி கண்டது.

16.12.1750

பிரெஞ்ச் இந்திய வரலாற்றில் புகழ்மிக்க நாள் *16.12.1750*. அதிகாலையில் பிரெஞ்சுப்படை நாசர்ஜங் படையில் புகுந்து தாக்குதல் நடத்தியது. எதிரி முகாமில் பெருங்குழப்பம். போரில் நாசர்ஜங்கை துப்பாக்கியால் சுட அவர் மரணம் அடைந்தார்.

நாஸர் ஸங்

நாஸர்ஸங் தலையைக் கொய்து, ஈட்டியில் செருகிப் போர்க்களத்தை பிரெஞ்சுப் படை வலம் வந்தது. முசபர் ஜங் கரம் ஓங்கியது. அவர் நிஜாமாகவும், சந்தாசாகிப் ஆர்காடு நவாபாகவும், பிரெஞ்சு டூப்ளே குமரி தொடங்கி கிருஷ்ணா நதி வரை உள்ள பகுதியின் ஆளுநராக அறிவிக்கப்பட்டார்.

முகமதலி

முகமதலி தலைமறைவாக தேசூர், பெண்ணாத்தூர் வழியாக் திருச்சி அடைந்தார். இருப்பினும் முகமதலிக்கு

---

* கா.அப்பாத்துரை தென்னாட்டுப் போர்க்களங்கள் (முதல் பதிப்பு 1957, 2 ஆம் பதிப்பு 1961 விலை ரூ.8, பக்கங்கள் 480) (பக்கம் 422 -424).

முடிவுகட்ட சந்தாசாகிபும் பிரெஞ்சுப் படைகளும் திருச்சியை முற்றுகையிட்டன.* திருச்சி தவிர மற்றப் பகுதிகள் அனைத்தும் சந்தாசாகிப் வசமிருந்தது.

திருச்சியைக் கைப்பற்ற

திருச்சிக் கோட்டையைக் கைப்பற்ற 1751 மார்ச்சில் முக்கியப் போட்டி ஆரம்பமாயிற்று. தென்னிந்தியா சந்தாசாகிப் மற்றும் பிரெஞ்சுக்காரர்களின் தயவில்தான் இருந்தது என்று தோன்றினாலும், தங்களது மேலாண்மையை நிலைநாட்டுவதற்கு அடிப்படைத் தடையாக திருச்சிராப்பள்ளி விளங்கியது. **நவயத்தவரின் உண்மயைான பிரதிநிதி கர்நாடகத்தைப் பொருத்தமட்டில் திருச்சிராப்பள்ளியைக் கைப்பற்றியவர் சந்தாசாகிப் ஆவார். அவரே நவயத்தவரின் உண்மையான பிரதிநிதியுமாவார்.** ஆனால் இதற்கு மாறாக, முகமது அலி பதவியை அபகரித்தவராவார். எவ்வாறு எனில் தந்தை அன்வருதீன்கான் அபகரித்துப் பெற்ற அதிகாரத்தை இவர் தனது மூத்த சகோதரரான மாபஸ்கானிடமிருந்து அபகரித்துப் பெற்றார்.

“In the Carnatic Chanda Sahib was the conqueror of Trichino Poly and the rightful representative of the Nevayets”

“Mohammed Ali on the other hand was an usurper, for he inherited power through the usurpation made by his father and through the usurpation he himself made from his elder brother’ Maphuzkhan” **

Tamilnadu - A real History

தென்னக வரலாற்றில் பல பக்கங்களை பல நூல்களாகத் தந்த பேராசிரியர் கே.ராஜய்யன் ஜூலை 31, 2005 இல் Tamilndu - A real History என்னும் ஆங்கில நூலை ஆங்கிலத்தில் வெளியிட்டார். அதன் தமிழாக்கம் நண்பர் சா.தேவதாஸால் செய்யப்பட்டு எதிர் வெளியீடாக ஆகஸ்ட் 2015 இல் 400 ரூபாய் விலையில் 535 பக்கங்களில் வெளிவந்துள்ளது. அதில் பக்கம் 296 இல். “ஐரோப்பிய அரசுகளின் அணி சேர்க்கைகளை

* துு.துளசிராமன், ஆர்க்காடும் அகழ்வைப்பகமும், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை சென்னை, 1989 பக்கம் 12 (நூல் 84 பக்கங்கள்.

** K. Rajayyan selections from History of Tamilndu 1565 - 1965, Madurai 1978 Page 112 (Price Rs.20/-) Book Totally 312 Pages

துரிதத் தீர்மானித்தாலும், ஒவ்வொலு போட்டியாளரும் தனது நபரின் நியாயத்தை நிலைநாட்டுவதில் எந்த வாய்ப்பையும் விட்டுவிடாதிருந்தனர்.

ஆனால் அவர் தம் கூற்றுகள் யதார்த்தம் சார்ந்ததாயில்லை. சந்தா சாகிப் திருச்சிராப்பள்ளியின் வெற்றியாளராகவும் நெவாஹியத்துகளில் உரிமை மிக்க பிரதிநிதியாகவும் இருந்தார்.

ஆர்க்காட்டு நவாபுகள்

சுல்பிககர்கான்
(கி.பி. 1690 – 1703)

தாவூத்கான்
(பி. 1703 – 1710)

நவாயத் குடும்பம்

குலாம் அலி

சாதத்துல்லாகான்
(கி.பி.1710–1732)

தோஸ்த் அலிகான்
1732 – 1740

சப்தர்அலி கான்
1740 – 1742

முகமது சையது
1742 – 1744

முகமது பக்கீர்

சந்தா சாகிப்

இதற்குப்பிறகு வாலாஜாக்கள் ஆட்சி வருகிறது.

வாலாஜாஹ் குடும்பம்
அன்வருதீன்கான்
1744 - 1749

மாபூஸ்கான்

முகமதலி வாலாஜா I
(1749 - 1795)

குலாம் ஹூஸைனி
உம்–தத் உல் உமரா வாலாஜா II
1795 - 1801

அலி உசேன்

அமீர் உல் உமரா

அசிம் உத்தெளலா
Azim - ud - Daula
1801 - 1819
வாலாஜா III

அஜம் ஷா
(வாலாஜா IV)
கி.பி. *1819 - 1825*

அசிம் ஜா
(குலாம் கௌஸ் கானின்
ரீஜெண்ட்)
1825 - 1842

குலாம் கௌஸ்கான் வாலாஜா V
1825 - 1855
நவாப் பதவி இத்துடன் நிறைவுற்றது.

ஆற்காடு இளவரசர்கள்

அஜீம் ஜாபகதூர் *1867 - 1874* ஆற்காடு இளவரசர் I
சர் ஜாகீர் உத் தௌலா பகதூர் *1874 - 1879* II
இன்டிசாம் - உல் - முல்க் பகதூர் *1879 - 1889* III
சர் முகமது முனவ்வர்கான் பகதூர் *1889 - 1903* IV
குலாம் முகமது அலிகான் பகதூர் *1903 - 1952* V
குலாம் மொய்தீன்கான் பகதூர் *1952 - 1969* VI
குலாம் முகமது அப்துல் காதர் *1969 - 1993* VII
முகமது அப்துல் அலி *1993* &VIII

(A Brief History of The Nawabs of Carnatic and The Princes of Arcot Published by Dr. S.K. Khadri & U.M. Khalilullah, Madras 22.1.1990)

திருச்சி முற்றுகை

திருச்சிக்கோட்டை முற்றுகை 1751 மார்ச்சில் ஆரம்பமானபோது முகமதலியை விட சந்தா சாகிப் அதிக வலிமை பெற்றவராகத் தோன்றினார். சந்தா சாகிப் வலிமை மிக்கப் படையையும், பிரெஞ்சுக்காரர்களின் முழுமையான ஆதரவையும், நிஜாமின் ஒத்துழைப்பையும் ஆற்காடு மற்றும் மதுரையின் ஆதரவையும் பெற்றிருந்தார்.

முகமதலியிடம் சிறிய படையும் ஆங்கிலேயர் ஆதரவும் வலுவான திருச்சிக் கோட்டையும், உள்ளூர் அரசுகளின் ஒத்துழைப்பும் இருந்தது.

டி.ஆடேயுல் (D. Auteuil)

சந்தா சாகிப்பின் உதவிக்குச் சென்ற பிரெஞ்சுப் படைக்குத் தலைமை வகித்தவர் டி.ஆடேயுல்.

ஜிங்கின்ஸ் (Gingins)

முகமதலிக்கு ஆதரவாக பிரிட்டிஷ் படைகளுக்குத் தலைமை ஏற்றுச் சென்றவர் ஜிங்கின்ஸ்.

அந்நியர் தந்திரம்

பிரெஞ்சு, பிரிட்டிஷ் இரு தளபதிகளும் ஒருவரை ஒருவர் தாக்கும் தூரத்திற்குப் போகாதபடி பார்த்துக் கொள்வதிலும், எதிர்பாராத விதத்தில் தாக்குதல் ஏற்பட்டால் அவ்விடத்தைவிட்டு வெகுவிரைவில் ஒருவொருக்கொருவர் போட்டியிட்டு வெளியேறுவதிலும் அதிகக் கவனம் செலுத்தினர் என்பார் கே. ராஜய்யன்.

சண்டையைத் தவிர்த்திரட சம்மதம்

ஒரே நேரத்தில் இரு சாராருமே உடன்பாடு கொள்வதற்காக தாங்கள் தங்கள் நிபந்தனைகளைத் தெரிவித்தனர். முகமதலி திருச்சிக் கோட்டையைக் காலி செய்தால் கர்நாடகத்தின் ஏதாவது ஒரு இடத்தில் நிலப்பகுதி ஒன்றை அளிக்க சந்தா சாகிப் ஒப்புக் கொண்டார்.

Chanda Sahib offered to grant a territory any where in the Carnatic of Mohammed Ali evacuated the Fort (Public Country Correspondenc volume IV, Page 4, Mohammed Ali letter to Saunders, received on 16th January 1751)

நேரடி பதில் தர மறுப்பு

ஆனால் வாலாஜா முகமதலி சாண்டர்ஸின் ஆலோசனையின் பேரில் சந்தா சாகிப்பிற்கு நேரடியாகப் பதில் தருவதைத் தவிர்த்தார். எனினும் நட்பையே விரும்பினார். (Saunders told Mohammed Ali that while the latter was at Tiruchiprapali and he was assisted by the English nobody could hurt him, but one parted with it he had nothing to trust but enemy's pleasure.*

15.7.1750

1750 சூலை 15 ஆம் நாள் முதல் திருச்சிராப்பள்ளியை ஆங்கிலேயர்களுக்கு முகமதலி அடகு வைத்துவிட்டதை நிருபிக்கும் பொருட்டு முகமது அலியிடமிருந்து ஒரு எழுதப்பட்ட பத்திரத்தை ஆங்கிலேயர்கள் பெற்றுக் கொண்டார்கள். இங்கிலாந்தும் பிரான்சும் சமாதானத்தோடு இருக்கிறது. எனவே பிரெஞ்சுக்காரர்கள் திருச்சிகோட்டை முற்றுகையிலிருந்து விலகிச் செல்லவேண்டும் என்று சாண்டர்ஸ் கோரினார். அதுபோலவே சந்தாசாகிபும் திருச்சி முற்றுகையைவிட்டு விலகிட வேண்டும் என்றார் சாண்டர்ஸ்.

கட்டுக்கதை

பிரெஞ்சுக் கவர்னர் டூப்ளேயும், சந்தாசாகிபும் இக்கோரிக்கை கேலிக்கூத்து. திருச்சிராப்பள்ளி கோட்டையை ஆங்கிலேயரிடம் முகமதலி அடகுவைத்ததாகச் சொல்வது கட்டுக்கதை என்றார்.

சாண்டர்ஸ் சொன்னது

ஆங்கிலேயத் தளபதி சாண்டர்ஸ் முகமது அலி திருச்சிராப்பள்ளியையும் சந்தாசாகிப் ஆர்க்காட்டையும்

* Public country correspondence volume IV Page 5. Saunders to Mohammed Ali dated 18th January 1751 and Page 49. Mohammed Ali to Saunders dated 26th January 1751, I bid, PP 5 - 49

பெற்றுக் கொள்ளவேண்டும் என்ற உடன்பாட்டுத் தீர்மானத்தைச் சொன்னார். ஆனால் இது செயல்படுத்தப்படவில்லை.

பிரெஞ்சுக்காரர்களின் சோர்வு

எத்தகைய உடன்பாடும் ஏற்படவில்லை. திருச்சிக் கோட்டையைத் தாக்க சந்தா சாகிப் பல தடவை முயற்சித்தார். பிரெஞ்சுக்காரர்கள் சோர்வுடனிருந்தனர். இதனால் ஏமாற்றமுற்ற சந்தாசாகிப் தஞ்சாவூர் மைசூர் அரசுகளோடு உடன்பாடு கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டார். திருவாரூர், மன்னார்குடி, கும்பகோணம் சந்தாசாகிப்பால் கைப்பற்றப்பட்டது.

மைசூர் அரசரிடம் உதவி

மைசூர் அரசர் கிருஷ்ணராஜ உடையாரிடம் II (1734 – 1766) சந்தாசாகிப் உதவியை நாடினார். நிலப்பகுதிகளைப் பெறுவதற்காகத் தமிழ்நாட்டில் உள்நாட்டுப் போர்களில் தலையிடுவதே மைசூர் மன்னர்களின் பாரம்பரியக் கொள்கையாக இருந்தது. இக்கொள்கைக்கேற்ப மைசூர் மன்னர் இத்தருணத்தை வரவேற்றார். திருச்சிராப்பள்ளிக் கோட்டையைக் கைப்பற்ற 2000 குதிரைகளையும் 5000 வீரர்களையும் அளிக்க ஒப்புக்கொண்டார். இதற்கு கைமாறாக மூன்று லட்சம் ரூபாய் வருட வருவாய் அளிக்கின்ற நிலப்பகுதிகளை விட்டுக் கொடுக்க சந்தாசாகிப் ஒப்புக் கொண்டார். இந்த உடன்பாட்டுக்கான நிபந்தனைகள் முதலில் ஏற்கப்பட்டது என்றாலும் உடன்பாடு நிறைவேறவில்லை.

டியூப்ளே செய்த தவறு

மைசூருடனான அணி சேர்க்கை பிரெஞ்சுச் செல்வாக்கினைச் சரிக்கட்டிவிடும் என்று பயந்ததால் டூப்ளே இவ் உடன்பாட்டை ஏற்காமல் இருந்திருக்கலாம். இதனால் வெகுண்ட மைசூர் அரசர் முகமது அலியோடு உடனபடிக்கை செய்துகொண்டார்.

ஆற்காடு ஆபத்தான நிலையில்

மைசூரிலிருந்து இராணுவ உதவி முகமதலிக்கு வரும் நிலை ஏற்பட்டது. சந்தாசாகிபின் தலைநகரமான ஆற்காடு எவ்வித பாதுகாப்புமின்றி ஆபத்தான நிலையில் இருந்தது.

இராபர்ட் கிளைவ்

இந்தியாவில் ஆங்கிலேயர்கள் ஆட்சியை ஸ்தாபிக்கச் செய்த பெருமைக்குரியவர் இராபர்ட் கிளைவ்.

இங்கிலாந்தில் ஷ்ராப் ஷயர் (Shropshire) பகுதியில் டிரேய்டன் அங்காடி என்ற (Drayton Market) இடத்தில் மோர்டன்சே ஊரில் வாழ்ந்த ரிச்சர்ட் கிளைவ் - காஸ்கில் (Gaskil) தம்பதியினரின் பிள்ளையாக 1725 செப்டம்பர் 29 இல் பிறந்தவர் இராபர்ட் கிளைவ்.

விளையும் பயிர் முளையிலே

கிளைவ் சிறுவனாயிருக்கும் போது தம்மைப் போன்ற சிறுவர்களையும் கூட்டிக் கொண்டு கடைத்தெருவில் திரிந்து, கடைகளில் ஜன்னல்களை உடைக்காமல் இருப்பதற்காகப் பழங்களையும், பணத்தையும் தங்களுக்குக் கொடுக்கும்படி கடைக்காரர்களைத் தொந்தரவு செய்து பெறுவார் (கிளைவ்).*

கிழக்கிந்தியக் கம்பெனியில் பணியில் சேர்ந்து இந்தியா வந்த கிளைவ் இரண்டு முறை தனது உயிரை மாய்த்துக் கொள்ள எண்ணித் துப்பாக்கியால் தம்மைச் சுட்டுக் கொண்டும் குறி தவறியதால் கிளைவ் சாகவில்லை. லார்ட் ராபர்ட் கிளைவ்** கிழக்கிந்தியக் கம்பெனியில் போர் வீரரானார். தனது திறமையை வெளிக்காட்டத் துவங்கினார்.

1751 ஆகஸ்ட் 22

தகுந்த பாதுகாப்பின்றி இருந்த ஆற்காடு கோட்டையை முற்றுகையிட இதுதான் சமயம். ஏனென்றால் சந்தாசாகிப் திருச்சி முற்றுகையில் முனைப்புடன் இருக்கிறார் என்று வெள்ளையர் எண்ணினர். இரகசியமாக இங்கிலீஷ் படை ஆற்காட்டிற்கு கிளம்பியது. 500 பேர்கள் அடங்கிய படையை இராபர்ட் கிளைவ் தலைமை தாங்கிச் சென்றார்.

---

* என்.முனுசாமி முதலியார், லார்ட் கிளைவ் ஆனந்த போதினி ஆசிரியர், சென்னை. 1930, பக்கம் 3. (நூல் 160 பக்கங்கள்)

** நா. முனிசாமி முதலியார் சென்னை 2009, பக்கம் 13 (நூல் 128 பக்கங்கள்)

1751 செப்டம்பர் 1

ஆற்காடு கோட்டையில் எந்தவிதமான பயங்கர எதிர்ப்பும் இல்லை. எளிதில் ஆங்கிலப்படை 1751 செப்டம்பர் முதல்நாள் ஆற்காடு கோட்டையைக் கைப்பற்றியது. சந்தாசாகிப் ஆங்கிலேயர் எதிர்பார்த்தபடி தனது மகன் ராஜா சாகிப் தலைமையில் 2000 குதிரைகளுடன் ஆற்காட்டுக்கு அனுப்பப்பட்டார். தாக்குதல்கள் தொடர்ந்தாலும் ஆற்காடு தோல்விக்குப் பின் திருச்சி முற்றுகை தளர்ந்தது.

முகமதலியோ திருச்சியிலிருந்து இராபர்ட்கிளைவிற்கு உதவிட எந்தவிதப் படையையும் அனுப்பவில்லை. (Public Country Correspondence Vol. IV, P 70)

1751 அக்டோபர்

திருச்சிக் கோட்டை முற்றுகை 50 நாட்கள் 1751 அக்டோபரில் கடந்து இருந்தது. பிரெஞ்சியரின் முயற்சியில் பிளவினை உண்டாக்கியது. இந்த வேளையில் முகமதலி தமக்கு உதவிபுரிய மற்ற அரசுகளை வேண்டிக் கொள்ள போதிய காலமும் வாய்ப்பும் கிடைத்தது. மைசூரும், தஞ்சாவூரும், மராட்டியமும் முகமதலிக்கு உதவ முன் வந்தது.

மைசூர் படை

மைசூப் படைக்கு தலைமை நஞ்சராஜா (Nanja Raja)

5000 குதிரை வீரர்கள், 1000 அனைத்துவிதமான ஆயுதம் தாங்கியவர்கள், 10000 காலாட்படையினர், மைசூரிலிருந்து முகமதலிக்கு ஆதரவாக வந்தனர். (பிரெஞ்சுக்காரர்களால் பயிற்சியளிக்கப்பட்டு தென்னகத்தின் போர்வாள் ஹைதரலியின் தலைமையின் கீழ் செயல்பட்ட படைவீரர்களும் இதில் இருந்தனர்) அது மட்டுமா? நஞ்சராஜா முகமதலியின் போர்ச் செலவுகளுக்கு 80000 ரூபாயையும் வழங்கினார்.*

மராத்தியப் படை

மராத்திய தளபதி முராரி ராவ் (Murari Rav) தலைமையின் கீழ் செயல்பட்ட சிறந்த பயிற்சி அளிக்கப்பட்ட 6000 குதிரைவீரர்கள் பரிவாரமாக முகமதலிக்கு ஆதரவாக திருச்சிக்கு வந்தனர்.

* Public Country Correspondence Vol.4, Page 57

தஞ்சாவூர் ராஜா

தஞ்சாவூர் ராஜா பிரதாப் சிங் (1738 – 1763) மானாஜிராவ் தலைமையில் 3000 குதிரைவீரர்களையும், 2000 காலாட்படையினரையும் முகமதலிக்கு ஆதரவாக திருச்சிக்கு அனுப்பிவைத்தார்.

புதுக்கோட்டை தொண்டைமான்

புதுக்கோட்டை அரசர் தொண்டைமான் 400 குதிரைவீரர்களையும் 4000 வீரர்களையும் போர்ப்பயிற்சி இல்லாத 3000 வீரர்களையும் முகமதுஅலிக்கு ஆதரவாக திருச்சிக்குப் போரிட அனுப்பிவைத்தார்.

உடையார்பாளையம் - திருநெல்வேலி

உடையார்பாளையம் பாளையக்காரர் முகமதலிக்கு ஆதரவாக படைகளை அனுப்பியது. Country Correspondence, Public Department, 26 September 1751 No. 130 *ஆவணம் உறுதிப் படுத்துகிறது.*

திருநெல்வேலி தீத்தாரப்ப முதலியார்

*திருநெல்வேலியிலிருந்து தீத்தாரப்ப முதலியார் படைகளை முகமதலிக்கு ஆதரவாக அனுப்பிவைத்தார்.**

வேலூர் கவர்னர்

வேலூர் கவர்னர் தனது படைகளை முகமதலிக்கு ஆதரவாக அனுப்பிவைத்தார். (Country Correspondence Public Department 1751, 4 October 1751 No.132).

சிதம்பரம் பௌஸ்தார்

சிதம்பம் பௌஸ்தார் தனது படைகளை முகமதலிக்கு ஆதரவாக அனுப்பிவைத்தார். (Country Correspondence Public Department 1751, October 15, No.137).

---

* Letter from the Company to Tertarappa Mudali of Tirunelveli, Records of Fort St. George Country Correspondence Public Department 28 September 1751 No. 131.

இராமநாதபுரம் கட்டத்தேவர் @ செல்லத்தேவர் (1748 - 1761)

இராமநாதபுரம் சேதுபதி செல்லத்தேவர் @ கட்டத்தேவர் 4000 போர்ப்பயிற்சி இல்லாத ஆட்களை **சந்தா சாகிபிற்கு ஆதரவாக திருச்சிக்கு அனுப்பி வைத்தார்.**

எவ்வாறு ஆயினும் முகமதலிக்கே படை வலிமை அதிக அளவில் இருந்தது. முகமதலியிடம் 26000 குதிரைப்படை இருந்தது. சந்தா சாகிபிடம் 15000 குதிரைப்படை மட்டுமே இருந்தது.

பூஜிங்கராவ் (Boojunga Rao)

மராத்திய முராரிராவின் சகோதரர் பூஜிங்கராவ். 1751 அக்டோபரில் 5000 குதிரைவீரர்களை மைசூரிலிருந்து நஞ்சராஜா ஆர்க்காட்டிற்கு அனுப்பிவைத்தார்.

53 வது நாள்

ஆற்காடு கோட்டையில் இரண்டு இடத்தில் சந்தா சாகிபின் புதல்வர் ரசாசாகிப் பிளவை ஏற்படுத்தினார். ஆற்காடு முற்றுகையின் 53வது நாள் கிளைவ் வெற்றிபெற்றார். மராத்திய, மைசூர் படைகள், வெள்ளையர் படையுடன் வெற்றி பவனி வந்து திருச்சிக்கு வந்தது. முகமதலிக்கு படை ஆதரவு மேலும் பெருகியது.*

மேஜர் லாரன்ஸ்

ஆங்கிலேயர் படைப்பிரிவிலிருந்து 1500 வீரர்கள் மேஜர் லாரன்ஸ் (Stringer Lawrence) தலைமையின்கீழ் திருச்சிக்கு விரைந்தனர். முகமதலியோடு இணைந்தனர். 27.3.1752 இல் திருச்சியை நெருங்கினர்.

சந்தா சாகிப் வீழ்ச்சி துவக்கம்

போர்க்களக் காட்சிகளை விரிவாக விளக்கப் போவதில்லை. ஓரண்டாக நீடித்து வந்த திருச்சிக் கோட்டை முற்றுகை வீழ்ச்சியுறத் துவங்கியது. சந்தா சாகிபின் சொல்லையும்

---

* R.M. Martin, The Indian Empire, Volume I Page, 259 - 271, H.D. Love, Vestiges of old Madras Volume II, London 1913 Page 431 - 432

கேட்காமால் பிரெஞ்சுப் படைகள் தங்களது முன்னணி படை நிலைகளை கைவிட்டு, காவிரியைக் கடந்து ஸ்ரீரங்கத்தில் தற்காப்பு நிலையை மேற்கொண்டது. தொடர்ந்து நடந்த தாக்குதல் சந்தா சாகிபின் படைகளைச் சிதறடித்தது. பிரெஞ்சுத் தளபதி வாலிகொண்டபுரத்தில் சரணடைந்தார்.

கோயிலடியில் நடைபெற்ற போரில் சந்தா சாகிபின் படைகளோடு மேஜர் ஸ்டிரிங்கர் லாரன்ஸ் படைகள் மோதியதில் *20* வெள்ளையர் மடிந்தனர். Madras Despatches, Letter from Stringer Lawrence to the Company From Tiruchirappalli, 11 June 1752.

சிசோரி பாளையம்

சிசோரி பாளையத்தில் நடைபெற்ற போரில் *16* வெள்ளையர்கள் மாண்டனர். சந்தா சாகிப் தரப்பில் *40* பிரெஞ்சுக்காரர்களும் *300* வீரர்களும் மடிந்தனர்.

1752 ஏப்ரல்

மராத்திய முராரி ராவ் படைகளும் இராபட் கிளைவ் படைகளும் காரைக்காலோடு பிரெஞ்சுக்காரர்களுடன் கொண்ட தொடர்பைத் துண்டித்தனர்.

சமயவரம்

சமயவரம் என்னுமிடத்தில் சந்தா சாகிபின் படைகளை பிரிட்டிஷ் படைகள் முறியடித்தது. *700* பிரெஞ்சுப் படையினர் கொல்லப்பட்டனர்.

ஸ்ரீரங்கம் அருகில்

ஸ்ரீரங்கம் அருகில் நடைபெற்ற போரிலும் சந்தா சாகிபின் படைகளை பிரிட்டிஷ் ஆதரவுப் படைகள் வீழ்த்தியது.

ஆலம்கான் (Alamkhan)

திருச்சிராப்பள்ளிக்கு அருகே நடைபெற்ற போரில் சந்தாசாகிபின் தீரமிக்க தளபதி ஆலம்கான கொல்லப்பட்டார்.*

---

* Records of Fort St. George, Diary and Consultations Book of 1752, P.8

ஸ்ரீரங்கத்தில்

ஸ்ரீரங்கத்தில் நிலைபெற்றிருநத் சந்தாசாகிபின் படைகளை ஆங்கிலேயே மேஜர் லாரன்ஸின் படை தாக்கியது.

பின்வாங்குவது போல பாசாங்கு

மேஜல் லாரன்ஸ் பின்வாங்குவது போல பாசாங்கு செய்து தனது படைகளைத் திருப்பினார். அது கண்டு ஏமாந்து சந்தா சாகிப்பின் படையினர் அவர்களது நிலையிலிருந்து வெளியேறி வந்தனர். இருதரப்பும் கடுமையாக மோதியது. சந்தா சாகிபின் படைகள் கொல்லப்பட்டது அல்லது பிரிட்டிஷ் படைகளால் கைது செய்யப்பட்டது.

நாடோடிக் கும்பல்

சந்தா சாகிபின் முகாம் நாடோடிக் கும்பல்களால் சூழப்பட்டிருந்தது. அவர் அதிலிருந்து தப்பிச் செல்வது அவருக்கு கூடாததாக இருந்தது.

கோபிநாத் - தாவூத் கான்

பிரெஞ்சுத் தளபதி எம்.லா (M. Las) அறிவுரையை ஏற்று சந்தா சாகிப் தனது வக்கீல் கோபிநாத்தையும் (Gobinath) தாவூத்கான் (Dawud Khan) என்ற ஆப்கானியரையும் மராத்திய மானாஜிராவிடம் அனுப்பிவைத்தார்.

9.5.1752

பிரிட்டிஷ் கமாண்டர் டால்டன் (Dalton) பிரெஞ்சு மற்றும் சந்தா சாகிபின் படைகளை Utatur உத்ததூரில் தோற்கடித்தார்.

11.5.1752

டால்டனும், இராபர்ட் கிளைவும் 11.5.1752 இல் சந்தா சாகிபின் மீது தாக்குதலைத் தொடுத்தனர்.

டுப்ளே

டுப்ளேயிடமிருந்து உதவியும் போர்த்தடவாளங்களும் வந்து சேரவில்லை. 300 குதிரைவீரர்கள், 500 காலாட்படையினர் ஸ்ரீரங்கத்திலிருந்து வெளியேறினர்.

சந்தா சாகிபிற்குச் சாதகமான பதிலேயை (Affirmative) முதலில் மானாஜிராவ் தந்தார். சந்தா சாகிபைச் சந்திக்க வந்த மானாஜிராவ் ஆறுதல் படுத்துவதாகக் காட்டிக் கொண்டார். 'தன்னை ஒரு ஏழை முஸ்லீம் மாறுவேடத்தில் பிரெஞ்சு குடியேற்றமாகிய காரைக்காலுக்கு பாதுகாப்பாகக் கொண்டு சென்றால் பெருந்தொகையை அளிப்பதாக நவயத் தளபதி உறுதியளித்தார்.

ஜாக்குயில்லா (Jacques Law)

பிரெஞ்சுத் தளபதி ஜாக்குயில்லா, சந்தா சாகிபின் பாதுகாப்புப் பற்றி ஆணையிட்டு உறுதி கூறும்படி மானாக்ஜியை கேட்டுக் கொண்டார்.

சந்தா சாகிபின் சரண்

மானாக்ஜி தனக்குப் பதிலாக தாவூத்கானை (Dawud Khan) அனுப்பி குர் ஆன் மீது சத்தியம் செய்து கொடுத்தார். சந்தா சாகிப் மானாக்ஸியிடம் சரணடைந்தார்.

மானாஜிராவின் அறிவிப்பு

புதுச்சேரிக்கு சந்தா சாகிப் தப்பிச் செல்லப் பார்க்கிறார். எனவே அவரைக் கைது செய்து வைத்திருக்கிறோம் என்று மானாஜிராவ் மறுநாள் அறிவித்தார். ஆற்காடு நவாப் முகமதலி அதுகேட்டு ஆனந்தமடைந்தார். ஆங்கிலேயர்கள் அகம் மகிழ்ந்தனர். மராத்தியர்கள் மகிழ்ச்சியில் திளைத்தனர். மைசூர்காரர்கள் மனம் சந்தோஷத்தில் துள்ளியது.

12.6.1752

ஆங்கிலேயத் தளபதி மேஜர் லாரன்ஸ் தலைமையில் சந்தா சாகிப் குறித்து முடிவெடுத்திட 12.6.1752 இல் ஆலோசனக் கூட்டம் நடைபெற்றது.

மேஜர் ஸ்டிரிங்கர் லாரன்ஸ்

ஆங்கிலேயத் தளபதி மேஜர் ஸ்டிரிங்கர் லாரன்ஸ் சந்தா சாகிபை தங்களிடம் ஒப்படைத்திட வேண்டுமென்றார். அது போலவே மைசூர்காரர்களும், மராத்தியர்களும் சொன்னதால் அன்றையக் கூட்டத்தில் முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. மானாக்ஜி, மேஜர் லாரன்ஸை ரகசியமாகச் சந்தித்து சந்தா சாகிபை படுகொலை செய்ய முடிவெடுத்தனர்.

சந்தா சாகிப் படுகொலை

12.6.1752 அல்லது *13.6.1752* இல் துரோகத்தால் சந்தா சாகிப் படுகொலை செய்யப்பட்டார். அது குறித்து வரலாற்றுச் செய்திகள் இதோ.

ஹஸ்ரத்-இ-ஆலா (Hazrat-I-Ala)

மானாஜிராவ் புதுச்சேரிக்கு சந்தா சாகிப்பை அனுப்பிவிடுவார் என்று ஹஸ்ரத்-இ-ஆலா நம்பினார். பல்லக்கும் வந்தது. சந்தா சாகிப் ஏற்றப்பட்டார்.

நத்தர் நகர்

திருச்சி நவாபுகளால் அப்போது நத்தா நகர் என்று அழைக்கப்பட்டது. காவிரியாற்றின் கரைக்கு சந்தா சாகிப் அழைத்துச் செல்லப்பட்டு பல்லக்கில் இருந்து இறக்கப்பட்டார். சாதாரணமான சிறிய விரிக்கை தரையில் விரிக்கப்பட்டிருந்தது. அதில் சந்தா சாகிப் உட்கார வைக்கப்பட்டார்.

மூன்று இரவுகள் இரு பகல்கள்

மொத்தம் மூன்று இரவுகள், இரண்டு பகல்கள் மானாஜிராவின் விருந்தினராக சந்தா சாகிப் இருந்தார்.

1165 அல் ஹிஜ்ரி சபாஸ் முதல் நாள் (1752 ஜீன் 14)

சந்தா சாகிப் அல்ஹிஜ்ரீ *1165* சபான் மாதம் முதல் நாள் குளித்தார். இரண்டு மூன்று கவளம் உணவு மாத்திரமே உண்டார்.

மீர் முஜாபர் அலி (Mir Muzaffar Ali)

தனது சிப்பாய்களில் ஒருவரான (செய்யத் Seyyad) மிர் முஜாபர் அலியை மானாஜிராவ் அழைத்து காதில் இரகசியமாக சாகிபைக் கொல்லுமாறு உத்தரவிட்டார். மீர் முஜாபர் அலி பலத்த சப்தத்துடன் முழங்கினார்.

“போர்க்களத்தில் எனது மகனையோ அல்லது சகோதரனையோ தலையை வெட்டி வா என்று எஜமானர் உத்தரவிட்டால் மறுக்காது அதனை செய்வேன். எனினும் தன்னிடம் தஞ்சம் புகுந்த ஒருவரைக் கொல்வது அநியாயமும் கொடூரமும் ஆகும். அதற்காக என் வாளை உருவமாட்டேன் என்றார் மீர் முஜாபர் அலி.

Yet to kill one who has taken refuge is nothing but injustice and sheer cruelty. I will not draw my sword' - (Mir Musaffar Ali)

அஜர்பெக் (Ashur Beg) இராஜபுத்திரர்

மானாஜிராவ் அதன் பின் சந்தாசாகிபை தனியாக இருக்குமாறு செய்தார். பிறகு அஜர்பெக் என்பவரையும், இராஜபுத்திர வீரர் ஒருவரையும் அழைத்து சந்தாசாகிபை கொல்லுமாறு உத்தரவிட்டார்.

அஜர்பெக் சப்தமாக சந்தாசாகிபைப் பார்த்துச் சொன்னார் 'நவாப் சாஹிப்'

நீங்கள் கலிமாதையூபைச் சொல்லிக் கொள்ளுங்கள். நாங்கள் உங்கள் தலையைத் தேடி வந்திருக்கிறோம். அல்லாஹ்வின் கருணையால் தயாராகிக் கொள்ளுங்கள்.

"Nawab Sahib! Pronounce the Kalima tayyib. We come seeking your head, get ready by the pleasure of Allah''.

இதைக் கவனித்த உடனே சந்தா சாகிப் தனது குத்துவாளை, பட்டாக் கத்தியை உருவி அவன் மீது பாய்ந்தார். பாய்ந்த சந்தா சாகிபை அஜர்பெக் பின்னாலிருந்து பலமாகப் பிடித்துக் கொண்டான். சந்தாசாகிபின் விலா எலும்புகளுக்கும் இடுப்புக்கும் இடைப்பட்ட சதைப்பற்று மிக்க பாகத்தில் இராஜபுத்திர வீரன் தனது பட்டாக்கத்தியால் குத்தினான்.

சந்தா சாகிபின் தலை

சந்தா சாகிப் பலத்த சப்தத்துடன் தரையில் சாய்ந்தார். அந்த உடனேயே அஜர்பெக் தனது குத்துவாளால் மேலும் சந்தா சாகிபை தாக்கி அத்துடன் நில்லாமல் தனது உடைவாளினால் அஜர்பெக் சந்தா சாகிபின் தலையை அறுத்து எடுத்தார். சந்தா சாகிபின் தலை இரத்த வெள்ளத்தில் தோய்ந்தது. அந்தத் தலை மானாஜிராவிடம் கொண்டுவரப்பட்டது.

ஒட்டக ஓட்டி

மானாஜிராவ் ஒட்டக ஓட்டியை அழைத்து இந்தத் தலையினை எடுத்துச் செல்லவேண்டும் என்றார். வெட்டப்பட்டு தனியாக இருக்கும் தலையினை ஒரு துண்டினால் சுற்றாமல் வெறுமனே எப்படி எடுத்துச் செல்ல முடியும் என்று பதில் தந்தார் ஒட்டக ஓட்டி.

பக்கீர் தந்த துண்டு

இராணுவத்திலிருந்து பக்கீர் (ஏழை) தனது துண்டினை அந்த ஒட்டக ஓட்டியிடம் அளித்தார். அதில் சுற்றப்பட்ட சந்தா சாகிபின் தலையை ஒட்டக ஓட்டி கட்டி தூக்கிச் சென்றார்.

இன்னொரு பக்கீர்

இராணுவ முகாமில் இருந்த இன்னொரு பக்கீர் சொன்னார், **ஓ, தாராள மனப்பான்மை உடையவனே உனது தலை உயிருடன் இருந்தாலும், அல்லது இறந்து பட்டாலும் எப்போதும் உயர்ந்து எழுந்து நிமிர்ந்து நிற்கும் என்றார்.**

"Oh thou the Generous! Your head, dead or alive, is ever held high"

தஞ்சாவூர் கோட்டையில் தலை

ஒட்டக ஓட்டி எடுத்துச் சென்ற சந்தா சாகிபின் தலை திருச்சிக் கோட்டையில் தொங்கவிடப்பட்டது. மனோஜிராவ் தஞ்சாவூர் திரும்பினார்.

இமாமிய பீர்கள் (ஆன்மீகத் தலைவர்கள்)

இஸ்லாமிய ஆன்மீகத் தலைவர்கள் இமாமிய பீர்கள் (The Pirs of the Imamiyya) சந்தா சாகிபின் உடலை எடுத்துச் சென்று நத்ஹர் அலி தர்கா அருகே அடக்கம் செய்தனர்.

சந்தா சாகிபின் தலை டில்லிக்கு அனுப்பப்பட்டதா?

சந்தா சாகிபின் தலை நந்தராஜாவால் டில்லிக்கு அனுப்பப்பட்டது. பின்னர் அங்கிருந்து திருச்சிக்கு கொண்டுவரப்பட்டது.

சந்தாசாகிபின் தலையை அவரது உடலோடு சேர்த்து வைப்பதற்காக அவர் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் அவரது உடல் புதைக்கப்பட்ட இடம் திறக்கப்பட்டது. அங்கே அப்போது எந்தவிதத் தடயங்களும் இல்லை. எனவே சந்தா சாகிபின் தலை மட்டுமே அந்தப் பெட்டியில் வைத்து மூடப்பட்டது.

ஒரு வேளை சந்தா சாகிபின் தலை உடலோடு சேர்க்கப்பட்டிருக்கலாம்.

அண்ணல் நபி (ஸல்) மீது அளவற்ற பிரியம்

சந்தா சாகிப் அல்லாஹ் மீதும் அவரது இறுதித் தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மீதும் அளவற்ற பிரியம் கொண்டவர். எனவே சந்தா சாகிபின் தலை திரும்பவும் இணைக்கப்பட்டிருக்கலாம். இதில் உள்ள விவரத்தை அல்லாஹ் தான் அறிவான். (மொழி பெயர்ப்பில் உதவி சென்னை பேராசிரியர் மா.சு. அண்ணாமலை)

...and temporarily intereed it in the dargah of Hazrat Natther wali (May Allah purify his resting place) till the head, which was sent by Nand Raj as for as Delhi, was brought back. **On its arriavl they opened the grave and the coffin but did not find any trace of the body.** So, being helpless they burified the head without the body

That is, Since he had love for the family of the Prophet of Allah (May Allah's peace be on him) and Since an unbeliever made him a Martyr by means of his deceit ful Sword it was no wonder that his body had migrated in cunformity with the beliefs of the Imamiyya sect. It was probable that his head also might have joined his body. Knowledge of these facts lies with Allah.

புர்கான் இபின் ஹசன்

மேற்கண்ட தகவலைத் தருபவர் புர்கான் இபின் ஹசன்.

(Sources of the History of the Nawwabs of the Carnatic Second Part. BURHAN's TUZAK-I-WALAJAH Genarate Editors Muhammed Husayn Nainar, Madras University Islamic series No.4, 1939, Page 125 - 126)*

இராபர்ட் ஓர்ம்

வரலாற்றாசிரியர் இராபர்ட் ஓர்ம், இது குறித்து குறிப்பிடுகையில் சந்தா சாகிபின் தலை கர்நாடகப் பகுதியைத் தாண்டி எங்கும் செல்லவில்லை என்று தெளிவாக அறிவிக்கிறார்.

---

* **292 பக்கங்களைக் கொண்ட இந்த ஆங்கில நூலில் சந்தா சாகிப் வீழ்ச்சி, தலைமறைவான முயற்சி, கைது செய்யப்பட்டது, படுகொலைக்குள்ளானது, தலை திருச்சி கோட்டை வாசலிலே தொங்கவிடப் பட்டது, உடல் நத்ஹர் அலி (ரஹ்) தர்ஹாவில் அடக்கம் செய்யப்பட்ட விவரங்கள் 117 பக்கம் முதல் 126 வது பக்கம் வரை வாசித்தறியலாம்.**

வெட்டப்பட்ட சந்தா சாகிப் தலை நவாப் முகமதலியிடம் அனுப்பப்பட்டது. முதன் முறையாக முகமதலி சந்தா சாகிபின முகத்தை அப்போதுதான் பார்த்தார். பிறகு ஒட்டகத்தின் கழுத்தில் கட்டப்பட்டு திருச்சி நகரக் கோட்டையை ஐந்து முறை அது சுற்றி வரப்பட்டது. இப்படிச் சொல்லிக் கொண்டேவரும் இராபர்ட் ஓர்ம் இறுதியாகச் சொல்வார்.

"but there is no reason to believe that it was ever carried out the Carnatic" *

கர்நாடகத்தைத் தாண்டவில்லை.

ஆனால் சந்தா சாகிபின் தலை கர்நாடகத்தை தாண்டிச் சென்றது எனபதை நம்புவதற்கில்லை என்று திட்டவட்டமாக இராபர்ட் ஓர்ம் கூறியுள்ளார். (அல்லாஹ் எல்லாவற்றையும் அறிவான்)

முகமது அலியின் ஆலோசனைப்படியே...

சந்தா சாகிப் படுகொலை செய்யப்பட்டது முகமது அலியின் ஆலோசனைப்படி என்று கூறப்படுகிறது.**

பெர்சிவல் ஸ்பீயர் (Percival Spear)

The Oxford History of Modern India 1740 - 1947. The Oxford Hisotry of India, Part III, Oxford 1965, பக்கம் 18 இல் **சந்தா சாகிப் முகமதலியால் கொல்லப்பட்டார்.** Chanda Sahib was executed by Mohammed Ali என்று குறிப்பிடுகிறார்.

ஹென்றி மோரிஸ்

சென்னை அரசாங்கத்தில் சிவில் சர்வீசில் பணியாற்றிய ஹென்றி மோரிஸ், இந்திய வரலாறு நூலை எழுதியுள்ளார். அதன் பத்தாவது பதிப்பு 1876 இல் 238 பக்கங்களில் வெளிவந்துள்ளது. அதில் கூறுவார்.

---

* இராபர் ஓர்மம் கூறிய நூல் முதல் தொகுதி மூன்றாம் புத்தகம் பக்கம் 241)

** டாக்டர் க.வெங்கடேசன் இந்திய வரலாறு 1757 - 1947 பிளாசி முதல் பிரிவினை வரை, இராஜபாளையம், 2013 பக்கம் 11. (நூல் 528 பக்கங்கள் விலை ரூ.300

"and he headed the poor, helpless captive, and this, We grieve to say, without a word of remonstarance from the English General". (Page 39)

உதவியற்ற ஏழைச் சாஹேபைக் கொலை செய்து போட்டான். இதற்காக அவனை இங்கிலிஷ் தள கர்த்தர் கொஞ்சமாகிலும் கடிந்து கொள்ளாமல் விட்டுவிட்டாரென்பது மிக பரிதாபமான செய்தி.

மேஜர் லாரன்ஸின் பங்கு

சந்தா சாகிபை வஞ்சகமாக படுகொலை செய்ததில் ஆங்கிலேயக் கும்பனித் தளபதி மேஜர் லாரன்சின் பங்களிப்பும் உள்ளது என்பதை வெறும் மறுத்திட இயலாது.

ராய் மார்க்கம் (Roy Moxham)

The Theft of India the European Conquers of India *1498 1765 என்ற ஆங்கில நூலை ராய் மாக்ஸ்கம் 2016 இல் 399 ரூபாய் விலையில் 252 பக்கங்களில் தந்துள்ளார். அதில் பக்கம்* 199இல் Chanda Sahib was captured by one of Mohammed Ali's allies and beheaded' *என்று குறிப்பிடுகிறார்.*

ப.சிவனடி

இந்திய சரித்திரக் களஞ்சியம் என்று ஒவ்வொரு பத்து ஆண்டுகளுக்கும் ஒரு தொகுதி என 1701 முதல் 1840 வரை 14 தொகுதிகள் வெளியிட்டவர் ப.சிவனடி.

தொழுகையில் இருந்தபோது

ப.சிவனடியின் இந்திய சரித்திரக் களஞ்சியம் தொகுதி 6, பக்கம் 146 இல் 'சந்தா சாகிபு நண்பகல் தொழுகையிலிருந்த போது அவரது தலை வெட்டப்பட்டு, அதன் பிறகு அவருடைய தலையும் முண்டமும் அவருடைய பரம எதிரியான முகமதலியிடம் தரப்பட்டன. சந்தா சாகிபின் தலை திருச்சிராப்பள்ளியை விட்டு வெளியே அனுப்பட்டதென்று கூறுவர் எனினும் இதற்கு ஆதாரமில்லை.

சந்தா சாகிபின் உடல் திருச்சிராப்பள்ளியிலுள்ள நத்தர் அவுலியா தர்க்காவினுள் அடக்கம் செய்யப்பட்டுள்ளது என்பார் ப.சிவனடி.

ஆனந்தரங்கப்பிள்ளை

ஆனந்தரங்கப்பிள்ளையின் நாட்குறிப்பு தரும் செய்தி இதோ:

'தேவணாம்பட்டணத்தில் பீரங்கி போட்ட சேதி சந்தா சாயிபு பக்கீர் வேஷமாயி பிடிப்பிட்டதாயும், பிடிச்சுக் கொண்டதாகவும், அந்த சேதி வந்து பீரங்கி போட்டு சக்கரை பங்கிட்டதாய் பத்துமணி வேளைக்கு கேழ்க்கப்பட்டது.'*

1752 வருடம் சூன் மாதம் 16 ஆங்கிரசு வருடம் ஆனி மாதம் 6 சுக்குற வாரம்

இத்தனாள் துரையவர்களுக்கு சேவுகர் வந்து சொன்ன சேதியென்று கேழ்விப்பட்டது. சந்தாசாயி / சேக்கசேன் முசேலாசு வகையிரா சறுதார்களும் பவுன்சுகளும் ஸ்ரீரங்கம் கோயிலிலேயிருந்த போது மமுதல்லிக்கான் மயிசூரார் – இங்கிலீசு கற – முராரிராயன் பவுன்சு வகையிரா சுத்திக்கொண்டு ரஸ்துக்கள் போக வொட்டாமல் முத்திகைப் போட்டுக்கொண்டு தஞ்சாவூர் மானோசியப்பாருக்கும் முராரிராயனுக்கும் சிறிது பணங்காசுகளொப்பி தான் பக்கிர் வேஷம் போட்டுக் கொண்டு பிறப்பட்டதாகவும் முராரிராயன் சவுக்கிலேயாயிலும் மானசி அப்பாவினுடைய சவுக்கிலேயாவது போக அவர்கள் அப்பால் தஞ்சாவூர் சேர்ந்து அங்கேயிருந்து காரைக்கால் சேத்துப்போட சிறிது உடன்படிக்கை பண்ணிக்கொண்டு பிறப்பட்டதாகவும் **அந்தப்படி முராரிராயன் சருக்கிலே சந்தாசாயிபு பக்கிரி வேஷத்துடனே போனதாகவும்** அங்கே மமுதல்லிகான் மனுஷர்கள் கூடயிருந்ததாகவும் அவர்களும் கூடக்கண்டு சந்தாசாயிபு வக்கண்டு பிடிச்சுக் கொண்டு அப்பால் மமுதல்லிக்கான் மனுஷர்கள் திருச்சிராப்பள்ளிக் கோட்டையேக் கொண்டு போறோமென்று சொன்னதாகவும் முராரிராயன் மனுஷர்களும் தஞ்சாவூரார் மனுஷர்களும் கூடவிருந்து நாங்கள் சந்தாசாபுக்கு கவில் கொடுத்தோமென்று பேசி அவர்கள் மனுஷர்களைத் தள்ளிவிடு சீக்கிற மத்துக்கு சந்தாசாயபுவை தஞ்சாவூர் கோட்டையேக் கொண்டு போய்ச் சேர்த்தார்கள். அந்தச்சேதிக்கி

* ஆங்கிர ச ஆனி 5 குருவாரம் 1752 சூனி 15 ஆனந்தரங்கப்பிள்ளை விரிந்த நாட்குறிப்பு 1752 - 1753) ஓர்.சே.மா.கோபாலகிருஷ்ணன் தொகுப்பு சென்னை, 2005, பக்கம் 73

முன் அய்யாயிரம் விராகன் அறுக்காறுகள் கையில் கொடுத்து அனுப்பினார்கள். அந்த விராகனைக் கொண்டு போய் சந்தாசாயிபுக்கு கொடுத்து அவவர்கள் தஞ்சாவூர் கோட்டை சேர்ந்ததுக்கும் பணம் சேர்ந்ததுக்கும் சந்தாசாயிபு கையிலே காயிதம் வாங்கி வந்து துரையவர்களுக்கு பத்து மணிக்கு கொடுத்ததாய் மமுதல்லிக்கான் கையிலகப்பட்டுக் கொண்டு திரிச்சிராப்பள்ளிக் கோட்டையில் கொண்டு போயி போட்டுக் கொள்ளாமல் தப்பி தஞ்சாவூர் வந்து சேர்த்தானென்றும் தஞ்சாவூராரும் முராரிராயனும் தங்களுக்கு அனுகூலமாயி யிருக்கிறார்கள் யென்கிற சந்தோஷம் ஒன்று உண்டாச்சுது. வந்தவர்களுக்கு நூறு ரூபாய் வெகுமானங் கொடுத்தார்கள் யென்று சேதி சொல்லக் கேழ்க்கப்பட்டது.

முசிலேயாசும் சேக்கசேனும் பாக்கி பவுன்சும் ஸ்ரீரங்கம் கோயிலிலே தானியிருக்கிறார்கள். அவர்களினி எந்த சாடை பண்ணுவார்களோ தெரியாது சந்த சாயுபாவை தஞ்சாவூரை அனுப்பினதில் தளவாய்மண்டபத்தில் தஞ்சாவூரார் பவுன்சு யிறங்கியிருக்கிறதே அங்கேதானே வைத்திருக்கிறார்கள் யென்றும் மானோசி அப்பா தன் கூடாரத்திலே வைத்துக் கொண்டிருந்ததுக்கு சேதி வந்ததாய்ச் சொன்னார்கள்.

1752 வருடம் சூன் மீ 18உ ஆங்கிரசு வருடம் ஆனி மாதம் 8 உ ஆதிவாரம்

இத்தனாள் நான் கேழ்விப்பட்ட சேதி மானசி அப்பாவினுட லசுக்கரிலே போயகப்பட்டிருந்த சந்தாசாயபை முன் இரண்டாம் தேதி திங்கட்கிழமை காலமே நிமாசு பண்ணச்சே (தொழுகையின்போது) தலையை வெட்டி ஒட்டகத்தின் பேரிலே போட்டு உடலையுங்கூட சேர்த்து சகலமான பேருக்கு மறிவிச்சு திரிச்சிராப்பள்ளிக் கோட்டையே மமுதல்லிக்கான் அண்டைக்கு அனுப்பிவிச்சு போட்டதாய் அப்போ சந்தா சாயிபு தலையை வெட்டச்சே குண்டோபண்டிதனும் குருவாபொ (Guruvappa) யென்கிறவனும் பின்ன ஒரு சிசுமத்துக்காறனும் கூடயிருந்தாப்போலேயும் குண்டோ பண்டிதன் யென்னை வெட்டிப் போடுங்கேளென்று சந்தாசாயிபு பின்பக்கத்திலே யிருந்தவனை யிழுத்துவிட்டு சந்தா சாயுபை வெட்டிப் போட்டதாகவும் அப்போ கூடயிருந்த குருவாபோயென்கிறவன் வலது றாகவண்டிதனுடே கொன்னாப் பேலேயும்

றசாசாயுபடனே சொல்ல வேண்டாமென்றும் மறைந்து வைத்திருக்கிறதாய் அதைத்தொட்டு வூரிலே ஒருத்தருமறியார்கள் யென்றும் வந்து ஒருத்தன் சொன்னான். இது பணிரெண்டு மணிவேளைக் கபுறு முசியே தொத்தேல் சந்தாசாயபை வெட்டிப் போட்டு கயுறு துரையுடனே சொல்லச்சே அதன் பேரிலே தான் துரை மெத்த விசாரமாயிருந்தது. இந்த நாள் கோயிலுக்குகூட போகாமலிருந்ததும் பகல் சாப்பாடுமேலே மனதில்லாமல் யிருந்ததாகவும் பாப்பய்ய பிள்ளை வீட்டிலே சொல்லிக் கொண்டார்கள் என்று மூணு மணிக்கு ஒருவன் வந்து சொன்னான். **சந்தாசாயபுக்கு இது கெண்டகாலம்** தப்பிதமில்லை. எப்படியென்றால் வைப்பூர் சீத்தாராம் சோசியன் சோசியப்படிக்கு சநிப்பாச்சவல்லி வவுஷம் ஆனப்படியினாலே இந்தக் கெண்டம் தப்பாது. சனிப்பாசல் பனிரெண்டு வருஷத்துக்கு ஒரு திரம் பாயுரதானபடியினாலே இந்தக் கெண்டம் தப்பாது.*

ஆனந்தரங்கப் பிள்ளை பற்றி தமிழில் நூல்கள் வந்து கொண்டேயிருக்கின்றன.

யோகி. ஸ்ரீ. சுத்தானந்த பாரதியார்

பாரத சக்தி நிலையம் புதுவையிலிருந்து 8 அணா விலையில் ஆனந்தரங்கப் பிள்ளை என்ற நூலை யோகி. ஸ்ரீ. சுத்தானந்த பாரதியார் 36 பக்கங்களில் 1946ல் வெளியிட்டுள்ளார். Liberty Press Pondicherry *யால் அந்த நூல் 1000 பிரதிகள் அச்சானது. அதில் பக்கம் 12, 13 இல் உள்ள செய்தி இதோ.*

தெருப்பக்கிரி போல

சந்தா சாகிபி ஸ்ரீரங்கத்திற்கு ஓடினான். அரங்கநாதர் கோயிலில் ஒளிந்தான். அவன் படைக்கு உணவில்லை. பணமில்லை. ஆங்கிலேயரும் மைசூர் வீரரும் அவனை அங்கே

---

* ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்பு தொகுதி எட்டு பாகம் 1. முதற் பதிப்பு வருடம் இல்லை. மறுபதிப்பு 1998 புதுவை அரசு கலை பண்பாட்டுத்துறை, பக்கம் 69, 70.

ஓர்.சே.மா. கோபாலகிருஷ்ணன் பதிப்பில் இந்தத் தேதியிட்ட நாட்குறிப்பில் மேலும் ஓர் பத்தி உள்ளது. அதில் வேறு விஷயம் சொல்லப்பட்டுள்ளது முற்குறிப்பிட்ட அவரது நூல் பக்கம் 77.

வளைத்துக் கொண்டனர். சந்தா சாகிபு ஒரு பக்கிரி வேஷத்தில் தப்பி ஓட முயன்றார். முடியவில்லை, பிடிபட்டார். இந்தச் செய்தி கேட்டதும் டேவிட் கோட்டையில் ஆங்கிலேயர்கள் களிக்கூத்தாடினர். மறுபடியும் சந்தா சாகிபு, முராரிராவுக்கும் மானோஜி அப்பாவுக்கும் பணம் தருகிறோம் என்னைக் காரைக்காலில் கொண்டு சேரும் என்று எழுதினார். முராரிராவ் பணத்தாசையால் இணங்கினார். சந்தாசாகெபு தெருப்பக்கிரி போல் மாறுவேடம் பூண்டு, ஒரு தப்புடன் கிளம்பினார்.

தொழுகையின்போது விழுந்தது கழுத்தில் வாள்

முகம்மதலியின் வீரர் அவனைக் கண்டுபிடித்தனர். உடனே நம்பின பேரும் அவனைக் கைவிட்டனர். **பிரெஞ்சுப் படைவீரனோ அவனை தஞ்சைப் படைத்தலைவன் மானோஜி அப்பாவிடம் ஒப்படைத்தான், "உன்னை நான் பாதுகாக்கிறேன்" என்று மானோஜி வாள் மேல் சத்தியம் செய்தான்.** மானோஜியின் கூடாரத்தில் சந்தா சாகிபு அடைக்கலம் புகுந்தான். **இதற்குள் முகமதலியும்** ஆங்கிலேயரும் சதியாலோசனை செய்து ஒரு பட்டாணியனை ஏவினர். அவன் சந்தாவின் பாதுகாவலன் போல் நடித்தான். சந்தா சாகிபு நமாஸ் (தொழுகை செய்யக் குனிந்த போது, விழுந்தது கழுத்தில் வாள். சந்தா சாகெபு இரண்டு துண்டாய் விழுந்தான். அவன் தலையை ஒட்டகத்தில் வைத்து, முகம்மதலியிடம் கொண்டு சென்றனர்.

இது யோகி ஸ்ரீ. சுத்தானந்த பாரதியார் 1946 இல் தரும் தகவல்.

வானம் வசப்டும்

பிரபஞ்சன் எழுதிய புதினம் வானம் வசப்படும் 706 பக்கங்கள். முதற்பதிப்பு 100 ரூ விலையில் ஏப்ரல் 1993 இல் வந்தது. அதில் பக்கம் 651 இல் சொல்வார்.

'மராட்டியர்கள் என்னைக் கௌவரவமாகவே (சதாராவில் சிறையில்) நடத்தினார்கள். அவர்களும் சிவாஜியின் வீர பரம்பரையினர் அல்லவா. என்னை அகௌரதையாக அவர்கள் நடத்தியிருந்தால் நான் தற்கொலை செய்து கொண்டு செத்து போயிருப்பேனே' என்று சந்தா சாகிப் கூறுவதாகச் சொல்வார். தமிழகத்தில் ஆங்கிலேயரும், முகமதலியும் சதியாலோசனை

செய்து சந்தா சாகிபை படுகொலை புரிந்துவிட்டனர் என்பதனையே உணர முடிகிறது.

இர. ஆலால சுந்தரம்

ஆனந்தரங்கப்பிள்ளை காலத் தமிழகம் 1736 – 1761 எனும் நூலை The Colonial World of Ananda Ranga Pillai *என்று ஆங்கிலத்தில் வெளியிட்டு அதனையே தமிழிலும் புதுச்சேரியிலிருந்து 1999 இல் 180 ரூ விலையில் 378 பக்கங்களில் வெளியிட்டுள்ளார். அதில் பக்கம் 156 இல் கூறுவார்.* **லாசு சந்தா சாயுபுவைத் தஞ் சாவூராரிடம் அனுப்பியபோது ஒரு மராட்டியப் பெரிய மனுஷனை அடகு வாங்கிக் கொண்டல்லவா செய்திருக்கவேண்டும் என்று துய்ப்ளே பிள்ளையிடம் தாபப்பட்டார்.** *மானோஜி அப்பா சத்தியம் செய்தல் வேண்டுமென்று லாசு கோரியபோது தாவூத்கான் என்ற ஒரு பட்டாணியனைச் சத்தியம் செய்ய அவர் அனுப்பினார். ஒரு பெரிய மனுஷரை அடகுவைக்க வேண்டுமென்று லாசு கேட்டதற்கு அப்பட்டாணியன்* **மானேசியய்யா சம்மதிக்கமாட்டார் என்று சொன்னான். அப்பொழுதே அவர்கள் வஞ்சனை செய்கிறார்கள் என்று சந்தேகம் லாசுக்கு வந்திருக்கவேண்டும். சந்தா சாகிபை அவர்களிடம் அனுப்பியிருக்கக்கூடாது. இப்படி லாசு செய்த பல தவறுகளையும் பிள்ளையிடம் விவரித்தார் துய்ப்ளே.*** *ஆனந்தரங்கப்பிள்ளை கால அரசியலும் சமுதாயமும் என்ற நூலை 2001 இல் 70 ரூ விலையில் 224 பக்கங்களில் தந்தவர் இர.ஆலாலசுந்தரம், புதுவையிலிருந்து அண்மையில் ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்பு தொகுதி 9,10,11,12 களில் பதிப்பாசிரியராக இருந்து வெளியிட்டுள்ளார். அவர் 'லாசு' செய்த தவறைச் சுட்டிக்காட்டுவது எண்ணத்தக்கதாகும்.*

பிரெஞ்சு ஆதிக்கத்திற்குப் பெருந்தடை

*சந்தா சாகிபின் மரணம் தமிழகத்தில் பிரெஞ்சியரின் ஆதிக்கத்திற்குப் பெரும் தடையாகி உள்ளதை வரலாற்று அறிஞர்கள் விவரித்துள்ளனர்.***

* சான்று ஆனந்தரங்கம் பிள்ளை நாட்குறிப்பு தொகுதி எட்டு பாகம் 1, பக்கம் 7

** சிலம்பு ஞா.செல்வராசு, ஆனந்தரங்கப்பிள்ளை, சாகித்ய அகாதெமி, (விலை ரூ..40 மொத்தப் பக்கங்கள் 128) (முதல் பதிப்பு 2008) இரண்டாம் பதிப்பு 2010 பக்கம் 75) (இரா. வாசுகியின் ஆனந்தரங்கப்பிள்ளை அரசியல் சிந்தனைகள் 1989, 114 பக்கங்கள்)

ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்பு - ஆய்வு

புதுவைப் பல்கலைக் கழதம் தமிழியல் துறை 1991 இல் ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்பு ஆய்வு தொகுதி மூன்று 104 பக்கங்களில் வந்துள்ளது. அதில் பக்கம் 40 முதல் 61 வரை இரா. கலைக்கோவன் கட்டுரை.

“மூன்று இலட்சம் படைகள், 1300 யானைகள், 800 பீரங்கிகள் என்று வடக்குத் தெற்காக ஐந்து மைல் நீளத்திற்கும், கிழக்கு மேற்காக (8 கி.மீ.) மூன்று மைல் அகலத்திற்கும் பரவியிருந்து நாசிர் ஜங் (முகமதலி) படையை, (பெரும்படையை) முசபர் ஜங், சந்தா சாகிபு படைகளை பிரெஞ்சு உதவியுடன் சந்தித்ததை விவரிப்பார்.

பெரும் படையுடன் மோதினார் சந்தா சாகிபு. துரோகமும் துணைபோனது. போரில் நயவஞ்சமாகப் படுகொலை செய்யப்பட்டார் என்பது வரலாறு தரும் செய்தி.

வே.தி. செல்லம்

எனது எம்ஃபில் வழிகாட்டியான டாக்டர் சதாசிவம் அவர்களின் நண்பரும் அடியேன் கண்டுபேசி மகிழ்ந்தவருமான வரலாற்றுப் பேராசிரியர் வே.தி.செல்லம் எழுதிய நூல் தமிழக வரலாறும் பண்பாடும் 1995 இல் முதல் பதிப்பு, மறுபதிப்பு 2002 விலை 145 ரூபாய் 672 பக்கங்கள்.

வலிமைக்கு முன் உரிமை செத்தது

அந்த நூலில், பக்கம் 416 இல் சொல்வார், “எதிரிகளின் தயவை நம்பிச் சந்தா சாகிபும் சரண் அடைந்தார். அவன் தலை வெட்டி வீழ்த்தப்பட்டது. வலிமைக்கு முன் உரிமை செத்தது” என்பார் வே. தி. செல்லம்.*

ஆங்கிலேயருக்குமாக

சந்தா சாகிபைச் சிறை பிடித்தனர். முகமதலியுடன் போரிட்ட தஞ்சாவூர் அரசரின் படைத்தலைவர் சந்தா சாகிப் மீது பாய்ந்து கொன்றார்.

* treacherous execution என்று ஆங்கில நூலில் சொல்வார்

இச்செயல் ஆங்கிலேயருக்கு மாசு தேடிற்று என்று P.E. இராபர்ட்ஸ் கருதுகிறார்.*

2 ஆண்டுகள் 1 மாதம் 15 நாட்கள்

ஆனந்தரங்கப்பிள்ளையின் நாட்குறிப்புகள் இரண்டு ஆண்டுகள் ஒரு மாதம் பதினைந்து நாட்களுக்கு நமக்கு கிடைக்கவில்லை. கிடைத்திருந்தால் இன்னும் பல செய்திகள் நமக்கு கிடைக்கக்கூடும்.

கர்நாடக ராஜாக்கள் சவிஸ்தார சரித்திரம்

1952 இல் 3 ரூபாய் எட்டணா விலையில் டி. சந்திரசேகரனை பதிப்பாசிரியராகக் கொண்டு வெளிவந்த 158 பக்கங்களைக் கொண்ட நூல் கர்நாடக ராஜாக்கள் சவிஸ்தார சரித்திரம் 189 தலைப்புகள், அதில் 14வது தலைப்பு சந்தா சாயுபும் மகம்மதலியும். அந்த நூலில் பக்கம் 95 இல் மனோசி அப்பா சந்தாசாகிபிற்கு காகிதம் எழுதினார். 'உமக்கு ஆஜரா கொடுக்கிறோம். நம்மிடம் இடத்தில் வாருமென்று' எழுதினார். மானோசி அப்பா பேச்சை நம்பி தம்முட தண்டு சனத்துக்கும் தெரியாமல் சிஷ்ட செனத்தோட மானோசி அப்பா தண்டிற்குப் போனார். அவர் வைத்துக் கொண்டு மேல் எச்சரிக்கை பண்ணி நவாபு முகமதலிகானுக்கு எழுதினார்.

தொழுகையின் போது படுகொலை

சந்தாசாகிப் நமாஸ் படிக்கிற வேளையில் கழுத்தையறுத்துப் போட்டார்கள். இது கர்நாடக ராஜாக்கள் சவிஸ்தார சரித்திரம் தரும் தகவல்.

மன்னர் மன்னன்

புதுச்சேரியில் வாழ்ந்த புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் மகனார் மன்னர் மன்னன் சென்னையிலிருந்து ஜூலை 1976 A.D. இல் அவர் வெளியிட்ட நாடகநூல் 'நாடக விருந்து' ஆறு நாடகங்கள்.

---

* P.E. Roberts, History of British India Re edition 1958 மேற்கோள் கோ.தங்கவேலு இந்திய வரலாறு, தொகுதி 3, 2007 பக்கம் 305 மொத்தப் பக்கங்கள் 710 நூல் 225 ரூ விலை)

மனம் என்னும் மலர்

அதில் ஒரு நாடகம் மனம் என்னும் மலர் சந்தா சாகிப் வீரமாமுனிவர் சந்திப்பு பற்றி எல்லாம் காட்சிகள் முதலில் வரும். முடிவில் துய்ப்ளேயின் மாளிகையில் சமையல்காரராகப் பணியாற்றிய கந்தப்பன் என்பவரது கையால் திருச்சியில் சந்தா சாகிப் கொலை செய்யப்பட்டார் என்று எழுதுவார். (பக்கம் 94, நூல் 206 பக்கங்கள்)

பி.பி.வில்சன்

H.H.Wilson என்பவர் எழுதி Descriptive Catalugue of the Oriental Manuscripts Collected by the Late Lieutenant Colonel Colin Mackenzie Calcutta 1828 இல் வெளிவந்த நூல் இது. அதில் தொகுதி IV பக்கம் 462 முதல் ஆற்காடு நவாபுகள் குறித்த செய்திகள் வருகின்றன.

டி.வி. மகாலிங்கம்

சென்னைப் பல்கலைக்கழகத்திலிருந்து டி.வி. மகாலிங்கம், Mackenzie Manuscipts Summaries of the Historical Manuscripts in the Mackzenzie Collection Volume II

1976 இல் வெளியிட்ட நூல் 515 பக்கங்கள் அதில் 429 இல் சந்தா சாகிபு துரோகத்தால் வீழ்த்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வரலாறு வருகிறது. But the Sardar who had suffered persecution at the hands of Chanda Sahab when the latter took Tanjore, be headed him without conpunction and presented his head to Maisur Nadarajayya.

ஒரு சேரக்கூடி நம்பிக்கை மோசம் செய்து, குற்ற உயர் வற்ற நிலையில் எதிரிகள் சந்தாசாகிபின் தலையை வெட்டி மைசூர் நந்த ராஜாவுக்கு அனுப்பிவைத்தார்கள்.

எந்த நாள்?

சந்தா சாகிப் படுகொலை செய்யப்பட்டது. 1752 சூன் மாதத்தில் தான், ஆனால் நாள் எது என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது. 1752 சூன் 13 என்று ஆனந்தரங்கபிள்ளை கூறுகிறார். ஹிஜ்ரி 1165 ஷபான் முதல் நாள் 3 சூன் 1752 என்று முகமது யூசுப் கோகன் குறிப்பிடுகிறார் (இதோ அவரது நூல் பக்கம் 88.)

சந்தா சாகிப் (எ) சமஸ்உத் தௌலா ஹுஸைன் தோஸ்த்கான்

Shamuddowlah Husain Dost Khan Chanda Sahab also was killed on 1st Shaban 1165 A.H. = 3rd June 1752 A.D. (Muhammed Yousuf Kokan, Madras 1394 A.H, 1974 AD, Page 88, (Arabic and Persian in Carnatic 1710 - 1960 Price Rs.80. Book Totally 590 Pages)

சென்னைப் பல்கலைக் கழக அரபி, பார்ஸி, உருதுத்துறையின் தலைவர் முகம்மது யூசுப் கோகன் 1752 சூன் 3 என்கிறார். பேராசிரியர் கு.ராஜய்யன 1752 சூன் 17 என்கிறார். எவ்வாறாயினும் சந்தாசாகிப் படுகொலை செய்யப்பட்டது 1752 சூன் மாதத்தில் தான் என்று உறுதியாகக் கூறலாம்.

சந்தாசாகிப் காசுகள்

தமிழகத்தில் 18ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆற்காடு நாவாபாகத் (1749–1752) திகழ்ந்தவர் சந்தாசாகிப். இவர் 'நவயத்து' வம்சத்தைச் சேர்ந்தவர். இவரது ஆட்சிக்காலத்தில் தமிழகத்தில் தனது பெயரால் காசுகள் வெளியிட்டுள்ளார்.

வரலாற்றுக் கலம்பகம் 1998

தஞ்சாவூர் மனே பதிப்பகம் 1998இல் பேராசிரியர் செ. இராசு அவர்கள் மணிவிழா ஆய்வுக்கோவையை வரலாற்றுக் கலம்பகம் என்னும் நூலாக 210 பக்கங்களில் ரூபாய் 110 விலையில் வெளியிட்டது. அதில் பக்கம் 150 முதல் 157 வரை ஆற்காடு நாவாபுகளின் தமிழ்க்காசுகள் என்ற கட்டுரை ஆறுமுகசீதாராமன் அவர்களால் தரப்பட்டுள்ளது. அதில் பக்கம் 154, 155இல் சந்தாசாகிப்பின் 10 காசுகளைப்பற்றி எழுதியிருப்பார்.

மெட்ராஸ் காயின் சொசைட்டி

Madras Coin Society Chennai Special Bulletin Volume VIII, 2001 இல் எம்.டி. கருணாகரன் ஆசிரியராக இருந்து வெளிவந்தது. 130 பக்கங்கள் விஷயங்களும், பின்னால் விளம்பரங்களும் அந்த நூலில் உள்ளது.

Dr. V.ஜெயராஜ்

சென்னை அரசு அருங்காட்சியகத்தில் காப்பாளராக பணியாற்றும் V. ஜெயராஜ் Coins of Chandasahib என்ற கட்டுரையை அந்த நூலில் 2001இல் பக்கம் 76 முதல் பக்கம் 81 வரை தந்துள்ளார்.

A Technical Studyon the Coins of Arcot Nawabs

டாக்டர் வி.ஜெயராஜ் 2005இல் ஆற்காடு நவாபுகளின் காசுகள் குறித்து விரிவான ஆங்கில நூலை ரூபாய் 60 விலையில் பக்கம் 55 முதல் 58 வரை சந்தாசாகிப்பின் காசுகள் பற்றி எழுதியுள்ளார். டாக்டர் வி.ஜெயராஜ் எழுதிய ஆங்கில கட்டுரை இதோ

Coins of Chanda Sahib

Dr. V. Jeyaraj

Introduction

The Moghul ruler, Aurangzeeb, appointed Zulfikar Khan, Daud Khan and Saadat-Ullah-Khan as **Carnatic Nawabs**. After Aurangzeeb in 1707 AD, the Moghul empire declined and so Saadat-Ullah-Khan took advantage of the situation and established his own dynasty of the **Nevayats**. Being a soldier, he had dynastic dreams and succeeded in attracting to his citadel, poets, scholars and sufirs. Arcot soon acquired tombs, dargahs, mosques and forts and was nicknamed **Shahjahanabad the Small** after Delhi, which was then called Shahjahanabad. He was the first independent Nawab and was called **Arcot Nawab.** Saadat-Ullah-Khan had no issues and so he adopted his brother's sons, Dost Ali and Bokkar Ali. In 1783 AD, when Saadat-Ullah-Khan died Dost Ali succeeded Saadat-Ullah-Khan as the Nawab of Arcot. Dost Ali wanted to be an independent ruler. He had two sons, Safdar Ali and Hasan Ali and several daughters. Chanda Sahib married one of his daughters. Chanda Sahib after the death of Saadat-Ullah-Khan involved in active politics. As a great hero and administrator, he tried to bring the whole ofThamilagam under the Nawab's control. He was able to capture Trichy, Dindigul and Madurai and he appointed his two brothers Budha Sahib and Sadak Sahib as the Governors of Madurai and Dindigul respectively. When Anwaruddhin was killed in the Battle of Ambur in 1749, Chanda Sahib became the Nawab of Arcot. During his tenure as Nawab of Arcot, he issued coins. Invariably his coins bore his name in Tamil as **Nawabu Chanda Sayabu, Chandha Sayabu and Sayabu.**

Currency System :

The currency system of the Arcot Nawabs was similar to the Moghul and the gold coins were called **Mohurs.** They were also called pagodas. They were also called as **Wallahahi pagodas, Kurki pagodas, Umdat-Ul-Mulki pagodas,** Star pagodas, Feringhipet pagodas. Silver coins were called rupees. The copper coins were called Thankas. Panam, cash, faluce, pice, dub, dhinaram etc., are the various names of currency existing during the Arcot Nawabs.

Motifs and Legends in the Coins of Chanda Sahib

The coins of Nawabu Chandha Sahib found are mainly made up of copper. These coins have different motifs like peacock facing ne left, peacock facing the right, horse facing right, and within a tower design, bow and arrow, erect sword with in a pearled circle, Ssh facing left, crescent and sun, lion facing right within a design, and Persian numerals.

Classification of Coins of Chanda Sahib

Based on the motifs and legends on the coins of Chanda Sahib, Chanda Sahib coins may be classified as follows:

1. Coins with the Tamil legend **Nawabu Chanda Sayabu** *(நவாபு சந்தா சாயபு)*
2. Coins with the Tamil legend **Chanda Sayabu** *(சந்தா சாயபு)*
3. Coins with Tamil legend **Sayabu** *(சாயபு)*

1. Coins with theTamil Legend Nawabu Chanda Sayabu

The Tamil legend is found in three lines. The Tamil letters (ந்) 'nth" and (தா) "tha" are found as a combined letter (ந்தா) "ntha". Some coins have the word Nawab either as Nawabu or Nababu. Both the words are meaning the same. The shape of the coins is irregular circle. The word Sahib is found as Sayabu. Some coins nave the words Nawabu Chanda and the word Sayabu is missing, "his may be due to the improper striking of the die on the metal piece. These coins have the motifs such as peacock, horse, bow and arrow, erect sword.

1.	Obv	:	Horse facing the right
	Rev	:	Tamil legend *(நவா(பு) சந்தா சாயபு)* Nawa (bu) Chanda Sayabu in three lines
	Copper	:	2.22 gm, 1.3 cm, 1.90 mm Ex: Thanjavur, Mr. A. Arumuga Seetharaman
2.	Obv	:	Peacock facing the right
	Rev	:	Tamil legend *(நவா(பு) சந்தா சாயபு)*, Nawa (bu) Chanda Sayabu in three lines
	Copper	:	2.15 gm, 1.2 cm, 2.0 mm Ex: Thanjavur, Mr. A. Arumuga Seetharaman

3. Obv : A bow and arrow
   Rev : Tamil legend (நவா(பு) சந்தா சாயபு), Nawa (bu) Chanda Sayabu in three lines
   Copper : 2.12 gm, 1.4 cm, 1.65 mm
   Ex : Thanjavur, Mr. A. Arumuga Seetharaman

4. Obv : Sword
   Rev : Tamil legend (நவா(பு) சந்தா சாயபு), Nawa (bu) Chanda Sayabu in three lines
   Copper : 2.39 gm, 1.3 cm, 3.25 mm
   Ex : Thanjavur, Mr. A. Arumuga Seetharaman

5. Obv : Sword
   Rev : Tamil legend (நவா(பு) சந்தா சாயபு), Nawa (bu) Chanda Sayabu in three lines
   Copper : 2.17 gm, 1.4 cm, 1.95 mm
   Ex : Thanjavur, Mr. A. Arumuga Seetharaman

6. Obv : Horse facing the right
   Rev : Tamil legend (நவா(பு) சந்தா சாயபு), Nawa (bu) Chanda Sayabu in three lines
   Copper : 1.99 gm, 1.2 cm, 2.1 mm
   Ex : Ambasamudram, Dr. D. Sankaranarayanan

7. Obv : Star
   Rev : Tamil legend (நவா(பு) சந்தா சாயபு), (Nawa (bu) Chanda Sayabu)
   Copper : 2.44 gm, 1.4 cm, 2.2 mm
   Ex : Chennai, Mr. S. Raman.

2. Coins with the Tamil Legend Chanda Sayabu

The Tamil legend Chanda Sayabu is found on the coins in two lines. Here also the Tamil letters (ந்) "nth" and (தா) "tha" of the word Chanda are found in the combined form (ந்தா) "ntha. The word Sahib is found as Sayabu. These coins have the motifs such as fish, standing man, crescent and sun.

1. Obv : Crescent moon and sun
   Rev : Tamil legend 'Chanda Sayabu' in two lines (சந்தா சாயபு),
   Copper : 2.0 gm, 1.4 cm, 2.3 mm
   Ex : Chennai, Mr. Hameed Jalal

2. Obv : Erected sword
Rev : Tamil legend 'Chanda Sayabu' in two lines (சந்தா சாயபு),
Copper : 2.34 gm, 1.3 cm, 2.8 mm
Ex : Chennai, Mr. Hameed Jalal.

3. Obv : Persian numeral
Rev : Tamil legend 'Chanda Sayabu' in two lines (சந்தா சாயபு),
Copper : 1.42 gm, 1.1 cm, 2.8 mm
Ex : Chennai, Mr. Hameed Jalal.

4. Obv : Peacock facing to the right
Rev : Tamil legend 'Chanda Sayabu' in two lines (சந்தா சாயபு),
Copper : 2.3 gm, 1.4 cm, 2.5 mm
Ex : Chennai, Mr. Hameed Jalal.

5. Obv : Lion facing right within a design
Rev : Tamil legend 'Chanda Sayabu' (சந்தா சாயபு),
Copper : 2.32 gm, 1.4 cm, 2.7 mm
Ex : Chennai, Mr. Hameed Jalal.

6. Obv : Lion facing right within a design
Rev : Tamil legend 'Chanda Sayabu' (சந்தா சாயபு),
Copper : 2.32 gm, 1.4 cm, 2.7 mm
Ex : Chennai, Mr. Hameed Jalal.

7. Obv : Peacock facing to the right
Rev : Tamil legend 'Chanda Sayabu' (சந்தா சாயபு),
Copper : 2.29 gm, 1.4 cm, 1.75 mm
Ex : Thanjavur, Mr. A. Arumuga Seetharaman

8. Obv : Fish facing the left
Rev : Tamil legend 'Chanda Sayabu'
Copper : 1.30 gm, 1.0 cm, 1.90 mm
Ex : Ambasamudram, Dr. D. Sankaranarayanan

9. Obv : Standing man
Rev : Tamil legend 'Chanda Sayabu' (சந்தா சாயபு),
Copper : 2.20 gm, 1.30 cm, 2.0 mm
Ex : Thanjavur, Mr. A. Arumuga Seetharaman

10. Obv : Crescent and sun
Rev : Tamil legend 'Chanda Sayabu' (சந்தா சாயபு),
Copper : 2.22 gm, 1.3 cm, 1.90 mm
Ex : Ambasamudram, Dr. D. Sankaranarayanan

3. Coins with the Tamil Legend Sayabu

The Tamil legend Sayabu is found on the coin in a single line. The word Sahib is found as Sayabu. These coins have the motifs such as horse, elephant.

1. Obv : An elephant
Rev : Tamil legend 'Chanda Sayabu' (சாயபு) in two lines
Copper : 2.4 gm, 2.3 cm, 1.3 mm
Ex : Chennai, Mr. Hameed Jalal.

2. Obv : Horse facing the right
Rev : Tamil legend (சாயபு) Sayabu
Copper : 2.50 gm, 2.4 cm, 1.40 mm
Ex : Thanjavur, Mr. A.A. Seetharaman

4. Coins with the Tamil Legend Nawabu Sayabu

The Tamil legend Nawabu Sayabu is found on the coin in two lines. The word Nawab is inscribed as **Nawabu.** This coin has a sprung bow and arrow as the motif.

Obv : A sprung bow and arrow
Rev : Tamil legend (நவாபு சாயபு), Nawabu Sayabu
Copper : 2.07 gm, 1.3 cm, 1.90 mm
Ex : Thanjavur, Mr. A. Arumuga Seetharaman

Comparison of the Motifs with Coins of Other Nawabs

The motifs are similar to the motifs found on the coins of the Arcot Nawabs. Star, fish, elephant, bow and arrow, crescent moon and sun are very common to the motifs found on the coins of other Nawabs. But the motifs such as the erect sword, horse, standing man are very specific to Chanda Sahib.

Conclusion

This study was possible with the generous help rendered by Dr. D. Sankaranrayanan of Ambasmudram, Mr. A. Arumuga Seetharaman of Thanjavur, Mr. S. Sankararaman and Mr. Hameed Jalal of Chennai to examine their coin collections. Further study is on. Many more coins may occur in the course of study. A detailed

study may reveal some more information about the rule of the Nawabs in *Thamilagam*.

References

1. Biddulph, C.H., *Coins of the Nawabs of Arcot, Journal of the Numismatic Society of India*, Vol. XXIV, 1962.
2. Biddulph, C.H., *Rupees Issued by the English and French East India Companies and the Nawabs of Arcot in the 17th to 19th Centuries, Journal of the Numismatic Society of India*, Vol. XXI, Part II, 1959.
3. Brown, C.J., *The Coins of India*, 1922.
4. Edin Rajan and D. Gunasekar, *History of Modern Tamil Nadu from Viswanatha Nayaka to M.G. Ramachandran*, Madurai 1978.
5. Jeyaraj, V., *A Technical Study on the Coins of the Arcot Nawabs, Report Submitted to the Nehru Trust for Indian Collections at the Victoria and Albert Museum*, New Delhi, 1996.
6. Michael Mitchiner, *Coin Circulation in Southern-most India, Institute of Research in Numismatic Studies*, Nashik, 1995.
7. Sandhya Rao, *Right royal - Tracing the Lineage, Front Line*, Madras, November 17, 1995.
8. Sir Walter Elliot, *Coins of Southern India, Cosmo Publications*, 1975.

ஆறுமுகசீதாராமன்

தமிழகத் தொல்லியல் கழகத்தில் அடியேனும் ஆயுள்கால உறுப்பினர் கழகத்தின் வருட இதழான ஆவணம் இதழ் 12 சூலை 2001, 188 பக்கங்கள் கொண்டது.

தஞ்சாவூர் ஆறுமுக சீதாராமன்

அடியேன் ஆறுமுக சீதாராமனைப் பார்த்திருப்பேன்; பேசியதுமில்லை பழகியதுமில்லை. ஆனால் 12வது ஆவணத்தில் பக்கம் 117 முதல் 122 வரை தமிழ்க்காசுகள் அண்மைக்கால கண்டுபிடிப்புகள் என்ற கட்டுரையை தந்திருந்தார். அதனை வாசித்திடும்போது பக்கம் 122இல் சந்தாசாயபு காசு பற்றி சொல்லியிருந்தார். எனவே இதுகுறித்த செய்திகளை மேலும் சேகரிக்கத் துவங்கினேன்.

ஆற்காடு நவாபுகளின் தமிழ்க்காசுகள்

ஆற்காடு நவாபுகளின் தமிழ்க்காசுகள் என்னும் நூலை தஞ்சாவூரிலிருந்து ரூபாய் 60 விலையில் 43 பக்கங்களில்

வெளியிட்டுள்ளனர். நவாபு காசுகளின் சிறப்பைப் பாமர மக்களும் அறிந்து கொள்ளும் வகையில் வேண்டும் என்ற எண்ணத்தின் வெளிப்பாடே இந்த நூல் என்று குறிப்பிடுவார்.

முனைவர் வெ. வேதாசலம்

எனது பிரியத்திற்குரிய நண்பர் முனைவர் வெ. வேதாசலம் அவர்கள் தான் சிரமம்பாராமல் காசுகளின் ஒளிப்படங்களை ஆறுமுகசீதாராமனுக்கு எடுத்துக் கொடுத்தவர் ஆவார். முனைவர் வெ. வேதாசலத்திற்கும் ஆறுமுசீதாராமனுக்கும் பெரிதும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆற்க்காடு நவாபுகளின் தமிழ்க்காசுகள் நூலில் 2வது தலைப்பு நவாபுகாசுகள் அதில் முதல் தலைப்பு அ. சந்தாசாயபு காசுகள்; அடியேனின் நூல் சந்தாசாகிப் என்பதால் ஆறுமுக சீதாராமன் நூலில் உள்ளபடி அப்படியே இதோ;

சந்தாசாகிப் காசுகள்

நவாபு காசுகள்

அ. சந்தா சாயபு காசுகள்

காசு -1



காசின் முன்பக்கத்தில் செங்குத்தான் நிலையில் வாள் ஒன்று உள்ளது. பின்பக்கத்தில் 'சந்தாசாயபு' என்று மூன்று வரிகளில் தமிழில் உள்ளது. 'ந்த்' கூட்டெழுத்தில் உள்ளது. கிடைத்த இடம்: தஞ்சாவூர், உலோகம்: செம்பு, எடை: 2.3 கிராம்.

காசு -2

காசின் முன்பக்கத்தில் செங்குத்தான நிலையில் வாள் ஒன்று உள்ளது. இந்த வாளின் கைப்பிடி இரண்டு பக்கமும் உள்ளது. பின்பக்கத்தில் 'நவாசந்தா சாய(பு)' என்று மூன்று வரிகளில் தமிழில் உள்ளது. 'வா', 'ந்த்', கூட்டெழுத்தில் உள்ளது. 'பு' என்ற எழுத்து விளிம்பிற்கு வெளியே சென்றுள்ளது. கிடைத்த இடம்: மதுரை, உலோகம்: செம்பு எடை: 2.4 கிராம்.

காசு -3



காசின் முன்பக்கத்தில் வலதுபக்கம் நோக்கி நிற்கும் சிங்கம் உள்ளது. பின்பக்கத்தில் 'நவாசந்தா சாயபு' என்று நான்கு வரிகளில் தமிழில் உள்ளது. 'வா' 'ந்த்' கூட்டெழுத்தில் உள்ளது. கிடைத்த இடம்: தஞ்சாவூர், உலோகம்: செம்பு, எடை: 2.3 கிராம்.

காசு- 4



காசின் முன்பக்கத்தில் வலது பக்கம் நோக்கி நிற்கும் மயில் உள்ளது. பின்பக்கத்தில் 'சந்தாசாயபு' என்று மூன்று வரிகளில் தமிழில் உள்ளது. 'ந்த்' கூட்டெழுத்தில் உள்ளது. கிடைத்த இடம்: திருச்சி, உலோகம்: செம்பு, எடை: *2.3* கிராம்.

காசு -5

காசின் முன்பக்கத்தில் கட்டிட அமைப்பின் உள்ளே பிறை சூரியன் உள்ளது. பின்பக்கத்தில் 'நவசாயபு' என்று மூன்று வரிகளில் தமிழில் பொறிக்கப்பட்டுள்ளது. நவாசந்தாசாயபு என்று பொறிப்பதற்குப் பதிலாக சுருக்கமாக நவசாயபு என்று உள்ளது. கிடைத்த இடம்: கரூர், உலோகம்: செம்பு, எடை: *2* கிராம்.

காசு -6

காசின் முன்பக்கத்தில் வலது பக்கம் நோக்கி நிற்கும் யானை உள்ளது. பின்பக்கத்தில் முழுப்பெயர் இல்லாமல் 'சாயபு' என்று இரண்டு வரிகளில் தமிழில் உள்ளது. கிடைத்த இடம்: திண்டுக்கல், உலோகம்: செம்பு, எடை: 2.5 கிராம்.

காசு -7

காசின் முன்பக்கத்தில் ஒரு பெரிய வட்டத்திற்குள் ஐந்து சிறிய வட்டங்கள் நடுவில் ஒரு வட்டம் உள்ளது. பின்பக்கத்தில் 'நவசாயபு' என்று மூன்று வரிகளில் தமிழ் எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. 'நவாசந்தாசாயபு' என்ற பெயர் சுருக்கமாக நவசாயபு என்று எழுதப்பட்டுள்ளது. கிடைத்த இடம்: மதுரை, உலோகம்: செம்பு, எடை: 2.2 கிராம்.

காசு - 8

காசின் முன்பக்கத்தில் வில், அம்பு காணப்படுகின்றன. பின்பக்கத்தில் மூன்று வரிகளில் 'நவசாயபு' என்று மூன்று வரிகளில் எழுதப்பட்டுள்ளது. கிடைத்த இடம்: மதுரை, உலோகம்: செம்பு எடை: 2.1 கிராம்.

காசு - 9

காசின் முன்பக்கம் செங்குத்தாக ஆமை ஒன்று உள்ளது. பின்பக்கத்தில் 'நவசாயபு' என்று மூன்று வரிகளில் தமிழில் உள்ளது. 'நவா சந்தாசாயபு' என்று பொறிப்பதற்குப் பதிலாக சுருக்கமாக 'நவசாயபு' என்று பொறித்துள்ளனர். கிடைத்த இடம்: மதுரை, உலோகம்: செம்பு, எடை: 1.9 கிராம்.

ஆறுமுகசீதாராமன் : ஆற்க்காடு நாவுகளின் தமிழ்க்காசுகள் பக்கம் 151 'வரலாற்றுக் கலம்பகம்' பேராசிரியர் செ.ராசு அவர்கள் மணிவிழா ஆய்வுக்கோவை

ஆறுமுகசீதாராமன் : 'தமிழ்க் காசுகள்' அண்மைக்காலக் கண்டுபிடிப்புகள் பக். 117-122
ஆவணம் இதழ் - 12 (ஜூலை 2001) தமிழகத் தொல்லியல் கழகம்.

ஆறுமுகசீதாராமன் : ஆற்க்காடு நவாபுகளின் தமிழ்க்காசுகள் தஞ்சாவூர் 2005, பக் 6-10

சிறப்புமிக்க சந்தா சாகிப்

சந்தா சாகிப் மதுரையை 1736 – 1740 வரை ஆண்டார் (ஆட்சி புரிந்தார்) என்று எம்.எஸ்.பாண்டியன் தெரிவிப்பார். (எம்.எஸ்.பாண்டியன், பேசும் ஆவணங்கள் பக்கம் 197, (நூல் மொத்தம் 336 பக்கங்கள், விலை ரூ.165)

1749 – 1752 வரை ஆற்காடு நவாபாகவும் இருந்தவர் சந்தா சாகிப். இவரைப் பற்றி இந்திய வரலாற்றில் மிகவும் மதிப்புக் குறைந்தவராகவே எழுதி வைத்துள்ளார்கள். ஆனால் உண்மை அது அல்ல. வரலாற்றின் ஆழ்ந்த பக்கங்களுக்குள் செல்வோம்.

உயிர் உள்ளவரை உண்மை நவாப்

கருநாடகத்திலும் கூடச் சந்தா சாகிப் தம் உயிர் உள்ள வரையிலும் உண்மை நவாபாகவே பதவி வகித்திருந்தார்.

(மொகலாயர்கள் கால வரையிலான இந்திய வரலாறு நூல் 427 பக்கங்கள், தலைப்புப் பக்க்ம் இல்லை. அந்த நூலில் பிற்சேர்க்கை 148 பக்கங்கள் அதில் பக்கம் 85)

கோ. தங்கவேலு

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் 1976 இல் வெளியிட்ட 604 பக்கங்களைக் கொண்ட நூல் தமிழ்நில வரலாறு. தமிழக வரலாறு வெளியீட்டகம், குறளகத்திலிருந்து வெளிவந்த அந்த நூலில் பேராசிரியர் கோ. தங்கவேலு பக்கம் 382 இல் சொல்வார்.

சந்தா சாகிபு ஆற்காட்டுக்கும், முசாபர் ஐதராபாத்துக்கும் மன்னராக்கப்பட்டனர்.

தமிழகத்தில் சிறிதுகாலம் ஆட்சிபுரிநதவர் சந்தா சாகிப் என்பதற்கு இதற்கு முந்தைய அத்தியாயத்தில் சந்தாசாகிபு வெளியிட்ட காசுகள் பற்றிய செய்தியை அறிந்தோம்.

இராபர்ட் கிளைவ்

சந்தா சாகிபை வீழ்த்துவதில் பேரார்வம் காட்டிய இராபர்ட் கிளைவ் பிள்ளைப் பருவத்திலே படுகாலி என்ற பட்டம் பெற்றவர் 1774 நவம்பர் 22 இல் தற்கொலை செய்து கொண்டு

மடிந்தார். (தமிழக வரலாறு ஆங்கிலேயர் காலம் திருநெல்வேலி 1975, சிவ. இராமச்சந்திரன் கட்டுரை, பக்கம் 268)

டியூப்ளே (1697 - 10.11.1763)

பிரெஞ்சுக் கவர்னர் டியூப்பே என்ன ஆனார்? 1763 நவம்பர் 10 இல் இறந்தார். மானக்கேடுற்று வருந்தத்தக்க வறுமை நிலையில் சிறிதளவேயிருநத சொத்தையும் பிரெஞ்சு அரசாங்கம் அவரிடமிருந்து பறித்துக் கொண்டது.

முகமதலி

சந்தா சாகிபின் வீழ்ச்சிக்குப்பின் ஆற்காடு நவாப் முகமதலிக்கு ஏராளாமாகக் கடன் கொடுத்து, அவரைக் கடன்காரர் ஆக்கி, 1792 நவாபு – ஆங்கிலேயர் இரட்டை ஆட்சி ஏற்பட்டு, 1795 இல் முகமதலி காலமானார். களத்தில் நின்ற சந்தா சாகிபின் குணங்கள் நடத்தை எத்தகையது?

பொன்னிவள நாட்டின் கன்னிவள ராணி

சரித்திர நாயகிகள் பதினான்குபேரின் வாழ்வில் நிகழ்ந்த சுவையாக நிகழ்ச்சிகளும் வளமான சொல்லோவியமும் வரலாறும் கொண்ட நூல் தலைப்பில்லாமல் உள்ளது. அதில் கடைசி கட்டுரை பொன்னிவள நாட்டின் கன்னிவள ராணி.

ராணி மீனாட்சி

ராணி மீனாட்சி பற்றி அந்த நூலில் பக்கம் 169 – 175 வரை வந்துள்ள செய்திகள் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. ராணி மீனாட்சி – சந்தா சாகிப் காதல் விவகாரம் பற்றி வர்ணிப்பதை ஏற்றுக் கொள்ள இயலாது. ஏனெனில் சந்தா சாகிபும், ராணி மீனாட்சியும் நேர்மையானவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதைத் தான் சரித்திரம் காட்டுகிறது.

சந்தாசாகிபின் திருச்சி நத் ஹர் அலி (ரஹ்) தர்ஹாவிற்கு குவகை மாடம் அமைத்தது, கிறிஸ்தவ தமிழறிஞர் வீரமாமுனிவருக்கு பல்வேறு சிறப்புச் செய்தது பற்றி ஏற்கனவே பார்த்தோம்.

திருவட்டார் ஆதிகேசவ பெருமாள் கோயில்

குமரி மாவட்டம் திருவட்டார் ஆதிகேசவப் பெருமாள் கோயிலுக்கு தங்கத்தட்டு, கிரீடம் நன்கொடையாக அளித்தவர்

சந்தா சாகிப். இந்த கோயிலில் 21 நாட்கள் 'திரு அல்லா' பூஜை நடந்து வந்துள்ளது. தற்போது பங்குனி, ஐப்பசி விழா நாட்களில் ஒரு நாள் மட்டும் 'திரு அல்லா' பூஜை நடத்தப்படுகிறது.*

கோவிந்தய்யா - ராவணய்யா

சந்தா சாகிபின் நிர்வாகத்தில் பணியாற்றிய கோவிந்தையா (Govindayya) ராவணய்யா (Ravanayya) இருவரும் ஹிந்துக்கள். சந்தா சாகிபின் இராணுவத் தளபதிகள்.

பிரான்சிகோ பெராரியா

ஸ்பானிய கிறிஸ்தவரான பிரான்சிகோ பெராரியோ (Francis Pereira) சந்தா சாகிபின் அமைச்சர்.

மத மாச்சரியங்கள் இன்றி இந்து – முஸ்லிம் – கிறிஸ்தவ மதத்தினரிடம் சமயப் பொறையோடு வாழ்ந்தவர் சந்தா சாகிப் என்று சரித்திரம் சொல்கிறது. இதற்கு சான்றுகள் மேலும் தேடினேன்.

சுசன் பெய்லி (SUSAN BAYLY)

சுசன் பெய்லி என்ற வரலாற்று ஆய்வுப் பெண்மணி கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக வாயிலாக 1989 இல் வெளியிட்ட நூல் Saints (ஞானக்குரவர்கள்) Goddesses (பெண் தெய்வங்கள்) and Kings மற்றும் அரசர்கள். இதில் முஸ்லிம் – கிறிஸ்தவர்களைப் பற்றியே அதிகம் எழுதியுள்ளார். ஒரு ஆய்வாளர் எப்படி எழுதவேண்டும் என்பதற்கு சான்று காட்டக்கூடிய நல்ல நூல் இது. இந்த நூலின் இந்தியப் பதிப்பு 1992 இல் 360 ரூபாய் விலையில் 504 பக்கங்களில் வெளிவந்துள்ளது. அதில் பக்கம் 156 இல் அவர் எழுதுகிறார்.

தமிழக வரலாற்றில் பெரும் பங்கு

"Chanda Sahib was another of those larger - than - life warrriors who figured so dramatically in the political history of Tamilnadu.

தமிழக (கர்நாடக) அரசியல் வரலாற்றில் சந்தா சாகிற்கு என்று உயிர்த்துடிப்புள்ள பெரும்பங்கு உண்டு. அவரது

* சிந்தூரிகா, ஆதிகேசவப் பெருமாளுக்கு ஆற்காடு நவாப் அளித்த நன்கொடை. தினமலர் திருநெல்வேலி 13.4.2000

எதிரிகள் அவைப் பற்றித் தரக்குறைவாகச் சொல்கிறார்கள். ஆனால் இராபர்ட் ஓர்ம் எனற சமகால வரலாற்றாசிரியர் சந்தா சாகிப் கர்நாடகத்தில் அவரது காலத்தில் ஆற்றலுடைய, வல்லமையுள்ள திறமையான வீரர் என்று போற்றுகிறார்.

The Military historian Robert or me, he was the ablest Solider that had of late years appeared in the Carnatic' (Susan Bayly, Saints, Goddesses and Kings Muslims and Christians in South Indian Society 1700 - 1900, Cambridge, Newyork, New Delhi Edition 1992, Page 156)

எட்வர்டு தாண்டன் (1841)

India, its State and Prospects' என்ற நூலை எழுதிய எட்வர்டு தாண்டன் எழுதிய இன்னொரு நூல் The Hisotry of the British Empire in India. இது இலண்டணில் *1841* இல் அச்சிடப்பட்டது. அதன் முதல் தொகுதி *574* பக்கங்களைக் கொண்டது. அதில் பக்கம் *135* இல் The Merits or demerits of Chunda Sahib affect not the questions connected with his betrayed and murder;

சந்தா சாகிப் செய்த கொலைகள் அவரது மரணம் இவற்றின் அடிப்படையில் அவருடைய ஏற்றத்தாழ்வுகள் அமையாது. But the examination of the eventful chapter of his life cannot be closed with some reference to them இந்த அடிப்பிடையில் தான் சந்தா சாகிபின் வாழ்க்கையைப் பேசிட முடியும்.

All testimonies concur in rendering honour to this military talents, and what is more remarkable, they are nearly as unanimous in ascribing to him the **qualities of benevolence, humanity** and **generosity.**

சந்தா சாகிபின் இராணுவத் திறமையை எல்லா ஆசிரியர்களும் புகழ்ந்து பேசுகின்றனர். சந்தா சாகிபின் **நேர்மையையும், பெருந்தன்மையையும், மனித நேயத்தையும் குறிப்பதில் யாருக்கும் வித்தியாசமான மாறுபட்ட கருத்து கிடையாது. வேறுபாடு இல்லை.** இதனையே சமகால இராணுவ வரலாற்று ஆசிரியர் இராபர்ட் ஓர்ம் குறிப்பிடுகிறார் என்ற எட்வர்டு தாண்டன் மேற்கோள் காட்டுகிறார்.*

---

* Edward Thorndon, The History of the British Empire in India London Volume I, 1841, Page 135

இராபர்ட் ஓர்ம்

இராபர்ட் ஓர்ம் பற்றி முன்னரே குறிப்பிட்டிருக்கிறோம். அவர் தனது நூலில் சந்தா சாகிப் பற்றி எவ்வாறு குறிப்பிடுகிறார். இதோ It therefore only remains to speak of the private character of Chanda Saheb, in whiceh he is generally acknowledged to have been a **brave, benevolent, humane** and **geneours man**, as Princes go in Indostan. His Military abilities were much greater than are commonly found **in the generals of india.**

வீரமிக்க தயாள குணம் படைத்த மனிதாபிமானமிக்க தாராள மனிதன் என்று சந்தா சாகிப் பொதுவாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறார். இந்தியாவின் மற்ற தளபதிகளை விட சந்தா சாகிபின் இராணுவ வலிமை மிகவும் அதிகமாக இருந்தது என்று குறிப்பிட்டுவிட்டு தொடர்ந்து சொல்கிறார். பிரெஞ்சுப் படைகளுக்கு எல்லாம் மேலாக முழு அதிகாரமிக்க தளபதியாக சந்தா சாகிப் இருந்திருந்தால் அவர் தனக்கு நேர்ந்த தோல்விக்கு காரணமான தவறுகளை செய்திருக்கமாட்டார் என்றும் இராபர்ட் ஓர்ம் எழுதுகிறார்.

(ராபர்ட் ஓர்ம் நூல் 1861, அதன் முகப்புப் பக்கம் ஏற்கனவே முழுப்பக்க அளவில் நூலில் உள்ளது. இந்த நூல் எழுதப்பட்டு முதல் பதிப்பு இலண்டனில் வெளிவந்தது 1861 இல். அதில் முதல் தொகுதியில் முன்றாவது புத்தகத்தில் கடைசியில் பக்கம் 242 இல் தான் இராபர்ட் ஓர்ம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்)

1752 சூனில் சந்தாசாகிப் துரோகத்தால் படுகொலை செய்யப்பட்டார். எட்வர்டு தாண்டன் 1841, இராபர்ட் ஓர்ம் 1801 ஆண்டில் எழுதிய நூல்களைப் பார்த்தோம். சமகாலத்தில் இதுகுறித்து யாராவது எழுதியிருக்கிறார்களா இன்னும் ஆராய்ந்தேன். ஆதாரங்களைத் தேடி அலைந்தேன்.

ரிச்சர்டு ஓன்

1761 இல் ரிச்சர்டு ஓன் என்பவர் இந்தியாவில் மலபார் மற்றும் கோரமண்டல் பகுதியில் நடைபெற்ற போர்களைப் பற்றிய நூலினை எழுதி வெளியிட்டுள்ளார். நூலின் முகப்புப் பக்கம் இதோ. (நூல் 270 பக்கங்கள் (1730 முதல் 1760 வரை) முன்னுரை 32 பக்கங்கள், பின் இணைப்பு 48 பக்கங்கள், Index 19 பக்கங்கள், 18 வரைபடங்களைக் கொண்டது)

இதோ அந்த நூலின் முகப்புப் பக்கம்...

AN

ACCOUNT

OF THE

War in India,

BETWEEN THE

ENGLISH and FRENCH,

ON THE

COAST of COROMANDEL,

From the Year 1750 to the Year 1760.

TOGETHER WITH

A RELATION of the late Remarkable EVENTS

ON THE

MALABAR COAST,

And the EXPEDITIONS to

GOLCONDA and SURAT;

With the OPERATIONS of the FLEET.

ILLUSTRATED WITH MAPS, PLANS, &c.

The Whole Compiled from ORIGINAL PAPERS.

By RICHARD OWEN CAMBRIDGE, Efq;

LONDON:

Printed for T. JEFFERYS, the Corner of St. Martin's-lane, Charing-crofs.

MDCCLXI.

சந்தா சாகிப் குறித்து ரிச்சர்டு ஓர்ன்

இந்த நூலில் பக்கம் 28 இல் சந்தா சாகிப் குறித்து ரிச்சர்ட் ஓன் எழுதியுள்ளது அப்படியே இதோ.

NARRATIVE OF THE WAR

CHUNDA SAIB difpirated and reduced to the greateft exremitry and without money to pay his troops, willing to try if he had a friend in Monagee the Tanjore general, demanded leave to pafs through his camp to Tanjore which was very readily granted, and, as is too much the cuftom in like cafes, the moment he was in the power of his enemy he was made a prifoner. He might, no doubt, have efcaped to Pondichery, but in thefe circumstances he dreaded Mr. Dupleix.

Next day, June 1ft, the Nabob, the Maiffore and Maratta generals, Monagee and myfelf, being affembled, it was debated how to difpofe of him. I was filent on this occafion, and they ware of different opinoions. The Nabob and Monagee judged it very dangerous to let out of their hands a man who had already given them fo much trouble. The Maiffore general and Moratow were for having him in their poffeffion. Finding they could not agree, I propofed that we fhould have the care of him, and keep him confined in one of our own fettlements; this was by no means approved, and we parted without coming to any refolution; but fome of Moknagee's people put an end to the difpute by cutting off his head, which was done the 3d june*.

THUS did Chunda Said pay the juft price of his ambition and prefumption. In private life he is faid to have been a man of great benevolence, humanity and generofity : wiith regard to his public character; in this country, ambition beings a venial fault, every man who fuclceeds is a great man; if he is fails is only reckoned unfortunate.

M. D'AUTEUIL was brought prifoner to Trichinopoly, and on giving his parole not to ferve againft the Nabob, was releafed. The enemy became fo much fraitened for want of provifisions, that they could hold ut no longer. Mr. Law therefore thought in earneft of furrendering, and to that end defired our mediation with tha Nabob. We met in confequence, and explained to him the Nobob's terms, which were in general.

Mr.Duplex, in his memorie, falfely afferts, that Col. Laurence himself ordered the death Chunda Saib, not with standing, that calumny had been clearly refuted in the country.

THAT

1761

1761 இல் அச்சான நூலின் பக்கத்தை மேலே காண்கிறீர்கள்.

M DCC LXI
M = 1000
D = 500
C = 100
CC = 200
L = 50
XI = 11

June 1ft என்று இருக்கும் அந்தக் காலத்தில் 'f' என்ற எழுத்தை 'S' ஆகவும் பயன்படுத்தியதையும் இந்தப் பக்கத்தில் பார்க்க முடியும்.

சந்தா சாகிப் தனது (தனி) சொந்த வாழ்க்கையில் மிகச் சிறந்தவராக இருந்திருக்கிறார். அறச்செயலில் விருப்பங் கொண்டவராகவும், இரக்க மனப்பான்மையும், அன்புச் செயல்கள் புரிபவராகவும், பெருந்தகமையான தாராள மனப்பான்மை கொண்ட உயர்குணமுடையவராகவும் சந்தா சாகிப் திகழ்ந்தார்.

இந்த மகத்தான மனிதனை எந்த மனிதனும் பின் தொடரலாம். ஆனால் இவரைப் பற்றிய மதிப்பீடு வெளியே தெரியாமல் போனது துரதிஷ்டமே என்று ரிச்சர்டு ஓன் கி.பி. *1761* இல் குறிப்பிடுகிறார்.

சந்தா சாகிப் எனறாலே செங்கல் கட்டிய குர் ஆன் சத்தியம் என்று சரித்திரத்தில் பிழையாகச் சொல்லிவரும் நிலை மாறட்டும். சரித்திரத்தின் பக்கங்களில் மறைந்துள்ள செய்திகள் ஜொலிக்கட்டும். சந்தாசாகிபின் தீரத்தையும், தீரமிக்க சாதனைகளால் உயர்ந்து நிற்கிற அவரது புகழையும் சதா போற்றுவோமாக!



சந்தாசாகிபின் சமாதி

நன்றி: சென்னை அப்துல் ரசூல் யூசுப்

சந்தாசாகிபின் சமாதி சிதறுண்டு கிடக்கும் நிலை

நன்றி: சென்னை அப்துல் ரசூல் யூசுப்



DALAWAI MANTAPAM

-WHERE CHANDA SAHIB TAKES AN OATH
AND
- WHERE HE GETS KILLED

சந்தாசாகிப் படுகொலை செய்யப்பட்ட தளவாய் மண்டபம்

வரலாற்றியல் அறிஞர் செ.திவான் எழுதிய, பதிப்பித்த நூல்கள்

1. விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம்கள் (தொகுதி - 1) (சீதக்காதி அறக்கட்டளையின் முதல் பரிசு ரூ.10,000 பெற்ற நூல்)
2. நிகரற்ற பெருவீரன் மருதநாயகம் கான்சாகிப் (உணர்வு வார இதழ் நடத்திய போட்டியில் ரூ.5,000 முதல் பரிசு பெற்ற நூல்)
3. ஆரியமாயை அகல ..... (சங்கொலி வார இதழ் நடத்திய போட்டியில் ரூ.5,000 முதல் பரிசு பெற்ற நூல்)
4. திருகுர்ஆன் தமிழில் விளக்கம் தந்த அறிஞர்கள்
5. நபி பெருமானாரின் நாற்பது பொன் மொழிகள்
6. தக்கலை பீர் முகம்மது (ஒலி) ஞானப் பாடல்களும் சரிதையும்
7. இந்திய சுதந்திரப் போரில் நெல்லை மாவட்ட முஸ்லிம்கள்
8. வ.உ.சி.யின் அழகும் ஆரோக்கியமும்
9. குடை
10. சிந்தனைக்கு
11. வ.உ.சி.யின் துன்பத்தின் கற்பனை
12. வ.உ.சி.யும் பெரியாரும்
13. வ.உ.சி.யும் தொல்காப்பியரும்
14. வ.உ.சி. பாடல்கள்
15. வ.உ.சி.யின் அரசயில் பெருஞ்சொல்
16. தெற்கில் ஒலித்த தீன்குரல்
17. விடுதலைப் போரில் விஸ்வகர்மாக்கள்
18. பாரதியும் காங்கிரசும்
19. ஸ்டெர்லைட்டை விரட்டுவோம்
20. உண்மையின் சவுக்கடி
21. கூடங்குளம் அணுஉலையை மூடு
22. குடைப்புரட்சி
23. வாகை சூடி வரும் வைகோ
24. கலைஞரை வென்ற வைகோ
25. வைகோவின் பொன்மொழிகள்
26. சேது சமுத்திரத் திட்ட வரலாற்று நாயகன் வைகோ

27. வ.உ.சி. புகழ் பாடிய முன்னோடிகள்
28. வ.உ.சி.யின் நூற்கோவை
29. வ.உ.சி.யும் பரலி சு.நெல்லையப்பரும்
30. ஆன்மீகச் சிந்தனை
31. வேதங்கள் விலக்கிடும் விக்கிரக வழிபாடு
32. செய்குத்தம்பி பாவலரின் ஷம்சுத்தாசீன் கோவை
33. கட்டப்பொம்மனின் கடைசி நாட்கள்
34. வி.ஓ.சி. கண்ட பாரதி
35. இறை நேசச் செல்வர் சிந்தா ஷெய்கு மதார் ஷா (ஒலி)
36. வ.உ.சி.யின் வள்ளியம்மை சரித்திரம்
37. இறைவனின் திருநாமங்கள்
38. இறுதித் திருநபியும் இயற்கையின் அற்புதங்களும்
39. அண்ணாவின் மறுபக்கம்
40. மாற்றார் மதித்திடும் மாநபி (ஸல்)
41. பெரியபுராணத்தில் வாழ்க்கை நெறி
42. விடுதலையின் நிறம் பச்சை
43. ஆரியப் பாதையில் பசுவதை
44. கட்டப்பொம்மனும் கலெக்டர் ஜாக்சனும்
45. இலக்கியப் புரட்சியாளர் வ.உ.சி.
46. சதாவதானி செய்குத்தம்பி பாவலரின் நபிகள் நாயகமான்மியமஞ்சரி
47. வ.உ.சி.யின் உயில்
48. ஆலிப்புலவர்
49. தியாக நெருப்பில் வைகோ
50. வ.உ.சி.யும் திருக்குறளும்
51. அணைய வேண்டிய அயோத் 'தீ'
52. வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப்
53. வியத்தகு சாதனையாளர் வைகோ
54. மாநபி (ஸல்) காட்டிய மனித உரிமைகள்
55. வைகோ... வெற்றிப்பாதை... வீரச்சங்கொலி
56. செந்தமிழ் வளர்த்த சிங்கப்பூர் அ.நா.மெய்தீன்
57. விடுதலைப் போரில் வீரமிகு முஸ்லிம்கள் (தொகுதி –2)
58. திராவிட இயக்கம் – வரலாற்றுக் குறிப்புகள்
59. வேலூர்ப் புரட்சியில் (1806) வீரமிகு முஸ்லிமகள் (தொகுதி –3)

60. இந்திய சுதந்திரப் பெரும் போரில் இஸ்லாமியர்கள் (தொகுதி -4) 1072 பக்கங்கள்
61. சங்கொலி
62. பம்பரம்
63. சுயமரியாதை சூரர் ஏ.வி.பி.ஆசைத்தம்பி
64. இந்து – முஸ்லிம் ஒற்றுமை
65. புரட்சிக் கனலில் பொசுங்கும் துரோகம்
66. மாலிக்காபூர்
67. சிந்தனைச் சிற்பி வி.பி.சிற்றரசு
68. அறிஞர் அண்ணாவின் அமுதமொழிகள்
69. கழகத்தின் காவலர் கே.வி.கே.சாமி
70. இலக்கியப் புரட்சியாளர் வ.உ.சி.யின் சிவஞானபோத உரை
71. வ.உ.சி.யின் சுயசரிதை
72. அஞ்சாநெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரிசாமி
73. கே.வி.கே. சாமி கட்டுரைகள்
74. நாடோடி மன்னன்
75. விடுதலை வேள்வியில் விஸ்வநாததாஸ்
76. கச்சத்தீவு யாருக்குச் சொந்தம்?
77. பாரதி செல்லம்மாள் உயில்
78. தேவநேயப் பாவாணரின் கிறிஸ்த்தவக் கீர்த்தனம்
79. தேவநேயப் பாவாணரின் துவாரகை மன்னன்
80. இந்திய சுதந்திரப் போரில் விஸ்வகர்மாக்கள்
81. மகாகவி பாரதியின் இஸ்லாத்தின் மகிமை
81. வாடகை வீட்டில் வாழ்ந்த வரலாற்று நாயகர் காமராசர்
82. பரிசு பெறாத பாரதி பாடல்
84. உமறுப்புலவர் விருதும், உள்ளத்து உணர்வும்
85. அறிஞர் அண்ணா, கர்மவீரர் காமராசர், தமிழர் தலைவர் வைகோ
86. வல்லிக்கண்ணன் கடிதங்கள்
87. இந்திய சுதந்திரப் போரில் வக்கம் அப்துல் காதர்
88. சுதந்திரச் சங்கநாதம் சுப்பிரமணிய சிவா சிறை வாசம்
89. கம்பனில் அனுமனும் சிவனும்
90. வரலாற்றுப் பாதையில் பசுவதை
91. மக்கள் திலகமும் மக்கள் தலைவரும்
92. இந்திய சுதந்திரப் போரில் தமிழக விஸ்வகர்மாக்கள்

93. வரலாற்றின் வெளிச்சத்தில் போர்த்துக்கீசியர்கள் குஞ்ஞாலிகள்
94. வ.உ.சி. வாலேஸ்வரன்
95. வ.உ.சி.யும் சைவ சமயமும்
96. வீர வ.உ.சி.யும் ஆஷ் கொலையும்
97. இராமலிங்க வள்ளலாரும் செய்குத்தம்பிப் பாவலரும்
98. தி.க.சி. என்றொரு மானுடன்
99. இசைமுரசு நாகூர் இ.எம். ஹனீபா
100. வரலாற்றெழுத்தியல்
101. முற்றுப்பெறாத சுயசரிதை
102. தாயாய், தந்தையாய், தலைவராய்
103. திப்புசுல்தான் அவதூறுகளும் பதில்களும்
104. இந்திய சுதந்திரப்போரில் இருசகோதரர்கள்
105. கி. ராஜநாராயணனின் கடிதங்கள்
106. சங்கீதசிகரம் செங்கோட்டை கிட்டப்பா
107. விவேகானந்தரும் பாஸ்கர சேதுபதியும்
108. அதிசய அரசர் அலாவுதீன் கில்ஜி
109. காயிதேமில்லத் பிறை விருது
110. விடுதலைப்போரும் விவேகானந்தரும்
111. ஜாலியன்வாலாபாக்
112. இராமகிருஷ்ண பரமஹம்சரும் சாரதா தேவியரும்
113. தினமணி ரம்ஜான் மலர் கட்டுரைகள்
114. குர்ஆனின் குரல் கட்டுரைகள்
115. குர்ஆனின் குரல் கட்டுரைகள்
116. குர்ஆனின் குரல் கட்டுரைகள்
117. சங்கொலி கட்டுரைகள்
118. சங்கொலி கட்டுரைகள்
119. சுலைமானின் நாகூர் ஆண்டகை காவியம்
120. இருட்டறையிலிருந்து வெளிச்சத்திற்கு (வரலாற்று ஆய்வு நூல்)
121. தொ.மு.சி. ரகுநாதன் கடிதங்கள்
122. பொன்னீலன் கடிதங்கள்
123. புதுமைப்பித்தனும் கமலா அம்மையாரும்
124. நான் கண்ட சுந்தரராமசாமி
125. கல்விமான் சுலைமான்

துஆ செய்ய வேண்டுகிறோம்

செ. முகைதீன் பிச்சை

நா. செய்யது மசூது – காசினம்மாள் பீவி
அருந்தவப் புதல்வராய் பிறந்த
எளியேனின் உடன்பிறந்த அண்ணன்

செ. முகைதீன் பிச்சை (1953 – 30.7.2020)

இறுதி மூச்சுவரை இஸ்லாத்திற்காக பாடுபட்டு
மறைந்தார்கள். (இன்னாலில்லாஹி)
அவர்களது மறு உலக நல்வாழ்விற்காக
துஆச் செய்யவேண்டுகிறோம்.

– செ. திவான், ரெகான் சுலைமான் பதிப்பகம்

ரெகான்
சுலைமான்
பதிப்பகம்



பாபா தப்லே ஆ‌ஃலம் பாதுஷா
தர்கா ஷெரீஃப் - திருச்சி

மாதா மாமா ஜிக்னி மஜார்